வெளியீடு 20-7-2005

தமிழ்நாடு 20-7-2005
19 ... 0 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, நவம்பர் 22, 2004—தொகுதி 66—எண் 2

Monday the 22nd November, 2004 —Volume 66—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211, 31'P05
P05.66.2
226625

[Price Rs. 3.00

318
2005

**22-11-2004**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| **உடுக்குறியிடாத வினாக்கள்** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 11 மற்றும் 12) | 263-485 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8, 9, 10 மற்றும் 13) | 486-689 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| ஜவ்வாது மலையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்கள் வெட்டி கடத்திச் சென்றுள்ளது | 133-137 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 137 |
| (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 137 |
| (இ) மனுக்கள் குழு | 138 |
| **4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—** | |
| (அ) காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் கொலையுண்ட மேலாளர் திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு நிதியுதவி குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 138-139 |
| (ஆ) காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு முடிவு கட்டியதற்கு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பாராட்டு | 139-147 |

பக்கங்கள்

**4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—தொடர்ச்சி

(இ) புதிய வீராணம் திட்டத்தின்மூலம் சென்னைக்குக் குடிநீர் வழங்குதல் குறித்து மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை — 178-185

**5. கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்**— 147-178, 186-251

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 189, 232,238, 240-241, 242, 243-246

திரு. லா. சந்தானம் — 148-153

*திரு. ப. அரசன் — 186, 187-189, 190-191, 192,193,195,196

திரு. பி.ஆர். சுந்தரம் — 196-204

திரு. ஜி. பழனிசாமி — 190,204-206, 207,208,209, 210,211-214, 215

திரு. கே.சி. கருணாகரன் — 196,215-219

திரு. ஜி.கே. மணி — 219-220,221, 222-228,229

*திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 230,231-232, 233-237,238, 239-240,242, 243





பக்கங்கள்

**6. அறிவிப்புகள்**—

(அ) தமிழ்நாடு நிதி ஓதுக்கச் சட்டமுன்வடிவு, 2004 (ஆ. இ.) — 252

(ஆ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிமன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு — 258-259

**7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**—

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2004 — 252-253

**8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2004 — 254-255

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 254,255

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 36/2004) — 256-257

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 256-257

**9. அரசினர் தீர்மானங்கள்**—

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் — 253

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் — 259-260

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 260-262

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226625
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 7, தாரண-திருவள்ளுவர் ஆண்டு 2035
## 2004 நவம்பர் 22, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"*

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள், விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 11 மற்றும் 12) @

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8, 9, 10 மற்றும் 13) @ @

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### ஜவ்வாது மலையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்கள் வெட்டி கடத்திச் சென்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

---

@ 263 முதல் 485 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@ 486 முதல் 689 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, காவலூர் என்ற இடத்தில் ஜவ்வாது மலையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்களை வெட்டிக் கடத்திச் சென்றுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

01-08-2004 அன்று அதிகாலையில் 30 நபர்களைக் கொண்ட கும்பல் ஒன்று, காவலூர் வான்வெளி ஆராய்ச்சி நிலைய வளாகத்திற்குள் புகுந்து அங்கிருந்த நான்கு சந்தன மரங்களை வெட்டியபின் 3 சந்தன மரங்களைக் கடத்திச் சென்று விட்டனர். அதன் பின்னர், ஒரு சந்தன மரத்தை வனப் பணியாளர்கள் மீட்டுள்ளனர். கடத்தப்பட்ட 3 சந்தன மரங்களின் எடை சுமார் 153 கிலோ இருக்கும். அதன் மதிப்பு ரூ.1,50,000/-க்கும் குறைவே ஆகும்.

மீண்டும் 19-10-2004 அன்று மேற்கண்ட எண்ணிக்கையிலான கடத்தல் கும்பல் மேற்கண்ட வளாகத்தில் 16 சந்தன மரங்களை வெட்டி எடுத்துச் சென்றனர். வனப் பணியாளர்களின் தீவிர தேடுதல் வேட்டையின் பயனாக மேற்கண்ட 16 சந்தன மரங்களும் மீட்கப்பட்டு விட்டன. மேற்கண்ட 16 பச்சை சந்தன மரங்களின் எடை சுமார் 3 மெட்ரிக் டன் இருக்கும். இதன் மதிப்பு சுமார் ரூ.30 இலட்சம் ஆகும். இவை அனைத்தும் திரும்ப கைப்பற்றப்பட்டுவிட்டதால், அரசுக்கு எவ்வித இழப்பும் இல்லை.

இந்நிகழ்வுகளின் விளைவாக அங்கிருக்கும் 32 முதிர்ந்த உலர்ந்த சந்தன மரங்களை களைந்தெடுத்து, அதில் கிடைக்கும் சுமார் 16 டன் எடையுள்ள சந்தன மரங்களை நடைமுறையிலுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கிற்குக் கொண்டு சென்று ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.1 கோடி ஆகும்.





மேற்படி கடத்தல் நிகழ்வுகளைத் தொடர்ந்து, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, மூன்று தனிப் படைகள் அமைக்கப்பட்டு, திறம்பட செயல்பட்டு வருகின்றன. மேலும் மோப்ப நாய் படை ஒன்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஜவ்வாது மலைப் பகுதி முழுமையும் குறிப்பாக வான்வெளி நிலைய வளாகமும் இரவு ரோந்துப் பணி, இதர தணிக்கைப் பணிகள் போன்ற நடவடிக்கைகளின் மூலம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டு சந்தன மரத் திருட்டு வெட்டுகள் குறித்து இரண்டு வழக்குகள் திருப்பத்தூர் கோட்டத்தில் வழக்கு எண் STOR No. 5/2004, நாள் 1-8-2004 மற்றும் STOR No. 6/2004 நாள், 19-10-2004-ல் பதிவு செய்யப்பட்டு வழக்குகளின்மீது விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு வனச் சட்டம், 1882-ன்கீழ் சந்தன மரம் அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்களுள் (Scheduled Timber) ஒன்றாகும். மேற்படி சட்டத்தின் பிரிவு 56-சி-ன்படி அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் தொடர்புடைய எந்தவொரு குற்றமும் பிடி ஆணையின்றி கைது செய்வதற்குரிய குற்றமாகக் கருதப்படும்.

இதற்கிடையில் வனத் துறை எடுத்த தொடர் நடவடிக்கையினால் இதுவரை 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற குற்றவாளிகள் தலைமறைவாக உள்ளதால் அவர்களையும் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். எங்களுடைய மாவட்டத்தில் ஜவ்வாது மலைதான் உலகிலேயே விலை உயர்ந்த சந்தன மரம் கிடைக்கக் கூடிய ஓர் இடம். இந்த சந்தன மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு, கடத்தப்பட்டு--காட்டிலே ஒருசில இடங்களில்தான் சந்தன மரங்களே இருந்து கொண்டிருக்கின்றன. அதிலே வீரப்பனை சுட்டு வீழ்த்திவிட்டாலும்கூட இன்னும் சில குட்டி வீரப்பன்கள் ஆங்காங்கே இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இருக்கக்கூடிய சந்தன மரங்களையும் அவர்கள் வெட்டி கடத்திக் கொண்டு போய்கொண்டிருக்கிறார்கள். வீரப்பனை சுட்ட அதே நாளிலேயே, 19-10-2004 அன்று, வாணியம்பாடி தாலுகா இந்த காவலூரில் ஆசியாவிலேயே மிகப் பெரிய Telescope—நம்முடைய மறைந்த

மாண்புமிகு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட Telescope இருக்கக்கூடிய இடம் அந்தக் காவலூர் இடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியா, அறிக்கையா?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை, கேள்விதான். அந்த Telescope இருக்கக்கூடிய அந்த இடத்தில் சுமார் ஒரு 168 ஏக்கர் இடத்தை—நம்முடைய வருவாய்த் துறையும், வனத் துறையும்—மத்திய அரசிற்கு கோள்களை ஆய்வு செய்வதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வளர்ந்திருக்கிற மரங்களை ஏற்கெனவே 1-8-2004 அன்று ஒரு கும்பல் — 30 பேர் கொண்ட கும்பல் — கடத்தினார்கள். அதேபோல் மீண்டும் 19-10-2004 அன்று ஒரு கும்பல் இந்த சந்தன கட்டைகளைக் கடத்தி சுமார் 1 கோடி ரூபாய் இழப்பை நம்முடைய வனத் துறைக்கும் அரசுக்கும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அறிக்கையிலே பார்க்கிறபோது, இந்த வனத் துறையைச் சேர்ந்திருக்கக்கூடிய அலுவலர்கள் சுமார் 1 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்த சந்தன மரங்களை எல்லாம் மீட்டு மீண்டும் மிச்ச மீதியிருந்த மரங்களைக்கூட இனி அவர்கள் வெட்ட முடியாதபடி இவர்களே வெட்டி அதைக் கொண்டு போய் தங்களுடைய கிடங்கிற்குள் வைத்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இந்த சந்தன மரங்கள் இப்போது நிறைய வளர்ந்து வருகின்றன; சிறிய சிறிய சந்தன மரங்கள், என்னுடைய நிலம் பக்கத்திலே இருக்கின்றன. அங்கிருந்து ஆறு மரங்களைக்கூட வெட்டி எடுத்துக் கொண்டுபோய் விட்டார்கள். ஆகவே, இனி சந்தன மரங்களை வளர்த்தாலும் பாதுகாப்பில்லை. இனி அரசே இதற்கு ஏ.கே. 47 போன்ற நல்ல சக்தி வாய்ந்த சில துப்பாக்கிகளை வனத் துறை அலுவலர்களிடம் வழங்கலாம். அதிரடிப் படையைக்கூட நீங்கள் இதற்கு வனத் துறையிலே நியமிக்கலாம், இப்படி வனத் துறையின் மூலமாக அதிரடிப் படைகளை நியமித்து, இனி இருக்கக்கூடிய சந்தன மரங்களைக் காப்பாற்றி, மீண்டும் ஜவ்வாது மலையில் விலை உயர்ந்த அந்தச் சந்தன மரங்களை, உலகப் புகழ் பெற்ற சந்தன மரங்களை வளர்ப்பதற்கு, காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டப்பட்டு கடத்தப்பட்ட சந்தன மரங்கள் அனைத்தும் மீட்கப்பட்டு விட்டன. அதில் ஈடுபட்ட 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



சொன்னார்கள். புகழ்பெற்ற வான்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு வனத் துறையிலிருந்து 100 ஏக்கர், அதாவது 40 ஹெக்டேர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னது போல 168 ஹெக்டேர் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) அவரே சொன்னார். 20 ஆண்டு காலம் அச்சுறுத்திக் கொண்டிருந்த சந்தன மரக் கொள்ளைக்காரன், பல உயிர்களைக் கொன்றவன், வீரப்பனையே அடக்கிவிட்டோம். இதுபோல் சிறு சிறு தவறுகளையும் அடக்கிவிடுவார் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தன மரங்களை நாங்கள் காப்பாற்றுவோம் என்று உறுதி கூறி அமர்கின்றேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடு) நான்கு கேள்விகளையும் ஒன்றாகக் கேட்டுவிட்டீர்கள்; உட்காருங்கள். திரு. கே.என். இலட்சுமணன்.

முற்பகல் 10-05

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்தேழாவது முதல் இருநூற்று ஐம்பத்து ஒன்றாவது வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் திருநாட்டினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதிமூன்றாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

[2004 நவம்பர் 22

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003—2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

### (அ) காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் கொலையுண்ட மேலாளர் திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு நிதியுதவி குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் மேலாளராகப் பணியாற்றிய திரு. சங்கரராமன் என்பவர், 3-9-2004 அன்று, அத்திருக்கோயிலின் உள்ளே உள்ள அவரது அலுவலகத்தில், பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்டார் என்பதையும், அது தொடர்பாக தமிழ்நாடு காவல் துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி, சட்டத்தின்முன் அனைவரும் . சமம் என்ற கொள்கையின் அடிப்படையில், தக்க நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ளது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும்.

இந்த நிலையில், திரு. சங்கரராமன் அவர்களின் துணைவியார் திருமதி பத்மா தன்னுடைய கணவர் திரு. சங்கரராமன் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டார் என்றும், தனது கணவர் பெற்று வந்த சம்பளத்தின் மூலமே குடும்பத் தேவைகள் கவனிக்கப்பட்டு வந்தன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் திரு. சங்கரராமன் கொலை



2004 நவம்பர் 22] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செய்யப்பட்ட பிறகு தங்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்றும், சென்னை, மயிலாப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரியில் படித்து வரும் தங்களது மகன் ஆனந்த சர்மா, காஞ்சிபுரம் அரசு பெண்கள் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வரும் தங்கள் மகள் உமா ஆகியோர், தொடர்ந்து கல்வி கற்க வழியின்றி இருப்பதாகவும், தங்கள் குடும்பம் எந்த ஆதரவும் இன்றி, வாழ்க்கை நடத்த வழியின்றி, மிகவும் துன்பமான சூழ்நிலையில் இருப்பதையும் தெரிவித்து, தொடர்ந்து வாழ்க்கை நடத்துவதற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருமதி பத்மா என்னிடம் விடுத்த இந்தக் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து, அவரது குடும்ப நிலையை நன்கு கவனத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளேன் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு முடிவு கட்டியதற்கு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பாராட்டு

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்”

என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவரின் அந்த வாய்மொழிக்கிணங்க எப்போது செயல்படுவது, எப்படிச் செயல்படுவது, எந்த இடத்தில் செயல்படுவது என்று தீர்க்கமாகச் சிந்தித்து, திடமாகச் செயல்பட்டு தமிழ்நாடு காவல் துறை ஒரு மகத்தான வெற்றியை, ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு ஒரு முடிவு கட்டியதுதான் அந்த மகத்தான வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி)

வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கர காட்டுக் கொள்ளைக்காரன், மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன், யானைகளை இரக்கமின்றி கொன்று குவித்த அசுரன், ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன், தமிழ்நாட்டை மட்டுமல்லாமல், கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாக பீடித்திருந்த இழிவான சாபக்கேடு--இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பனின் கொடுமைகளுக்கெல்லாம் 18-10-2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி

வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப் படை மேற்கொண்ட துணிவான, சாகச நடவடிக்கையால் அன்றைய தினம் வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

முற்பகல் 10-10

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை உயிருடன் பிடித்து, சட்டத்தின்முன் அவனை நிறுத்தி, அவன் செய்த தவறுகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும். அவனுக்குப் பக்கபலமாகவும், பின்புலமாகவும் நின்றிருந்தவர்களை, அவனை வைத்து காசு பார்த்தவர்களை, மக்கள் மத்தியில் அடையாளம் காட்ட வேண்டும் என்பதுதான் எனது தலைமையிலான இந்த அரசின் எண்ணம். இதன் அடிப்படையில்தான், தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர் உரிய வியூகங்கள் வகுத்து, தருமபுரியிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் பாப்பாரப்பட்டிக்கும், தருமபுரிக்கும் இடையே நெடுஞ்சாலையில் வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் வழி மறித்தார்கள். அவர்கள் வந்து கொண்டிருந்த வாகனத்திலிருந்து இறங்கி வந்து சரணடையுமாறு கூறினார்கள். ஆனால், வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் சுற்றி நின்ற அதிரடிப் படையினரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பித்து விடலாம் என்ற எண்ணத்தில் சரணடைவதற்குப் பதிலாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகும்கூட அதிரடிப் படையினர் மேலும் ஒரு வாய்ப்புக் கொடுத்து சரணடையுமாறு மீண்டும் ஓர் எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், அந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல், வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் தொடர்ந்து அதிரடிப்படையினர்மீது சுட்டதால், பதிலுக்கு அதிரடிப் படையினர் திரும்பச் சுட்டு, அவர்களை வெற்றி கொண்டார்கள். இந்தச் சாகச நடவடிக்கையின்போது கொலைகாரன் வீரப்பனும், அவனது மொத்தக் கூட்டாளிகளாகிய சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கௌடா மற்றும் சேதுமணி ஆகியோரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கையில் காவல் துறையைச் சார்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.

20 ஆண்டுகளாக இரவும் பகலும் நடைபெற்று வந்த ஒரு போராட்டத்திற்கு, கொடியவன் வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் எதிர்த்து நடத்திய அசுர வேட்டைக்கு, தமிழ்நாடு காவல் துறையின் சிறப்பு அதிரடிப் படை மதிநுட்பத்துடன் வியூகங்கள் வகுத்து, தனது 20 நிமிட சாகசச் செயலால் ஒரு முடிவு கண்டது. ஆனால், இதற்கு இடைப்பட்ட காலத்தில் வீரப்பன் எத்தனை பேரைக்





கொலை செய்தான்? அவன் மேற்கொண்ட கொள்ளைச் செயல்கள் எத்தனை? அவன் இழைத்த கொடுமைகள்தான் எத்தனை எத்தனை?

கொடியவன் வீரப்பனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 124. அவனால் அழிக்கப்பட்ட யானைகளோ ஆயிரத்திற்கும்மேல். கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்போ பல கோடி ரூபாய்க்கும் அதிகம். இந்தக் குற்றங்களுக்காக அவன்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளோ, தமிழகத்தில் 102, கர்நாடகாவில் 70 என்பதே தீயவன் வீரப்பன் எப்பேர்ப்பட்ட கொடுமைக்காரனாகத் திகழ்ந்தான் என்பதை எடுத்துக்காட்டும்.

இவற்றையெல்லாம் பொறுப்புள்ள எந்த அரசால்தான் சகித்துக்கொள்ள இயலும்? எனவேதான், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 1993 ஆம் ஆண்டில் பயங்கரக் கொள்ளைக்காரன் வீரப்பனும், அவனுடைய கூட்டாளிகளும் ஏற்படுத்தி வந்த இன்னல்களுக்கு ஒரு முடிவு கட்டும் வகையில் சிறப்பு அதிரடிப் படையை உருவாக்கினேன். எப்படியாவது வீரப்பனின் கொடுமைக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சிறப்பு அதிரடிப் படைக்கு ஊக்கம் அளித்தேன்; உற்சாகம் கொடுத்தேன். அவர்கள் சர்வ சுதந்திரமாகப் பணியாற்ற வாய்ப்பு அளித்தேன். எனது முந்தைய ஆட்சிக் காலம் முடிவடைந்த 1996 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் வீரப்பனைப் பிடிக்கும் முயற்சிகள் தொய்வின்றி தொடரப்பட்டன. இதன்விளைவாக வீரப்பனின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. செயல்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டான் வீரப்பன். ஆனால், 1996 ஆம் ஆண்டு அமைந்த தி.மு.க. அரசு, சிறப்பு அதிரடிப் படையின் நடவடிக்கைகளை நிறுத்தி அதனை செயலற்றதாகச் செய்தது.

2001 ஆம் ஆண்டு நான் மீண்டும் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை சிறப்பு அதிரடிப் படை செயல்படா நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தது. நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்கு புத்துயிரளித்து, அதை உயிர்த் துடிப்புள்ளதாக ஆக்கினேன். நான் 2001-ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், தமிழக சிறப்பு அதிரடிப் படைக்கும், கர்நாடக அதிரடிப் படைக்கும் சுமுகமான அணுகுமுறை ஏற்பட்டது. நவீன ரக துப்பாக்கிகள், புதிய வகைக் கருவிகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றைச் சிறப்பு அதிரடிப் படைக்கு வழங்கினேன். உளவுத் தகவல்களைச் சரியாகவும், உடனுக்குடனும் பெற்றிட நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினேன்.

இத்தனைக்கும் மேலாக கொடியவன் வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதிரடிப் படை முற்றிலும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தேன்.

இவ்வாறு வீரப்பனை வெற்றி கொள்வதற்கான ஒவ்வொரு அம்சத்தையும் தீர்க்கமாக ஆராய்ந்து, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்குத் தேவையான வசதிகளை எல்லாம் வழங்கி, அதற்கான இலக்கையும் நிர்மாணித்துத் தந்தேன். வீரப்பனைப் பிடிப்பதற்காக நான் இவ்வாறு மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகள் கேலி செய்தன. ஆனால், நான் உறுதியாக இருந்தேன். அந்தப் பயங்கர கொள்ளையனைப் பிடிக்கும் முயற்சியில் நான் சற்றும் தளர்வடையவில்லை. தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும், அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருந்தேன். துணிவிலும், சாகசத்திலும் இணையற்ற தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்கள், எனது அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுத்தார்கள்; அதனை உண்மையாக்கினார்கள்.

முற்பகல் 10-15

பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாய், கடமையிலே கருத்தாய்ப் பணியாற்றி, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர் இன்றைக்கு வெற்றி பெற்றுள்ளார்கள். இன்றைக்கு, இந்த வெற்றிக்குப் பாராட்டு கிடைக்கிறது. ஆனால், அன்றைக்கு? பாராட்டு வேண்டாம், வெறும் ஊக்கம் கொடுத்திருந்தால்கூடப் போதும். ஆனால், அப்படி செய்யவில்லை சிலர். மாறாக ஏளனம் செய்தார்கள்; எள்ளி நகையாடினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் கேலியும், கிண்டலும் செய்தார்கள். இதற்கெல்லாம் பதிலாக, 2003-2004 ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கைமீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளிக்கும்போது நான் எனது இலட்சியத்தைத் தெளிவாக வெளியிட்டேன்.

"வீரப்பனைப் பிடிப்பது ஒன்றுதான் பாக்கி, அதையும் விரைவில் செய்து முடிப்போம்" என்று, அன்றைக்கு சட்டமன்றத்தில் நான் முழக்கமிட்டேன். அன்று நான் சொன்னதைச் சொன்னபடி செயல்படுத்தி, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் வீரப்பனின் கொடூர வரலாற்றுக்கு ஒரு முடிவு கட்டினார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)





இதற்கு அடிப்படை, தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைதான். தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினரின் ஆற்றல்மீது யார் வேண்டுமானாலும் நம்பிக்கை இழந்திருக்கலாம். அவர்கள்மீது, அவர்களுக்கேகூட ஒரு கால கட்டத்தில் நம்பிக்கை குறைந்து போயிருக்கலாம். ஆனால், உடல் தகுதி, மன உறுதி ஆகியவற்றின் அடிப்படையில் வீரப்பனைப் பிடித்தே தீருவது என்னும் அவர்களது ஆர்வத்தினை அடையாளம் கண்டு சிறப்பு அதிரடிப் படைக்கான வீரர்களைத் தெரிவு செய்த எனக்கு மட்டும், சிறப்பு அதிரடிப் படையினர்மீது எள்ளளவும் நம்பிக்கை குறையவில்லை.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்களும் அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுத்து, கடும் பசிக்கும், கொடும் நோய்க்கும் மனம் தளராது, கொத்துகிற பாம்புக்கும், கொட்டுகிற தேளுக்கும் பயப்படாது, அடாத பனிக்கும், விடாத மழைக்கும் அயராது, குள்ளநரி வீரப்பனின் கொடுமைகளுக்கெல்லாம் கொஞ்சமும் அஞ்சாது செயல்பட்டு, 2004 அக்டோபர் 18 ஆம் நாள் கொடுமையைக் கொன்று, அமைதியை மீட்டுத் தந்தார்கள்.

சிறப்பு அதிரடிப் படையின் தலைவர் திரு. கே. விஜயகுமார், தன்னுடைய வீர உணர்வையும், விழுமிய திறத்தையும் வெளிப்படுத்தி, அதிரடிப் படை வீரர்களின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி, மதிநுட்பத்துடன் சிறந்த உத்திகளைக் கையாண்டு, சரித்திரத்தில் இடம் பெறும் இந்த மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்தார்.

சிங்கமாக இருந்தால் அதன் குகைக்குள்ளே சென்று அதனைச் சந்திக்கலாம். அங்கே வீரம் இருந்தால் போதும். அதுவே காட்டு எலியாக இருந்தால், அதனை அதன் வளையிலிருந்து வெளிக் கொணர்ந்து பொறியிலே சிக்க வைத்துத்தான் பிடிக்க வேண்டும். அங்கே வீரத்துடன் விவேகமும், தந்திரமும் வேண்டும். அப்படி காட்டுக்குள்ளே இருந்த வீரப்பனை நாட்டுக்குள் வரவழைத்து, சரண் அடைந்திட ஒன்றுக்கு இரண்டு முறை எச்சரிக்கை விடுத்து, அதனை வீரப்பன் ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, 124 உயிர்களைப் பறித்த தனக்கு இவர்கள் எம்மாத்திரம் என்ற துணிவில் துப்பாக்கியால் சுட்டபோது, துள்ளி வரும் தோட்டாக்களுக்கு அஞ்சிடாமல், வீரத்துடன் திருப்பிச் சுட்டு, வீரப்பனின் கொடுமைகளுக்கு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைத் தலைவரும், காவல் துறை கூடுதல் இயக்குநருமான திரு. விஜயகுமாரும், அவரது குழுவினரும் ஒரு முடிவு கட்டினார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2004 நவம்பர் 22

தங்களது குடும்பங்களை விட்டு பல ஆண்டுகள் பிரிந்து, தங்களது இல்லத்தின் வசதிகளைத் துறந்து, தங்களது பாதுகாப்பைப் பொருட்படுத்தாது, அபாயகரமான பணியை விரும்பி மேற்கொண்டு, தமிழகம் மட்டுமல்லாமல், கர்நாடக மக்களும் அமைதியுடன் வாழ வழி அமைத்துக் கொடுத்தமைக்காக, தமிழக மக்களின் நன்றியுணர்வைப் பிரதிபலிக்கும் வகையில், அதிரடிப் படைத் தலைவர் முதலாக, அதன் கடைசி காவலர் வரை, அதிகாரிகள் முதலாக சமையல்காரர் மற்றும் ஏவலர் வரை அனைவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, அவர்கள் விரும்பிய இடத்தில் வீட்டுமனை ஆகியவற்றை தமிழக அரசின் சார்பில் பரிசாக வழங்கி கௌரவப்படுத்தினேன். வீர சாகசச் செயல்கள் ஆற்றியமைக்கும், வீர விழுப்புண் பெற்றமைக்கும், அந்தப் பணியில் பங்கேற்றமைக்கும் மனமுவந்து பாராட்டி, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை அணிவித்தேன். தற்போது பணியாற்றுபவர்கள் மட்டுமல்லாமல், இதற்கு முன்னர் சிறப்பு அதிரடிப் படையிலிருந்து வீரப்பனைப் பிடிப்பதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்த உயரதிகாரிகளையும், காவலர்களையும் மறந்து விடாமல், அவர்களுக்கும் தகுந்த மரியாதை செய்து கௌரவித்தேன். தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து பணியாற்றிய வனவர் முதல் வனத் தோட்டக் காவலர் வரையிலான வனத் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு படி பதவி உயர்வு, ரொக்கப் பரிசு ஆகிய பரிசுகள் வழங்கியும், வீரப் பதக்கங்கள் அணிவித்தும் கௌரவித்தேன்.

முற்பகல் 10-20

தமிழகக் காவல் துறைக்குப் பெரும் புகழைப் பெற்றுத் தந்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினருக்கு, தமிழக மக்களின் நன்றி உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில், பார் வியக்கும் வண்ணம் ஒரு பாராட்டு விழா நடத்தி, அந்த விழாவிலே இந்தப் பரிசுகளையெல்லாம் அவர்களுக்கு அளித்து, அதில் அவர்களது குடும்பத்தினர்கள் அனைவரையும் கலந்துகொள்ள வைத்து, அறுசுவை விருந்து தந்து, பாராட்டி மகிழ்ந்தேன்.

அதுமட்டுமின்றி, இளைய தலைமுறையினர் வீர உணர்வு பெற்று இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகவும், தன்னலம் கருதாது உழைத்திட, தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திட, தூண்டுகோலாகத் திகழும் வகையில், வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு, தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் மற்றும் வனத் துறை அலுவலர்களின் வீரத்தை



2004 நவம்பர் 22] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நினைவுகொள்ளும் வகையில், நினைவுச் சின்னம் ஒன்றினை, வண்டலூர் அருகே ஊனமாஞ்சேரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காவலர் பயிற்சிக் கழக வளாகத்தில் நிறுவிட ஆணையிட்டேன்.

இவ்வாறு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை, அர்ப்பணிப்பு உணர்வுடன் போராடி, உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. தமிழகக் காவல் துறை தரணியில் தன்னிகரற்ற காவல் துறை என்ற பெருமையைப் பெற்றுத் தந்தது.

இந்த வெற்றி, தமிழகக் காவல் துறைமீது, நான் வைத்திருக்கின்ற அசைக்கமுடியாத நம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றி!

இந்த வெற்றி எதிர்க் கட்சியினரின் ஏகடியங்களை ஒரு பொருட்டாக மதிக்காமல், வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட எனது மன உறுதிக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு அதிரடிப் படையின் வீரத்திற்கும், விவேகத்திற்கும் கிடைத்த வெற்றி!

இந்த வெற்றி, சொன்னதை சொன்னவாறு செய்து முடித்த, எனது அரசுக்குக் கிடைத்த தனிப் பெரும் வெற்றி என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்துக் கட்சியின் தலைவர்கள் உட்பட . . .

**டாக்டர் க. பொன்முடி:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இதிலே விவாதம் கூடாது. நீங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) 110-வது விதியின்கீழ் விவாதம் கூடாது. நீங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அனைத்துக் கட்சித் தலைவர்கள் உட்பட, நாடும், நானிலமும் பாராட்டுகிற இந்தச் சரித்திரச் சாதனையை நானும் பாராட்டாவிட்டால், நான் கடமையிலிருந்து தவறியவனாவேன். இந்தச் சாதனைக்கு மூலமாகவும், முதலாகவும், வேராகவும், நீராகவும் நின்று இதனை நிகழ்த்திய சாதனை நாயகி, வீரப்பனை வீழ்த்திய வீரப்பெண், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சட்டப் பேரவைத் தலைவர் என்ற முறையில் நானும் பாராட்டுகிறேன். 'தமிழ் போல் வாழ்க தழைத்து' எனப் போற்றுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) 2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2004 நவம்பர் 22

இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதமும், பதிலுரையும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் விவாதம் கூடாது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம்தான் சொன்னார்கள் அவர்கள். (குறுக்கீடு) தகவல்தான் சொன்னார்கள் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறைக்குத் தலைமையே மாண்புமிகு முதலமைச்சர்தானே.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், தாங்கள் இன்றைக்கு துணை நிதிநிலை அறிக்கைமீது பேச இருக்கிறீர்கள். (குறுக்கீடு) தாங்கள் இன்றைக்கு துணை நிதிநிலை அறிக்கைமீது பேச இருக்கிறீர்கள். அப்படிப் பேசுகிறபோது அதற்குரிய விளக்கத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுகிறபோது அதற்குரிய விளக்கத்தைச் சொல்லுங்கள். இப்போது 110-வது விதியின்கீழ் விவாதத்தை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, தயவுசெய்து அனுமதிக்க முடியாது. 110-வது விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை வைத்ததற்குப் பிறகு, அதிலே விவாதிப்பதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். தாங்கள் நிதிநிலை அறிக்கைமீது பேசுகிறபோது பேசுங்கள். (குறுக்கீடுகள்) நிதிநிலை அறிக்கைமீது தாங்கள் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அப்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) அப்போது பேசுங்கள். அவையினுடைய நேரத்தை வீணடிக்காதீர்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நிறைவு நாள். அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

*முற்பகல் 10-25*

**டாக்டர். க. பொன்முடி:** * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2004 நவம்பர் 22]

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பை, நீங்கள் துணை நிதிநிலை அறிக்கைமீது பேசுகிறபோது பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது விவாதத்தை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) துரைமுருகன், இப்போது விவாதத்தை அனுமதிக்க முடியாது. தாங்கள் இதை விவாதமாக ஆக்க விரும்பினால், (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும் பதிலுரையும். (குறுக்கீடு) துரைமுருகன் இதிலே நான் விவாதத்தை அனுமதிக்க முடியாது. துரைமுருகன், அனுமதிப்பதற்கு இல்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** ** திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

## 5. கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. பேரவை விதிகளின்படி, இன்று விவாதமும், பதிலுரையும் சரியாக பிற்கல் 1-30 மணிக்கு முடிந்து வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை மனதில் கொண்டு, தங்களின் உரையை மிகச் சுருக்கமாக அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. வே. கணேசன், தி.மு.க., இருக்கையில் இல்லை. இனிமேல் வாய்ப்பில்லை. திரு. லா. சந்தானம், பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2004 நவம்பர் 22

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கையின்மீது எங்களுடைய இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அனுமதி அளித்தத் தங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவிலே சென்ற நிதிநிலை அறிக்கைக்குப் பின்னால் ஏற்பட்ட அத்தியாவசிய செலவினங்களுக்காக 60.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் வேண்டுமென்கின்ற நிலையில் இது மிக அத்தியாவசியச் செலவுகளான மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், மருத்துவமனைகளைச் சீர் செய்தல், அதுபோல அனைவருக்கும் கல்வித் திட்டத்திலே கல்வி வழங்குவதற்குரிய நிதி, இப்படி மிக அத்தியாவசியமான நிலையிலே மருத்துவக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் போன்றவற்றை சீரமைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியாக இருக்கின்ற காரணத்தினால் இந்த நிதி ஒதுக்கத்திலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் யாருக்கும் இருக்க முடியாது என்கின்ற நிலையில் இதை நான் மனமார ஏற்றுக்கொள்கிறேன். அதோடு இன்றைக்கு இருக்கின்ற நிலையில் மிகச் சுருக்கமாகவும் துரிதமாகவும் பேசுகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால் என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு முன்னால், என்னுடைய தொகுதி குறித்த மிக முக்கியமான வேண்டுதல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற 58 கிராமக் கால்வாய் திட்டம் என்பது 1996-லே இந்த மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. இன்றைக்கு ஏறத்தாழ 9 ஆண்டுகள் தாண்டிவிட்டன. நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டவுடனே 2001-லே இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இந்த 58 கிராமக் கால்வாய்த் திட்டம் என்பது தற்போது நடைபெறாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தாங்கள் மீண்டும் நடைபெறுவதற்கு உறுதியளிக்க வேண்டும். நீங்கள் அதைச் செய்து தர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் என்னுடைய கோரிக்கையை வைத்தேன். அவர்களும் அன்றைக்கு சட்டப் பேரவையிலே என்னுடைய கோரிக்கையை ஏற்று நிச்சயமாக அந்தத் திட்டத்தை நிறைவு செய்து தருகிறேன் என்று வாக்குறுதி தந்தார்கள். இன்றைக்கு ஏறக்குறைய மூன்று ஆண்டுகளைத் தாண்டிவிட்ட நிலையிலும் அந்தத் திட்டத்திற்கு உரிய திருத்திய மதிப்பீடு இன்னும்



2004 நவம்பர் 22] [திரு. லா. சந்தானம்]

அரசால் அங்கீகாரம் செய்யப்படவில்லை என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதிலே அவர்களுடைய கவனத்தைச் செலுத்தி, அவர்கள் அனுமதி தந்தால்தான் அந்தத் திட்டம் நிறைவுபெறும் என்கின்ற நிலையிருக்கிறது.

(முற்பகல் 10-30

இன்றைக்கு உரிய காலத்திலே நல்ல மழை பெய்திருக்கின்ற காரணத்தினால், வைகை அணையும், பெரியாறு அணையும் நிரம்பியிருக்கின்ற நேரம். உபரித் தண்ணீரை ஆற்றிலே வீணாகத் திறந்துவிடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், பத்திரிகையாளர்களெல்லாம் அந்தக் கிராமங்களுக்குச் சென்று, இந்த 58 கிராமங்களினுடைய நிலையைப் பற்றிக் கேட்கின்றபோது, அங்கிருக்கின்ற மக்களெல்லாம், இந்த ஆண்டு எங்கள் பகுதியிலே மழை இல்லை, குளங்களெல்லாம் வறண்டு கிடக்கின்றன. ஆனால், அணைப் பகுதியிலே நல்ல மழை பெய்து, வைகை, பெரியாறு போன்ற அணைகளெல்லாம் நிரம்பியிருக்கின்ற நேரத்தில், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், நாங்கள் பயன்பெற்றிருப்போம் என்று அந்தப் பகுதி மக்களெல்லாம் சொல்கின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் அந்த மக்களெல்லாம் என்னுடைய செயல்பாட்டிலே குறை கூறுகின்ற அளவிற்கு, சட்டமன்ற உறுப்பினர் இதிலே உரிய கவனம் செலுத்தவில்லையோ, அக்கறை காட்டவில்லையோ, அதனால்தான் இந்தத் திட்டம் வரவில்லையோ என்று என்னைப் பழித்துப் பேசுகின்ற அளவிற்கு ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்தத் திட்டத்தை நமது ஆட்சிக் காலத்திற்குள்ளேயே முடித்துத் தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இன்னொரு கோரிக்கை. இப்போது வீரப்பனை வீழ்த்திய காவல் துறையினருக்கெல்லாம் பாராட்டு தெரிவித்தார்கள். அதை நாங்கள் மனமார ஏற்றுக்கொள்கிறோம். அப்படியிருக்கின்ற நிலையில், இன்றைக்கு ஆய்வாளர்களாகப் பணியாற்றுகின்றவர்கள், கடந்த 24 ஆண்டு காலமாக தங்களுடைய பணியைக் காவல் துறையிலே ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துணை ஆய்வாளர்களாக நேரடியாக நியமிக்கப்பட்டு, ஒரு promotion-ஐ மட்டும் பெற்றிருக்கிறார்கள். ஆய்வாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் தங்களுடைய

ஆட்சிக் காலத்திலே, 1993 ஆம் ஆண்டிலேதான் அவர்களுக்கு அந்த promotion வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை 14 ஆண்டு காலமாக அவர்களுக்கு promotion வழங்கப்படவில்லை என்கின்ற நிலை இருக்கிறது. இதில் ஒன்றுகூட, கோட்டூர்புரத்திலே 1997 ஆம் ஆண்டு, தீவிரவாதிகள் இருவர் மறைந்திருந்த இடத்திலே, அந்தத் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்காக, காவல் துறையிலே பணியாற்றிய கிருஷ்ணமூர்த்தி என்பவர், இன்றைக்கும் காவல் ஆய்வாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவர், அந்தத் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்காக அந்த வீட்டிற்குள் நுழையும்போது, அவர்கள் துப்பாக்கியை எடுத்துச் சுடுகின்ற நிலையில்கூட, அவர்களைப் பிடித்து, அங்கிருந்த வெடிமருந்துகளையெல்லாம் — தமிழ்நாட்டையே சீர்குலைக்கின்ற அளவிற்கு அவர்கள் அந்த வீட்டில் பதுக்கி வைத்திருந்த வெடிமருந்துகளையெல்லாம் எடுத்தார்கள் என்கின்ற நிலையில், அன்றைக்குச் சட்டப் பேரவையிலேகூட, இதற்கு அவர்களுக்கு நாங்கள் promotion தருகிறோம் என்பதைக்கூட ஏப்ரல், 25 ஆம் தேதி, 1997 ஆம் ஆண்டு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை அவர்களுக்கு அது கிடைக்கப்பெறவில்லை என்கின்ற நிலை இருக்கிறது. உங்களை அவர்கள் பெரிதும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினர் உங்களுக்காகச் செயல்படுகின்றவர்கள் என்பதை நீங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். எனவே, அந்தக் காவல் துறை ஆய்வாளர்களுக்கு தங்களுடைய காலத்திலேயே, promotion வழங்குவதற்கு, பதவி உயர்வு வழங்குவதற்கு -- ஏற்கெனவே அவர்கள் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குரிய சம்பளத்தையெல்லாம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால், இந்த அரசுக்கு எந்தவிதமான நிதியிழப்பீடும் இல்லை என்கின்ற நிலையிருக்கிறது. பெயரளவிலே அவர்களுக்குப் பதவி உயர்வு, துணைக் கண்காணிப்பாளர் என்கின்ற அந்த கௌரவம் வேண்டும் என நினைக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்டசபை கூடுகின்ற நேரத்தில், பல்வேறு வெற்றிகளை பெற்றிருக்கின்ற நேரத்திலே, இந்த மாமன்றம் கூட்டப்பட்டிருக்கிறது. கடந்த மாதத்தில்கூட உக்ரைன் நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகள் பாதுகாப்புக் குழு முதல்வருக்கு தங்கத் தாரகை என்கின்ற விருதை வழங்கிப் பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விருதைக் காட்டிலும் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும், வெற்றித் தாரகை என்ற விருதை அவர்கள்



முற்பகல் 10-35

பெற்றுவிட்டார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் இங்கு அவர்கள் சொல்லியது போல, பல ஆண்டுகளாக தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் மாபெரும் சவாலாக இருந்து நடிகர் ராஜ்குமார் போன்றவர்களை எல்லாம் கடத்தி அதன்மூலமாக பல்வேறு பேரங்களை எல்லாம் பேசித் தீர்த்து, இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் மாபெரும் இடையூறு சக்தியாக விளங்கிய வீரப்பனை சுட்டு வீழ்த்தியதிலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இரண்டு மாநிலங்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறது என்பது ஒன்று.

அதோடு சென்னை நகருக்கு உளசுத்தியோடு எப்படியும் இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, கடந்த மூன்று ஆண்டுகளாக இருந்த கடுமையான வறட்சி நிலைமையில் பல்வேறு இடங்களிலிருந்தும் தண்ணீரைப் பெற்று வந்து, இந்த மாநகர் பாதிக்கப்படாத அளவிற்குக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகப்பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சாதனையோடு, அந்த நியாய உணர்வோடு, எப்படியும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கின்ற அந்த உளப்பூர்வமான உணர்வோடு, வீராணம் திட்டத்தை -- வீராணத்திலிருந்து, புதிய வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டம், அதிலே விவசாயிகள் பாதிக்கப்படாத நிலையும் இருக்க வேண்டும். இங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அதிலே விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடுவார்கள். அது ஒரு பகல் கனவு, அந்தத் திட்டம் வரவே வராது என்று சொல்லப்பட்டதை நாம் அனைவரும் இங்கே கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். இந்த வீராணம் ஏரியிலிருந்து நீங்கள் சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவது என்பது நடக்கக்கூடிய காரியமல்ல என்கின்ற பல வாதப் பிரதிவாதங்கள் இந்த அவையிலே அரங்கேறின. இருந்தாலும்கூட இன்றைக்கு விவசாயிகளும் பாதிக்கப்படாத அளவிலே அந்த வீராணம் ஏரி நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் வள்ளுவர்கூட,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என்று சொல்லுவார். மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு செயலாற்றுகின்ற ஒருவர் செய்கின்ற அந்தக் காரியத்திற்கு, நான் உங்களுக்கு முன்னால் சென்று வழிகாட்டுகிறேன் என்று தெய்வம்கூட முன்னுக்கு வரும் என்பது போல (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்த மக்களுக்கு அந்தத் திட்டத்தை, சென்னையிலே வசிக்கின்ற மக்களுக்கு அந்தக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்கின்ற ஆக்கபூர்வமான எண்ணத்தோடு அரசு செயல்பட்ட காரணத்தினால், இன்றைக்கு இயற்கையும் ஒத்துழைத்திருக்கிறது. அந்த விவசாயிகளும் பாதிக்கப்படவில்லை. சென்னை நகர மக்களும் வீராணம் குடிநீரை அருந்திக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் நாம் ஏற்று பாராட்டத்தான் வேண்டும்.

இன்றைக்கு சட்டம் என்பது அனைவருக்கும் சமம் என்பதை தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய நாடே வியந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட செயலை எந்த முதலமைச்சராவது ஆற்றலோடு செய்ய முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) என்று கண்களை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்குச் சட்டத்தினையும், சட்டம் ஒழுங்கினையும் காப்பாற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று யாராவது சொல்ல முடியுமா? வாய் திறக்க முடியுமா (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அளவிற்கு அத்தனை பேரினுடைய வாய்களும் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு காஞ்சியிலே நடந்த கொலை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதோடு தாய் உள்ளத்தோடு அந்தப் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கும் ஒரு நிவாரணத்தையும் இன்று அறிவித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர் வெறும் தங்கத் தாரகை மட்டுமல்ல; தமிழகத்தின் வெற்றித் தாரகை என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு இந்த அரசு மிகச் சிறப்பாக வேளாண் தொழிலையும் முன்னுக்குக் கொண்டுவருவதன் மூலம் தமிழகத்தை ஒரு தலைசிறந்த முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டுமென்கின்ற நிலையில் நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இங்கே தமிழகத்திலே வந்திருக்கின்ற Hyundai, Ford போன்ற தொழில் நிறுவனங்கள் எல்லாம் எப்படி



வந்தன, அதற்கு யார் முயற்சி மேற்கொண்டார்கள் என்கின்ற நிலையெல்லாம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் சட்டமன்றப் பேரவையிலே விவாதிக்கப்பட்டு, அதற்கு முதலமைச்சரவர்கள்கூட உரிய பதிலைச் சொல்லுகின்ற நேரத்தில் வெளியிலிருந்து பல குரல்கள் இப்படி வந்தது, அப்படி வந்தது என்கின்ற தர்க்கத்தையெல்லாம் ஏற்படுத்தியிருக்கின்ற ஒரு சூழலில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டங்கள் எல்லாம் எப்படி வந்தன, அதற்குரிய உண்மையான நிலைகள் என்ன என்பதை இந்த . . .

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், விளக்கம் சொல்ல விரும்புகிறார்கள்.

**திரு. லா. சந்தானம்:** அவையிலே விளக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, நேரம் சுருங்க இருக்கின்ற காரணத்தினால், என்னுடைய உரையை நிறைவு செய்து, அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள், 17-11-2004 அன்று, சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது, 1996 முதல் 2001 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் பற்றித் தவறான தகவல் வெளியிட்டபோது, அதற்குப் பதிலளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தெள்ளத் தெளிவாக விளக்கம் அளித்தார்கள். சட்டமன்றத்திலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குச் சட்டமன்றத்திற்கு வந்து பதில் அளிக்கின்ற வாய்ப்பும், வசதியும் இருந்தபோதும், அதைப் புறக்கணித்துவிட்டு, தொழில் வளர்ச்சியில், தி.மு.க. அரசின் சாதனைகளாக, உண்மைக்குப் புறம்பான தகவல் களஞ்சியத்தை, ஒரு நீண்ட நெடிய அறிக்கையாக, பத்திரிகைகளுக்கு வழங்கியுள்ளார், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி. சட்டமன்றத்திலே கூறப்பட்ட ஒரு கருத்துக்கு, திரு. கருணாநிதி, சட்டமன்றத்திற்கு வெளியே பதில் கூறியிருந்தாலும், அதற்குரிய விளக்கத்தைச் சட்டமன்றத்திலே கூறுவதுதான், சட்டமன்றத்திற்கு அளிக்கப்படும் உரிய மதிப்பாகும் என்பதால், சில உண்மைகளை இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றலும், எழுச்சியும் மிகுந்த தலைமையின்கீழ் அமைந்துள்ள தமிழக அரசு, தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும், முதலிடத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுத்துவருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தனித்த ஆற்றலும், தகைமைசார்ந்த தலைமையுமே, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அப்படியிருக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சியைப் பற்றி, திரு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில், மற்ற அமைச்சர்கள் எவருமே பணியாற்றவில்லை என்பதுபோல கருத்துத் தெரிவித்திருப்பது, சிறுபிள்ளைத்தனமான செயலாகும். இது, தமிழகத்தை முதலிடத்திற்குக் கொண்டு செல்வதற்குப் பாடுபட்டுவரும் எங்கள் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான ... (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) - இவ்வரசின் கூட்டு முயற்சியில், குறுக்குசால் ஓட்டுகின்ற திரு. கருணாநிதியின் வாடிக்கையான வேலைதான். இத்தகைய கூற்றுகளை.... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விளக்கம் சொல்லி முடிக்கட்டும்; அமைச்சர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) தொழில் துறை தொடர்பாக, உங்களுடைய இயக்கத்தினுடைய தலைவர் எழுதியிருந்த ஒரு கருத்துக்கு அவர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** இத்தகைய கூற்றுகளை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. மக்களும் இத்தகைய அவதூறு பிரச்சாரத்தை அலட்சியம் செய்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள், தாமதமாக இந்த அவைக்குள் வந்ததால், அமைச்சர் எதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்ற உண்மை அவருக்குப் புரியவில்லை. வெளியில்



ஒரு தலைவர் வெளியிட்ட அறிக்கைக்கு, அமைச்சர் இப்போது பதில் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இப்போது பேசுகின்றபோது, ஒரு கேள்வியைக் கேட்டார். அதற்குத் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ப. ரங்கநாதன்:** வெளியிட்ட அறிக்கையைப் பற்றிதான் சொல்கிறார் அவர். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஓர் உறுப்பினர் கேட்கிறபோது அதற்கு ஓர் அமைச்சர் எழுந்து விளக்கம் அளித்தால், அதிலே நான் தலையிட விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து (குறுக்கீடுகள்) ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் பேசினார்; அவர் பேசியதற்குத்தான் அமைச்சர் விளக்கம் அளிக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** ஆனால், "கருணாநிதி அவர்கள் வெளியிலேயிருந்து அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்; சிறுபிள்ளைத்தனம்" என்கிறார். ** (குறுக்கீடுகள்) (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது, அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. முறைகேடானது. (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்துநின்று கூச்சலிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் உரிய விளக்கத்தைச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உரிய விளக்கத்தைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சரியான புள்ளி விவரங்களைத் தரவேண்டியதன் அவசியத்தைப் பற்றி... (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், ** என்று சொன்னதை, இந்த அவையிலே அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் படியுங்கள். (குறுக்கீடுகள்) படியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் படியுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பா. பரணிகுமார் அவர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கை அருகே வந்து கூச்சலிட்டார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்கள் இடங்களிலே உட்கார்ந்துகொண்டு பேச வேண்டும். (குறுக்கீடுகள்) இங்கே வந்து என்னை மிரட்டக்கூடாது. அவரவர்கள் இடங்களிலே போய் உட்காருங்கள். அமைச்சர் படியுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சரியான புள்ளி விவரங்களைத் தர வேண்டியதன் அவசியம் குறித்து ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விளக்கம் சொல்கிறார். விளக்கம் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) விளக்கம் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** திரு. கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். 1996... (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-45

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே, இன்னொரு உறுப்பினரை விளிக்கிறபோதே ஏனோ தானோ என்று, கருணாநிதி என்று விளிக்கிறார். திருப்பி எங்களால் சொல்ல முடியும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** திரு. கருணாநிதி என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'திரு' என்கிற அடைமொழியோடுதான் சொல்கிறார். (குறுக்கீடு) 'திரு' என்கிற அடைமொழியோடுதான் சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் நீதி கேட்கிறேன், அவர் சிறுபிள்ளைத்தனம் என்று சொன்னதை நீங்கள் expunge பண்ணப் போகிறீர்களா, அல்லது allow பண்ணப் போகிறீர்களா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலுரையைப் படிக்கிறபோது, திரு. கருணாநிதி என்றுதான் அழைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தவறான குற்றச்சாட்டை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறுபிள்ளைத்தனம் என்பது ஒன்றும் அவை உரிமையை மீறிய சொல் அல்ல. (குறுக்கீடுகள்) கண்ணியத்தை மீறக்கூடிய சொல் அல்ல. (குறுக்கீடுகள்) சிறுபிள்ளைத்தனம் என்பது ஒன்றும் கண்ணியத்தை மீறிய சொல் அல்ல.

**திரு. துரைமுருகன்:** இதுதான் இந்த அவையினுடைய முறை என்றால், எங்கள் தலைவரை இழிவுபடுத்தி பேசிக்கொண்டிருக்கிற இந்த அவையில் நாங்கள் தொடர்ந்து பணியாற்ற இன்றைக்கு விரும்பவில்லை, நாங்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சரியான புள்ளி விவரங்களைத் தரவேண்டியதன் அவசியம் பற்றி திரு. கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (குறுக்கீடுகள்) 1996-2001 வரையிலான கால அளவில், தாங்கள் புரிந்த சாதனைகள் என தி.மு.க. கூறிக்கொள்கிற, ஃபோர்டு மற்றும் ஹூண்டாய் கார் தொழிற்சாலைகள் முதலீட்டுத் திட்டங்கள் 1991-96 கால அளவில் வெற்றிகரமாக தோற்றுவிக்கப்பட்ட திட்டங்கள். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்துநின்று கோஷமிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் செய்வது அவை மரபை மீறிய செயல். அவை உரிமையை மீறிய செயல். மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களைக் குறிப்பிட விரும்புகிறேன், தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். பொன்முடி, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) புகழேந்தி, உட்காருங்கள். துரைமுருகன் அவர்கள் ஏற்கெனவே அதுகுறித்த தன்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டார். அதை நீக்காவிட்டால் நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறோம் என்று அவர் சொல்லிவிட்டார். சொன்னதற்குப் பிறகும், இங்கேயே நின்றுகொண்டு அவையிலே குழப்பத்தை விளைவிக்கவேண்டுமென்று, வேண்டுமென்றே நீங்கள் இவ்வாறு செய்வது முறையல்ல. தயவுசெய்து உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சரியான புள்ளி விவரங்களைத் தரவேண்டியதன் அவசியம் பற்றி...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள், ஜி.கே. மணி, என்ன?

**திரு. ஜி.கே. மணி:** ஒரேயொரு நிமிடம், பேச அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** 1996-2001 வரையிலான கால அளவில் தாங்கள் புரிந்த சாதனை என ஃபோர்டு, ஹூண்டாய் கார் தொழிற்சாலைகளின் முதலீட்டுத் திட்டங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசுங்கள். திரு. ஜி.கே. மணி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாட்டுக்கு பலமுறை முதலமைச்சராக இருந்தவர், ஒரு மூத்த அரசியல்வாதி. இப்போது சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அதிலே மரியாதைக் குறைவாக எல்லாம் எதுவும் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் மரியாதைக் குறைவாக அவருடைய பெயரையும் விளிக்கவில்லை. 'திரு' என்கிற அடைமொழியோடுதான் விளித்தார். அவர் — எழுதியிருக்கக்கூடிய அறிக்கையில் — அரசாங்கம் தொழில் துறையிலே எதுவும் செய்யவில்லை என்று கிண்டலாக, கேலியாக எழுதியிருந்த அறிக்கைக்கு, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டிய கடப்பாடு இருக்கிறது. அந்த வகையில்தான் அவர் பதிலைச் சொல்கிறார். இதிலே ஒன்றும் தவறு இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவரவர்களே,...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** ஃபோர்டு மற்றும் ஹூண்டாய் கார் தொழிற்சாலை முதலீட்டுத் திட்டங்கள் 1991-1996 வரையிலான கால அளவில் வெற்றிகரமாகத் தோற்றுவிக்கப்பட்டவை என்பதைச் சுட்டிக்காட்டி சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணித்தரமான தகவல்கள் அளித்ததற்குப் பதில்...(குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் உட்காருங்கள், ஜி.கே. மணி, உட்காருங்கள், ஐ. கணேசன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குழப்பம் விளைவிப்பது என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டால், அதற்கு மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கையைத்தான் நான் எடுக்க வேண்டியது இருக்கும். தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். பழனிசாமி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கேள்வி கேட்பதும், அமைச்சர் பதில் சொல்வதும் இந்த அவையில் இருக்கக்கூடிய நடைமுறை. அமைச்சரிடமிருந்து பதில்களை எதிர்பார்த்துத்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறார்கள். அநேகமாக சபையினுடைய கண்ணியத்திற்குத் தகுந்தமாதிரி பதிலுரைகள் இருக்க வேண்டும். ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலும், பேசிய பேச்சும், மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் பேசிய பேச்சும் அவை மரபுக்கு

முரணானது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். இல்லையென்று சொன்னால், எங்களைப்போன்ற கட்சிகள், இந்த அவையிலிருந்து செயல்படுவதா, செயல்பட வேண்டாமா என்ற கேள்விக்குறி எழவேண்டிய அவசியம் ஏற்படும். ஆகையினால் அந்த இரண்டையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். சபைக் குறிப்புக்கு மாறான சில சொற்கள் இதிலே இழைந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது எந்த வகையிலே அவையிலே பயன்படுத்தக்கூடாத சொல் என்பது எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) ஒருவருக்கு விளக்கம் சொல்கிறபோது, அவர் எழுதியிருக்கிற கிண்டலுக்கு, கேலிக்கு விளக்கம் சொல்கிறபோது, சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறார் என்று சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடு) அதிலே ஒன்றும் தவறு இல்லை. அது ஒன்றும் யாரையும் புண்படுத்தக்கூடிய வாக்கியம் கிடையாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** சிறுபிள்ளைத்தனம் என்பது சாதாரண வார்த்தையல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே-(குறுக்கீடுகள்) ஒரே நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள்...(குறுக்கீடு) மன்னிக்க வேண்டும், கொஞ்சம் இருங்கள். நான் என்ன பேசக்கூடாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். நிதி அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். மணி, உட்காருங்கள்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அவர்கள் தொழில் துறையைப் பற்றி எழுதியிருக்கின்ற அந்தக் கட்டுரையில் மிகவும் கேவலமாக, எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தி எழுதியிருக்கிறார் என்பதை அவை கருத்தில் கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃபோர்டு மற்றும் (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பேசுங்கள் (குறுக்கீடுகள்) அமைச்சர் விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** ஃபோர்டு மற்றும் ஹூண்டாய் கார் தொழிற்சாலைகளின் முதலீட்டுத் திட்டங்கள் 1991-1996 வரையிலான கால அளவில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், தயவுசெய்து உட்காருங்கள், புகழேந்தி உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள்

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** வெற்றிகரமாக துவக்கிவைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டி - (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணித்தரமாக பதில் அளித்ததற்கு பதில் அளிக்கும் விதத்தில்தான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன மணி, சொல்லுங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** அவர் இவ்வாறு கூறி உள்ளார். (குறுக்கீடுகள்) உண்மை பேசவேண்டியதன் அவசியத்தை (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து உட்காருங்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டனர்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** திரு. கருணாநிதியால் 1998-ல் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்). தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டனர்.)

தாங்கள் பேசியது, நீங்கள் முழங்குகிற முழக்கம் இவை எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. வீணாகக் சுத்திப் பயன் இல்லை. (குறுக்கீடுகள்) வீணாகக் கத்திப் பயன் இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) நான் எச்சரிக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடு) தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசியுங்கள் (குறுக்கீடுகள்) திரு. மணி, என்ன?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** உண்மைக்கு மாறான தகவல்களை இந்த அவைக்குத் தந்தது யார்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, நீங்கள் கேட்டதற்கு நான் விளக்கம் சொல்லி விட்டேன். அமைச்சர் பயன்படுத்திய சொல் ஒன்றும் அவை மரபை மீறிய சொல் அல்ல. கண்ணியக் குறைவான சொல் கிடையாது. ஒரு தலைவர் எழுதுகிறபோது, இந்த அரசைக் கிண்டல் பண்ணி எழுதுகிறபோது, தொழில் துறையிலே வளர்ச்சி இல்லை என்று எழுதியதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். அதிலே 'சிறுபிள்ளைத்தனமாக' என்று சொல்வது ஒன்றும் கண்ணியக்குறைவான சொல் அல்ல. அதிலே ஒன்றும் தவறு இல்லை

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a Point of Order (குறுக்கீடுகள்)

•**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இந்த அவையிலே மிக நீண்ட காலம் பணியாற்றி அனுபவம் பெற்ற முன்னாள் முதலமைச்சரைப் பற்றிக் குறிப்பிடும்போது சிறுபிள்ளைத்தனமான அறிக்கை என்று சொல்லுவது முறையல்ல. ஏற்றுக்கொள்ளத்தக்கதும் அல்ல. எனவே, அதை மட்டும் அவர் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்; அது தப்பு இல்லை. அதேபோல் எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் பயன்படுத்திய சொல்லை நீங்கள் ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட்டீர்கள். அதிலே பிரச்சினை இல்லை. அமைச்சரைப் பொறுத்தவரையில், எதிர்க் கட்சியை இப்படிப் பேசுவது முறையல்ல. முன்னாள் முதலமைச்சர், நான்கு முறை முதலமைச்சராக இருந்தவர்; இந்த அவையிலே 1957 ஆம் ஆண்டிலிருந்து மிக நீண்ட காலம் இங்கே பணியாற்றியவர்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இதிலே எல்லாம் ஒன்றும் கருத்து மாறுபாடு இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, கருத்து மாறுபாடு அல்ல; ஆனால், சிறுபிள்ளைத்தனமானது என்பது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட இந்த விவரம் தொடர்பானதாகத்தான் அமைச்சர் பதில் சொல்லுகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது முறையல்ல. சிறுபிள்ளைத்தனமானது என்றால் childish என்று அர்த்தம் வரும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையிலோ, பாராளுமன்றத்திலோ பேசுகின்ற போது Parliamentary words, Unparliamentary words என்று இருக்கின்றன. அதாவது மரபு சார்ந்த சொற்கள், மரபை மீறிய சொற்கள் என்ற பாகுபாடு உண்டு. சிறுபிள்ளைத்தனம் என்றால் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களே மொழி பெயர்த்துச் சொல்லியதுபோல் ஆங்கிலத்தில் childish என்று அர்த்தம். Childish என்ற வார்த்தை unparliamentary வார்த்தையே அல்ல. அது எந்தவிதத்திலும் இழிவான ஒரு வார்த்தை அல்ல. ஆகவே அதைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படியுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** 1995 ஆம் ஆண்டில் ஃபோர்டு மோட்டார் நிறுவனத்துடன் நடத்தப்பட்ட . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** விரிவான பேச்சு வார்த்தைக்குப் பிறகு 3-1-1996-ல் உறுதியானதொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது என்பதை அவரால் மறுக்க முடியுமா? இந்தத் தேதியை அவர் சரிபார்த்துக் கொள்ளட்டும். இதுமட்டுமல்ல. இதன் அடுத்த கட்டப் பணியாக (கூச்சல்-குழப்பம்) ஃபோர்டு கார் தொழிற்சாலை தொடங்கப்படுவதற்கான (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து வீணாகக் கூச்சல் போடாதீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** முறையான அடிக்கல் நாட்டு விழா, ஃபோர்டு நிறுவனத்தால், சென்னையை அடுத்துள்ள மறைமலை நகரில் 23-2-1996 அன்று நடத்தப்பட்டது. (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த விழாவிலே கலந்துகொண்டு . . .

*(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்கள் தயவுசெய்து அமருங்கள். நான் எச்சரிக்கிறேன்; தயவுசெய்து அமருங்கள். அவைக்குள்ளே இருந்துகொண்டு இப்படி கோஷம் போடுவது, முழக்கம் எழுப்புவது சரியல்ல. தாங்கள் ஒலிக்கிற எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் விளக்கம் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அது தொடர்பாக விளக்கம் சொல்லிவிட்டார்கள். நானும் குறிப்பிட்டுவிட்டேன் சிறுபிள்ளைத்தனம் என்பது, அவை உரிமை மீறிய சொல் அல்ல. அதை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை; எடுக்க மாட்டேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** இதுமட்டுமல்ல, இதன் அடுத்த கட்டப் பணியாக ஃபோர்டு கார் தொழிற்சாலை தொடங்கப்படுவதற்கான முறையான அடிக்கல் நாட்டு விழா (கூச்சல்-குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, உங்களைக் கேட்கிறேன், நீங்களே சிறுபிள்ளைத்தனம் என்று சொல்கிறீர்கள். அதைக் கேட்டுக்கொண்டு நாங்கள் உட்கார வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றிக் கவலையில்லை. (கூச்சல்-குழப்பம்) சரி, சரி. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** எங்களால் முடியாது. நீங்கள் எடுக்கின்றவரை உட்காரமாட்டோம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

*(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்களை அவைக் காவலர்கள் அவையை விட்டு அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்களை அவைக் காவலர்கள் அவையை விட்டு அகற்ற வேண்டும் என்று கட்டளையிடுகிறேன். தயவுசெய்து அவையை விட்டு அகற்றுங்கள். (கூச்சல்-குழப்பம்) அமைச்சர், படியுங்கள். (கூச்சல்-குழப்பம்)

*(தி.மு.க. உறுப்பினர்களை பேரவையிலிருந்து அவைக் காவலர்கள் வெளியேற்றினார்கள்.)*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** ஃபோர்டு நிறுவனத்தால் சென்னையை அடுத்துள்ள மறைமலை நகரில் 23-2-1996 அன்று நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த விழாவிலே கலந்துகொண்டு ஃபோர்டு கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றினார்கள். ஒரு தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டது என்று சொன்னால் (கூச்சல்-குழப்பம்) அந்தத் தொழிற்சாலை அமைக்கும் பணி தொடங்கிவிட்டது என்றுதானே பொருள்? இந்தத் திட்டம் முறையாக தொடங்கப்பட்டு விட்டது என்றுதானே அர்த்தம்? தமிழ்நாட்டில் பெரிய அளவில் முதலீடு செய்வதில் ஃபோர்டு நிறுவனம் உறுதி கொண்டது என்பதையே இது காட்டுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றலும் எழுச்சியும் மிக்க தலைமையின்கீழ் அமைந்த எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் இது நடைபெற்றது. (குறுக்கீடுகள்) மறுக்க முடியாத இந்தச் சான்றை மாற்றுவதற்கு வாய்ப்பே இல்லை. உண்மை இப்படியிருக்க, திரு. கருணாநிதி உண்மை பேசுவதைப் பற்றிப் பேசுகிறார். எனவே, உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்ட திரு. கருணாநிதி ஆதாரமற்ற அறிக்கை வெளியிடுவது முறையும் அல்ல, சரியுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹூண்டாய் பற்றியும், ஃபோர்டு கம்பெனி பற்றியும் திரு. ரங்கநாதன் அவர்கள் முன்பே கேள்வியை எழுப்பினார்கள். அந்தக் கேள்விக்கு அன்றையதினமே பதில் சொல்லப்பட்டு விட்டது. (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தையும் இந்த அவையிலே கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எஸ்.ஆர்.பி., இப்போது திரு. சந்தானம் அவர்கள் பேசுகிறபோது கேட்டார்கள். (குறுக்கீடு) திரு. சந்தானம் அவர்கள் பேசுகிறபோது...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கேட்டாலும்கூட, அவர் அன்றைக்கே கேட்டிருக்க வேண்டும். அவர் ஏன் இன்றைக்குக் கேட்கிறார்? அது முடிந்துபோன பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்டதற்காகத்தான் விளக்கத்தை அமைச்சர் சொல்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அன்றைக்கே முடிந்துபோன பிரச்சினையை, இன்றைக்கு ஏன் எழுப்ப வேண்டும்? அதற்கு எதற்குப் பதில் சொல்ல வேண்டும்? ஏற்கெனவே அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. தலைவர், அவருடைய பத்திரிகையில் எழுதியிருந்த கருத்துகளையொட்டி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் படியுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் வந்த செய்தி தவறான செய்தி என்பதற்காக விளக்கம் கேட்டார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகிறார். (குறுக்கீடுகள்) பத்திரிகையில் திரு. கருணாநிதி எழுதிய செய்தி தவறான செய்தி என்பதால் அதற்கு விளக்கம் தருகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களை நான் பேச அழைத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள், படியுங்கள்.



**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** தொழில் முதலீடுகள் பற்றிக் குறிப்பிடும்போது உற்பத்தித் துறையில் எந்த அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்ற புள்ளிவிவரங்கள்தான் தொழில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் புள்ளிவிவரங்கள் ஆகும். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அதை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மொத்த முதலீடு குறித்த புள்ளிவிவரங்களில், அறிவிப்புகளாகவே இருக்கக்கூடிய, செயல்படுத்த வெகுகாலம் பிடிக்கக்கூடிய அடிப்படை வசதித் திட்டங்களும் அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, தாங்கள் கேட்டதற்கு ஏற்கெனவே விளக்கம் சொல்லப்பட்டு விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** உற்பத்தித் துறையில் செய்யப்பட்ட முதலீடுகளை எடுத்துக்கொண்டோமானால், 1991-1996 கால அளவில், தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையிலான முதலீடு 35,959 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மந்த நிலை நிலவியது. 2001 ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி, உற்பத்தித் துறையில் செய்யப்பட்ட சேர்ந்து வந்த மொத்த முதலீடு 37,306 கோடி ரூபாய் மட்டுமே. (குறுக்கீடுகள்) இதன்மூலம் நிலுவையில் இருந்த முதலீடு 1996-2001 வரையிலான கால அளவில் மிகக் குறைவாக அதாவது 1,347 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே என்பதைக் காட்டுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, உற்பத்தித் துறையில் முதலீடு கடும் வேகத்தில் அதிகரித்துள்ளது. (குறுக்கீடுகள்) 2004 அக்டோபர் இறுதி நிலவரப்படி உற்பத்தித் துறை முதலீடு 45,490 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றலும், எழுச்சியும்மிக்க தலைமையின்கீழ் 1991-1996 கால அளவிலும், அதன் பிறகு இவ்வரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001-க்குப் பிறகுமே உற்பத்தித் துறையில் உண்மையில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது.

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினார்கள்.)*

*முற்பகல் 11-00*

மேற்சொன்ன தகவலைத் தவிர, http://siadipp.nic.in/publicat/default.htm என்ற வலைதளத்திலிருந்து மத்திய அரசால் அளிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவாறான, தொழிலக தொழில் முனைவோர் குறிப்பாணையில் (Industrial Entrepreneur Memorandum) இடம் பெற்றுள்ள புள்ளிவிவரங்களையும் கருத்தில் கொள்வோமானால், 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதி நிலவரப்படி, IEM மூலமாக முதலீடு 55,274 கோடி ரூபாயாக இருந்தது என்பது தெரிய வரும். இது, நாட்டின் IEM முதலீட்டில் 6.06 சதவீதம் ஆகும். இந்த முதலீட்டுத் தொகை 2004 ஆம் ஆண்டு ஜூலை இறுதி நிலவரப்படி 1,12,898 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, நாட்டின் மொத்த முதலீட்டில் 8.65 சதவீதம் ஆகும். இதிலிருந்து, 2001-2004 கால அளவில், தமிழ்நாடு, தொழில் துறையில் அதிக முதலீடுகளை ஈர்த்துள்ளது என்பதும், தொழிலக தொழில் முனைவோர் குறிப்பாணையின் புள்ளிவிவரங்களின்படி, இக்கால அளவில் செய்யப்பட்ட முதலீடு இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தின் சாதனைகளுக்கான ஆணித்தரமான ஆதாரங்கள் என நீண்ட நெடிய திட்டங்களின் பட்டியல் ஒன்றை திரு. கருணாநிதி வெளியிட்டுள்ளார். சட்டமன்றத்தின் மரபுகள் பற்றியும், 1996-2001 கால அளவில் தி.மு.க. எதுவும் சாதிக்கவில்லை என்று விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் அவர் ஒரு நீண்ட சொற்பொழிவையே வழங்கியுள்ளார். பேரவைக்கு வர வேண்டும் என்ற அக்கறையே இல்லாத திரு. கருணாநிதி பேரவையின் மரபுகளைப் பற்றி பேசுவது வியப்பாக உள்ளது. ஒரு மூத்த தலைவரான திரு. கருணாநிதி, ஒரு நெடிய பட்டியலை வெளியிடுவதற்கு முன்னர் புள்ளிவிவரங்களைச் சரி பார்க்காதது மிகுந்த வேதனையளிக்கிறது.

தன்னுடைய ஆட்சிக் காலத்தின் முக்கியமானதும், முதன்மையானதுமான சாதனையாக அவர் முதலாவதாகக் குறிப்பிட்டிருப்பது, ஜி.எம்.ஆர். வாசவி மின் திட்டமாகும். இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக



முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 13-1-1995 அன்று கையெழுத்தானது என்பதுதான் உண்மை. தமிழக அரசின் உத்தரவாதம் 12-12-1995 அன்று அளிக்கப்பட்டது. இவ்வாறாக, இத்திட்டம் கருக்கொண்டு செயலுக்கு வந்தது எல்லாமே எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். அப்படியிருக்க, தற்போது திரு. கருணாநிதி அதனை தனது சாதனையாகப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். இத்தகைய சித்து வேலைகளில் ஒரு மூத்த தலைவர் ஈடுபடுவது வேதனை அளிக்கிறது.

திரு. கருணாநிதி 300 கோடி ரூபாய் திட்டச் செலவில் கும்மிடிப்பூண்டியில் தொடங்கப்பட்ட தாப்பர் டூபாண்ட் பற்றி குறிப்பிட்டுள்ளார். மீண்டும், இதிலும் திரு. கருணாநிதி உண்மையை முற்றிலுமாக மறைத்துள்ளார். உலகப் புகழ் வாய்ந்த தாப்பர் டூபாண்ட் திட்டத்தைச் சென்னைக்குக் கொண்டு வந்ததற்கு முழுக்க, முழுக்க நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் முயற்சியே காரணமாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 8-6-1995 அன்று கையெழுத்தாகி 20-7-1995 அன்று நிலமும் ஒதுக்கப்பட்டது. உண்மையில், இத்திட்டம் மிகக் குறுகிய காலத்தில் 1995 ஆம் ஆண்டே தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. திரு. கருணாநிதி இந்தத் திட்டத்தையும் தனது சாதனைப் பட்டியலில் சேர்த்திருப்பது விந்தையாகும். இவ்வாறெல்லாம் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு திரு. கருணாநிதி உண்மை விளம்புவதைப்பற்றிப் பேசுகிறார். தி.மு.க. ஆட்சிக்காலத்தில், டூபாண்ட் நிறுவனம், தனது ஆர்வத்தினை இழந்து இந்நிறுவனத்தினை விற்றுவிட்டு தமிழ்நாட்டை விட்டே சென்றுவிட்டது என்பது உண்மையாகும்.

திரு. கருணாநிதி, Visteon Power Train System மற்றும் Visteon Automotive System ஆகியவையும் தன்னுடைய சாதனையே என்று பெருமையடித்துக் கொண்டுள்ளார். இவை எல்லாம் ஃபோர்டு கார் திட்டத்தோடு சேர்ந்த முதலீடுகளாகும். நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஃபோர்டு கார் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்ததால்தான் இந்த முதலீடுகள் சாத்தியமாயின. 1996 ஜனவரியில் இந்த ஃபோர்டு முதலீடு உறுதிப்படுத்தப்பட்டதனால்தான் இந்தக் கூடுதல் முதலீடுகள் எல்லாமே தானாகவே வந்து சேர்ந்தன. இதற்கு திரு. கருணாநிதி பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது. தற்பொழுது சிறப்புப் பொருளாதார மண்டலமாக வளர்ந்து வரும் மகிந்தரா தொழிற் பூங்கா

2-2-1996 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்ட பிறகு மற்றொரு முதலீட்டுத் திட்டமாகும். ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தை அடுத்து, ஒரு பெரிய தொழிற் பூங்கா ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டமாகும். இதுகூட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முழு முயற்சியால் வந்த திட்டமேயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை தனது சாதனையாக திரு. கருணாநிதி குறிப்பிட்டிருப்பது கேலிக்குரியது ஆகும்.

ஹூண்டாய் கம்பெனியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த முதன்மையான முதலீட்டின் ஒரு பகுதியாகவே துணை நிறுவனங்கள் வந்தன. Mando Brake Systems, JBM SungWoo Limited, ILJIN, Donghee Vision ஆகிய திட்டங்கள் தனது முயற்சிகளால் வந்ததாக திரு. கருணாநிதி உரிமை கொண்டாடியுள்ளார். இதுவும் கேலிக்குரியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஹூண்டாய் நிறுவன முதலீட்டை ஈர்த்திருக்காவிட்டால், திரு. கருணாநிதி பட்டியலிட்டுள்ள துணைத் தொழில் நிறுவனங்கள் அனைத்தும் இந்த நாட்டிற்கு வந்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-05*

திரு. கருணாநிதி தமது சாதனையாக உரிமை கொண்டாடியுள்ள மற்றொரு திட்டம் எஸ்.கே.எம். முட்டை உற்பத்திப் பொருள் தொழிற்சாலைத் திட்டமாகும். இதுபோன்று உரிமை கோருவதற்கு முன்னதாக, திரு. கருணாநிதி முதலில் புள்ளிவிவரங்களைச் சரிபார்த்திருக்க வேண்டும். இத்தொழில் முனைவோருக்கும் டிட்கோ நிறுவனத்திற்கும் இடையிலான இக்கூட்டு முயற்சி ஒப்பந்தம், 5-9-1994 அன்றே கையெழுத்தாகிவிட்டது. 1994-லேயே வேலைகள் தொடங்கிவிட்ட இத்தொழிற்சாலையை, தன்னுடைய சாதனை என்று திரு. கருணாநிதி எப்படி கூறுகிறார் என்றுதான் தெரியவில்லை.

திரு. கருணாநிதி தன்னிடம் உள்ள ஆதிகால புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு, காகித அட்டை இயந்திரங்கள் உற்பத்தி செய்வதற்கான மார்க்யூப் இந்தியா என்ற நிறுவனத்தைத் தன்னுடைய சாதனையாகப் பட்டியலிட்டிருப்பது விந்தையாக உள்ளது. இந்தத் தொழிற்சாலை, இருங்காட்டுக்கோட்டையில், 2000ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து செயல்படத் தொடங்கிவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மாண்புமிகு



பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவே இல்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருக்க திரு. கருணாநிதி இத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கியதாக குறிப்பிட்டிருப்பது மிகுந்த ஆச்சரியம் அளிக்கிறது. இத்தொழிற்சாலையின் தொழில் முனைவோர் இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு நிலத்தையும் 2000 ஆம் ஆண்டிலேயே திருப்பி ஒப்படைத்துவிட்டார். அவர் கட்டுமானப் பணி எதனையும் மேற்கொள்ளவில்லை. அப்படியிருக்க, இந்தத் தொழிற்சாலையைத் தனது சாதனையாக திரு. கருணாநிதி எவ்வாறு குறிப்பிட முடியும்? இதிலிருந்து அவர் இல்லாத ஒன்றுக்கு உரிமை கொண்டாடுகிறார் என்பது தெளிவாகிறது. இவ்வாறு போலியாக உரிமை கொண்டாடுவது அவருடைய வாடிக்கைதான்.

தமிழ்நாடு பெட்ரோ பொருட்கள் நிறுவனத்தின் எபாக்ஸி ரெஸின் திட்டத்திற்கு 1993-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பந்தமும் 24-1-1996 அன்று கையெழுத்தாகியது. அப்படியிருந்தும், இத்திட்டம் தன்னால் வந்தது என்று திரு. கருணாநிதி கூறுகிறார்.

ஹூண்டாய் நிறுவனம் தொடங்கப்பட்டதால்தான் ஸ்ரீபெரும்புதூர் மற்றும் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பேட்டைகள் உருவாயின. ஹூண்டாய் நிறுவனத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகத்தான், இந்தத் தொழிற்பேட்டைகள் அமைந்தன. கும்மிடிப்பூண்டி தொழிற்பேட்டைக்கான முதல் கட்டப் பணிகள் 1983 ஆம் ஆண்டு ஜனவரியிலேயே தொடங்கப்பட்டுவிட்டன. அப்படியிருக்க, திரு. கருணாநிதி இதனையும் தனது சாதனையாக எப்படிக் கூறமுடியும்?

ஒரு திட்டத்திற்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்படும், என்னென்ன உதவிகள் அளிக்கப்படும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால் அன்றி, முதலீடு எதனையும் பெற்றதாக உரிமை கொண்டாட முடியாது. முதலீட்டை முடிவு செய்யாமல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்க முடியாது. இந்தியாவிற்கு ஃபோர்டு நிறுவனத்தின் முதலீட்டை ஈர்ப்பதற்கான இறுதிச் சுற்றுப் போட்டியில் தமிழ்நாடும், மஹாராஷ்டிராவும் இடம்பெற்றன. இப்போட்டியின் முடிவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றலும், எழுச்சியுமிக்க தலைமையிலான தமிழ்நாடு

[திரு. நயினார் நாகேந்திரன்] [2004 நவம்பர் 22

அரசுதான் வெற்றி பெற்று முதலீட்டைக் கைப்பற்றியது. (மேசையைத் தட்டும் ஒலி) இது 1996 ஜனவரியில் நடைபெற்றது. அப்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இது இப்படியிருக்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டுமே தயாரிக்கப்பட்டது என்று திரு. கருணாநிதி கூறியிருப்பது விந்தையாக இருக்கிறது, வேடிக்கையாக இருக்கிறது. முதலீட்டை ஈர்ப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இறுதி செய்வதில்தான் ஓர் அரசின் உண்மையான திறமையே இருக்கிறது. இதில் மிகுந்த வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், திரு. கருணாநிதி 1996 மே திங்களில் ஆட்சிக்கு வந்ததும், திருவாளர்கள் ஃபோர்டு இந்தியா நிறுவனத்திற்கு மாநில அரசு அளித்த சலுகைத் திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொண்டு, தவறு எதுவும் இல்லை என்பதால், அதையும் கைவிட்டுவிட்டார். அப்படிப்பட்ட திரு. கருணாநிதி ஃபோர்டு நிறுவனத்தின் முதலீட்டிற்கு தற்போது பெருமை தேடிக்கொள்ள முயலுகிறார். முதலீட்டைக் கெடுப்பதற்கான அனைத்து விஷமத்தனங்களையும் செய்துவிட்டு, திரு. கருணாநிதி இப்பொழுது அந்த முதலீடுகள் தன்னால் வந்தது. தன்னுடைய முயற்சியாலேயே வந்தன என்று எப்படிக் கூறுகிறார் என்றுதான் புரியவில்லை. இவரைப் போன்றதொரு மூத்த தலைவர் உண்மைக்கு மாறான தகவல்களைத் தெரிவிப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். தன்னுடைய முயற்சியினாலேயே ஃபோர்டு நிறுவனத்தின் முதலீடுகள் வந்தன என்று திரு. கருணாநிதி உச்சிமீது நின்று உரக்கக் கூறுவதை இனியாவது நிறுத்த வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த முதலீடுகள் அனைத்தையும் அழிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் திரு. கருணாநிதி மேற்கொண்டார் என்பதுதான் உண்மை. இத்திட்டம் நிறைவேறிய பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடின உழைப்பால் வந்த திட்டத்தின் உற்பத்தி தொடக்க விழாவில் திரு. கருணாநிதி போட்டோ எடுத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தைத் தான் கொண்டு வந்ததாக பெருமை தேட முயற்சித்துள்ளார்.

முற்பகல் 11-10

இதேபோல, ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் நேர்விலும், திரு. கருணாநிதி வீண் பெருமைத் தேடிக்கொள்ள முயல்கிறார். இந்தத் திட்டம் முழுவதுமே நமது முதல்வர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த 1991-1996



2004 நவம்பர் 22] [திரு. நயினார் நாகேந்திரன்]

ஆம் ஆண்டு கால அளவில், வடிவமைக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. 22-3-1996 ஆம் நாளிட்ட 'பிஸினஸ் லைன்' என்ற பத்திரிகை இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அப்பத்திரிகை வெளியிட்ட செய்தி:

"புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 27-3-1996 அன்று கையெழுத்திடுவதென தற்காலிகமாக நாள் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்குள்ளாக இந்தியத் தேர்தல் ஆணையம், நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநில சட்டமன்றப் பேரவைகளுக்கும் தேர்தல் நடத்துவதற்கான தேதிகளை அறிவித்து விட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு தேர்தல் நடத்தை விதிகள் பொருந்துமா என்பது தெளிவாகத் தெரியாததால், அரசு தற்போது முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளது. மாநில அரசு தனிப்பட்ட முறையில் தேர்தல் ஆணையத்தின் கருத்துகளைப் பெறுவது மட்டுமல்லாது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னதாக, தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலைப் பெறவும் திட்டமிட்டு வருகிறது."

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் ஹூண்டாய் 1996 ஆம் ஆண்டு முதலீட்டிற்கான முடிவு இறுதி செய்யப்பட்டது என்பதை இது நிரூபிக்கிறது. இது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடுமையான உழைப்பிற்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும் (மேசையைத் தட்டும் ஒலி). 22-3-1996 ஆம் நாளிட்ட அதே "பிஸினஸ் லைன்" ஏடு, ஃபோர்டு நிறுவனத்தின் முதலீடு பெறப்பட்டதையும், அதைத் தொடர்ந்து அதே முறையிலே ஹூண்டாய் நிறுவனத்தின் முதலீடும் தற்போது பெறப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால்தான், தமிழ் நாட்டிற்கு ஃபோர்டு மற்றும் ஹூண்டாய் நிறுவனங்களின் முதலீடு கிடைத்தது என்பதை இது தெள்ளத்தெளிவாக மெய்ப்பிக்கிறது.

தி.மு.க. ஆட்சி காரணமாக தமிழ்நாட்டில் தொய்வுற்றுக் கிடந்த தொழில் வளர்ச்சிக்குப் புத்துணர்ச்சி ஊட்டுவதற்காக, முழுமையாக செயல்படுத்தக்கூடிய, வலுவானதும், அனைத்துப் பிரிவினருக்கும் நன்மை பயக்கக்கூடியதும், ஒட்டுமொத்த வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழகத்தை முதல் இடத்திற்குக் கொண்டு செல்கின்ற புதிய தொழில் கொள்கை ஒன்றினை 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன் அடிப்படையில் இவ்வரசு பல சீரிய

முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நமது மாநிலத்தின் முதலீட்டு ஈர்ப்புத் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதிலும், அவற்றின் தரத்தை உயர்த்துவதிலும் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான இவ்வரசு துணிச்சலான பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

எரிசக்தித் துறையில் ஒவ்வொன்றும் 1000 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் வட சென்னையிலே தேசிய அனல் மின் நிறுவனம் மூலமாக மின் உற்பத்தித் திட்டம் ஒன்றும், தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக மின் உற்பத்தித் திட்டம் ஒன்றும், ஆக இரண்டு பெரிய மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இத்திட்டங்கள் மாநிலத்தின் எரிசக்தி வலிமை பெருகுவதை உறுதி செய்திடும்.

சாலைகள் மேம்பாட்டிற்காக, 2,160 கோடி ரூபாய் மொத்தத் திட்டச் செலவில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறுசேரி மற்றும் தகவல் தொழில்நுட்ப வளாகப் பகுதி வரையில் தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலை அமைக்கும் பணி 2005 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

**புதிய தொழில் பூங்காக்கள்:** 62-1/2 கோடி ரூபாய் திட்டச் செலவில் டிட்கோ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட உயிரி தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்களின் மையமாகத் திகழ்கிற டைசல் உயிரியல் பூங்கா 10-11-2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வரசு, எண்ணூர், தூத்துக்குடி, ஒசூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி வருகிறது. இவை தவிர, 20-9-2002 அன்று தொடங்கப்பட்ட மகிந்திரா தொழில் பூங்கா, அண்மையில், மத்திய அரசால், சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிப்காட் நிறுவனம் நிலக்கோட்டையில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில், உணவுப் பூங்கா ஒன்றை உருவாக்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், டிட்கோ நிறுவனம் தமிழ்நாடு இரப்பர் பூங்கா ஒன்றை உருவாக்கி வருகிறது. சிப்காட் நிறுவனம் சென்னைக்கு அருகேயுள்ள



இருங்காட்டுக்கோட்டை தொழில் பூங்காவில் ஆடைகள் தொழில் பூங்கா ஒன்றை உருவாக்கி வருகிறது.

சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிப்பதற்காக, இவ்வரசு புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. தவிர, கடல் நீரை நன்னீராக மாற்றும் ஆலை ஒன்றையும், தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக, கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் சுத்திகரிப்பு ஆலை ஒன்றையும் அமைக்க இவ்வரசு திட்டமிட்டு வருகிறது.

முற்பகல் 11-15

வர்த்தகக் கட்டுப்பாடுகளையும், நடைமுறைகளையும், அனுமதி பெறுதலையும் அரசு எளிமைப்படுத்தி உள்ளது. ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெற்றுத் தரும் ஒற்றைச் சாளர வசதி முறையை செம்மையாகச் செயல்படுத்திடவும், விண்ணப்பப் படிவங்கள், பயன் விவர அறிக்கை, ஆய்வுகள் மற்றும் சான்றறிக்கை ஆகியவற்றை எளிமைப்படுத்துவதற்காகவும், தொழில் வளர்ச்சி மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடு விதிகளைத் தேவையான அளவிற்கு நீக்குதல் மற்றும் தளர்த்துதல் சட்டத்தைக் கொண்டுவர அரசு முழு முயற்சி எடுத்து வருகிறது. இவ்வரசு டாக்டர் ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல வரிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முத்திரைத் தாள் தீர்வை வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளன. சிப்காட், சிட்கோ போன்ற அரசு நிறுவனங்களிடமிருந்து முதலீட்டாளர்கள் வாங்கும் தொழிலக மனைகளுக்கான முத்திரைத் தாள் தீர்வை 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன தெளிவான கொள்கை நடவடிக்கைகளின் பயனாக உற்பத்தித் துறையில் இவ்வரசு பல முக்கியமான முதலீட்டுச் செயற்குறிப்புகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. தமிழ்நாடு, தற்போது, தொழில் தொடங்க முதலீட்டாளர்களால் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படும் மாநிலமாக உருவெடுத்துள்ளது.

செயின்ட் கோபைன் நிறுவனம், தற்போது, சுமார் 500 கோடி ரூபாய் முதலீட்டில் இரண்டாவது கண்ணாடித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. மாநில அரசிற்கும், செயின்ட் கோபைன் நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்புறுதி உடன்படிக்கை 30-10-2003 அன்று

கையெழுத்தானது. இது தவிர, செயின்ட் கோபைன் நிறுவனம் சுமார் 100 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகனக் கண்ணாடி உற்பத்தித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

ஏசியன் பெயின்ட்ஸ் நிறுவனத்தின் 66 கோடி ரூபாய் முதலீட்டிலான தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்க உள்ளது.

அசாஹி கண்ணாடி நிறுவனம் 57 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகன கண்ணாடி உற்பத்தித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

டாடா நிறுவனம் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் டைட்டானியம் டை ஆக்ஸைடு உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே கையெழுத்திட்டுள்ளது.

ஹூண்டாய் நிறுவனம் சுமார் 800 கோடி ரூபாய் முதல் 1000 கோடி ரூபாய் வரையிலான கூடுதல் முதலீட்டில் தனது உற்பத்தித் திறனை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

கோயம்புத்தூரில் உள்ள ஜெகன்னாத் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் 95 கோடி ரூபாய் முதலீட்டில் நவீன நூற்பாலைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

எண்ணூர் வார்ப்படச்சாலை, (Ennore Foundries), 350 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள உள்ளது.

மேற்சொன்னவை தவிர, தமிழ்நாட்டில் தற்போது பல முக்கியமான முதலீட்டு செயற்குறிப்புகள் செயல்வடிவம் பெற்று நிறைவேறும் நிலையில் உள்ளன.

தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அழைப்பின் பேரில், தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த கீழ்க்காணும் பெரிய நிறுவனங்கள், தமிழ்நாட்டில் பெரிய அளவிலான மென்பொருள் வளாகங்களைத் தொடங்க முடிவு செய்துள்ளன.

இன்போசிஸ் நிறுவனம், மகேந்திரா நகரில் 129 ஏக்கர் நிலப்பரப்பில் உலகின் மிகப் பெரிய தொழில் வளாகம் ஒன்றை அமைக்கிறது.



விப்ரோ, எச்.சி.எல்., சத்தியம் கம்ப்யூட்டர்ஸ் ஆகிய நிறுவனங்கள் சென்னையில் பெரிய அளவிலான வளர்ச்சி மையங்களை உருவாக்கி வருகின்றன. எனவே, அதற்கான நிலங்களை ஒதுக்கக் கோரியுள்ளன. பிரிட்டிஷ் நாட்டு எக்ஸ்சான்ஸா (Xansa) நிறுவனம், 23.5 கோடி ரூபாய் முதலீட்டில் மென்பொருள் உருவாக்க மையம் ஒன்றைத் தொடங்குவது தொடர்பாக மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

இவ்வரசு சோழிங்கநல்லூரில் அறிவுசார் தொழில் நகரியம், Knowledge Industrial Township ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

ஆக்ஸெஞ்சர், உலக வங்கி, வெர்ட்டுசா, வெரிஸோன், சின்ட்டல், எக்ஸாவேர் முதலான வெளிநாட்டைச் சேர்ந்த பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் மாபெரும் தொழில் வளாகங்களை அமைக்கும் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றன.

மொத்தம் சுமார் 15 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பைக் கொண்ட மற்றுமொரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா தரமணியில் அமைக்கப்பட்டு வருகிறது. 5 இலட்சம் சதுர அடி பரப்பிலான முதற்கட்ட கட்டுமானப் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இது 2005 ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கும்.

மேற்சொன்னவை தவிர, கடந்த 3 ஆண்டுகளில் 37 புதிய திட்டங்கள் 1746 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்டு அவற்றில் 15 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உற்பத்தியைத் தொடங்கி உள்ளன. ஏனைய 22 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும் வழங்கிடும் தொழில் வளத்தை தமிழ்நாட்டில் பன்மடங்கு பெருக்கிட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணம், கொள்கை. இதன் அடிப்படையில் தொழில் முனைவோருக்குத் தேவையான வாய்ப்புகளையும், வசதிகளையும் உருவாக்கித் தந்ததன் விளைவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 1991 முதல் 1996 வரையிலான முந்தைய ஆட்சியிலும், 2001 ஆம் ஆண்டு முதலான இன்றைய ஆட்சியிலும் தொழில் வளம் பன்மடங்கு பல்கிப் பெருகியுள்ளது. இந்த முழுமையான பட்டியலை எடுத்துக் கூற நேரம் இன்மையினால், ஒருசில முக்கியமானவற்றை மட்டுமே இங்கே எடுத்துக் கூறியிருக்கிறேன். நான் இங்கே எடுத்துக் கூறியது அனைத்தும் முற்றிலும் உண்மை.

அடுத்தவர்களுடைய கடின உழைப்பை தங்களுடைய உழைப்பு போல் பாவனை காட்டி, வீண் பெருமை தேடிக்கொள்கிறவர்கள் பலர் இருக்கவே செய்கிறார்கள். அடுத்தவர்களுடைய செயலை தன்னுடைய சாதனை போல் காட்டிக்கொள்கிறார்கள். ஆனால், அத்தகைய பழக்கமோ, அத்தகைய வழக்கமோ எங்களிடம் எப்போதுமே கிடையாது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மையான சாதனைகளை மட்டுமே நான் இங்கே குறிப்பிடுகிறேன் என்று சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

### (இ) புதிய வீராணம் திட்டத்தின்மூலம் சென்னைக்குக் குடிநீர் வழங்குதல் குறித்து மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டமான புதிய வீராணம் திட்டத்தின் வெற்றியால் இன்றைக்கு சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டுள்ளது. சென்னை மாநகர் முழுமைக்கும் மீண்டும் குழாய்கள்மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். புதிய வீராணம் திட்டம், சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டம் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அயராத உழைப்பாலும், குலையாத நம்பிக்கையாலும், தளராத முயற்சியாலும் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு ஒரு திட்டத்தை தொலைநோக்குப் பார்வையோடும், உள்ளத்தில் உறுதிப்பாட்டோடும் செயல்படுத்தினால், அந்தத் திட்டம் எத்தகைய மாபெரும் வெற்றியைப் பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் புதிய வீராணம் திட்டம். இந்த அரிய திட்டத்தை அறிவிக்கும்போதே எதிர்ப்பு தெரிவித்தவர்கள் எத்தனை



பேர்? இதற்கு அடிக்கல் நாட்டும்போது தடுக்கத் துடித்தவர்கள் எத்தனை பேர்? இதனைச் செயல்படுத்த முனைந்த ஒவ்வொரு கட்டத்திலும் தப்புப் பிரச்சாரம் செய்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர்? வீராணம் திட்டம் வீணான திட்டம் என்று எள்ளி நகையாடினர் சிலர். கடந்த சில நாட்களாக சென்னை மாநகரில் ஓரளவு மழை பெய்து வருகிறது. மழை வெள்ளத்தைக் காணும்போது, நமது மக்கள் மனங்களில் மகிழ்ச்சி வெள்ளம் ஊற்றெடுக்கிறது. ஆனால், அதற்கு முன் இருந்த நிலைமை என்ன? கடந்த பல ஆண்டுகளாக, குறிப்பாக சென்ற மூன்று ஆண்டுகளில் அடுத்தடுத்து பருவ மழை பொய்த்ததனால், கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு சென்னை மாநகரமே தண்ணீரின்றி தவித்தது. இதனால் மாநகரின் மூன்று குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலும் மிகக் குறைவான நீர் இருப்பே இருந்தது. இதன் விளைவாக 18-01-2003 முதல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை அரசு அறிமுகப்படுத்த வேண்டியதாயிற்று.

சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய பூதாகாரமான தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினையை சமாளிக்க வேண்டுமெனில் கூடுதலாக ஒரு நீராதாரம் தேவை என்பதை 1993 ஆம் ஆண்டிலேயே உணர்ந்த காரணத்தால், சென்னை மாநகரின் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண, கூடுதலாக தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டுமென்று தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தை அப்பொழுதே அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியும் 1,638 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புக்கொண்டது. இந்த நிலையில்தான் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் புதிதாக அப்போது பொறுப்பேற்ற தி.மு.க., இந்தத் திட்டம் குறித்து உளப்பூர்வமாக ஆய்வு செய்திருந்தால், இதன்மூலம் கிடைக்க இருக்கும் பலன்கள் குறித்து நன்கு உணர்ந்து இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி இருக்கும். ஆனால் அவ்வாறு செய்தால், இதில் கிடைக்கும் பெயரும், புகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் போய்விடும் என்ற குறுகிய நோக்கத்துடன் இத்திட்டம் கைவிடப்பட்டது.

2001 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், புதிய வீராணம் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து, 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் துவக்கிவைத்தார்கள். வடகிழக்குப் பருவமழை மீண்டும் ஒரு முறை பொய்க்குமானால், சென்னை மாநகரில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 நவம்பர் 22

கடும் தண்ணீர்ப் பிரச்சினை உருவெடுக்கும். அந்த நேரத்தில், சென்னைக்குத் தண்ணீர் வழங்க கூடுதலாக மேலும் ஒரு நீராதாரத்தை நாம் ஏற்படுத்தவில்லையென்றால், சென்னை மாநகரை விட்டே மக்களை வெளியேற்ற வேண்டிய ஓர் அவல நிலை ஏற்பட்டுவிடும். ஒருபோதும் அப்படி நிகழ இடம் கொடுத்துவிடக்கூடாது என்று உறுதிபூண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்பட ஆரம்பித்தார்கள். இதன் அடிப்படையில்தான் எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் செய்த கடும் விமர்சனங்களையும் பொருட்படுத்தாது, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் முடிவு செய்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அப்பொழுது எடுத்த முடிவு மிகவும் சரியானது என்பது இப்பொழுது நிரூபணம் ஆகி, எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களும், குறை கூறியோரின் கூற்றுகளும் தவறு என்று இன்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இடையூறுகளைத் தகர்த்து, இடர்ப்பாடுகளைத் தவிடு பொடியாக்கி, புதிய வீராணம் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தியதன்மூலம் 2004 ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரத்திலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டது.

*முற்பகல் 11-25*

வடகிழக்குப் பருவ மழை முற்றிலும் பொய்த்துவிட்டது என்பது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே தெளிவாகிவிட்டது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு கடந்த 54 ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகவும் குறைந்துவிட்டது. இதன் விளைவாக 2003 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே சென்னை மாநகரில் குழாய்கள்மூலம் தண்ணீர் வழங்குவதை அறவே நிறுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு டிசம்பர் இறுதியிலேயே குழாய்கள்மூலம் தண்ணீர் வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைமை முன் எப்போதும் ஏற்பட்டதில்லை. சாதாரணமாக டிசம்பர் திங்கள் இறுதியில் மூன்று நீர்த் தேக்கங்களிலும் மேலும் சில மாதங்களுக்குக் குழாய்மூலம் தண்ணீர் வழங்கக்கூடிய அளவுக்கு நீர் இருக்கும்.

புதிய வீராணம் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி அதன் பயனாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு 2004 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிலவும் கடும் தண்ணீர்ப்



2004 நவம்பர் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பற்றாக்குறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகுந்த சாமர்த்தியத்துடனும், விவேகத்துடனும் சமாளித்தார்கள். சென்னை மாநகரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில் ஒரு தெருகூட தவறாமல் நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம்கூட நாள்தோறும் தவறாது லாரிகள்மூலம் தண்ணீர் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு அசாதாரண முயற்சிகளை மேற்கொண்டது.

தொடர்ந்து பருவமழை பொய்த்ததால் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் அறவே வற்றிப்போயின. கிணற்று வயல்களில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துபோனது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது. இவற்றின் காரணமாக மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையை சென்னை மாநகர் சந்தித்தது. ஆனால் வழங்கப்படுகின்ற தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டாலும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையை மக்கள் உணராவண்ணம், கிடைக்கின்ற நீர் குறை சொல்ல முடியாத அளவுக்கு முறையாகப் பகிர்ந்து வழங்கப்படுவதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உறுதிசெய்தது.

2004 ஜூன் வாக்கில் சென்னை மாநகரிலிருந்து மக்களை வெளியேற்ற வேண்டியிருக்கும் என்பதுதான் அன்றைக்கு இருந்த யதார்த்த நிலை. கடுமையான எதிர்ப்புக்கு இடையிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகவும் துணிச்சலோடு 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு புதிய வீராணம் திட்டக் குழாய்கள்மூலம் பண்ருட்டி, நெய்வேலி ஊற்றுப் படுகையில் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து அதன்மூலம் 2004 ஜூன் மாதத்தில் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 7.5 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் கொண்டுவர முடிந்தது. இந்த அளவு நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டராக மேலும் உயர்த்தப்பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெருமளவுக்குத் தணித்தது. தண்ணீர் வழங்கல் 2004 ஜனவரியில் நாளொன்றுக்கு 17.5 மில்லியன் லிட்டர் என்ற அளவிலிருந்து 2004 ஜூன் மாதத்தில் 20.5 மில்லியன் லிட்டர் ஆக உயர்த்தப்பட்டது. இதனால் 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னையிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலை

தவிர்க்கப்பட்டது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் அறவே வறண்ட கோடையிலும் தண்ணீர் வழங்கப்படும் அளவை உயர்த்திய அதிசயம் நிகழ்ந்தது என்றால் அதற்குக் காரணம் புதிய வீராணம் திட்டக் குழாய்கள் பதித்து ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தண்ணீர் கொண்டுவர முடிந்ததுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு அதற்கான குழாய் அமைக்கும் பணிகளையும் உடனடியாகத் தொடங்கி ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தண்ணீர் கொண்டு வந்ததால்தான் தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து சென்னை மாநகர மக்களைக் காப்பாற்ற முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

பண்ருட்டி, நெய்வேலி ஊற்றுப் படுகையைச் சேர்ந்த ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் 2004 ஜூன் மாதத்தில் கொண்டுவரப்பட்ட போதும்கூட ஒரு சிலர் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர்தான் வருகிறது, வீராணம் ஏரியில் தண்ணீர் எதுவும் இல்லை, ஆகவே இந்தத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று விமர்சிக்கத் தயங்கவில்லை. ஆனால், இந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தாது, ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் கோடையில் சென்னை மாநகருக்கு வழங்கப்படும் என்றும், பருவமழை பெய்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வந்தவுடன் அங்கிருந்து புதிய வீராணம் திட்டம்மூலம் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும் 5-8-2004 அன்றே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அன்றைக்குக் கூறியதைப்போலவே 13-10-2004 அன்று முதல் பண்ருட்டி-நெய்வேலி ஊற்றுப் படுகையிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரை நம்பியிராமல், முற்றிலும் வீராணம் ஏரியிலிருந்து மட்டுமே நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கும் பணி தொடங்கப்பட்டது என்பதனை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து வீராணம் ஏரியிலிருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகின்றது. இந்தத் தண்ணீர் முழுவதும் சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய்களின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.



முற்பகல் 11-30

இந்தத் திட்டம் குறித்துக் கூறப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டு, ஏரியின் ஆயக்கட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், விவசாயிகள் பாதிக்கப்படும்படி விட்டுவிட மாட்டேன் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அன்றைக்குச் சொன்னதை சொன்னபடி இன்றைக்கு உறுதிப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் எடுப்பதால் அந்த ஏரி ஆயக்கட்டுப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உறுதி செய்திருக்கிறது.

கல்லணையிலிருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீரே, சென்னை மாநகருக்கு இந்தத் திட்டம்மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக வீராணம் ஏரி ஓர் இடைப்பட்ட நீர்த்தேக்கமாகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் எந்த வகையிலும் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எவரும் ஒருபோதும் கூற முடியாது.

வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பாசனம் எக்காலத்திலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்திலும், வீராணம் திட்டத்தின்மூலம் ஏரியில் நீர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஆண்டு முழுவதும் சென்னைக்கு தினசரி 180 மில்லியன் லிட்டர் என்ற அளவில் நீர் விநியோகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலும் மற்றுமொரு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, கொள்ளிடம் ஆற்றுப் பரப்பிலேயே ஆற்று நீர் சேகரிப்புக் கிணறுகளை அமைத்து, தினசரி 150 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து, சேத்தியாத்தோப்பிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீர் எடுக்கும் கட்டுமான அமைப்புவரை குழாய்மூலம் எடுத்துச் சென்று, பின்னர் சென்னைக்குக் கொண்டுசெல்லும் 300 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வீராணம் ஏரியின் நீர் இருப்புக் குறைவாக இருக்கும் காலங்களிலும், நீர் இருப்பு இல்லாத காலங்களிலும், கொள்ளிடம் ஆற்றுப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகளிலிருந்து நீர் எடுக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் வீராணம் ஏரியின் பாசனம் பாதிக்கப்படாதது மட்டுமல்லாமல், சென்னைக்கு தினசரி குறைந்தபட்சம் 150 மில்லியன் லிட்டர் நீர் தொடர்ந்து எக்காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பண்ருட்டி-நெய்வேலி ஊற்றுப் படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நீர் எடுப்பதால், எவ்வித பாதிப்பும் இல்லை என்பது ஆதாரபூர்வமாக அறியப்பட்டபோதிலும், அந்த ஊற்றுப் படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்படுவது இதனால் தவிர்க்கப்படும்.

கடந்த அக்டோபர் மாதம் ஓரளவு மழை பெய்தபோதும்கூட, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் போதிய நீர் இருப்புச் சேரவில்லை. மேலும், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேரவில்லை. இந்தச் சூழ்நிலையில் குழாய்களின்மூலம் தண்ணீர் வழங்குவது என்பது ஒரு தொலைதூரக் கனவாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால், திட்டமிட்டவாறு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்குகின்ற வகையில், புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதனாலேயே, (மேசையைத் தட்டும் ஒலி) குழாய்களின்மூலம் 13-10-2004 முதல் சென்னை மாநகரத்திற்குத் தண்ணீர் வழங்குவது சாத்தியம் ஆகியுள்ளது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகள் முற்றிலும் வறண்டுபோய், கிருஷ்ணா நதி நீரும் வந்து சேராத நிலையில், சென்னை மாநகரில் குழாய்மூலம் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொடங்கி வைக்க முடிந்தது என்றால் அதற்குக் காரணம், சென்னை மாநகரவாழ் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்கின்ற வகையில் தொலைநோக்குப் பார்வையோடு திட்டம் தீட்டி புதிய வீராணம் திட்டத்தை உரிய நேரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறைவேற்றி முடித்ததுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய வீராணம் திட்டம் மிகக் குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. வட கிழக்குப் பருவமழை பொய்த்து, குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளுக்குப் போதிய நீர்'வராதபோதிலும்கூட, இந்தத் திட்டம் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் நம்பகமான ஒரு நீராதாரமாக அமைவதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களைப் பாதிக்கும் மாபெரும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு தீர்வுகளைச் சிந்தித்து அவற்றில் ஒற்றைத் தீர்வை மட்டும் நம்பியிராமல், ஏற்புடைய தீர்வுகள் எல்லாவற்றுக்கும் செயல்வடிவம் தந்தால்தான் நிரந்தரத் தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும். ஆகவேதான், சென்னைப் பெருநகர் பகுதிக்கு நாள் ஒன்றுக்கு தேவைப்படுகிற 840 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க இயலும் வகையில் தற்போதைய மூன்று நீர்த்





தேக்கங்கள், கிருஷ்ணா நதி நீர், கிணற்று வயல்களிலிருந்து கிடைக்கக் கூடிய நிலத்தடி நீர், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த அவைக்கு மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

விதண்டாவாதங்களைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல், வீணான சந்தேகங்களுக்கு இடம் கொடுக்காமல், தமிழகத் தலைநகரின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் மக்கள்மீது முழு நம்பிக்கை வைத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்பட்டதன் விளைவாக புதிய வீராணம் திட்டம் இன்று வெற்றிகரமான திட்டமாக ஆகியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தளராத முயற்சிக்குக் கிடைத்த தனிப் பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) கடும் தண்ணீர்ப் பிரச்சினையால் சென்னை நகரம் பாதிக்கப்பட்டு, தவியாய் தவித்துக் கொண்டிருந்த நிலையில் அதிரடி மாற்றமாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தன்னிகரற்ற சாதனையால் சென்னை மாநகர மக்கள் குழாய்கள்மூலம் தண்ணீர் பெற்று மனநிறைவு கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு அடிப்படையாக புதிய வீராணம் திட்டத்தை தொலைநோக்குப் பார்வையுடன், தீர்க்கமாய் திட்டமிட்டு, திறம்பட செயல்படுத்தி,

"ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும், நில்லேன், அஞ்சேன்!

என்னும் உறுதிப்பாட்டோடு செயல்படுத்தி, இத்திட்டத்தின் வெற்றிக்கு வழி வகுத்து, வரலாற்றுச் சரித்திர சாதனை படைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொதுமக்கள் நன்றியுடன், மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

[2004 நவம்பர் 22

## 5. கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம். திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சந்தனமரக் கடத்தல் கொள்ளையனை வேரோடும், வேரடி மண்ணோடும் அழித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாகவே சட்டத்தின் ஆட்சி நடத்துகிற மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

அதுபோலவே, புதுக்கோட்டை மாவட்டத்திலே மீனவர்கள் அதிகம் நிறைந்த பகுதி என்னுடைய பகுதியாகும். அந்தப் பகுதியிலே இருக்கிற மீனவர்களும் பயனடைகிற வகையிலே மத்திய ஆயத் தீர்வையை ஈடுகட்டுவதற்காக நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட அமைச்சர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்; நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய முன்னேற்றம் என்பதுபற்றி இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் டெல்லியிலே நடந்த கருத்தரங்கிலே சொல்லியிருக்கிறார்கள். வேலைவாய்ப்புகளை அதிகமாக உருவாக்க வேண்டும், அதுதான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிக அத்தியாவசியமானது என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சிவபுண்ணியம்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர் அரசன் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள்.



2004 நவம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை, நல்ல செய்திதான், நல்ல செய்திதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பொதுவாக சட்டத்தின் ஆட்சி என்று ஒப்புக் கொண்டிருக்கிறார். பாரதிய ஜனதா கட்சியின் சார்பிலே அவர் சொல்கிறார் என்பதைத்தான் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அவருடைய தலைவர்கள் வேறுவிதத்திலே சொன்னார்கள். இங்கே அவர் ஒப்புகொண்டு பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் போய் அவருடைய தலைவர்களுக்கெல்லாம் சொல்வார்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு மன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு இந்த ஐயம் வந்திருக்கக் கூடாது.

ஒரு நாட்டினுடைய முன்னேற்றம் என்பது வேலைவாய்ப்புகளை அதிகமாக உருவாக்குவதிலேதான் இருக்கிறது என்று பொருளாதார வல்லுநர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அந்த வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவான கோரிக்கை, வேலையிழந்து, இரண்டு, மூன்று ஆண்டு காலமாக மிகவும் கஷ்டப்படுகிற சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே குடும்ப அட்டை வைத்திருப்பவர்களிலே இருவேறு பிரிவினர் அரிசியைப் பெறவில்லை. ஒன்று, நம்முடைய அரசாங்கத்தாலே 'எச்' முத்திரை குத்தச் சொல்லி, அதற்குப் பிறகு ஓர் உத்தரவுமூலம் 'எச்' முத்திரை நீக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியினருக்கு இப்போது அரிசி வழங்கப்படவில்லை. இன்னொன்று, வெளியூர் சென்றிருந்த காரணத்தினாலே அல்லது வேலைவாய்ப்பு தேடி எங்கேயோ சென்றிருந்த காரணத்தினாலே, குடும்ப அட்டை வைத்திருந்தும் அவர்களாலே கூப்பன் படிவத்தைப் பெற முடியவில்லை. அவர்களுக்கும் இன்றைக்கு அரிசி கிடைக்கவில்லை. ஆக, குடும்ப அட்டை வைத்திருப்பவர்களிலே சற்றேறத்தாழ 30 சதவீதத்தினர் இன்றைக்கு அரிசி பெற முடியாத

சூழ்நிலை, ஏறத்தாழ 6 மாத காலமாக இருக்கிறது. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

தமிழகத்திலே குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆதி திராவிடப் பெருமக்கள் வீடு கட்டி வசித்து வருகிறார்கள். பட்டா இடங்கள் இல்லாத காரணத்தினாலே அரசினுடைய பல்வேறு புறம்போக்கு இடங்களிலே வீடு கட்டி வசித்து வருகிறார்கள். அரசாங்கத்தினுடைய உதவியோடு கான்கிரீட் வீடுகள் கட்ட முயற்சி எடுக்கிறபோது அந்த இடங்களுக்கு பட்டா இல்லாத காரணத்தினாலே வீடு கட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது அநேகமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலேயும் இருக்குமென்று நான் கருதுகிறேன். எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறது. ஆகவே, ஆதி திராவிடப் பெருமக்களுக்கு, அவர்கள் குடியிருக்கிற இடத்தை, அது எத்தன்மை வாய்ந்ததாக இருந்தாலும் அதற்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் கடுமையான வறட்சி. இந்த ஆண்டு கடுமையான வெள்ளம். அதிலும் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில், என்னுடைய தொகுதியிலே மூன்று ஆண்டுகள் பெய்ய வேண்டிய பருவ மழை இந்த ஆண்டு பெய்திருக்கிறது. அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நஞ்சை பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சாலைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு, நேற்றைக்குவரைக்கும்கூட, ஏன் இன்றைக்குவரைக்கும்கூட பல்வேறு ஊர்களுக்குப் போக்குவரத்து இல்லாமல், பேருந்து வசதி இல்லாமல், என்னுடைய தொகுதியிலே இருக்கிற மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் என்னுடைய தொகுதிக்கு, எங்களுடைய மாவட்டத்திற்கு உதவ வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே இன்னொரு கோரிக்கை. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நானும், நம்முடைய புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்களெல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்களுடைய பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு



ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு தருவதற்கு, எவ்வளவு வேண்டுமானாலும் மின் இணைப்பு தருவதற்கு அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள், ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற நேரத்தில், விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற நேரத்தில், அங்கு மின் இணைப்புகளைக் கொடுப்பதற்கு மின்சாரத் துறையினருக்குப் பொருட்கள் வந்து சேரவில்லை. மின் இணைப்பு தருவதற்கான பொருட்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அதிகமாக வரவில்லை. அதை அவர்கள் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய துணை நிதிநிலை மானியக் கோரிக்கையிலே வருடா வருடம் சொல்வதைப்போல, ஆண்டுதோறும் சொல்வதைப் போல, நமக்கு வரவேண்டிய வரி வருவாய் 10,000 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. மூன்று ஆண்டு காலமாக அதை வசூலிப்பதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பதைப்போல, திட்டச் செலவுகளுக்கு இந்த ஆண்டு 8,000 கோடி ரூபாய் அரசு செலவழிக்கிறது. அந்த வரி வசூலைச் செய்தால் ஓராண்டு திட்டச் செலவு செய்வதற்கான வாய்ப்புகள் எல்லாம்கூட இருக்கிறது. ஆகவே..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 கோடி ரூபாய் வரி பாக்கி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது தவறான தகவல். நான்காயிரத்து சொச்சம் கோடி ரூபாய் வரி பாக்கி இருப்பதற்கு, பல்வேறு கட்டங்களில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் நிலுவையில் இருந்தவற்றை, தற்போது அந்த வரி வசூலை மேற்கொள்ள நடவடிக்கைகளை, சட்டரீதியான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

முற்பகல் 11-45

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ரூ.4,000 கோடிகூட நாம் வசூலித்தால் பயன்படும். இன்றைக்குப் பள்ளிக் கட்டடம் இல்லையென்று, மருத்துவமனைகளுக்குக் கட்டடம் இல்லையென்று, கிராமங்களுக்கு சரியான சாலைப் போக்குவரத்து இல்லையென்று சொல்கிறார்கள். . .

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரூ.4,000 கோடி என்பதிலே கிட்டத்தட்ட ரூ.3,000 கோடிக்குப் பல்வேறு நீதிமன்றங்களுடைய தடையாணைகளால் வசூலிக்கப்படாத ஒரு நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வணிக வரித் துறை அமைச்சராக இருந்தார்கள். அந்த அடிப்படையிலே விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், இப்போதும் அவர்தான்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி மாற்றப்படுவதனால், தவறு ஏற்பட்டுவிட்டது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகையைத் தொடர்ந்து படிக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களது இலாகாகள் குறித்து ஒரு புத்தகமாவது எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நான்கூட ஒரு அமைச்சருக்கு துறையே தெரியாமல் கடிதம் எழுதி, அது எனக்குத் திரும்ப வந்தது. ஏனென்றால் அதுமாதிரி ஒரு குழப்பம் எங்களுக்கு வந்து விடுகிறது. அதனால்தான் சொல்கிறேன். அதுமாதிரி புத்தகம் போட்டு எங்களுக்கு நீங்கள் கொடுக்கலாம்.

**திரு. ப. அரசன்:** நீதிமன்றங்களிலேகூட வழக்கு இருக்கலாம். அதை எப்படியாவது வசூலித்து, ஏனென்று சொன்னால் இன்னும்கூட பல்வேறு அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு, மேல்நிலைப் பள்ளிகளுக்கு, போதிய கட்டட வசதியில்லையென்று எங்களிடத்திலே வந்து நிதி கேட்கிறார்கள். எங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிதியினுடைய அளவு தங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அதிலேயிருந்து எந்த அளவுக்கு உதவ முடியும் என்பதை அரசு கூர்ந்து கவனிக்க வேண்டும். ஆகவே, அரசு இன்னும்கூட ஒன்று செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற நிதியை ஒரு கோடி ரூபாயாகக்கூட உயர்த்திக் கொடுக்கலாம். கொடுத்தால் நாங்களும் பள்ளிக் கட்டடங்களுக்காக தாராளமாகக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல சென்ற ஆண்டு நம்முடைய அரசினுடைய செயல்களைத் தணிக்கைத் துறைத் தலைவர் தணிக்கை செய்து ஒரு



சின்ன புத்தகமாக எங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு வருத்தமான செய்திகள் என்னவென்று சொன்னால், ஊனமுற்றோர்களுக்கான நிதி சரியாக செலவழிக்கப்படவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். சமுதாயத்திலே ஊனமுற்றோர் நிலைமை மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகும். அவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் படிப்பதற்கு, ஏதாவது தொழில் செய்வதற்கு நாம் உதவ வேண்டும். அந்த வகையிலே நாம் எடுத்துக்கொள்கிறபோது முதலிலே சொல்லியிருப்பது தேவையான நிதியொதுக்கீடு அளிக்கப்படவில்லையென்று. பிறகு மத்திய அரசு கொடுத்த நிதியும் செலவிடப்படாமல் இருந்தது என்றும் தணிக்கை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஒரு மாநிலத்தினுடைய வளம், மரம் வளர்ப்பதிலே இருக்கிறது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட கருதி அதை இன்றைக்கு தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றியும் அந்தத் தணிக்கை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். மரக் கன்றுகள் நடுவதிலே ஏற்பட்ட பெருமளவிலான குறைபாடுகள், பயிர்களின் பிழைப்பு விகிதம் மிக மோசமாக இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மரக் கன்றுகள் நடுகிறபோது அடிப்படையான சில தன்மைகளை ஆராயாமல் அதிகாரிகள் நடவு செய்து விடுகிறார்கள். எந்தப் பகுதிக்கு, எந்த மண்ணினுடைய தன்மைக்குத் தகுந்தாற்போல் மரக் கன்றுகள் நட வேண்டும் என்பது ஒன்று. ஆற்றுப் படுகையிலே சவுக்குக் கன்றுகள் நடலாம். ஆற்றுப் படுகையிலே யூகலிப்டஸ் போன்றவை நடலாம். ஆனால், அந்த ஆற்றுப் படுகையிலே மா மரம் நடுவது என்பது சரியாக இருக்காது.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து வேளாண் மண்டலங்களும்-பொதுவாக தமிழகம் 7 வேளாண் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; அந்தந்த மாவட்டங்களிலே, அந்தந்த மண்ணினுடைய தன்மைக்கேற்ப எந்தெந்தப் பழக் கன்றுகள் நட வேண்டுமென்று வேளாண் அலுவலர்கள் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி வருகின்றார்கள். அதோடு மட்டுமல்ல, தாயுள்ளம் கொண்ட

தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, அப்படி வழங்கப்படுகின்ற பழக கன்றுகளுக்கு மானியத்தையும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அந்த மண்ணினுடைய தன்மைக்கேற்ப பழக் கன்றுகள நட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஏதாவது ஒரு குறிப்பிட்ட பகுதி அந்தத் தகவல் தெரியாத பகுதியாக இருக்கின்ற ஒரு நிலை இருக்குமேயானால், அதனைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக சம்பந்தப்பட்ட வேளாண் அலுவலர்கள், அந்த மண்ணினுடைய தன்மைக்கேற்ப எந்தப் பழக் கன்றுகளை நட வேண்டும் என்று, அந்த விவசாயப் பெரு மக்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு என்றைக்கும் தயாராக இருக்கின்றார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-50*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவர்கூட, அவருடைய அதிகாரிகளுக்கு ஓர் ஆலோசனை வழங்கலாம். மாவட்டத்திலேயிருக்கிற அதிகாரிகளிடம் சொல்லி, ஒரு நாள் எங்களையெல்லாம் அழைத்து, ஒரு கருத்தரங்கு நடத்தச் சொல்லலாம். நாங்களெல்லாம் பங்கு பெறத் தயாராக இருக்கிறோம். இந்த வகையிலே மிகவும் அனுபவம் வாய்ந்த நம்முடைய ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய நாங்கள் எல்லோரும் ஆலோசனை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். இதுகுறித்து பல்வேறு தடவை, எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாவட்டத்தில் ஆய்வு நடத்துகிறபோதுகூட நாங்கள் சொல்லியிருக்கிறோம். இருந்தும்கூட, அவருடைய துறை அதிகாரிகள், அங்கேயிருப்பவர்கள் சரியாக அதைக் காதிலே வாங்கிக்கொள்வதில்லை. ஆகவே, கருத்தரங்குக்குக்கூட நீங்கள் ஏற்பாடு செய்யலாம். நாங்கள் கலந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வேளாண் அலுவலர்கள் வயல் விளக்க நிகழ்ச்சிகள் மூலம் பல்வேறு பருவ நிலைகளிலே வேளாண் பெருமக்களுக்கு ஆலோசனை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்திலே அங்கே பணியாற்றுகின்ற அலுவலர் ஒருவர் அதை உதாசீனப்படுத்துகின்றார்



என்கின்ற தகவலைச் சொல்லியிருக்கின்றார். அதை உரிய முறையிலே எங்களுக்கு எழுதிக் கொடுப்பாரேயானால், நிச்சயமாக நாங்கள் தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு, இனி இதுபோன்ற தவறுகள் நடக்காத அளவிற்கு நாங்கள் உரிய உத்தரவுகளை அளிப்போம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ப. அரசன்:** சரி. என்னுடைய தொகுதியினுடைய ஒன்றிரண்டு கோரிக்கைகளை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருப்பதனாலே அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் குற்றவியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் தொடங்கப்பட்டு, ஏறத்தாழ 60 ஆண்டுகாலத்திற்கு மேல் ஆகிறது. பழைய கட்டடத்திலேயே அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. நானும் பல்லவியாக அதைப் பாடிக் கொண்டிருக்கிறேன். ராகம் போட்டு பாடச் சொன்னால்கூட நான் பாடுவதற்குத் தயாராக இருக்கிறேன். எனக்குக் கொஞ்சம் சங்கீதம் தெரியும். (சிரிப்பு) எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கட்டடத்தைத் தருவதற்கு உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு நீதிமன்றக் கட்டடங்கள், இந்த மூன்று ஆண்டுகாலத்தில் சிறப்பான முறையிலே கட்டப்பட்டு, திறக்கப்பட்டது பற்றியெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். சென்னை உயர் நீதிமன்றத்திலே Legal Services Authority, சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்குச் சொந்தமாக கட்டடம், நூலகத்திற்குத் தனிக் கட்டடம், அதேபோன்று Judicial Academy-க்குத் தனிக் கட்டடம், அதேபோன்று மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் பல கோடி ரூபாயிலே உருவாக்கப்பட்டதெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். நான் பல தடவை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கின்றேன். எந்தவொரு ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு, நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம்

[திரு. டி. ஜெயக்குமார்] [2004 நவம்பர் 22

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வை உள்ளவர். ஒரு concrete proposal, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள், 5 ஆண்டு காலகட்டத்திற்குள் அனைத்தையுமே முடிக்கவேண்டும் என்கின்ற ஒரு தொலைநோக்குப் பார்வை உள்ளவர் நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள். எனவே, கடந்த காலத்திலேயெல்லாம் ஒரு estimate-கூட, எந்த நீதிமன்றத்திலும், யாரும், எந்த ஆட்சியாளர்களாலும் எடுக்கப்பட்டதில்லை. இப்போது தமிழ்நாட்டிலே புதிதாக இதுபோன்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சொல்லப்படுகின்ற நீண்ட நெடுங்காலமாக எந்தவிதமான வசதியும் இல்லாத கட்டடங்கள் எல்லாம்கூட இடிக்கப்பட்டு, புதிய அழகிய தோற்றம் மிக்க கட்டடங்களாக உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய விருப்பம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பும்போதுகூட நான் பல தடவை சொல்லியிருக்கின்றேன். கடந்த முறை உங்களுடைய பி.ஜே.பி. ஆட்சி இருந்தது. அங்கே மத்திய அமைச்சரிடத்திலே சொல்லி 140 கோடி ரூபாய்க்கு நாங்கள் இங்கே தமிழ்நாட்டிலேயிருந்து அரசு சார்பிலே கருத்துரு அனுப்பியுள்ளோம், நீங்கள் உங்கள் பங்காக 50 சதவீதம் கொடுத்தால் எங்கள் பங்காக 50 சதவீதம் கொடுத்து அந்தப் பணியை நிறைவேற்றுகிறோம் என்று பல முறை நான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லியிருக்கின்றேன். ஆனால், அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள். 'யானைப் பசிக்குச் சோளப் பொரி' என்பது போல், ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு 3 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் என்று கொடுத்தால், எந்தக் காலத்திலே இதை நாம் நிறைவேற்ற முடியும்? அப்படியும் இன்றைக்கு அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி இருந்த சூழ்நிலையிலும்கூட நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் தாராளமாக நீதித் துறைக்கு நிதியை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இப்போதுகூட தமிழ்நாட்டிலே இருக்கின்ற கட்டடங்களைப் பழுதுபார்க்க, நீதிமன்றக் கட்டடங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த மனப்பான்மையோடு ஏழரை கோடி ரூபாயை இரண்டு கட்டமாக விடுவிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இப்போது காங்கிரஸ் கட்சியினர் அங்கே மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிறார்கள். 140 கோடி ரூபாயிலே அவர்கள் முதற்கட்டமாக 70 கோடி ரூபாய் பெற்றுத் தந்தால், இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்திலே அனைத்து நீதிமன்றக் கட்டடங்களும் நல்ல ஒரு புதிய பொலிவைப் பெறுகின்ற அளவிற்கு நல்ல நிலையிலே வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 நவம்பர் 22]

முற்பகல் 11-55

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் பெய்த பெருமழையின் காரணமாக நம்முடைய ஆதி திராவிடப் பெருமக்களுக்கு அரசினால் கட்டித் தரப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்து போயிருக்கின்றன. ஏற்கெனவே உள்ளாட்சித் துறையில் நிறைய வீடுகளை ஆண்டுதோறும் புதுப்பித்துத் தந்து கொண்டிருக்கிறார்கள். நிறைய வீடுகள் பழுதுபட்டிருப்பதனால், அதற்காகக் கொஞ்சம் special grant கொடுத்து, பிரத்யேகமாக நிதி அளித்து, அந்த வீடுகளையெல்லாம், ஆதி திராவிடப் பெருமக்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேயிருந்து தொடர்ந்து கட்டித் தந்த வீடுகளைப் புதுப்பிப்பதற்கு நிதி உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, 2001 ஆம் ஆண்டு சென்னை மாநகரிலே வெள்ளம் பாதித்த பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** சரி. 2001 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்திலே, வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வியாசர்பாடியில் 25 கோடி ரூபாய் செலவில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதனை உடனே நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு விலைவாசி எல்லாம் நிறைய உயர்ந்திருக்கிறது, குற்றச்சாட்டாக அல்ல. பெட்ரோல் விலை உயர்ந்திருக்கிறது; டீசல் விலை உயர்ந்திருக்கிறது; காஸ் விலை உயர்ந்திருக்கிறது. இங்கேயிருக்கிற அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய, அனேகமாக அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கை, எங்களுடைய சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும்; ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்பது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கடந்த ஓர் ஆண்டாக கருணை உள்ளத்தோடு தாராளமாக நிறைய கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களையும் கொஞ்சம் ஓரக் கண்ணால் பார்த்தால்கூட போதும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சகோதரர்களும் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே, அவர்களுக்காக (குறுக்கீடுகள்) சம்பளமே வேண்டாம் என்கிறீர்களா? (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** பொதுவுடைமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர்களான எங்களுக்கு வேண்டாம். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதனை ஏற்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** நன்றி. பொதுவாக, பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள், நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, எங்களுடைய சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எங்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்,—எங்களுடைய அறந்தாங்கி பகுதியிலே கொஞ்சம் கல்லணை கால்வாய்ப் பாசனப் பகுதிகள் இருக்கின்றன; அவற்றை நபார்டு திட்டத்திலே ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்தி, ஏரிகளை ஆழப்படுத்தி, பலப்படுத்தித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டு துணை நிதிநிலை மதிப்பீடுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் வணங்குகின்ற தங்கத் தாரகை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

எங்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு அரசின் நலத் திட்டங்களை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் வருகை புரிந்தபோது, மோகனூர்-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, தற்போது 126 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ராசிபுரம் தொகுதி மக்களின் தண்ணீர் தாகத்தைத் தீர்த்து வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)





ராசிபுரத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு, எங்களது நீண்ட நாள் கோரிக்கையாகிய புதிய புறவழிச் சாலை அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ராசியான ராசிபுரத்திற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்திடுமாறு முகராசி கொண்ட மகராசி அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த கடந்த பட்ஜெட் கூட்டத் தொடருக்கும், இந்த குளிர்காலக் கூட்டத் தொடருக்கும் இடையே பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள், சரித்திரம் போற்றும் சாதனைகள் இங்கு நடைபெற்றுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அதிரடி நடவடிக்கைகளையும், ஆற்றல் மிக்க செயல்களையும் இந்தியத் துணைக் கண்டம் மட்டும் அல்ல, உலகமே இன்று உற்று நோக்கி வருகின்றது. முடியாது என்ற வார்த்தை என் அகராதியில் இல்லை என்ற மாவீரன் நெப்போலியனின் நெஞ்சுறுதியும், திறமையும் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் எடுத்த காரியத்தை முடித்துக்காட்டியே சாதனை படைத்து வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் தாக்கல் செய்த இரண்டாவது துணை மதிப்பீடுகளில் சென்னை மாநகரை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கையின் ஓர் அம்சமாக 26 முக்கியச் சாலைகளை மேம்படுத்த 369.90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அதுபோல திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, வேலூர், தேனி ஆகிய நகரங்களில் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கு 187.29 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்துள்ளதை நெஞ்சாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனைக்குத் தேவைப்படும் உபகரணங்களை வழங்குவதற்காக 1.95 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதையும், மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் டீசல் எண்ணெய்க்கு 1.83 கோடி ரூபாயை மானியமாக அளித்துள்ளதையும் நான் மனமார வரவேற்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியால் உருவாக்கப்பட்ட கடுமையான நிதி நெருக்கடி, கடன் சுமை இவைகளைச் சுட்டிக்காட்டி, இந்த அரசுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்புத் தாருங்கள், நிதிப் பிரச்சினை தீர்ந்ததும் உங்களுடைய குறைகளையெல்லாம் தீர்த்து வைக்கிறேன் என்று கூறி, கடந்த மூன்றாண்டுகளில் தமிழகத்தின் நிதிநிலையைச் சீர்படுத்தி, இந்த அரசு திவாலாகாமல் காப்பாற்றி, சரித்திர சாதனை படைத்தவர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தான் அளித்த உறுதிமொழிப்படி அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி 4 சதவீதம், சரண்டர் விடுப்பு மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்குச் சம்பளம் போன்ற பல்வேறு சலுகைகளை வழங்கியவர் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், சில சுயநலவாதிகள் மீண்டும் இந்த அரசு ஊழியர்களைத் தூண்டிவிட்டு, அவர்கள் நடுத் தெருவில் நின்றாலும் பரவாயில்லை, அவர்களது போராட்டத்தின்மூலமாக தாம் ஆதாயம் அடையலாம் என்று போட்டு வைத்திருந்த பொய்க் கணக்கைத் தவிடுபொடியாக்கியவர்தான் நமது தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும ஒலி)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் ஏன் அகில இந்தியாவிற்குமே பெரும் தலைவலியாக இருந்த காட்டுக் கொள்ளையன் சந்தனக் கடத்தல் வீரப்பன் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை இருக்கிறதே அது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெற்றி மகுடத்திலே சூட்டப்பட்ட வைரக்கல் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) வீரத் திருமகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதிமிக்க இந்தச் சாதனையை உலகமே வியந்து பாராட்டுகின்றது. இந்த அதிரடிப் படை வீரர்களுக்கு 22 கோடி ரூபாய் நிதியுதவி அளித்ததை மனசாட்சி உள்ள அனைவரும் இன்று பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மனசாட்சி இல்லாத ஒரு சிலர்தான் இதை ஏற்க மறுக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை அன்று, இந்த அவையிலே சரியான பதிலடி கொடுத்தார்கள். இன்றுகூட அம்மா அவர்கள் இதைப்பற்றி ஒரு நீண்ட விளக்கம் கொடுத்தார்கள். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள்தான் இன்று வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இவர்களையெல்லாம் இந்த நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து இதே அவையிலே புதிய வீராணம் திட்டம் நிறைவேறாது, சென்னைக்குக் குடிநீர் வராது, அப்படியே வந்தாலும் அது விவசாயிகளின் கண்ணீராகத்தான் இருக்கும் என்று ஏளனம் பேசினார்கள், எள்ளி நகையாடினார்கள். ஆனால், இந்த அவையிலே அவர்களுக்குமுன் கம்பீரமாக எழுந்து நின்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்பகுதியிலுள்ள விவசாயிகள் எள்ளளவும் பாதிக்காத அளவில் குறித்த காலத்திற்குள் நிச்சயம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன், புதிய வீராணம் தண்ணீர் சென்னைக்கு வந்தே சேரும் என்று சவால்விட்டு கூறினார்கள். இன்று அந்தச் சவாலை சரித்திர சாதனையாக்கி இருக்கிறார்கள் சாதனைச் சிகரம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருட்டு விசிடி. என்றால் குண்டர் சட்டம் பாயும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் விளைவாகத் தமிழ்த் திரை உலகினரை இன்ப அதிர்ச்சிக்கு ஆளாக்கினார்கள். அதனால்தான் ஒட்டுமொத்தத் திரையுலகமே திரண்டு வந்து அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டியது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திரைப்படக் கலைஞர்களை ஒரு சிலர் சொன்னதுபோல வெறும் காக்கைகள் கூட்டமாகப் பார்க்கவில்லை. அவர்களைப் பேசும் கிளிகளாக, பாடும் குயில்களாக, ஆடும் மயில்களாக மட்டுமல்ல, வாழும் உயிர்களாகப் பார்க்கிற காரணத்தினால்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஒட்டுமொத்தத் திரையுலகம் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறது. பிறரால் சாதிக்க முடியாததைச் சாதித்துக் காட்டி, இருண்டு கிடந்த திரையுலகிற்கு ஒளி வழங்கிய ஒளி விளக்குதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*பிற்பகல் 12-05*

புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், அம்மாவின் பெயரிலே வெற்றி அமைந்திருக்கிறது. எனவே, வெற்றி அம்மாவின் உடன் பிறந்தது. ஆங்கிலத்தில் "V" for Victory என்பார்கள். அந்த வகையிலே, புதிய வீராணம் திட்டம் கொண்டுவந்ததிலே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வெற்றி. காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்தியதில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வெற்றி. திருட்டு விசிடி.-யை ஒழித்ததிலே இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வெற்றி. இப்படி, குறுகிய காலத்திலே அடுத்தடுத்து, **Hat-trick** சாதனை படைத்த ஒரே முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டபூர்வமாக எடுத்த ஓர் அதிரடி நடவடிக்கை, தமிழகத்தின் பக்கம் உலகத்தையே இன்று ஈர்த்திருக்கின்றது. எத்தனை உயர்ந்த இடத்தில் இருந்தாலும், அவர்கள் எத்தனை பெரியவர்களாக இருந்தாலும், சட்டத்தின்முன் அனைவரும் சமம்தான் என்பதை நிரூபிக்கும் வகையில், இந்த அரசு எடுத்த நடவடிக்கையை இந்த நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நாடு மட்டும் பாராட்டவில்லை. இந்த நாட்டிலுள்ள அனைத்து எதிர்க்கட்சியினரும் ஒட்டுமொத்தமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்த இந்த அதிரடி நடவடிக்கையை இன்று பாராட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள், காஞ்சி மடத்திலே கொலையுண்ட திரு. சங்கரராமன் அவர்கள் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய்... (குறுக்கீடு) வரதராஜ பெருமாள் கோவிலில் கொலையுண்ட திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்திருப்பதை மனதார, உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஐ.நா. சபையின் அமைப்புகளில் ஒன்றான உக்ரைன் நாட்டைச் சேர்ந்த சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக் குழு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மனித நேயத்தை, மகத்தான சேவையைப் பாராட்டி, தங்கத் தாரகை விருது வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே உதயகுமார் என்ற மாணவனுடைய பிணத்தின்மீது சென்று டாக்டர் பட்டம் பெற்றதுபோல, பெறப்படவில்லை இந்த விருது. இந்த விருது எதற்காகக் கிடைத்தது? தொட்டில் குழந்தைகள் திட்டம் கொண்டுவந்ததற்காகக் கிடைத்த விருது இது. (மேசையைத் தட்டும் ஒலி) பிறந்த குழந்தையின் பெயருக்கு முன்னால் தாயின் initial-ஐப் பயன்படுத்தலாம் என்று உத்தரவு போட்டதற்குக் கிடைத்த விருது. மகளிருக்கு நீதி கிடைக்க வேண்டும் என மகளிர் காவல் நிலையம், மகளிர் நீதிமன்றம் அமைத்ததற்குக் கிடைத்த விருது. பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்க, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்ததற்குக் கிடைத்த விருது. வீரத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள் என்பதற்கு பெண் கமேண்டோ படையை அமைத்ததற்குக் கிடைத்த விருது. (மேசையைத் தட்டும் ஒலி) குடிமகன்



என்ற சொல்லே இதுவரையில் இருந்த நிலையை மாற்றி அதற்கு இணையாக குடிமகள் என்ற சொல்லையும் பயன்படுத்தலாம் என்று உத்தரவிட்டதற்குக் கிடைத்த விருது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் கோஃபி அன்னன், ரஷ்ய அதிபர் புட்டின், ஐஸ்லாந்து பிரதமர் டேவிட் ஆன்சென் ஆகிய உலகத் தலைவர்கள் இந்த விருதினைப் பெற்றிருக்கிறார்கள். தமிழகம் மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல, உலக அளவில் போற்றத்தக்க தலைவராக உருவாகி வருபவர்தான் தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத் தலைமுறையைக் கருத்திற்கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் இன்று தகவல் தொழில்நுட்பத் துறை, கணினி மென்பொருள் ஏற்றுமதி, அன்னியத் தொழில் முதலீடு, கல்வித் துறை உட்பட பல்வேறு துறைகளில் நம் தமிழகம் முதல் நிலையை நோக்கி முன்னேறி வருகிறது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும், அதன் மேம்பாட்டிற்கும் ஏற்றவகையில் உலகத் தரம் வாய்ந்த டைசல் பயோ பூங்கா ஒன்றினை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில், சென்னையில் உருவாக்கி சாதனை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆக்கபூர்வமான செயல்பாடுகள் அனைத்தையும் ஓர் அறிவார்ந்த முதல்வரால்தான் சாதிக்க முடியும். அந்த அறிவார்ந்த முதல்வர்தான் இங்கே அமர்ந்திருக்கின்ற தங்கத் தாரகை நமது அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்ப்யூட்டரில் சாதனைகள் பல படைத்த அம்மா அவர்கள் இன்றைக்கு ஆன்மீகத்திலும் பல அறிவியல் சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று. அண்மையில் பழனி முருகன் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக 5 கோடி ரூபாய் செலவில் Rope Car திட்டத்தை இதய தெய்வம் அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்திற்கு இத்தனை கோடி ரூபாய் செலவழிப்பதா, இத்திட்டம் வெற்றி பெறுமா என்று சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், இன்றைக்கு நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் வருவதோடு மட்டுமல்லாமல் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முருகப் பெருமானை சிரமமின்றி தரிசனம் செய்ய வழிவகை செய்தவர்தான், ஆலயந்தோறும் அன்னதானத் திட்டம் வழங்கிய அன்னபூரணி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினாலும் தொலைநோக்குப் பார்வையிருக்கும். அப்படி அம்மாவின் சிந்தனையில் உதித்த மகத்தான திட்டம்தான் மழைநீர் சேகரிப்புத் திட்டம். இந்தத் திட்டத்தை இன்றைக்கு மத்திய அரசு வரவேற்றுப் பாராட்டியதுடன் அனைத்து மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கின்றது. மழைநீர் சேகரிப்புத் திட்டத்தால் தற்போது பெய்த மழையினால் தமிழகத்தில் இன்றைக்கு நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திருக்கிறது. இந்த அற்புதமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினால் கிடைத்த வெற்றியின்மூலம், மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராக விளங்குகிறவர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் தாம் பிறந்து வளர்ந்த இயற்கை வனப் பகுதியைக் காணாமல், ஆண்டு முழுவதும் ஒரேயிடத்தில் கட்டிப்போடப்பட்டு, அரண்டு, மிரண்டு, மதம் பிடிக்கும் நிலையிலிருந்த நிலையை மாற்ற, யானைகளின் துயரைத் துடைக்க, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'யானைகள் புத்துணர்வு முகாம்' ஒன்றினை கடந்த ஆண்டில் நடத்த உத்தரவிட்டார்கள். அது வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த ஆண்டு மீண்டும் அதுபோன்ற முகாம் முதுமலையிலே கடந்த வாரம் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரண்டு, மிரண்டு கிடந்த யானைகள் எல்லாம் இங்கே முதுமலைக் காட்டிலே ஆனந்தமாகக் குளியல் போடும் காட்சியைப் பாருங்கள். இதைக் கேலிசெய்யும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் காணட்டும் என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*(உறுப்பினர், செய்தித்தாள் ஒன்றில் வெளிவந்திருக்கும் புகைப்படத்தை அவையில் காண்பித்தார்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வேண்டுமென்பதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்கள். அதிலே பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் தமிழகத்தில்தான் அரிசி விநியோகம் செய்யப்படுகிறது.



வறுமைக்கோட்டிற்கு கீழ்/மேல் என்கின்ற பாகுபாடு இல்லாமல் எல்லாத் தரப்பு மக்களுக்கும் கிலோவுக்கு 3 ரூபாய் 50 காசு விலையிலே அரிசி கிடைக்கும் ஒரே மாநிலம் நமது தமிழகம்தான் என்பதை இந்த நேரத்திலே பல்வேறு பத்திரிகைகள் பாராட்டியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களுக்காக, ஏழை மக்களுக்காக ஆட்சி நடத்துகிறோம் என்று கூறும் கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலங்களில்கூட இவ்வளவு குறைந்த விலையிலே அரிசி வழங்கப்படுவதில்லை.

அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தில் அரிசி மற்றும் உணவுப் பொருட்களை பெற முடியாமல் தவிக்கின்ற 40 இலட்சம் குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்க எடுத்துவரும் நடவடிக்கையின் மூலமாக, அவர்களுடைய வாழ்விலே ஒளி தீபம் ஏற்றி வைப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத் திட்டத்தை மீண்டும் அறிவித்த தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றியதோடு தற்போது விவசாயம் செய்வதற்காக புதிய கடன் உதவிகளை வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். இந்தியாவிலேயே விவசாயிகளுக்காத பயிர்க் கடனுக்கு 9 சதவிகிதமாக வட்டியைக் குறைத்த ஒரே மாநில முதலமைச்சர், தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆயிரம் கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் உதவி வழங்கியவர். பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தியவர் நமது அம்மா அவர்கள். அம்மா அவர்களின் இந்த நடவடிக்கையின் பயனாக இன்றைக்கு ஒட்டுமொத்த விவசாயிகளும் அம்மா அவர்களின் பக்கம் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு சரித்திர சாதனைகள் படைத்துவரும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பக்கம் இன்று விவசாயிகள் மட்டுமல்ல, பல்வேறு சலுகைகளைப் பெற்றுள்ள அரசு ஊழியர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் இதற்கும் மேலாக பலத்தரப்பட்ட மக்கள் அணி திரண்டு நிற்கின்றார்கள். அனைவருடைய ஆதரவும் அம்மா அவர்களுடைய பக்கம்

வீசிக்கொண்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் தமிழக மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கம்தான். எதைச் செய்தாலும் அம்மா அவர்களுக்கு வெற்றி, வெற்றிதான். நாளை நமதே, நாடும் நமதே என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

*பிற்பகல் 12-15*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில விவரங்களைச் சொல்ல நான் விரும்புகின்றேன். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது, ஒன்று வேளாண்மை, இரண்டாவதாக தொழில் வளர்ச்சி. இந்த இரண்டும் எந்த நாட்டிலே முன்னேறியிருக்கிறதோ அந்த நாட்டில்தான் பசி, பட்டினி, வேலையின்மை, வறுமைகள் ஒழிக்கப்படுவதாக நம்முடைய அரசியல் சட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே கடந்த மூன்று ஆண்டுகளாக கடுமையான வறட்சி, குடிநீர்த் தட்டுப்பாடு, மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து குடியேறுகின்ற அவல நிலைகளைத் தமிழகத்திலே இந்த ஆண்டு காண முடிந்தது. அந்த அளவுக்குக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நேற்று முதலமைச்சர் அவர்களும், இந்த அவையிலே பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, தமிழகத்திலே என்றுமில்லாத அளவுக்கு, 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளுக்கு மேலாக வளர்க்கப்பட்ட தென்னை மரங்கள், 2 கோடிக்கு மேலே பட்டுப்போய் இருக்கின்ற நிகழ்ச்சி, கடுமையான வறட்சியால் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். 2 கோடி தென்னை மரங்கள் தமிழகத்திலே பட்டுப்போய் இருக்கின்றன. தோட்டம், தோட்டங்களாக அழிந்துபோய் இருக்கின்ற மோசமான நிலைமைகள் எல்லாம் நம்மால் காண முடிந்தது. அப்படி ஒரு கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. காவிரியிலே தண்ணீர் கிடைக்காததனாலும், காவிரி நதிநீர் பிரச்சினையிலே நிரந்தரத் தீர்வு காண முடியாததனாலும், காவிரி டெல்டா பகுதியிலே, கடந்த காலங்களிலே ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சியால், மனித உயிர்களை, மனிதனே மாய்த்துக்கொள்ளக்கூடிய அவலமான நிலைமைகள் எல்லாம் உருவான ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்பட்டது. ஆனால், அதேநேரத்தில், இந்த ஆண்டு, பருவ மழை காலத்தோடு



தொடங்கியதனுடைய விளைவாக, விவசாயிகள் ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் விவசாயத்தைச் செய்ய வேண்டுமென்று விரும்பிச் செய்தார்கள். நம்முடைய வேளாண்மைத் துறையினுடைய அதிகாரிகள், நம்முடைய அமைச்சர்கள், குறிப்பாக முதலமைச்சர் உள்ளிட்டவர்கள் எல்லாம்கூடச் சொன்னார்கள்; குறுகிய காலப் பயிர்களை விவசாயம் செய்ய வேண்டும்; சன்ன இரக நெல்லை உற்பத்திச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத் தரப்பிலே இருந்து தொடர்ந்து ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், வேளாண் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்குக் கையிலே விதை கிடையாது; கூட்டுறவுக் கடன் கிடையாது. கடந்த மூன்று ஆண்டு காலமாக நட்ட பயிர்கள் எல்லாம் பட்டுப்போனதனால், பரிதாபமான நிலைமை ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தேவையான விதைகள் கிடைக்கவில்லை என்ற ஒரு குறைபாட்டை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம், மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணைக்கிணங்க, அறிவுரைக்கிணங்க, குறிப்பாக, காவிரி டெல்டா மாவட்டங்களிலே நெல் விதைகளாக இருந்தாலும், பயிர் விதைகளாக இருந்தாலும், அவற்றைப் போர்க்கால அடிப்படையிலே, உரிய முறையிலே, விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு வழங்க வேண்டுமென்ற ஆணையினை ஏற்று, காவிரி டெல்டா பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலே, நெல் விதைகளை தங்கு தடையின்றி வழங்கியிருக்கின்றோம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, எந்தவொரு பகுதியிலே இருந்தும், விதை நெல் பற்றாக்குறை இல்லை என்ற தகவல் அரசுக்கு இல்லை என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு மட்டுமல்ல; தமிழகம் முழுவதும் இருக்கின்ற 384 வேளாண் கிடங்குகளிலேயும், போதுமான அளவுக்கு விதைகள் இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் சொல்வதை வரவேற்கின்றேன். வேளாண் துறையின் மூலமாக, குறுகிய காலப் பயிர்களை, விவசாயம் செய்ய வேண்டுமென்று நல்ல ஆலோசனைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அதேபோன்று,

சம்பா சாகுபடி என்பது முற்றிலுமாகப் போய், குறுகிய கால நெல் சாகுபடியே செய்யப்பட வேண்டுமென்ற ஆலோசனையைப் பெற்றதனுடைய விளைவாகத்தான், இப்போது ஒரு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

105 நாட்கள், 90 நாட்கள் பயிர்களான கருநாடகா பொன்னி, மதுரை-5, ஆடுதுறை-36, கோ-46, ஏசி-10 போன்ற பயிர்கள் எல்லாம் விவசாயம் செய்யப்பட்டிருக்கின்றன. அநேகமாக பெரும்பகுதி விவசாயிகள் இங்கே இருக்கிறார்கள். அதனால், இந்தப் பருவ மழை வந்ததனுடைய விளைவாக, இப்போது முற்றிலுமாக, நீர்நிலையிலே இருந்து அந்தப் பயிர்கள், தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, மீள முடியாத அளவுக்கு நீர் சூழ்ந்து, அழுகிப்போய் இருக்கின்ற மோசமான நிலைமை இப்போது வந்திருக்கிறது. இவையெல்லாம் வேளாண் துறையினுடைய அறிவிப்பின் மூலமாக, உங்களுடைய சிபாரிசின்பேரில் செய்யப்பட்ட விவசாயம்தான். ஆகவே, . . .

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களுடைய நன்மையைக் கருதித்தான், அதைப்போன்ற விதைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நாம் எதிர்பார்க்காத அளவுக்கு, வருண பகவான் பெருமளவுக்கு மழை பொழிவித்த காரணத்தாலே, அந்தவொரு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறியாத ஒன்றல்ல. இது இயற்கையாலே வந்த பாதிப்பேயொழிய, வேளாண் விவசாயப் பெருமக்களுக்குக் கொடுத்த ஆலோசனையால் அல்ல என்பதை நான் உறுதியிட்டு, அறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் கூறியதுபோல, இந்த 105 நாட்கள் உள்ள பயிர்கள் அறுவடை அக்டோபர் first week-லேயே முடிந்துவிடும். குறுவைக்குத்தான் இந்தப் பயிர். இப்போது நட்டு இருப்பது சம்பா பயிர். விவசாயத் துறை எங்கேயும் இந்தப் பயிர்களை சம்பாவுக்கு நட ஆலோசனை வழங்கவில்லை. அவர் கூறியவை குறுவைப் பயிர், அதன் அறுவடை முடிந்துவிட்டது. ஆழ்குழாய்க் கிணறு வைத்திருப்பவர்கள் அந்த நடவை நட்டு அறுவடையை முடித்துவிட்டார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இன்னும் முழுமையாக நம்முடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்கள் கொஞ்சம் பார்த்தால் சௌகரியமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. நான், வேண்டுமென்றால் பின்னர் இதற்கு விளக்கத்தைச் சொல்கிறேன், அதற்கு என்னவென்று பதில் சொல்லுங்கள். இந்தப் பயிர்கள் நீரிலே மூழ்கி அழிந்துபோன காரணத்திற்காகச் சொல்கிறேன். அநேகமாக இவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை, பெரும் கஷ்டத்திற்கு உட்பட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட 1999 ஆம் ஆண்டு வரையிலே கடன் பெற்றவர்களுக்குக் கடனை ஒத்திவைத்து, கடனை வழங்கலாம் என்ற ஓர் உத்தரவைப் போட்டார்கள். ஆனால் 1999-க்குப் பிறகு, 2000-2001, 2002-2003 ஆம் ஆண்டுகளில் கடன் பெற்றிருக்கிற விவசாயிகளில் பெரும்பகுதி பேர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் கிடைக்கவில்லை. அதற்குப் பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நாங்கள் எல்லாம் சொன்னோம். அதற்குப் பின்னால் ஓர் உத்தரவு வந்தது. அநேகமாக, 2003 வரையிலே பெற்றிருக்கிற விவசாயிகள் பெரும் பகுதி பேர்களுக்குக் கடன்கள் நபார்டு வங்கியிலிருந்து வழங்கப்படும். அதை கூட்டுறவுச் சங்கம்மூலமாக வழங்குவதற்கு உத்தரவு கிடைக்கும் என்றெல்லாம் சொன்னார்கள். காலத்தோடு சாகுபடி செய்ய முடியவில்லை என்பதற்கு மிகப் பெரிய தடையாக இருந்தது, கூட்டுறவுச் சங்கத்திலே மறுபடியும் கடன் கிடைக்கவில்லை...

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட வங்கிகளிலே ஒன்றுதான் மாநிலத்திலே செயல்படுகிற கூட்டுறவு வங்கிகள் என்பதை மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் குறித்துக்கொள்ள வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குவற்கான கடமையை ஆற்ற வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்து இருக்கிறார் என்பதை நான் அறிவேன். ஆகவே, கூட்டுறவு வங்கிகள்மூலமாக வழங்கப்பட வேண்டிய பயிர்க் கடனின் அளவு ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திற்கு 53 கோடி ரூபாய்; ஆனால் நேற்றைய தேதி வரையிலே வழங்கியிருக்கிற அளவு 57 கோடி ரூபாய் என்பதை குறிப்பிட்டுக் கூறி, எந்த ஆண்டும் வழங்கப்படாத அளவிலே, இந்த ஆண்டு தமிழகத்தினுடைய கூட்டுறவு வங்கியினுடைய சேவை

விவசாயிகளுக்கு அதிக அளவிலே உள்ளது என்பதை குறிப்பிட்டுச் சொல்லி அமர்கிறேன். நன்றி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முற்றிலுமாக வழங்கப்படவில்லை என்று சொல்லவில்லை. காலங்கடந்து சிலபேருக்கு வழங்கப்பட்டது, சில தகுதியானவர்களுக்குக் கடன் வழங்கப்படவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோதுகூட, நபார்டு வங்கியிலே பெற்றிருக்கிற கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னபோது, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்; மத்தியிலே நீங்கள்தானே ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆகையினால், அவர்களிடத்திலே சொல்லி, கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று இங்கேகூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்தான் சொன்னார்கள். ஆனால், நேற்றையதினம், 21 ஆம் தேதி நம்முடைய வனத் துறை அமைச்சர் தஞ்சாவூரிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே பேசுகிறபோது நபார்டு வங்கி ஒரு ரூபாய்கூட கடன் கொடுக்கவில்லை..(குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நபார்டு வங்கி ஒரு பைசாகூட கடன் கொடுக்கவில்லை, அப்படி மத்திய அரசு...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கிக்கு, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு இந்த வருடம் நபார்டு வங்கி ஒரு பைசாகூட கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை; இப்போதும் சொல்கிறேன். மற்ற வங்கிகளுக்கு நான் சொல்லவில்லை, தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு-மத்திய நிதித் துறை இணை அமைச்சர் திரு. பழனி மாணிக்கம் அடிக்கடி பத்திரிகைக்குச் செய்தி கொடுக்கிறார், ஆனால் அது தவறு என்று மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்துத்தான் பேசினேன். J.R. Co-operative—இணைப் பதிவாளரை வைத்துத்தான் பேசினேன். இதுதான் உண்மை.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிற்பகல் 1-30 மணிக்கு அவையை முடிக்க வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுரையோடு முடிக்க வேண்டும். இன்னும் 3 பேர் பேச வேண்டும்.



**திரு. ஜி. பழனிசாமி:** நிதி அமைச்சர் சொல்வது உண்மையா? வனத் துறை அமைச்சர் சொல்வது உண்மையா? இதில் எது உண்மை என்பதை அவர்கள் விளக்க வேண்டும். நபார்டு வங்கி...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி கடன் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகாலம் ஏற்பட்ட வறட்சியான சூழ்நிலையின் காரணமாக தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து பயிர்க் கடனைக் கொடுத்துக் கொண்டேயிருந்து, விவசாயிகளிடமிருந்து அவற்றைத் திரும்பப் பெறாத காரணத்தால் அந்த வங்கிகள் ரிசர்வ் வங்கி அனுமதித்து இருக்கிற சட்டப்படி, அவை தொடர்ந்து இந்த ஆண்டு செயல்பட முடியாத அளவுக்கு 11 (1) Bank-களாக மாறிவிட்டன. அவற்றை வங்கியியல் நெறிமுறைச் சட்டப் பிரிவு 11 (1)-லிருந்து விலக்களிக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு நபார்டு வங்கி மூலமாக கடிதம் எழுதி உள்ளது. ஆனால் இன்றுவரை அந்தக் கடிதத்திற்குண்டான அனுமதியை, கும்பகோணம் வங்கியும், தஞ்சாவூர் வங்கியும், நபார்டு வங்கி வழங்குகிற கடனைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை ரிசர்வ் வங்கியானது இன்றுவரை வழங்கவில்லை. ஆக தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய வலியுறுத்தலின்பேராலே மாநில அரசினுடைய நிதியிலிருந்து, தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ.20 கோடி என்றும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு 20 கோடி ரூபாய் என்றும் வழங்கப்பட்டதன் மூலமாகத்தான்—அத்துடன் அந்த அந்த வங்கிகளினுடைய—மாநிலத்திலே உள்ள கூட்டுறவு வங்கியினுடைய critical finance முறையின் மூலமாக, நிதியும் சேர்த்து வைத்து, இந்த நிதி ஆதாரங்கள் மூலமாகத்தான் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே கடனானது வழங்கப்பட்டு வருகிறது என்பதனை இங்கே கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பழனிசாமி, இரண்டு மூன்று மணித் துளிகளில் முடித்து விடுங்கள். இன்னும் 3 பேர் பேசவேண்டும். அதற்குப் பின்னர் நிதியமைச்சர் பதில் சொல்லவேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த துணை நிதிநிலை அறிக்கை விவாதத்திலே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. 12.30 மணிக்கு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசினால்தான் முடிக்க முடியும் விவாதத்தை.

**திரு. ஜி. பழனிசாமி:** பேசுங்கள் என்றால் எப்படி பேசுவது. எதற்குப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகத்தான் பேசவேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** சுருக்கமாகத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை. இல்லை. ஒரு வரிகூட சொல்ல முடியவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்தால் விளக்கம் சொல்வார்கள். இல்லையா?

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 40 கோடி என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித் துளியில் முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** கொடுத்ததாகச் சொல்கிறார்கள். தகவல்கள்; சொல்கிற தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே. எவ்வகையான தகவலை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுமாதிரி பேசினீர்கள் என்றால், அப்புறம் அவர்கள் பதில் சொல்வார்கள் அல்லவா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளை மட்டும் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முரணாக உள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார்கள். நான் இதுவரை தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளில் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திற்கு இதுவரை 57 கோடி ரூபாய்க்கு மேலான பயிர்க் கடன்களை மாநில அரசினுடைய கட்டுப்பாட்டில் இயங்குகிற கூட்டுறவு வங்கிகள் வழங்கியுள்ளதாகக் குறிப்பிடுகின்றேன். இவை திட்டவட்டமான உண்மைகள். இந்தப் பணம் முழுவதும் நபார்டு வங்கியில் இருந்து வழங்கப்பட்ட பணம் இல்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியும், 11 (1) வங்கிகளாக உள்ள காரணத்தினால் அவை நபார்டு வங்கிகள் வழங்குகின்ற பணத்தைப் பெறுவதற்கான தகுதியை இழந்துள்ளன. தகுதி இன்மையில் உள்ளன. ஆகவே அவற்றை நீக்க வேண்டிய அதிகாரம் ரிசர்வ் வங்கியிலே இருக்கிறது. ரிசர்வ் வங்கிக்கு வழிகாட்ட வேண்டிய அதிகாரம் மத்திய நிதி அமைச்சரிடம் உள்ளது என்பதை சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அமைச்சர் விளக்கம் சொன்னதற்குப் பிறகு நீங்கள் அடுத்த subject-க்குப் போங்கள். அதிலேயே விவாதம் பண்ணிக்கொண்டு இருந்தால் அப்புறம் எப்படி? அவையினுடைய நேரத்தை அனுமதிக்க முடியாது.

**திரு. ஜி. பழனிசாமி:** பாதிக்கப்பட்டிருக்கிற கூட்டுறவுச் சங்க விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடனை ஒத்திவைப்பதிலே எந்தப் பயனும் இல்லை. அந்தக் கூட்டுறவுக் கடனை முழுமையாக இரத்து செய்து அந்த விவசாயிகளுக்கு நீங்கள் விடுதலை தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நிறைய குடிசை வீடுகள் இன்றைக்கு இடிந்துபோய் இருக்கின்றன. அநேகமாக 1984-லே கட்டப்பட்ட அந்தக் குடிசை வீடுகள் எல்லாம், அரசாங்கத்தால் 6,000 ரூபாயில் கட்டிக் கொடுக்கப்பட்டவை. அந்தக் குடிசைகள் எல்லாம் இன்றைக்கு நீர் சூழ்ந்து, நிறைய இடிந்துபோய் இருக்கின்றன. அந்த வீடுகளுக்கு மாவட்ட நிர்வாகத்தின்மூலமாக நிவாரணம் வழங்குவதில்லை என்று ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அது சரியல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அந்த மாவட்டத்திலே இருக்கிற சாலைகள், சென்ற மாதம் போடப்பட்ட சாலைகள்கூட இன்றையதினம் முற்றிலுமாக சீரழிந்து அது O.D.R. சாலையாக இருந்தாலும் சரி, அல்லது நெடுஞ்சாலையாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருந்தாலும் சரி, முழுமையாக அந்தச் சாலைகள் சீரழிந்து பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, தமிழ்நாடு முழுமையும் இருக்கின்ற மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்குகிற மாதிரி இல்லாமல், டெல்டா மாவட்டத்தில் இருக்கிற அந்தச் சாலைகளுக்கு, சாலை மேம்பாட்டிற்கு உரிய நிதிகளை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். இந்தத் தடவை பெய்திருக்கிற பெரும் மழையின் காரணமாக 4 அடி உயரம் தண்ணீர் உயர்ந்திருக்கிறது. மிகப் பெரிய பாதிப்பு அங்கே உருவாகி இருக்கிறது. ஆகையால் அந்தச் சாலைகளை நீங்கள் சீரமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்வாய்கள் இன்றைக்குப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகின்றன. அங்கே இறால் பண்ணைகள் 7,000 எக்டேரில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. 996 இறால் பண்ணைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தீர்கள் என்றால் பொதுப் பணித் துறையினுடைய கால்வாயிலேயே, கரையிலே போடப்பட்டிருப்பதன் விளைவாக தண்ணீர் காலத்தோடு வடியாததால் ஒரு பாதிப்பு இருக்கிறது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சரே சமீபத்திலே ஒரு நடவடிக்கை எடுத்தார்கள். அது என்ன காரணத்தினாலோ, சமீபத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆறுகள், கால்வாய்கள் தூர் வாருகிற பணியினை எடுக்கிறபோது அநேகமாகப் பார்த்தால் இடத்துக்கு இடம் bit, bit ஆக எடுப்பதனால் வருகின்ற விளைவு இது. ஆற்றினுடைய முகத்துவாரத்திலேயிருந்து அந்தப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். தமிழகத்திலே பெய்திருக்கிற பெருமழையில் இன்றைக்கு 200 டி.எம்.சி. தண்ணீர் கடலுக்குப் போய் சேர்ந்திருக்கிறது. அந்த மாவட்டத்திலே டெல்டா மாவட்டத்திலே, நீர் ஆதாரங்களைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னால், கோட்டகம் போன்ற இடங்களிலே புதிய அணைகளை உருவாக்கி அதற்கான நீர் ஆதாரங்களைச் சேர்த்தோம் என்று சொன்னால் எதிர்காலத்திலே, இதுபோன்ற தண்ணீர் தட்டுப்பாடான காலங்களில் விவசாயம் செய்ய முடியும். அதையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-30

அதைவிட முக்கியமாக உங்களுடைய அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகின்றேன். பொதுவாக ஒரு மனிதர் இறந்துபோனால் அவரைப் புதைப்பார்கள் அல்லது எரிப்பார்கள். ஆனால் தமிழகத்திலே என்ன நடந்தது என்று சொன்னால், எரிக்கப்பட்ட பின்னால் புதைக்கப்படுகின்ற ஒரு சம்பவமும் தமிழகத்திலே நடந்தது. அதற்கு நாடே, இந்தியாவே புழுங்கியது. கும்பகோணத்தில் நடந்த தீ விபத்தில் இறந்த 94 குழந்தைகள் எரிக்கப்பட்ட பின்னால் மீண்டும் புதைக்கப்பட்ட மோசமான நிலைமைகள் தமிழகத்திலே ஏற்பட்டது. இதை யாரும் மறந்துவிட வேண்டாம். அதற்குப் பின்னால்தான் அரசாங்கம் ஓர் உத்தரவைப் போடுவதில் கவனம் செலுத்தியது. கல்வி நிலையங்களிலே இருக்கக்கூடிய கூரைக் கொட்டகைகள் அகற்றப்பட வேண்டும்; உடனடியாகப் பள்ளிக் கட்டடங்களைக் கட்ட வேண்டும் என்பதற்கான ஓர் உத்தரவை அரசு அறிவித்தது. பல இடங்களிலே தமிழகம் முழுமையும் பார்த்தோம் என்று சொன்னால் ஆயிரக்கணக்கான கீற்றுக் குடிசைகள் பள்ளிக்கூடங்களிலே இருந்து அகற்றப்பட்டன. ஆனால், இன்று வரையிலும் அதற்கான கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகையால் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் சம்பவம் நடைபெற்ற பிறகு கூரைக் கொட்டகைகளில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களை உடனடியாக அகற்றி அங்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தக் கட்டடங்கள் தமிழகத்தில் இருக்கின்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று தனியார் பள்ளிகளில் இருக்கின்ற அந்தக் கூரைக் கட்டடங்கள் அகற்றப்பட்டால்தான் அந்தப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்படும் என்ற உத்தரவும் இடப்பட்டு, இன்று அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் தவறான தகவலைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இப்போது பட்டியலைச் சொல்ல நேரம் இல்லை. உங்களுக்கு எந்தெந்த இடங்களில் அப்படியிருக்கின்றன என்று எழுத்துபூர்வமாகக்

கொடுத்திருக்கிறேன். நான் இல்லாத ஒன்றை உங்களிடம் சொல்லவில்லை. உங்களிடம் எழுத்துபூர்வமாகக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது, அங்கொன்றும் இங்கொன்றுமாக கட்டப்படாமல் இருந்தால், அதைச் சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், பொத்தாம் பொதுவாக தமிழகத்திலே கூரைக் கொட்டகைகள் அகற்றப்பட்டு, கட்டடங்கள் கட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார் என்பதற்காகத்தான் கூறுகின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** பல இடங்களிலே, எங்களுடைய மாவட்டத்திலே பெரும்பகுதி இடங்களிலே கீற்றுக் கொட்டகைகள் பிரிக்கப்பட்ட பின்னால் பள்ளிக்கூடம் நடத்தமுடியாமல்கூட, பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டு, இன்னும் பள்ளிக்கூடம் நடத்தப்படவில்லை. திருத்துறைப்பூண்டியிலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இன்றுவரையிலே நடத்தப்படவில்லை. நேற்றுதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பட்டியல் இருந்தால் அந்தப் பட்டியலை அமைச்சரிடம் கொடுங்கள். எங்கே அந்த மாதிரி இருக்கிறது என்ற பட்டியலை அமைச்சரிடம் கொடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** கொடுத்துவிட்டேன். நான் அமைச்சரிடம் கொடுத்துவிட்டேன். அதற்கெல்லாம் உரிய நிதி உதவியைக் கொடுத்து கட்ட வேண்டியதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை இன்னும் ஒரு மணித் துளியில் முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தது சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேர், உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இதுவரையிலும் அரசு அவர்களை சாலைப் பணியாளர்களாக நியமிக்கவில்லை. பல்வேறு அறிவிப்புகளை அறிவித்துக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு அந்தச் சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேர்களையும் பணியில் அமர்த்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன். (குறுக்கீடு) முடிந்து போய்விட்டது. இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிறது.



**திரு. ஜி. பழனிசாமி:** நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில், இரண்டு, மூன்று முக்கியமான கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் முன்வைக்க விரும்புகிறேன். நேரம் கருதியும், தலையீடுகள் கருதியும், நான் பிரச்சினைக்குரியவற்றை முதலிலேயே சொல்லிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அதிலே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், தலையீடு இல்லை. விளக்கம். உங்கள் மேலே அக்கறை இருக்கின்ற காரணத்தினாலே அமைச்சர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அதைத் தலையீடு என்று தவறாகக் கருதக்கூடாது.

**திரு. கே.சி. கருணாகரன்:** விளக்கம் பயனுள்ளதாக இருக்குமானால், எங்களுக்குத் தனிப்பட்ட முறையிலே எந்த இலாபமும் இல்லை. நாட்டு மக்களுக்குத்தான் அது போய்ச் சேரும். ஆகையினாலே, இந்த சாலைப் பணியாளர்கள் சம்பந்தமான பிரச்சினையிலே கடைசியாக திரு. பழனிசாமி அவர்கள் வலியுறுத்தியதை நான் அழுத்தமாக வலியுறுத்துகிறேன். இந்த அரசு மிக நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறது. அரசு ஊழியர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து, அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அரசு நடவடிக்கையின்மூலமாகவும், போராட்டத்தின்மூலமாகவும் 15,000 புதியவர்களுக்கு, புனர் வாழ்வு, புதிய வாழ்வு கிடைத்திருக்கிறது. அரசுக்கு நன்றி. ஆனால், 10,000 சாலைப் பணியாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. நாங்கள் மன்றாடி இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, குறிப்பாக, முதல்வரையும், நிதியமைச்சரையும் பணிந்து கேட்டுக்கொள்வது, தயவுசெய்து, Supreme Court-ல் appeal-க்குப் போகாதீர்கள். சட்டத்தின் ஆட்சியைக் கறாராக அமல் நடத்துகின்ற இந்த அரசு, சாலைப் பணியாளர்களின் வாழ்வுக்கு வழி வகுத்திருக்கிற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தயவுசெய்து அமலாக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி, சென்னை மாநகரத்தை ஒட்டியிருக்கும் பகுதிகளிலே சாலைகளைப் புதுப்பிக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். இந்த மழையின் காரணமாக மாநிலம் முழுவதிலும் நெடுஞ்சாலைத் துறையினுடைய பல்வேறு ஊரகச் சாலைகள், இதர சாலைகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவை அனைத்தையும் புதுப்பிப்பதற்கு, செப்பனிடுவதற்கு, நடவடிக்கைக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதேமாதிரி, சாலைகளின் வேலைகள் முடிந்து, தரத்தை தயவுசெய்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆறு மாதங்கள்கூட தாங்காத நிலையில் போடப்பட்ட புதிய சாலைகள் பெயர்ந்து போகிறது, மழையின் காரணமாக அல்ல, தரக்குறைவின் காரணமாக. இன்னும் சொல்லப் போனால் ஊழல் குற்ற நடவடிக்கைகளின் காரணமாக. இவை. . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை இந்தப் பேரவையில் விளக்கம் அளித்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற சாலையைப்பற்றி ஏற்கெனவே என்னிடம் கடிதம் கொடுத்திருக்கின்றார். அதுபற்றி நான் விசாரிக்கக் கூறியிருக்கின்றேன். தமிழ்நாட்டின் சாலைகளுடைய தரத்தைப்பற்றி எந்தவித புகாரும் யாரும் இதுவரை கூறவில்லை. தரமான, உறுதியான சாலைகள் அனைத்துப் பகுதிகளிலும் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சாலையும் போடப்படுகின்றபோது, மூன்று முறைகள் நாம் அதன் தரத்தினுடைய ஆய்வை மேற்கொண்ட பிறகுதான் அடுத்த கட்ட பணியையே தொடங்குகின்ற சூழ்நிலையில் இன்றைக்குத் தமிழகம் எங்கும் அனைத்துச் சாலைகளும் தரமான சாலைகளாகவும், உறுதியான சாலைகளாகவும் போடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நன்றி. உண்மையில் நீங்கள் இலாகாபூர்வமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டால் பல உண்மைகள் வெளியே வரும். நீங்கள் நடவடிக்கை எடுக்க அது போதுமானதாக இருக்கும் என்பதை மாத்திரம் அந்த விஷயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல, சுகாதாரப் பிரச்சினையிலே அரசு பொது மருத்துவமனைகள், ஆரம்ப நடுத்தர சுகாதார நிலையங்கள் போன்றவற்றுக்கு நியமனம் செய்யப்பட வேண்டிய காலியிடங்களை நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கோவை அரசுப் பொது மருத்துவமனையிலே M.R.I. Scan வசதி, இதய மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை வசதிகள் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அது உடனடியாக முடியவில்லை என்றாலும் இது நீண்டகால கோரிக்கையாக இருக்கிறது. அதைச் செய்ய வேண்டும். பிணவறையில் ஏசி. வேலை செய்வது கிடையாது. அதாவது போதுமான அளவுக்கு இல்லை. புதிய ஏசி. பொருத்த வேண்டும் என்ற கோரிக்கை அங்கிருந்து வருகிறது.

அதேபோல, கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்காகவும் நிதியை மருத்துவத் துறை மருத்துவமனைகளுக்கு அரசாங்கம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, கல்வித் துறை சம்பந்தமாக கும்பகோணத்தில் ஏற்பட்ட தீ விபத்திற்குப் பிறகு கூரைகளைப் புதுப்பிப்பது சம்பந்தமான பிரச்சினை மாத்திரம் அல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிக்கூடங்களின் கட்டுமானப் பணிகளுக்காக, புதுப்பிக்கும் பணிகளுக்காக - அவை சிதிலம் அடைந்திருக்கின்றன; அவற்றை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமாக நாம் ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்கிறோமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 நிதியாண்டிலே தமிழகத்தில் இருக்கின்ற 4,246 பள்ளிகளிலே 10,043 புதிய வகுப்பறைகள் ரூபாய் 134 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டிலே கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கின்ற அரசுப் பள்ளிகளிலும் பராமரிப்புக்கும் செப்பனிடுவதற்கும் இந்த நிதியாண்டிலே 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் நபார்டு நிதியுதவியுடன் நடப்பாண்டில் 250 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலே ரூபாய் 83 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், மற்ற இதர அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நன்றி.

இப்போது தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாடெங்கிலும் பல துறைகளில் பல வழிகளில் பல முறைகளில் பல நோக்கங்களுக்காக விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. எங்களுடைய மார்க்சிஸ்ட் கட்சியின் வேண்டுகோள் என்னவென்று சொன்னால், நீதிமன்றங்களிலே குறைந்தபட்சம் சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளை உயர் நீதிமன்றம் போன்றவற்றிலாவது அனைத்து வழக்கு மன்ற நடவடிக்கைகளையும் தமிழிலே செய்வதற்குப் போதிய நடவடிக்கைகளை மாநில அரசு செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, வெள்ள நிவாரண நடவடிக்கைகளிலே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பயிர்க் கடன்களையோ இதர உதவிகளையோ இன்னும் கூடுதலாக வழங்கி, காவிரி டெல்டா பகுதி மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அரசை நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, கடந்த 20-10-2004 ஆம் தேதியன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தையின் இறுதியிலே முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையிலே ஓய்வூதியம் இல்லாப் பணிகளைச் சார்ந்த சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், ஆயாக்கள், சமையலர், உதவியாளர்கள் போன்றவர்களுக்குச் சில சலுகைகள் வழங்கிட வேண்டுமென்று கோரப்பட்டது; இந்தக் கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு அறிவிப்புகள் தனியே வெளியிடப்படும் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு அறிவிப்புகள் சேர்ந்து வந்தன. ஒன்று இந்தப் பள்ளிக்கூட நேரம் சம்பந்தமாக. அது நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டு இன்றிலிருந்து பள்ளி நேரம் மாறுதல் அறிவிக்கப்பட்டு இன்று அமலுக்கு வந்திருக்கிறது. எங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதோடு இணைந்த பிரச்சினைதான்; இந்த சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுடைய பிரச்சினைகளை, கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலித்து உரிய அறிவிப்பு வெளியிடப்படும் என்று சென்ற மாதம் 20 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.



*பிற்பகல் 12-40*

அதேமாதிரி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டத்தின் ஆட்சியை நிலைப்படுத்துவதற்காக, அது சந்தன மரமானாலும், சங்கர மடமானாலும் இந்தச் சர்க்கார் உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்று எடுத்திருக்கிறீர்கள். கிரிமினல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு உயர்ந்த நிலையிலே இருந்தாலும் அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எடுத்ததை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை மதப் பிரச்சினையாக மாற்றுவதற்கும், அரசியல் பிரச்சினையாக மாற்றுவதற்கும் எடுக்கும் முயற்சிகளைத் தடுக்கும் நடவடிக்கைக்கும் இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கட்சியின் சார்பாக அழுத்தமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஏன் என்று சொன்னால் சங்கரராமன் அவர்கள் கூலிக் கொலையாளிகளின்மூலம் வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாத அளவிற்குக் கொடூரமாய்க் கொல்லப்பட்டிருக்கிறார். இறந்துபோன அந்த ஆன்மீக குருவின் மீதோ அல்லது இந்து மதத்தைச் சார்ந்த அந்த அப்பாவி மனிதனின்மீதோ—இந்து சமயத்தையோ, இந்து மதத்திற்காக நிற்கிறோம் என்று சொல்கின்ற பி.ஜே.பி—யோ, விஷ்வ இந்து பரிஷத்தோ இது வரைக்கும் குரல் கொடுக்கவில்லை. மாறாக இதிலே சம்பந்தப்பட்டவர்கள் — — வழக்கு மன்றத்திலே இருக்கிறது. நான் அந்த வழக்குகளுக்குள் போகக் கூடாது, போகவும் நான் விரும்பவில்லை. ஆனால் யாராக இருந்தாலும், அவர்கள் மீது குற்றம் என்று நிரூபிக்கப்பட்டால், அந்தக் குற்ற வழக்கிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான், தண்டிக்கப்படுவதுதான் இந்து மதத்திற்கே நாம் செய்யும் சேவையாகும் என்பதைச் சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டிற்குரிய துணை நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழகத்தில் அமைந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி பாண்டிச்சேரி உள்பட, தமிழகம்

உட்பட, மொத்தம் 40 தொகுதிகளிலும் மகத்தான வெற்றியைப் பெற்று இதுவரையிலும் வரலாற்றிலே இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டிற்கு 12 மத்திய அமைச்சர்கள் கிடைக்கப்பெற்று, அந்த மத்திய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இங்கே சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நான் முதலிலே சொல்ல விரும்புகின்றேன். அதிலும் இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்குத் தலைமையேற்று இருக்கிற மரியாதைக்குரிய அன்னையார் சோனியா காந்தி அவர்கள் தன்னை இந்த நாட்டினுடைய உயர்ந்த பதவியான பிரதமர் பதவி தேடி வந்த நேரத்திலேகூட நான் பிறந்த நாடு இத்தாலியாக இருந்தாலும், புகுந்த வீடு இந்தியா, இந்தியா என் நாடு, இந்தியர்கள் என்னுடைய சகோதரர்கள், சகோதரிகள் என்ற உணர்விலே அந்தப் பதவியை தூக்கி எறிந்துவிட்டு, பதவியைவிட நாடுதான் முக்கியமானது என்று சொல்லி இன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைப்புக்குத் தலைமையேற்று தமிழ்நாட்டிலே மகத்தான காரியங்களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கொஞ்சம் துணை நிதிநிலை அறிக்கைக்கு வாருங்கள். ஏனென்றால் நேரம் மிகவும் குறைவு. பொதுக் கூட்டங்களில் பேசுகிற ஞாபகத்திலேயே பேசுகிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, பொதுக் கூட்டமாக அல்ல..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இது துணை நிதிநிலை அறிக்கை. பத்து மணித் துளிகள்தான் இருக்கிறது. ஏனென்றால் திரு. எஸ்.ஆர்.பி. பேச வேண்டும். நீங்கள், அவர்கள் தலைமையை வாழ்த்திப் பேசினால், அவர் மகிழ்ச்சியடைவார்.

**திரு. ஜி.கே. மணி:** சென் வாட் வரியை நீக்கியிருக்கிறார்கள். பொடா சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது. பிறகு திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவிலுக்கு 250 மருத்துவ இடங்கள், பிறகு வருமான வரிவிலக்கு உயர்த்தி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பாராளுமன்றத்திலே அந்தத் தகவலைக் கேட்டுக்கொள்வார்கள். நீங்கள், இங்கே வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆக, அந்த அளவிற்கு மத்திய அரசு செய்து கொண்டிருக்கிற இந்தச் சாதனைகளை நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே.(குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, துணை நிதிநிலை அறிக்கையிலே என்ன இது? (குறுக்கீடுகள்) 10 மணித் துளிகள்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. மணி, பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-45

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மணிக்கணக்கிலே பேசுவார்கள், மணிக்கணக்கிலே பேசிக் கொண்டிருப்பார்கள். எதிர்க்கட்சி வரிசையிலே நாட்டுக்கு முக்கியமான பிரச்சினை, நடவடிக்கைகளை, நிகழ்வுகளைச் சொல்வதற்கு நேரமில்லை என்றெல்லாம் பேசிக்கொண்டு இருக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் பேச வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** இது சட்டமன்றமா, ஆளும் கட்சிக்கு மட்டும் மன்றமா? (குறுக்கீடுகள்) ஆளும் கட்சிக்கு மட்டும்தான் என்றால் சொல்லுங்கள், நாங்கள் வெளியிலே போய்விடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, கொஞ்சம் கேளுங்கள். ஜி.கே. மணி அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையின்மீது நம்முடைய கருணாகரன் பேசியதைப்போல, பழனிசாமி பேசியதைப்போல, சொல்லவேண்டிய கருத்துகளை நீங்கள் சொல்லி முடித்துவிட்டால் போதும். ஏனென்றால், இந்தப் பீடிகையோடு நீங்கள் ஆரம்பித்தால், நீங்கள் சொல்லவேண்டிய கருத்து வருகிறபோது நான் மணியடிக்க வேண்டிய நிலைமை இருக்கும். அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** அதாவது. துணை நிதி நிலை அறிக்கையிலே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுங்கள். எனக்கு அதிலே ஆட்சேபனையில்லை.

**திரு. ஜி.கே. மணி:** என்னைத் தவிர, துணை நிதி நிலை அறிக்கையிலே ஆளும் கட்சி வரிசையிலே எதுவுமே பேசவேயில்லைங்களா? இதற்கு முன்னாலே, இந்த மன்றத்திலே பேசவில்லையா ஆளும் கட்சியிலே? எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து மணித் துளிகள் நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) பேசுங்கள், நீங்கள் பேசுங்கள். பத்து மணித் துளிகள் முடிந்த உடனே நான் அடுத்தவரை அழைப்பேன்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, பத்து மணித் துளியிலே பேச முடியாது. அப்படிப் பேசவேண்டுமென்றால் வெளியிலே போய்விடுகின்றேன். முடித்துவிட்டு. பத்து மணித் துளியிலேயெல்லாம் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அப்படியெல்லாம், பேரவைத் தலைவரை மிரட்டக்கூடாது. பேரவைத் தலைவருக்கு நிபந்தனை விதிக்கக்கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** நிபந்தனை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து மணித் துளிகள்தான் கொடுக்க முடியும். ஒரு மணிக்கு எஸ்.ஆர்.பி. அவர்கள், பேசி முடித்தால்தான் நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்ல முடியும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாட்களையும் குறைத்துவிடுகிறீர்கள். எதிர்க்கட்சியில் ஒரு நபருக்கு, ஒருவருக்குக்கூட பேசுவதற்கு அனுமதியில்லை. பத்து நிமிடங்கள்தான் பேசவேண்டுமென்றால் எதற்குச் சட்டமன்றம்? தேவையில்லை சட்டமன்றமே. அதுவும் பேசவேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றம் என்பது சுருக்கமாகப் பேசுவதற்குத்தான்.

**திரு. ஜி.கே. மணி:** பேசும்போதே தடை, பத்து நிமிடம்தான் பேசவேண்டும். பிறகு பேசவே கூடாது. எதிர்க்கட்சி வரிசையிலே ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேசவேண்டும். என்ன நியாயம் இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உங்களுக்கு மட்டுமல்ல. பழனிசாமியும் அப்படித்தான் பேசி முடித்தார். கருணாகரன் அப்படித்தான் பேசி முடித்தார். அதே கட்டுப்பாடுதான்.

**திரு. ஜி.கே. மணி:** இப்பொழுது துணை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது திட்ட மதிப்பீடு மொத்தம் ரூ.8001.08 கோடி. இதிலே, கடந்த ஆறு மாதத்திலே, 30-9-2004 வரையிலே செலவிடப்பட்டதாகச் சொல்வது ரூ.2882.90 கோடி. அதாவது 36.03 சதவிகிதம் என்று சொன்னால், அப்பொழுது 50 சதவிகிதம்கூட இல்லை.



50 சதவிகிதம்கூட திட்ட மதிப்பீட்டிலே நிறைவேற்றவில்லை என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையிலே எங்கேயிருக்கிறது? இதை முதல் மாநிலமாக எப்படிக்கொண்டு வரமுடியும்? உதாரணத்திற்கு, இங்கே பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு, இதிலே ரூ.539.53 கோடி என்று சொல்லிவிட்டு, செலவிடப்பட்டிருப்பது ரூ88.01 கோடி, 16.31 சதவிகிதம்தான். இப்பொழுது எங்கே பார்த்தாலும் வெள்ளச் சேதம். அங்கே சாலைகள் செப்பனிடப்படாத நிலை. அங்கே வாய்க்கால், ஏரிகளெல்லாம் தூர்வாரப்படாத நிலை. எப்படியிருக்கும்? செலவே செய்யவில்லை. திட்ட மதிப்பீட்டிலே பாதி matching grant.......

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு, திட்ட ஒதுக்கீடு என்று ஒரு நிதி இருக்கும். செலவு என்ற கணக்கு ஒரு தலைப்பில் வரும். இந்த மாதம் திட்டப் பணி முன்னேற்றத்தினுடைய செலவு அடுத்த மாதம்தான் வரவுக் கணக்கில் வரும். ஆக, குறிப்பிட்டு நான் சொல்ல வேண்டுமென்றால், பொதுப் பணித் துறையில் ஏரிகள் பராமரிப்பிற்காக 65 சதவிகிதம் நாம் திட்டப் பணிகளை முடித்திருக்கின்றோம் இந்த மாதம் முடிய. ஆனால், அதனுடைய செலவுகளைக் கணக்கெடுக்கும்போது 35 சதவிகிதம்தான் வரும். அதனுடைய கணக்கு அடுத்த மாதக் கணக்கிலேதான் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.522.51 கோடி. அதிலே செலவழிக்கப்பட்டது 12.52 சதவிகிதம். அதாவது ஆறு மாதத்திற்குள்ளே இவ்வளவுதான். அடுத்த மாதம் வரும், நான் ஒத்துக்கொள்கிறேன். ஆறு மாதத்திலே பாதிகூட நிறைவேறவில்லையென்று சொன்னால், அடுத்த ஆறு மாதத்திலே அந்தத் திட்ட மதிப்பீட்டை எப்படி நீங்கள் எய்த முடியும்? இப்படி இருந்தால் தமிழ்நாடு வளர்ந்த மாநிலமாக, வளர்ச்சியடைந்த மாநிலமாக நிச்சயமாக வரமுடியாது என்பதை இங்கே நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே என்னுடைய தொகுதி பற்றி சொல்ல வேண்டும். என்னுடைய தொகுதி உள்ளடங்கிய தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் மற்றும் சேலம்—இந்த மாவட்டங்களிலே எல்லாம் மழையே இல்லை. ஒரு பக்கம் வெள்ளச் சேதம். இன்னொரு பக்கம் வறட்சி தொடர்ந்து

நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, வறட்சி நிவாரணப் பணியை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறைந்த அளவு அந்த மாவட்டத்திலே மழை பெய்த நேரத்திலேகூட அந்தப் பஞ்சப்பள்ளி வாய்க்கால் ஏரி நிரம்பி, நீர் வீணாகச் சென்றுகொண்டிருக்கிறது. அந்தப் பஞ்சப்பள்ளி வாய்க்காலிலே உபரி நீர் வீணாகச் சென்றுகொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலேயிருக்கின்ற 18 ஏரிகளுக்கு நீர்வரத்தைக் கொடுக்கக்கூடிய அந்தப் பஞ்சப்பள்ளி வாய்க்காலை செப்பனிட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிருஷ்ணகிரி மாவட்டம் இப்பொழுது தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்ட நிலையிலும்கூட தருமபுரி மாவட்டத்திற்குண்டான வேலைவாய்ப்பு அலுவலகம், நீதிமன்றம், நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் போன்ற பல்வேறு அலுவலகங்கள் இன்னும் அங்கேயே இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவை தருமபுரி மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பார்த்தீர்கள் என்றால் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே எல்லாம் நிலத்தடி நீரிலே fluorosis என்ற நச்சுத்தன்மை அதிகமாக இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்காக, குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பல முறை கோரிக்கை விடுத்தும்கூட நிலுவையிலே இருக்கிறது. அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல்லைப் பார்த்தீர்கள் என்றால், குறைந்த அளவு செலவில் நிறைவான மின் உற்பத்தியைப் பெறுவதற்கு அங்கே நீர் மின் திட்டத்தைக் கொண்டு வரலாம். அதற்கு நல்ல சூழ்நிலையிருக்கிறது. நீண்ட நாளைய கோரிக்கையான இந்த ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்குமான பிரச்சினை, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி. அந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொடுத்துவிட்டு, இதிலே



நீங்களே குறியீடு, இலக்குகளை நிர்ணயித்து இப்படித்தான் செலவு பண்ண வேண்டுமென்றால், அந்தத் தொகையே தேவையில்லாத ஒன்று. ஆரம்பத்திலே இந்தச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி கொண்டு வரப்பட்டதனுடைய நோக்கம், அங்கே தீர்க்கப்படாத பிரச்சினைகள், நீண்ட நாள் நிறைவேற்ற முடியாத வேலைத் திட்டங்களைச் செய்வதற்காக, அவசரத் தேவைக்கு ஒதுக்கப்பட்ட நிதி. அதிலே, இதைத்தான் செய்ய வேண்டும், இதைச் செய்யக் கூடாது என்று சொன்னால், அந்த நிதியே தேவையில்லை. அதை அரசாங்கமே எடுத்துக்கொண்டு நீங்களே நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வெள்ள நிவாரணம். இந்த வெள்ள நிவாரணப் பணிகளைச் செய்கின்ற அதே நேரத்தில், எல்லா உறுப்பினர்களும் சொன்ன மாதிரி, இந்தக் கூட்டுறவுக் கடன், விவசாயிகளுக்கு நிபந்தனையில்லாமல் கூடுதலாகக் கடன் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குப் பள்ளிகளில் கல்விதான் ரொம்ப முக்கியம் என்று சொல்கிறோம். அரசாங்கம் இப்போது பணியிடங்களை நிரப்புவதாக சொல்லிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, ஆரம்பப் பள்ளிகளில், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரிகள் வரையிலே ஆசிரியர் பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருக்கின்றன. ஆகவே, அந்த ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஓராசிரியர் பள்ளியே கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைப் பணியாளர்கள் பிரச்சினையையெல்லாம் சொல்லியாகிவிட்டது. உயர் நீதிமன்றமே சொன்ன பிறகும், காலம் தாழ்த்தாமல் அந்தச் சாலைப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். மக்கள் நலப் பணியாளர்கள், ஊட்டச் சத்துப் பணியாளர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு வேலைவாய்ப்புக்குத் தடை என்ற உத்தரவை பிறப்பித்து, ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரையிலே அந்த ஆணையை விலக்கிக்கொள்ளவில்லை. விலக்கிக்கொள்ளாமல் இருக்கின்ற அந்த உத்தரவை நீங்கள் திரும்பப் பெற வேண்டும். உடனடியாக திரும்பப்

பெற வேண்டும். இது படித்த இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் கொடுக்கக்கூடிய ஒரு கருப்புச் சட்டமாக அமைந்திருக்கிறது. குறுக்கீடு படித்தவன் வேலைக்கே போக முடியவில்லை. பிறகு, இதைக் கருப்புச் சட்டம் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்ல முடியும்? நீங்கள் எல்லாம் கருணைகூர்ந்து இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்று படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். உதாரணத்திற்கு தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை 54 இலட்சம் பேர். அதிலே பெண்கள் மட்டும் 17 இலட்சம் பேர். ஆகவே, இன்னும் கூடிக்கொண்டே போகிறது. மொத்தம், இந்தியா முழுவதும் பதிவு செய்தவர்களுடைய எண்ணிக்கை 4.05 கோடி. அதிலே தமிழ்நாட்டிலே மட்டும் 54 இலட்சம் பேர். இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் சராசரியாக எட்டில் ஒரு பங்கு. இந்தியா முழுவதும் எட்டு பேருக்கு வேலையில்லையென்று சொன்னால், தமிழ்நாட்டிலே எட்டில் ஒருவருக்கு. அப்போது வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகம். தமிழ்நாடுதான் இதில் முதலிடம். ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர் நீதிமன்றங்களில், எல்லா நடவடிக்கைகளும்— விசாரணை, தீர்ப்பு, விவாதம் எல்லாமே தமிழில் இருக்க வேண்டும். இது பல தரப்பிலே கோரிக்கை வந்தாலும்கூட — உதாரணத்திற்கு உத்தரப் பிரதேசத்திலே, மேற்கு வங்காளத்திலே எல்லாம், அந்தந்த மாநில மொழியிலே இருக்கிறது. ஆகவே, நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திலும், மதுரை கிளையிலேயும் இந்தத் தமிழ், நடவடிக்கை மொழியாக வருவதற்கு தமிழக அரசு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது செலவைக் குறைக்க வேண்டும், சிக்கன நடவடிக்கை என்று சொல்கிறோம். நம்முடைய அதிகாரிகள், தமிழக அரசினுடைய அதிகாரிகள் டெல்லிக்குப் போகிறார்கள். இப்போது ஐதராபாத்திற்கு போனார்கள் தனி விமானத்திலே. ஆகவே, இப்படித் தனி விமானத்திலே போகக்கூடியதெல்லாம் செலவைக் கூடுதலாக்கும். அதனையெல்லாம் நீங்கள் ஒத்திவைத்து சிக்கன நடவடிக்கையைக் கையாள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் படித்தவர்கள், வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை ரொம்ப அதிகமாகப் போய்க் கொண்டே இருக்கிறது. இந்தச்



சூழ்நிலையிலே இன்றைக்குத் தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்பது காலத்தின் கட்டாயம். தனியார்மயம், தாராளமயம், உலகமயம் ஒரு பக்கம். வேலைவாய்ப்பே இல்லை. வேலைவாய்ப்பு இல்லையென்று சொன்னால், அந்தப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட படித்த இளைஞர்கள் வேலைக்குச் செல்வதற்கு தனியார் துறை இட ஒதுக்கீடு மிக மிக அவசியமானது. அதில் நீண்ட விளக்கம் எல்லாம் கொடுக்கவேண்டும். இந்தத் தனியார் துறையில் இட ஒதுக்கீடு பற்றி மத்திய அரசு சொல்லிக்கொண்டிருக்கிறது; மராட்டிய மாநிலத்தில் உத்தரவிட்டு நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். ஆனால், தமிழக அரசினுடைய நிலைப்பாடு என்ன? இதைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்கிறீர்களா, இதில் உடன்பாடு இல்லையா என்பதை அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அடுத்து, இந்தத் தமிழ்நாட்டில் படித்தவர்கள் மத்தியிலே விழிப்புணர்வு, பாமர மக்கள் மத்தியிலே விழிப்புணர்வு, ஒவ்வொரு தனி மனிதனும் சமூக நீதி பெற்று வாழ வேண்டும் என்று சமூக நீதிக்கு வித்திட்ட, இங்கே மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்திய, எல்லா தரப்பு மக்களும் ஏற்றுக்கொண்ட தந்தை பெரியார் பிறந்த தினத்தை, சமூக நீதி தினமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இங்கே வைக்கிறேன்.

*பிற்பகல் 12-55*

அதைப்போல, இங்கே நாமெல்லாம் சட்டமன்றத்திலே பேசிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அதற்கெல்லாம் காரணம் கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்தான். தமிழகத்திலே கல்விக் கண்ணைத் திறந்தவர். ஆகவே, காமராஜர் பிறந்த தினத்தை கல்வி தினமாக அறிவிக்க வேண்டுமென்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விளம்பரப் பலகைகள் எல்லாம் தமிழிலே இருக்க வேண்டும். விளம்பரப் பலகை, விலைப் பட்டியல் எல்லாம் தமிழில் இருக்க வேண்டும் என்ற அரசு ஆணையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அறிவிப்பு வெளியிட்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்துவதிலே தாமதம்

ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை நீங்கள் விரைவாக முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, பெரியார் பிறந்த மண் தமிழ்நாடு. இட ஒதுக்கீட்டிலே இன்னும் இங்கே நிறைய குளறுபடி, கோளாறெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலேகூட அங்கே சரியான இட ஒதுக்கீடு இருக்கிறது. இங்கே பெருமைக்குரிய சமுதாயங்களான நாடார் சமுதாயம், கொங்கு வேளாள கவுண்டர், ரெட்டியார், முதலியார், செட்டியார், இவர்கள் எல்லோருமே இட ஒதுக்கீட்டு முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று —— எல்லா சமுதாயத்து மக்கள் மத்தியிலேயும் அந்தக் கோரிக்கை பரவலாக வந்துகொண்டிருக்கின்றது. ஜாதியைப் பேசுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இங்கே ஜாதியின் பெயரால் சலுகைகள் வழங்கக்கூடிய இந்த நாட்டிலே ஜாதிவாரியாக இட ஒதுக்கீடு கொடுப்பதிலே தவறு இல்லை. ஆகவே, ஜாதிவாரியாக மக்கள் கணக்கெடுப்பு நடத்தி தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையிலே — — இப்பொழுது இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டு முறையை மாற்றி அமைத்து —compartmental reservation என்று சொல்லக்கூடிய அந்தத் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை வந்தால்தான் எல்லா சமுதாயத்திற்கும் உரிய பங்கு கிடைக்கும் என்ற வகையிலே அந்தத் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையை நாம் அமலாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள், மணி.

**திரு. ஜி.கே. மணி:** நான் முடித்துவிடுகிறேன். அதேநேரத்திலே, இந்த TNPSC-யிலே பணி நியமனங்களுக்குத் தடை என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலே உறுப்பினர் நியமனம் தேவையா? தேவை இல்லை. இந்த நேரத்திலே அப்படி நியமனம் செய்யக்கூடிய நேரத்திலேகூட மிகப் பெரும்பான்மை மக்களாக இருக்கிற வன்னியர் சமுதாயத்திலே ஒருவரைக்கூட அங்கே நியமனம் செய்யவில்லை என்ற அந்த வேதனையான கருத்தை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது உண்மையான சமூக நீதி ஆகாது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. *(குறுக்கீடு)* முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அடுத்து, 9, 10, ப்ளஸ் 1, ப்ளஸ் 2 வகுப்புகளிலே பாடச் சுமை மிகக் கடுமையாக இருக்கிறது. குழந்தைகள் எல்லாம் படிக்க முடியவில்லை. கேட்டால் -I.I.M., I.I.T.- ஆகியவற்றுக்குத் தேர்வு பெறுவதற்காக பாடச் சுமை கடுமையாக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. இருந்தாலும்கூட தாழ்த்தப்பட்ட சாதாரண குழந்தைகள், மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுடைய குழந்தைகள் அதில் தேர்ச்சி பெறுவது கடினம். அந்தப் பாடச் சுமை கடினமாக இருந்தால், தேர்ச்சி பெறவே முடியாது. 9-வதிலே தேர்ச்சி பெறவில்லை என்று சொன்னால், தொடர்ந்து படிப்பதையே நிறுத்திவிடுகிறான். படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, இந்தப் பாடச் சுமைகளை. . . *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. *(குறுக்கீடு)* இல்லை, இல்லை, வேண்டாம். அவ்வளவுதான். நேரம் அவ்வளவுதான் இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் அவ்வளவுதான் இருப்பதால் என்ன செய்ய முடியும்? உட்காருங்கள். மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையின்முன் வைக்கப்பட்டிருக்கின்றன. *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** நேரத்தைக் குறைத்து, நாட்களைக் குறைத்திருக்கிற இந்த நடவடிக்கையைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நல்ல உத்தி இது. வெளியிலே போய்விட்டு வந்து, பேசிவிட்டு, கிளம்பிப் போவது நல்ல உத்தி.

[2004 நவம்பர் 22

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இரண்டாவது துணை மதிப்பீடுகள் மீதான நிதி அமைச்சரின் உரையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 21 துறைகளுக்கான கூடுதல் செலவுகளுக்குக் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தாலும், நிதியமைச்சருடைய உரையில் 7 கோரிக்கைகள் மட்டுமே இடம்பெற்றிருக்கின்றன. விரிவான துணை மதிப்பீடுகளைப் பார்க்கின்ற நேரத்தில், 28 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. அதில் பழைய ஹெலிகாப்டருக்குப் பதிலாக புதிய ஹெலிகாப்டர் வாங்குவது என்பது ஒன்று. இரண்டாவது Cessna விமானத்திற்குத் தேவையான மின்னணு சாதனங்கள் நிலையை உயர்த்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மழை, வெள்ளம் அதிகமாக இருந்ததன் காரணமாக சாலைகள் எல்லாம் பழுதுபட்டிருக்கின்றன. அதனாலே அதையெல்லாம் பார்க்க ஹெலிகாப்டர் தேவைதான். இதில் Cessna விமானத்திற்கு எவ்வளவு தேவை, ஹெலிகாப்டருக்கு எவ்வளவு தேவை என்பதை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வளவு முக்கியமான அவசரமான செலவு குறித்து நிதியமைச்சர் உரையில் குறிப்பிடப்படாதது ஏன் என்றே எங்களுக்கு விளங்கவில்லை.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு கூடுதல் மானியம் கோரப்பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியத்தின் நோக்கங்களுக்கு விரோதமாக பல நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. வாரியம் கட்டிய வீடுகளில் ஏராளமான வீடுகள் விற்க முடியாமல் இருப்பதாகவும், பல்வேறு சீர்கேடுகளினால் வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. குறைந்தபட்ச போனஸ்கூட வழங்கப்பட முடியாத நிலை...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் எல்லாம் விற்கப்படவில்லை. அதனால் வாரியத்திற்குப் பெரும் இழப்பு இருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அறிவுரையின்படி பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, கடந்த மாதம்கூட விற்பனை உத்தியிலே, ஏறக்குறைய 24 கோடி ரூபாய் வசூலாகப் பெற்றிருக்கின்ற நிலையை இப்போது வாரியம் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பட்ட பல்வேறு வீடுகளுக்கு இன்றைக்கு



2004 நவம்பர் 22] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

விலைகளை எல்லாம் குறைத்து எந்த வகையிலே விற்பனை செய்ய முடியும் என்ற நடவடிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்ததன் காரணமாக சிறப்புடைய வகையிலே வீட்டு வசதி வாரியம் உயர்ந்த நிலையிலே இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குடியிருப்புகளின் வாடகை பல மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. நியாயமான வாடகை, fair rent வசூலிப்பது கைவிடப்பட்டு, சந்தை வாடகை - market rate வசூலிக்க உத்தரவு போடப்பட்டிருக்கிறது. வாடகைக் குடியிருப்புகளில் இருப்பவர்களை வெளியேற்றுவதையே நோக்கமாகக் கொண்டு, சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் நேர்மையற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

நந்தனம் பகுதியில் மஸ்தான் தோட்டத்தில் 14 கிரவுண்ட் நிலத்தில் 50 வரிசை வீடுகள் row houses கட்டப்பட்டிருக்கின்றன. குறைந்த வருவாய் உள்ள எளிய பிரிவினருக்காக வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இராஜாஜி காலத்தில் City Improvement Trust-ம் அதைத் தொடர்ந்து காமராஜர் காலத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும், குறைந்த செலவில் கட்டப்பட்ட வீடுகளும் நலிந்த பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. வீடுகளை நலிந்த பிரிவினருக்குச் சொந்தமாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. குறைந்த வாடகை வசூலிக்கப்பட்டது. வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் உருவான பின்னர், பெரும்பாலான வீடுகள் குடியிருந்தவர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டுவிட்டன. அதில் மஸ்தான் தோட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் விடுபட்டுவிட்டன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 2002 ஆம் ஆண்டு, அந்த வீடுகளைச் சொந்தமாக்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் பணி நிறைவேறவில்லை. அரசு தரப்பில் மேலும் பல ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதில் முதலமைச்சர் அவர்கள், நேரடியாக கவனம் செலுத்தி — — ஏனென்றால் நான் விரிவாகப் பேசவில்லை; கால அவகாசம் குறைவாக இருக்கிறது — — அமைச்சர் அவர்கள் எழுந்திருக்கிறார்கள்; அமைச்சர் போட்ட ஆணையை நிறைவேற்ற முடியவில்லை. அதைத்தான் சொல்லுகிறேன். நான் அமைச்சரைக் குறை சொல்லவில்லை. குறை வேறு இடத்திலே இருக்கிறது. அது அவருக்கும் தெரியும். நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் நேரடி கவனம் செலுத்தி அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவை, மணிகாரம்பாளையத்தில் தொழிலியல் கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம் கணபதி கிராமத்தில் க.ச. எண் 41-ல் 5.14 ஏக்கர் நிலத்தை 5-11-1980ஆம் தேதியில் கொள்முதல் செய்தது. அதற்குப் பிறகு, முறைப்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. என்றாலும், 7-9-1983ஆம் தேதி அரசாணையின்படி அந்த Lay Out அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அந்தக் கூட்டுறவுச் சங்கம் முறையிட்டதன் விளைவாக அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கே அந்த நிலத்தைக் கொடுத்துவிடலாம்—61 மனைகள் இருந்தன — பெரும்பாலானவர்கள், அத்தனைபேரும் தொழிலாளர்கள், இன்றையதினம் வேலை இழந்து இருக்கிறார்கள், அவர்களுக்கே கொடுத்துவிடலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு இலட்சம் ரூபாய் அவர்கள் கட்ட வேண்டும். அந்த ஒரு இலட்சம் ரூபாயை வீட்டு வசதி வாரியத்திற்குக் கட்டிவிட்டால் அவர்களுக்கே கொடுத்துவிடலாம் என்று ஆணை பிறப்பித்து 5 ஆண்டுகள் ஆகின்றன. பணம் முழுவதும் செலுத்தப்பட்டு 4 ஆண்டுகள் ஆகின்றன. 2000 ஆம் ஆண்டு பணம் முழுவதும் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றுவரை அவர்களுக்குத் தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. உடனடியாக தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஹெலிகாப்டர் விஷயமாகச் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் பேசமுடியாது. கில்லட்டின் ஆகிவிடும் அல்லவா? 2004 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்ட கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் என்ற குறிப்பேட்டில் பக்கம் 28-ல் அது பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது:

'Government has sanctioned a sum of Rs.1,27,67,151 towards purchase and fitment of ACAS-II equipment and to upgrade the required Avionics on Government Cessna Citation Aircraft. The expenditure is on a 'New Service". An advance of Rs.1,27,68,000/- has been sanctioned from the Contingency Fund to meet the expenditure initially. This amount is included in the Supplementary Estimates. The advance will be recouped to the Fund after this Supplementary Demand is granted.'



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் வேலை இழந்து தவிக்கும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்காகவே அரசு ஆணை எண் 88 பிறப்பிக்கப்பட்டது. அதன்படி மாதம் ரூபாய் 250 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், சென்ற ஆண்டு அது நிறுத்தப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. அது தொடர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொகையைக் கொஞ்சம் உயர்த்தி, அதைத் தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை பகுதியில் உள்ள பஞ்சாலைகள் பெரும்பாலும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. தொழிலாளர்களுடைய வாழ்வு பறிக்கப்பட்டு, வறுமையிலே ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தத் தொகை மிகவும் உதவிகரமாக இருக்கும். இன்னும் கொஞ்சம் அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

சென்னைக்கு அருகிலுள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் மற்றும் டன்லப் போன்ற தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை இந்த அவையில் எடுத்துரைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

போரூர் S & S தொழிற்சாலை மூடப்பட்டது சட்டவிரோதமானது என்று அரசே அறிவித்துவிட்டது. கதவடைப்பு செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்றும் கூறிவிட்டது. நிர்வாகத்திற்கு எதிராக ஓரிரு வழக்குகளும் போடப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலையை சட்ட விரோதமாக மூடியும், தொழிலாளர்கள் பணத்தைக் கையாடல் செய்தும், அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளைக் கொடுக்க மறுத்தும், அடாவடியாகச் செயல்பட்டுவரும் ஒரு நிர்வாகத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுப்பதில்கூட இந்த அரசு உறுதியாக இல்லை என்பது வருத்தம் அளிப்பதாக இருக்கிறது.

உயர் கல்வித் துறையிலும் கூடுதல் மானியத்திற்கான கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் பரிந்துரைக்கப்பட்ட ஊதியங்களை வழங்குவதற்கான பல்கலைக்கழக மானியக் குழு - U.G.C. - தன்னுடைய

பங்கினைத் தமிழக அரசுக்கு ஏற்கெனவே வழங்கிவிட்டது. பல பல்கலைக்கழகங்களும் அதனைப் பெற்றுவிட்டன. சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, ஊழியர்களுக்கு மட்டும் நிலுவைத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. ஆசிரியர்களைப் பொறுத்தவரை இன்னும் அந்த நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. இதனால் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதற்கு நிதித் துறை வழிவிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனம் கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. அதேபோல, பதிவாளர்கள் - Registrars - நியமனமும் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் Registrar இல்லை. (குறுக்கீடு) இருக்கிறார். ஒரு Acting Registrar தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். Registrar என்று சொன்னால், அவர் பேராசிரியராக இருக்க வேண்டும். இப்போது தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருப்பவர் விரிவுரையாளர். எனவே, அவரால் எந்தப் பணியையும் செய்ய முடியவில்லை. எதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவரால் எதையும் செய்ய முடியவில்லை. எனவே, விரைந்து எங்கேயெல்லாம் பதிவாளர்கள் இல்லையோ, அங்கேயெல்லாம் பதிவாளர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அனைவருக்கும் விரைவிலே வேலை வழங்குவோம் என்று உத்தரவாதம் அளித்தார்கள். பல மாவட்டங்களிலே வழங்கப்பட்டிருக்கிறது. 12 ஆண்டுகள், 14 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; சில மாவட்டங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல மாவட்டங்களில் இன்னும் வழங்கப்படவில்லை. குறிப்பாக, வேலைவாய்ப்பு மிகவும் குறைவாக உள்ள நீலகிரி மாவட்டத்திலே இடைநிலை ஆசிரியர்கள் இன்னும் பணியில் அமர்த்தப்படவில்லை. 1990 ஆம் ஆண்டு பயிற்சி பெற்று முடிந்து பதிவு செய்துகொண்டவர்கள் இன்னும், இன்றுவரை அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. உடனடியாக அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரை, கூடுதல் மானியம் கோரப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறையில் பணியாற்றிய



பொறியாளர்கள் சிலர் அயல் பணியில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருக்கிறார்கள். பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பாலவாக்கத்திலே வீடுகள் கட்டுவதில் முறைகேடுகள் நடந்ததாகப் புகார் வந்தது. அதனடிப்படையில், பொறியாளர்கள் மீதும் மற்ற அலுவலர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்கலைக்கழக நிர்வாகம் கோரியதால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பல ஆண்டுகள் ஆகியும் வழக்கு விசாரணை நடைபெறவேயில்லை. பல்கலைக்கழகத்திற்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை. ஏற்படாததால் வழக்கைத் திரும்பப் பெறலாம் என்று சிண்டிகேட் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவிட்டது. ஆயினும், அந்த வழக்கு இன்னும் திரும்பப் பெறப்படவில்லை. கல்வித் துறை, பொதுப் பணித் துறை, பொது நிர்வாகத் துறை போன்ற பல துறைகள் சம்பந்தப்பட்டிருப்பதால் முடிவு எடுக்கப்படாத நிலையிலே முடங்கிக் கிடக்கிறது. இதற்கிடையே பலர் ஓய்வு பெற்றுவிட்டார்கள். சிலர் இயற்கை எய்திவிட்டார்கள். வழக்கு இருந்தாலும் மற்ற துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் உட்பட அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன. ஆனால் பொதுப் பணித் துறையிலேயிருந்து சென்ற பொறியாளர்களுக்கு மட்டும் அத்தகைய பலன்கள் கிட்டவில்லை. எனவே, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களையும் இழப்பீடுகளையும் கருத்தில்கொண்டு, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அண்மையில் பெய்த தொடர் மழையால் நெடுஞ்சாலைகள் உட்பட அனைத்துச் சாலைகளும் கடுமையாகச் சேதமடைந்திருக்கின்றன. பாலங்களும் பழுதடைந்திருக்கின்றன. பல கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் சீரமைக்கப்போவதாக அரசு அறிவித்தது. இதற்காக மத்திய அரசிடமும் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்பது குறித்த விவரம் எதுவும் கூறப்படவில்லை.

போர்க்கால அடிப்படையில் என்றாலே சாதாரணமான காலங்களில் செய்யப்படும் செலவைவிட பல மடங்கு கூடுதலாகச் செலவிடப்படும். நிறைவேற்றப்படும் பணிகளுக்கான தொகைகளை வழங்கும்போது சாதாரணமாகக் கையாளப்படும், கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளும் கைவிடப்படும். இதனால் ஒப்பந்தக்காரர்களுக்கு ஏராளமான இலாபம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், ஏற்கெனவே பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள சாலைப் பணியாளர்களை மீண்டும்

பணியில் அமர்த்துவதற்கான உடனடித் தேவையும் ஏற்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றும் வகையிலும், வேலையிழந்து தவிக்கும் 10,000 குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும் வகையிலும், பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் அனைவரையும் உடனடியாகப் பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வேலையிழந்து தவித்த காலத்திற்கான அனைத்து நிவாரண உதவிகளும் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை ஒட்டி மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றாமல் 1982 ஆம் ஆண்டுக்குப் பிறகு செய்யப்பட்ட நியமனங்கள் அனைத்தையும் உச்ச நீதிமன்றம் செல்லாது என்று அறிவித்திருக்கிறது. இதனால் இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கும், சங்கங்களுக்கும் ஏராளமான இழப்புகளும், இடர்ப்பாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் சம்பளமே இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம், அனைத்திற்கும் விரைவாகத் தீர்வு காண்பதற்கு அரசிடம் என்ன திட்டம் இருக்கிறது என்றே கூறப்படவில்லை.

*பிற்பகல் 1-10*

காவல் துறையைப் பொறுத்தவரை, சந்தன மரக் கடத்தல் வீரப்பனையும், அவனுடைய கூட்டாளிகளையும் ஒழித்துக் கட்டிய நிகழ்ச்சி எல்லா தரப்பினருக்கும் மனநிறைவை ஏற்படுத்தியிருக்கிறது; பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது.

வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது, காட்டில் வாழும் பழங்குடியின மக்கள் பல கொடுமைகளுக்கு உள்ளானதாகவும், பாலின பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும் பலமான புகார்கள் எழுந்தன. வாச்சாத்தி, சின்னாம்பதி போன்ற இடங்களில் நடைபெற்ற காவல் துறையின் அத்துமீறல்களும் விசாரணை கமிஷனின் கண்டனத்திற்குள்ளாயின. வீரப்பன் பதுங்கியிருந்த காட்டுப் பகுதிகளில் நடைபெற்றதாகக் கூறப்படும் மற்ற நிகழ்ச்சிகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கும், அத்துமீறல்களுக்கும் உரிய இழப்பீடுகள் வழங்கப்படுவதும், தவறு இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவதும் மட்டுமே நம்முடைய ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும் நல்ல பெயரைப் பெற்றுத் தர முடியும்.



சிறந்த காவல் துறை என்ற பெயர் எடுத்திருக்கும் நம்முடைய காவல் துறையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் ஒருசில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தால், அவற்றை மூடி மறைப்பதில் எவ்விதப் பயனும் ஏற்படாது. இத்தகைய சம்பவங்களின் மீதான நீதி விசாரணை கர்நாடக மாநிலத்தில் இன்னும் நிலுவையில்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருசில காவல் துறை அதிகாரிகள்மீது கூறப்பட்ட புகார்கள் குறித்து மத்திய புலனாய்வுக் கழக விசாரணைக்கு உயர் நீதிமன்றமே உத்தரவிட்டிருக்கிறது. அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அரசு மேல் முறையீடு செய்தது. ஆயினும், அரசு தரப்பின் கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டது. இப்போது C.B.I. விசாரணை உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது நம்முடைய அரசுக்கோ, காவல் துறைக்கோ பெருமை சேர்ப்பதாக அமையவில்லை. சட்டத்தின் முன் எல்லோரும் சமம், சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று யாரும் இல்லை என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார். சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்பதே தங்களுடைய இயக்கத்தின் தாரக மந்திரம் என்றும் எடுத்துக் கூறியிருக்கிறார். இந்நிலையில்தான் காஞ்சி சங்கராச்சாரியாரே கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று பெருமையாகக் கூறி வருகிறார். ஆனால், **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எஸ்.ஆர்.பி. என்ன? ஏதாவது என்றால் ஒரு ஆள் பெயரைச் சொல்லுங்கள்? அல்லது ஏதாவது ஆதாரத்தைச் சொல்லுங்கள்? ஒட்டுமொத்தமாக அப்படிச் சொல்லக் கூடாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சொல்கிறேன், சொல்கிறேன். நான் சொல்கிறேன். பொதுவாகச் சொன்னேன். நான் சொல்கிறேன். பெயர் சொல்வது நாகரிகம் இல்லை என்று பெயர் சொல்லவில்லை. ** அதை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இப்படி ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆதாரத்தோடுதான் சொல்கிறேன். அவர்களிடம் கொடுத்து விடுகிறேன். Chief Minister அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். நான் கொடுத்து விடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முதலமைச்சரிடம் கொடுங்கள். அவர்கள் அதை விசாரிக்கட்டும். அவைக் குறிப்பில் இது ஏறுவது முறையல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் இல்லாத ஒருவரைப் பற்றி; அது மிகவும் பயங்கரமான குற்றச்சாட்டு. அவைக் குறிப்பிலிருந்து இதை நீக்க வேண்டும். அதை இடம் பெறச் செய்யக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றியது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ** காவல் துறையினரின் மீதும், சில சாமியார்கள் மீதும் பாலியல் புகார்கள் எழும்போது மக்கள் முகத்தைச் சுளிக்கிறார்கள். ஆனால், அத்தகைய புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு இருக்கிறது என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ** என்று தாங்கள் குறிப்பிட்டுச் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது தொடர்பான அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அவைக் குறிப்பிலே ஏற்ற வேண்டாம் என்று ஏற்கெனவே தலைவர் அவர்கள் தீர்ப்புரைத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொன்னதற்குப் பிறகும் அதையே மறுபடியும் வலியுறுத்தக் கூடாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பல வழக்குகளில்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இதுவும் அவைக் குறிப்பிலே ஏறக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதனுடைய தொடர்ச்சியாக வரக்கூடியது அது; தொடர்ச்சியாக வரக்கூடியது எல்லாம் அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் பரிதாபப்பட்டு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு கால் மணி நேரம் கொடுத்தால் பரவாயில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுகிறேன்; இரண்டே மணித் துளிகள். பல வழக்குகளில் மத்திய புலனாய்வு நிறுவனமே விசாரணை நடத்த வேண்டுமென்று உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உத்தரவு அளித்திருப்பது நமக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. POTA-வின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதிலும் உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துகள் நிர்வாகத்தின் நடுநிலைக்குச் சான்றளிப்பதாக இல்லை. இதே போன்று எந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டாலும், பொறுப்புணர்ச்சியுடனும், சகிப்புத் தன்மையுடனும் பிரச்சினைகளை அணுகித் தீர்வு காணும் போக்கு குறைந்து வருகிறது. அரசு ஊழியர்கள்..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெல்கி ஸ்டாம்ப் பேப்பர் மோசடி சம்பந்தப்பட்ட 19 வழக்குகளை நானே சி.பி.ஐ.-க்கு விசாரணைக்கு விட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மடியிலே கனம் இல்லை, அதனால் வழியிலே பயம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொன்ன மற்ற குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் என்னால் பதில் கூற முடியும். ஆனால் இப்போது அதற்கு நேரமில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க வேண்டியிருப்பதால் அதற்கே நேரம் போதாது என்பதால்தான் இப்போது அமர்கிறேனே தவிர, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு நிறைய பதில்கள் இருக்கின்றன. நேரம் வரும்போது, நேரம் கிடைக்கும்போது அவற்றைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அரசு ஊழியர்கள் பிரச்சினையாக இருந்தாலும், ஆசிரியர்கள் பிரச்சினையாக இருந்தாலும், திரைப்படத் துறையினர் பிரச்சினையாக இருந்தாலும், தொழிலாளர்கள் பிரச்சினையாக இருந்தாலும், ஜனநாயக முறைப்படி அணுகுவதும், பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதும் குறைந்துவிட்டது. அதனால்தான் எடுத்ததெற்கெல்லாம் நீதிமன்றங்களை நாடிச் செல்லும் நிலையும் உருவாகிறது. ஏராளமான இழப்புகளை ஏற்படுத்தி, கசப்புணர்வை உருவாக்கி, நல்லுறவைச் சீர்குலைத்த பின்னர்தான் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களின் ஆதரவுடன் ஆட்சியில் அமரும் ஓர் அரசு

தன்னுடைய நடவடிக்கைகளினால் மக்களின் ஆதரவை முற்றிலும் இழக்கக்கூடிய நிலை ஏற்படுவது வரலாற்றில் ஒரு கறுப்பு அத்தியாயத்தைத்தான் இடம் பெறச் செய்யும். மக்களவையின் தேர்தல்களையொட்டி இந்த அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மன மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். மாறாக நிலைமைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் ராஜதந்திர நடவடிக்கையாக அமைந்துவிடக் கூடாது என்பதை மட்டும் எடுத்துரைத்து என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆட்சி மக்களினுடைய ஆட்சி, மக்களுக்காக, மக்களால் நடத்தப்படுகின்ற ஆட்சி என்பதை நாடறியும். மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது, மக்கள் நலன் கருதி ஏழைகளுக்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த சலுகைகள் இவற்றைக் கொச்சைப்படுத்துவது போல், ராஜதந்திர நடவடிக்கையா என்றுகூட அவர் கேட்டார்கள். நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தபோது, அம்மா அவர்களுடைய ஆட்சி பொறுப்புக்கு வந்தபோது நிதிநிலை சற்றும் சரியில்லா சீர்கெட்ட நிலையில், காலியான கஜானா என்று இருந்ததும், கடன் பல கோடி என்று இருந்ததும், வட்டிச் சுமை ஒரு நாளுக்கு பல கோடி என்று வந்ததும், நாடு அறிந்த உண்மை.

இதுகுறித்து இந்த அவையிலேயே மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களே பேசியிருக்கிறார். தற்போது ஒருவேளை அவர் தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து அரசியல்ரீதியாக மாறியிருக்கிற காரணத்தால், கடந்த கால ஆட்சியிலே தமிழ்நாட்டில் எத்தகைய நிதிச் சீர்கேடு ஏற்படுத்தப்பட்டது, அதனுடைய தொடர்ச்சி எப்படி இந்த அரசைப் பாதித்தது — — நிதிநெருக்கடி மட்டுமல்ல. மைய அரசு மாநில அரசுக்குத் தர வேண்டிய நிதியைக்கூட — — டெல்லியிலே 2000 ஆம் ஆண்டிலிருந்து, 2001 இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து, அங்கே டெல்லியில் யார் ஆண்டாலும் சரி, தமிழகத்தின் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்கின்றவர்களாகவோ, தமிழ்நாட்டு மக்களின் நலனைப் பற்றி அக்கறை செலுத்தாதவர்களாகவோ இருந்த காரணத்தால் முறைப்படி தமிழகத்திற்கு



வர வேண்டிய நிதிகூட வர முடியாமல் முட்டுக்கட்டை போடப்பட்டதையும் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் அறிவார்கள். இந்த நிலையில்தான், மிகவும் சாமர்த்தியமாக ஒரு நாளுக்கு 18 மணி நேரத்திற்கு மேலாக அரசுப் பணிகளை மேற்கொண்டு, மிகவும் தொலைநோக்குச் சிந்தனையோடு பிரச்சினைகளை மேற்கொண்ட காரணத்தால், சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தால், தேவையில்லாத திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த காரணத்தால், வரி ஏய்ப்பைத் தடுத்து, வரி வருமானத்தைப் பெருக்குகின்ற நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட காரணத்தால், நிருவாகத்தில் தூய்மையைத் தவழவிட்ட காரணத்தால், சிரமங்களையெல்லாம் தாண்டி, ஓரளவுக்கு நிதியினைச் சேகரித்து, ஓரளவு நிதி கிடைத்தவுடன் அந்த நிதியை வைத்து, ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலைத் திட்டம், இலவச மின்சாரத் திட்டம் என்பனவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களின் நலன் கருதி தந்தார்கள் என்பதை நாடறியும். இதை மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அடுத்து, (குறுக்கீடு) அப்புறம் நான் எங்கே அண்ணே 3,4 நிமிடங்களை வைத்துக்கொண்டு பதில் சொல்ல முடியும். (குறுக்கீடு) இல்லை, அம்மா உங்களுக்குப் பதில் சொல்வதற்கே நேரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, மாண்புமிகு முதலமைச்சர்...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போலத்தான் நேற்றுகூட பேசுகிறபோது வீண் செலவுகள், விளம்பரச் செலவுகள், விழாச் செலவுகள் என்றெல்லாம் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, நேற்று அதை அப்படிக் கூறினார்கள். அதைப் பற்றி நான் அவைக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதை எடுத்துவிட்டீர்கள். I am not going into it.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அந்தக் குறிப்பை தேடி எடுப்பதற்குள் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது, "சூழ்நிலைக்கேற்ப நிலையை மாற்றிக்கொள்ளும் ராஜ

தந்திரமாக அமைந்துவிடக் கூடாது" என்று இங்கே சொன்னார். சூழ்நிலைக்கேற்ப தனது நிலையை மாற்றிக்கொண்டு ராஜீவ் காந்தி படுகொலையிலேயே சம்பந்தமுள்ளவர்கள் என்பவர்களோடு கூட்டணி அமைத்துக் கொண்டவர்கள் யார்? அத்தகைய சந்தர்ப்பவாதிகள் யார்? அத்தகைய ராஜதந்திரிகள் யார் என்பதை இந்த நாடே அறியும் என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயின் கமிஷன் தெளிவுபடுத்தி இருக்கிறது. அந்தக் கட்சிக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று, மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. வேண்டுமென்றே இதை இங்கே எழுப்புவது இப்போது முறையல்ல. நான் சூழ்நிலைக்கேற்ப என்று சொல்லவில்லை. மாறிய என்ற சொல்லைத்தான் பயன்படுத்தினேன். சூழ்நிலைக்கேற்ப என்ற சொல்லை நான் பயன்படுத்தவில்லை. அதனால் அதை இப்போது, இந்த நேரத்திலே சொல்லி பதிலும் சொல்ல முடியாத நிலைமையை ஏற்படுத்த வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையோ அல்லது எந்த அரசியல் கட்சியின் மீதோ நான் எந்தவிதமான புகாரும் சொல்லவில்லை என்று ஜெயின் தன்னுடைய இறுதி அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இந்த அவையிலே தாங்கள் பேசிய பேச்சுகளெல்லாம் பதிவாகியிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இறுதி அறிக்கை என்பது ஒன்று, Interim Report ஒன்று. Interim report forms part of the final report. இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு) இல்லை, இடைக்கால அறிக்கை is forming part of the . . .

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால அறிக்கை பற்றி இறுதி அறிக்கையிலே சொல்லுகிறார். நான் யார்மீதும் அந்த அறிக்கையில் புகார் சொல்லவில்லை என்று.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது.. (குறுக்கீடு) டைம் ஆகிவிட்டது (குறுக்கீடு).. 5 நிமிடம் (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு)



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முறையில்லாமல் நீங்கள் சொல்வதற்கு நான் பதில் சொல்லக்கூடாதா? இறுதி அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இடைக்கால அறிக்கையில், நான் சொன்னது எந்தக் கட்சியின் மீதோ, எந்த அமைப்பின்மீதோ நான் குற்றம் சாட்டிச் சொல்லவில்லை என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் ஜெயின்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களே தி.மு.க.தான் ராஜீவ் காந்தி கொலைக்குக் காரணம் என்று பல மேடைகளில் பேசியிருக்கிறார். பல இடங்களில் பேசியிருக்கிறார். இது நாடறிந்த ஒன்று. உலகறிந்த ஒன்று. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்த மேடையிலும் ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணம் இவர்கள்தான், திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னதே கிடையாது. அபாண்டமான குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது விழாச் செலவு பற்றிக் கூறினார்கள். வீணான, ஆடம்பர விழாக்கள் நடத்துவதைக் குறைத்துக் கொள்ளவே இல்லை என்று கூறினார். S.T.F. விழாவைத் தவிர கடந்த 3 1/2 ஆண்டுகளில் இந்த அரசு, எந்தப் பெரிய விழாவையும் நடத்தவில்லை. தங்கத் தாரகை விருது வழங்கும் விழாவைப் பொறுத்தவரைக்கும் அது அரசு நடத்திய விழா அல்ல. அதற்கான விளம்பரங்களையும் அரசு கொடுக்கவில்லை. அதைப்போலவே இன்னொரு பெரிய விழா திரைப்படத் துறை எடுத்த விழா ஆகும். அதுவும் அரசு எடுத்த விழா அல்ல. அதற்கான செலவு முழுவதையும் தமிழ்த் திரைப்பட உலகம்தான் செலவழித்தது. இந்த விழாக்களைக் கண்டு ஒருவேளை பொறாமை காரணமா அல்லது என்ன என்று புரியவில்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இப்படி குற்றம்சாட்டி பேசியிருப்பது முறையல்ல.

இதற்கு இன்னும்கூட சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். 1996 லிருந்து 2001 வரை பல விழாக்கள் எடுக்கப்பட்டன. அந்த விழாக்களில் சமத்துவபுரம் விழாக்கள் என்ற முறையில் மட்டும் ஒவ்வொரு விழாவிற்கும் சராசரியாக 8 இலட்சம், 10 இலட்சம், 11 இலட்சம் என்று சமத்துவபுரம்

விழாக்களுக்கு—திருமங்கலம் தாலுகாவில் ஒரு சமத்துவபுரம் விழாவுக்கு 9 இலட்சம் செலவிட்டிருக்கிறார்கள். சேலத்தில் ஒரு சமத்துவபுரம் விழாவிற்கு 7 இலட்சம் செலவிட்டிருக்கிறார்கள். திருமங்கலத்தில் இன்னொரு விழாவிற்கு 9 இலட்சம் செலவிட்டிருக்கிறார்கள். கடலூரிலே, தேனியிலே, காஞ்சியிலே, திருவாரூரிலே, விருதுநகரிலே, ஆழூரிலே, விழுப்புரத்திலே, திருவண்ணாமலையிலே, சுக்கராம்பட்டியிலே என்று தனித்தனி விழா, ஒவ்வொரு விழாவுக்கும் சராசரியாக ஒரே ஒரு சமத்துவபுரம் திறப்பு விழாவிற்கு மட்டுமே கடந்த கால ஆட்சியிலே செலவிடப்பட்ட தொகை 9 இலட்சம், 10 இலட்சம் என்று செலவிட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே எந்த ஒரு பெரிய விழாவும் எடுக்கவில்லை. வீண் செலவு எந்த விழாவுக்கும் செய்யவில்லை. விளம்பரங்கள் மேற்கொள்ளப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற அரசு விழாக்களில்கூட நிறைய பணிகள், ஒன்றல்ல, இரண்டல்ல; கிட்டத்தட்ட காஞ்சிபுரத்தில் நடந்த ஒரு விழாவில் 341 பணிகளுக்கான விழாக்களை ஒட்டுமொத்தமாக வைத்ததிலே செலவு ஏற்பட்டது. இதை நான் சொல்வதற்குக் காரணம். ஒரே விழா. ஆனால் தனித்தனியாக இந்த விழாக்கள் 341 இடங்களில் நடத்தப்பட்டிருக்குமேயானால் செலவு எத்தனை இலட்சமாகி இருக்கும் என்பதனை அவை உணர வேண்டும். நடந்த நடைமுறை உண்மைகளை, செலவைச் சிக்கனப்படுத்துவதற்காகத்தான் 300, 400, 500 என்று விழாக்களை, நிகழ்ச்சிகளை, பணிகளை ஒரே இடத்திலே கொண்டு வந்து செய்ததால் அரசுக்குச் சிக்கனம் ஏற்பட்டது. அரசினுடைய செலவு குறைக்கப்பட்டது என்பதனை அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, கோ.சு. மணி தற்போது அவையில் இல்லை. அவர்கள் பேசுகிறபோது குறுவைப் பயிரும் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள், கோ.சி. மணி.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கோ.சி. மணி இல்லை. இருந்தாலும் அவைக் குறிப்பிலே ஏறிவிட்டது. குறுவைப் பயிரை இந்த ஆட்சி வந்ததிலேயிருந்து நாங்களும் கண்டதில்லை, நீங்களும் கண்டதில்லை என்று கூறினார். அவைக்கு இதைத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.



கடந்த 3 ஆண்டு, 4 ஆண்டுகாலமாக தொடர்ந்து வறட்சி. வறட்சி காரணமாக ஒருபுறம் பாதிப்பு; பயிர் பாதிப்பு. கர்நாடக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தருவதை அவர்கள் மறுத்துவிட்டார்கள். உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தபோதிலும்கூட, Tribunal-னுடைய தீர்ப்பு இருந்தபோதிலும், காவிரி ஆணையத்தினுடைய தாக்கீது இருந்தபோதிலும் அவற்றை அவர்கள் நடைமுறைப்படுத்தாத நிலையில் அப்போது டெல்லியிலே ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்களோடு கூட்டாக இருந்த தி.மு.க.-காரர்கள் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், கர்நாடக அரசு மெத்தனமாக இருந்து, தமிழகத்திற்கு முறைப்படி வரவேண்டிய தண்ணீரை, நீதிமன்ற ஆணைப்படி வரவேண்டிய தண்ணீரைக்கூட கிடைக்காமல் செய்து தமிழக மக்களுக்கு, தஞ்சைப் பகுதி மக்களுக்குத் துரோகம் இழைக்கின்ற ஒரு நடவடிக்கையை டெல்லியிலே அமைச்சர்களாக இருந்தவர்கள், தி.மு.க. தலைமையிலே அமைச்சர்களாக இருந்தவர்கள் மேற்கொண்ட காரணத்தால், குறுவைப் பயிர் பாதிப்பு ஏற்பட்டது. குறுவைப் பயிரை யாருமே பார்க்க முடியாத நிலை ஏற்பட்டதற்குக் காரணம் கர்நாடக அரசு. அதற்குக் காரணம் டெல்லியிலேயிருந்த அந்த ஆட்சியிலே அங்கம் வகித்து, கர்நாடக அரசுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் டெல்லி அரசு எடுக்காத அளவிற்கு சுயநலத்தோடு தி.மு.க.-வும், அதனுடைய சார்பு அமைச்சர்களும் செயல்பட்ட காரணத்தால், குறுவையை அவர்களும் பார்க்க முடியவில்லை; குறுவையை நாங்களும் பார்க்க முடியவில்லை என்ற ஒரு நிலை உருவானது. இதுதான் உண்மை நிலை. ஆனாலும்கூட, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, எண்ணற்ற சலுகைகளை ஈந்து, அந்த விவசாயிகளுடைய, விவசாயத் தொழிலாளர்களுடைய துயரத்தைத் தீர்த்தவர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும், இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிறகு அல்லது வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் சரியாகத் தரப்படவில்லை என்பதனை கூறினார்கள். கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரைக்கும் நாம் மைய அரசிடம், நபார்டு வங்கியிடம் ஒரு திட்டத்தைத் தந்தோம். ஒட்டுமொத்தமாக 2,598 கோடி ரூபாய்க்கு விவசாயிகளுக்குக் கடனை re-schedule செய்ய வேண்டும் என்று சொன்னோம். 1037 கோடி ரூபாயை தமிழக அரசு, அம்மா அவர்களுடைய ஆணைப்படி விவசாயிகளுக்கு

re-schedule -க்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. இதைப் பொறுத்தவரைக்கும் நாம் ஒட்டுமொத்தமாக மைய அரசு, நபார்டு வங்கியிடம் கேட்டதிலே 750 கோடி ரூபாய் கேட்டோம். ஆனால், அவர்கள் அந்தப் பணத்தைத் தரவில்லை. மற்றும் eligibility வரவேண்டும் என்பதற்காக, வங்கிகளைப் பொறுத்தவரைக்கும் 9 வங்கிகளை eligibility-க்கு உள்ளாகாத வங்கிகள் என்று நபார்டு வங்கி ஒரு தீர்வைக் கூறியிருக்கிறது. சிவகங்கை, நீலகிரி, தஞ்சாவூர், கும்பகோணம், இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், தருமபுரி, திருநெல்வேலி ஆகிய 9 வங்கிகள் அவர்கள் வாங்கிய கடனை முழுமையாகத் திருப்பிக் கட்டாத காரணத்தாலும், கொடுத்த கடனைச் சரியாக வசூல் செய்யாத காரணத்தாலும் 11 (1) என்ற அந்த Banking Regulation Act-படி அந்த வங்கிகள் கடன் பெறுகின்ற தகுதியை இழந்துவிட்டன. அந்த வங்கிகளுக்கு வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள், அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தால் கடனைத் திருப்பிச் செலுத்தாததால் ஏற்பட்ட நிலை என்பதால், அந்த 9 வங்கிகளுக்கும் உரிமம் தரவேண்டும்; மீண்டும் அனுமதி தரவேண்டும் என்று நபார்டு வங்கியை நாங்கள் கேட்டிருக்கிறோம்; மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனாலும், அதற்கு அவர்கள், மைய அரசு (மணியடிக்கப்பெற்றது) நபார்டு வங்கி இன்னும் அனுமதி தரவில்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், வாக்கியத்தை முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படிப்பட்ட நிலை இருந்தபோதிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 1037 கோடி ரூபாயை உழவர்களுக்குக் கடனாகத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. (குறுக்கீடு) எனவே, விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும் re-schedule பிரச்சினையை, நபார்டு வங்கி நாம் கேட்ட பணத்தை நமக்குத் தரவில்லை. 9 வங்கிகளைத் தகுதியில்லாத வங்கிகள் என்று சொல்லிவிட்டன. தஞ்சைப் பகுதியிலே இருக்கின்ற அந்த வங்கியையும் தகுதியில்லாத வங்கி என்று சொல்லிவிட்டது. இதுதான் நிலவரம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, மைய அரசிடம் சொல்லி, — மாண்புமிகு உறுப்பினர்களுடைய கட்சியின் அமைச்சர்கள் டெல்லியிலே இருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) உடனடியாக நபார்டு வங்கி இந்தக் கடனைத் தருவதற்கு, உதவியைத் தருவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் 'அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"2004-2005 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 17-11-2004 ஆம் தேதிய அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இரண்டாவது துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை, 2004-2005 ஆம் ஆண்டிற்கான 'கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை முழுமையாக வழங்கப்பெறுகிறது.

## நிறைவேற்றப்பெற்ற 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- கால்நடை பராமரிப்பு | 1,90,10 | – | – |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 1,83,43 | – | – |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 4,43,00 | – | – |
| 13 | எரிசக்தித் துறை | 30,00 | – | – |
| 14 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 80,20 | 1 | – |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,94,51 | – | – |
| 19 | உயர் கல்வித் துறை | 39,02 | – | – |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | – | 1 | – |
| 21 | உள் துறை-காவல் | 27,72,27 | 50,00 | – |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 20,41 | – | – |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- செய்தி மற்றும் விளம்பரம் | 1 | – | – |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | – | 95,89 | – |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | – | – | 5,36,51 |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை | 2,80,00 | – | – |
| 37 | பொதுத் துறை | 1,57,48 | – | – |
| 38 | பொதுப் பணித் துறை | 7,74,24 | 40,13 | – |
| 40 | ஊரக வளர்ச்சித் துறை | 3 | – | – |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 2 | – | – |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 60,31 | – | – |
| 45 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 87,47 | – | – |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1 | – | – |
| | **பெரு மொத்தம்** | **53,12,51** | **1,86,04** | **5,36,51** |

[2004 நவம்பர் 22

## 6. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 10) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2004 நவம்பர் 22]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[2004 நவம்பர் 22

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2004 நவம்பர் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2004 நவம்பர் 22

## (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2004). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2004)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 19-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 22] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2004 நவம்பர் 22

பிற்பகல் 1-35

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிமன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | அழகப்பா பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. மா. இராஜசேகர் |
| 2. | அண்ணா பல்கலைக் கழகம், (ஆட்சிக் குழு) | திரு. பெ. பழனியப்பன் |
| 3. | பாரதியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | திரு. கே.எஸ். பழனிச்சாமி<br>திருமதி வி. சிவகாமி |
| 4. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | திருமதி ஆர். சசிகலா,<br>திரு. வை.சிவபுண்ணியம் |
| 5. | சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | திரு. ராதாரவி |
| 6. | தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | டாக்டர் . தே. குமாரதாஸ்<br>திரு. வி.கே. லட்சுமணன் |
| 7. | மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. எம். சக்திவேல் முருகன்<br>திரு.ப. அரசன் |
| 8. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு) | திரு. ப. சிதம்பரம் |
| 9. | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | திரு. பி.கே. சேகர்பாபு (நிர்வாகக் குழு) |
| 10. | தமிழ் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | திரு. சி. இராசேந்திரன்<br>திரு. எம். ராம்குமார் |
| 11. | பெரியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | திரு. எஸ்.கே. செல்வம்<br>திரு. கே. கந்தசாமி. |





தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்கள் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புமனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உறுப்பினரின் பதவிக்காலம் 6-5-2006 வரை ஆகும்.

பிற பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு, ஆட்சிமன்றப் பேரவை மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2004 நவம்பர் 22

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளிலும் மற்றும் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 9-9-2004 ஆம் நாளிட்ட 322 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

33. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும், அத்திருத்தங்கள் 18-5-2004 முதல் அமலுக்கு வருவதாகவும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-9-2004 ஆம் நாளிட்ட 323 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

34. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

35. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

36. தமிழ்நாடு அரசின் 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (ஆங்கிலம்)



2004 நவம்பர் 22]

37. தமிழ்நாடு அரசின் 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலைக் கணக்குகள். (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (ஆங்கிலம்)

38. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டுக்கான ஆண்டு கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. (1959 ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

39. 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

40. 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைள் மற்றும் ஏனைய தாள்கள்

35. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஏழாவது அறிக்கை. (2003-2005)

36. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து எட்டாவது அறிக்கை. (2003-2005)

37. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2005)

38. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பதாவது அறிக்கை. (2003-2005)

39. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2005)

40. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2003-2005)

41. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2003-2005)

42. மனுக்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. (2003-2005)

43. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

44. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

45. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

46. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினோராவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

47. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 150 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

48. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதிமூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 77 வரை)



## இணைப்பு I

*(133 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### உடுக்குறியிடாத வினாக்கள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாதவினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 11 மற்றும் 12)*

**பட்டியல் 11**

1—

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா எண் 4542—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் - முக்கடல் (கி.மீ. 0/0-0-8) சாலையில் மணல் காட்டலூர் பேருந்து நிறுத்தத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு ரூபாய் 99.5 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ரூ.98-00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு 15.11.2002 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் அளிக்கப் பெற்றவுடன், வேலை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்களால் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2004 நவம்பர் 22

2—

### சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 4564—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கடலிலிருந்து கடையம் வரை சாலையை அகலப்படுத்தி அமைத்து மேம்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு ரூபாய் 99.5 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ரூ.98.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு 15-11-2002 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் அளிக்கப் பெற்றவுடன், பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

3—

### சாலைப் புதுப்பித்தல்

**வினா எண் 5223—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே உடுமலைப்பேட்டை — குமரலிங்கம் சாலையிலிருந்து பிரிந்து ஜக்கம்பாளையம் செல்லும் சாலை கிமீ 1/0 முதல் 2/0 மிக பழுதடைந்துள்ளதை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.



2004 நவம்பர் 22]

4—

### சாலை செப்பனிடல்

**வினா எண் 5226—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தை சேர்ந்த எலையமுத்தூர் கல்லாபுரம் சாலை கிமீ 1/0 - 5/4 வரை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் தார் நொடிகள் போடப்பட்டு வாகன போக்குவரத்திற்கு இடையூறில்லாமல் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.

5—

### சாலை மேம்படுத்துதல்

**வினா எண் 5246—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை வட்டத்தில் சாமராயபட்டியிலிருந்து கிழுவன்காட்டூர் செல்லும் சாலை மற்றும் உரல்பட்டியிலிருந்து ஜக்கம்பாளையம் செல்லும் சாலையை கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்து மேம்படுத்திட அரசு பரிவுடன் பரிசிலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 7918—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சி, சந்தைமேட்டில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சி, சந்தைமேட்டில் குடியிருக்கும் மக்களுக்கு தகுதியின் அடிப்படையிலும், நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

## பாலம் புதுப்பித்தல்

**வினா எண் 8508—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் — மத்தியூர் ரெண்டாத்துக்கு பாலம் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்



(ஆ) பாலப் பணியினை ரூ.76 லட்சம் செலவில் நபார்டு திட்டத்தின் மூலம் எடுத்துச் செய்ய அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

8—

## தார்ச்சாலை அமைத்தல்

**வினா எண் 8511—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, வடமலை சமுத்திரம்—கருத்தபிள்ளையூர் தார்ச் சாலையை பழுதுபார்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

9—

## குடியிருப்புக்குப் பட்டா

**வினா எண் 9330—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீர்நிலை புறம்போக்கு, வண்டிப் பாதை புறம்போக்கு, மயானப் புறம்போக்கு என குறிப்பிட்டு 'பட்டா' வழங்கப்படுவது மறுக்கப்பட்டு வருவதை தவிர்க்க, பிற்படுத்தப்பட்ட மக்கள் 40 ஆண்டுகளாய் குடியிருந்து வரும் இடத்தில் உரிமை பெற, எளிமையான அரசாணைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 நவம்பர் 22

10—

## புதிய பாலம்

**வினா எண் 15831—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் சிவசுப்பிரமணியபுரம் சாலையில் அனுமான் நதியின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

11—

## சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 15838—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரிலிருந்து தெ. கள்ளிகுளம், சமூகரெங்கபுரம், மன்னார்புரம் விலக்கு, இட்டமொழி வழியாக திருச்செந்தூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



2004 நவம்பர் 22]

12—

## மாற்று வழிப்பாதை அமைத்தல்

**வினா எண் 15971—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறைக்கு செல்ல மாற்று வழிப்பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

## புதிய மேம்பாலம்

**வினா எண் 18559—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் வைகை அணைத் தண்ணீரை பிரித்து பாசனத்திற்கு அனுப்பப்படும் பேரணைக்கு புதிய மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாலம் அமைக்கும் பணி தற்போது எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை.

14—

[2004 நவம்பர் 22

## புதிய மேம்பாலம்

**வினா எண் 18564—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகையாற்றின் 'கண்ணகி பாலம்' பாதிக்கப்பட்டுள்ளதால் புதிய மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

15—

## இருவழிப் பாதை

**வினா எண் 18676—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தையும், நீலகிரி மாவட்டத்தையும் இணைக்கும் முக்கிய சாலையான நம்பியூர், வேமாண்டம் பாளையம், புளியம்பட்டி, மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலை மிகவும் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையை செப்பனிட்டு இருவழிப் பாதையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில், நம்பியூர்-புளியம்பட்டி சாலை கி.மீ. 1/0 - 18/2 மற்றும் பெத்திக்குட்டை புளியம்பட்டி சாலை கி.மீ. 0/0 - 11/8 ஆகியவை இருவழிப் பாதையாக மாற்ற தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்த திட்டத்திலும் இடம்பெறவில்லை. ஊட்டி-கோத்தகிரி—மேட்டுப்பாளையம்-சத்தி- கோபி-



2004 நவம்பர் 22]

ஈரோடு சாலையில் கி.மீ. 57/4-76/8 வரை உள்ள பகுதி, உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

## மனைப் பட்டா

**வினா எண் 18714—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 6-வது வட்டம், நாகூரான் தோட்டத்தில் உள்ள சலவைத் தொழிலாளர் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சென்னை கோட்டை-தண்டையார்பேட்டை வட்டத்தில் தண்டையார்பேட்டை கிராமம் புல எண் 4311/2, 4313/2, 4317/25 மற்றும் 4319/15-ல் குடிசை மாற்று வாரியத்திற்கு கையகப்படுத்தி வழங்கிய இடத்தில் நாகூரான் தோட்ட பகுதியாக மேம்படுத்தப்பட்டு, குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பட்டா கோரும் நபர்கள் குடிசை மாற்று வாரியத்திடம் இருந்து கிரயம் பெற்ற பின்னர், கிரயப் பத்திரத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்படும்.

17—

## தரைப் பாலம்

**வினா எண் 18722—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, வாழ்வச்சகோஷ்டம் பேரூராட்சியில் பள்ளியாடியிலிருந்து அழகிய மண்டபம் சாலையில் உள்ள ஆலத்தறைப் பாலத்தை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2004 நவம்பர் 22

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**18—**

### பாலம் அமைத்தல்

**வினா எண் 23271—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பிரதான சாலைக்குச் செல்வதற்கு பாலாற்றுக்கு நடுவில் பாலம் ஒன்று இல்லாததால் பொள்ளாச்சிக்கு மக்கள் சுற்றிச் செல்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பாலம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 13 குழாய்கள் கொண்ட குழாய் தாம்போகிப் பாலம் பொதுப் பணித் துறையினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**19—**

### இருவழிச் சாலை

**வினா எண் 23476—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஏழுமலை செல்லும் சாலையை இருவழிச்சாலையாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**20—**

### இருவழிப் பாதை

**வினா எண் 23479—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி-வத்தலகுண்டு சாலையை இருவழிப் பாதையாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**21—**

### சாலை மேம்படுத்துதல்

**வினா எண் 23725—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தில் உள்ள காரத்தொகுவு-குமரலிங்கம் சாலை கி.மீ. 1/4ல் பிரிந்து வஞ்சிபுரம் வழியாக வெங்கிட்டாபுரம் வரை செல்லும் சாலை கி.மீ. 1/0 - 3/100 வரை மேம்பாடு செய்திட அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

22—

## சாலை மேம்படுத்துதல்

**வினா எண் 23739—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறையின் கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சேலம் வட்டத்தைச் சேர்ந்த ராமேகவுண்டன்புதூர் முதல் சுத்திக்கல்மேடு வரை செல்லும் சாலை கி.மீ. 0/0 — 2/4 வரை மேம்பாடு செய்திட அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

23—

## சாலை மேம்படுத்துதல்

**வினா எண் 23749—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த கிழுவன்காட்டூர் முதல் பார்த்தசாரதிபுரம் வரை உள்ள சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 1/6 வரை மேம்பாடு செய்திட அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

24—

## நியாயவிலைக் கடை

**வினா எண் 2950—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களிலிருந்து நியாயவிலைக் கடை அரிசி, வேறு மாநிலத்திற்குக் கடத்தப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் பொருட்டு எத்தனை வழக்குகள் பதிவாகி உள்ளன?

(இ) அதில் வழக்கு முடிந்தது எத்தனை?

(ஈ) அதில் தண்டனை அளிக்கப்பட்டது எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2004 நவம்பர் 22

| (ஆ) | மாவட்டத்தின் பெயர் | பதிவான வழக்குகள் |
|---|---|---|
| (1) | ஈரோடு | 5 |
| (2) | கோயம்புத்தூர் | 1632 |
| (3) | சேலம் | 5 |
| | மொத்தம் | 1642 |

| (இ) | மாவட்டத்தின் பெயர் | முடிந்த வழக்குகள் |
|---|---|---|
| (1) | ஈரோடு | 4 |
| (2) | கோயம்புத்தூர் | 1319 |
| (3) | சேலம் | 2 |
| | மொத்தம் | 1325 |

| (ஈ) | மாவட்டத்தின் பெயர். | கள்ளச்சந்தை தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை அளிக்கப்பட்ட நபர்கள். | நிலுவையில் உள்ள வழக்குகள். |
|---|---|---|---|
| (1) | ஈரோடு | 4 | 1 |
| (2) | கோயம்புத்தூர் | 9 | 313 |
| (3) | சேலம் | 2 | 3 |
| | மொத்தம் | 15 | 317 |

**25—**

## பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா எண் 46372—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, சின்னவீரம்பட்டிக்கும், பெரிய கோட்டைக்கும் இடைப்பட்ட இந்திரா நகர் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம், சின்னவீரம்பட்டி கிராமம், இந்திரா நகர் பகுதியில் உள்ள 163 குடும்ப அட்டைகளுடன் சி.டி.சி. காலனி பகுதியில் உள்ள 52 குடும்ப அட்டைகளை இணைத்து 215 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் 8-6-2004-ல் ஆணை பிறப்பித்துள்ளார்.

**26—**

## சான்றோர் சபை

**வினா எண் 2247—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறநிலையத் துறையை மேம்பாடு செய்ய ஆன்மீக பெரியவர்கள் தலைமையில் ஆன்மீக சான்றோர் சபை உருவாக்க அரசு முயற்சி எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களின் மேம்பாடு, வளர்ச்சி மற்றும் நிர்வாகம் தொடர்பாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி அவர்கள் தலைமையில் i) திருக்கோயில் திருப்பணிகள் விரைவுப்படுத்தி கும்பாபிஷேகம் செய்வதற்கான ஒரு ஆலோசனை குழுவும், மற்றும் ii) திருக்கோயில் நிலங்களிலிருந்து வருவாயை மேம்படுத்துவதற்கும், திருக்கோயில் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டும், மற்றொரு உயர்நிலை ஆலோசனை குழுவும் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி

சுவாமிகள், தருமபுரம் மடம், ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த பரமாச்சாரிய தேசிக சுவாமிகள், திருவாவடுதுறை மடம், சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டார சன்னதி சுவாமிகள், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துகுமாரசாமி தம்பிரான் சுவாமிகள், நாங்குநேரி, வானமாமலை மடம், ஸ்ரீமத் கலியன் வானமாமலை இராமானுஜ ஜீயர் சுவாமிகள், அல்லூர் சைவத்திரு விசுவநாத சிவாச்சாரியார் உள்ளிட்ட ஆன்றோர்கள் மேற்படி ஆலோசனை குழுக்களில் இடம் பெற்றுள்ளனர்.

மேற்படி ஆலோசனைக் குழுக்கள், ஆன்மீகம், திருக்கோயில் மேம்பாடு, நிர்வாகம் குறித்து அளிக்கும் ஆலோசனைகள் அடிப்படையில், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையை மேம்பாடு செய்ய ஆன்மீகப் பெரியவர்கள் தலைமையில் ஆன்மீக ஆன்றோர் சபை என்பதை தற்போது உருவாக்க அவசியம் எழவில்லை.

**27—**

## ஆக்கிரமிப்பு அகற்றுதல்

**வினா எண் 16603—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களை உடனடியாக அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையா சொத்துக்களான நிலம், மனை மற்றும் கட்டடங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை வெளியேற்ற சிவில் நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்தும், சரக இணை



ஆணையர்களிடம் இந்து சமயம் மற்றும் அறநிலைய சட்டப்பிரிவு 78 மற்றும் 79-ன்கீழ் வழக்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற, சிவில் நீதிமன்றங்களில் வழக்கு தொடர்தல், இந்து சமயம் மற்றும் அறநிலைய சட்டப்பிரிவு 78 மற்றும் 79-ன் கீழ் நடவடிக்கை எடுத்தல் போன்ற சட்ட ரீதியான முறையில் ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**28—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 19386—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் உலகாண்ட ஈஸ்வரி அம்மன் கோயிலின் உபயோகமற்ற இடத்தில் பேருந்து நிலையம் கட்ட அரசு அனுமதி அளிக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஒட்டப்பிடாரம், அருள்மிகு உலகம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் ஒட்டப்பிடாரம் பேருந்து நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**29—**

## கோயில் தேர்

**வினா எண் 20311—திரு. செ. வெங்கடாசலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், செவ்வாய்பேட்டை மாரியம்மன் கோயில் தேரை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஆம். ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் உபயப் பணியாக செய்திட 17-5-2004-ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**30—**

## திருத்தேர்

**வினா எண் 20416—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் திருத்தேரை பழுது நீக்கி இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் வட்டம், திருப்பெருந்துறை அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயிலில் இரண்டு தேர்கள் உள்ளன. இதில் பெரிய தேர் மட்டும் 1990 ஆம் ஆண்டு திருப்பணி செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆனித் திருமஞ்சன திருநாளில் 9 ஆம் திருநாளில் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. சிறிய தேர் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் நடத்தப்படும் ஆருத்ரா தரிசன ஸ்ரீ மாணிக்கவாசகர் திருநாளில் 9 ஆம் திருநாள் தேரோட்டமாக நடத்தப்பட்டு வந்தது. தற்போது இந்த சிறிய தேர் பழுதடைந்துவிட்டதால் பிரித்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் வசம் உள்ள சட்டத் தேரினை கொண்டு மார்கழி மாத 9 ஆம் நாள் தேரோட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் தற்போது உபயதாரர்கள் மூலம் திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. இத்திருப்பணியுடன் சிறிய தேரையும் உபயதாரர்மூலம் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**31—**

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 22852—திருமதி. செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளியில் நரசிம்மசாமி திருக்கோயிலுக்கும் அன்னதான திட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், நங்கவள்ளி கிராமம், அருள்மிகு நரசிம்மசாமி திருக்கோயிலின் வருமானம் அத்திருக்கோயிலின் அன்றாட செலவினங்களுக்கே போதுமானதாக உள்ளதால், மேற்படி திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**32—**

## குடமுழுக்கு

**வினா எண் 32027—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மணச்சநல்லூர் ஒன்றியம், திருவெள்ளரையில் அருள்மிகு புண்டரீகாட்சபெருமாள் கோயிலை செப்பனிட்டு கும்பாபிஷேகம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், திருவெள்ளரை அருள்மிகு புண்டரீகாட்சபெருமாள் திருக்கோயில் திருப்பணி வேலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, திருப்பணிகளை துவக்குவதற்கு ஏதுவாக 14-11-2003 நாளன்று பாலாலயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.21.25 இலட்சம் மதிப்பீட்டில், உபயதாரர்கள் வழியாக திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணிகள் முடிவுற்றதும், 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதி வாரத்தில் மகா சம்ப்ரோட்சணம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**33—**

### தரைத்தளம்

**வினா எண் 38516—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சுப்பிரமணியர் கோயிலுக்கு தரைத்தளம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வால்பாறை அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் ஐயப்பன் சன்னதி பின்பக்க பகுதியில் 17' x 21' அளவிலும், திருக்கோயில் பக்கம் பகுதியில் 46' x 13' அளவிலும், நவகிரக சன்னதிக்கு பின்பக்கம் 26' x 14' அளவிலும் சிமெண்ட் தரைதளம் உபயதாரர்கள் மூலமாக ரூ.1,00,000/- செலவில் அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோயிலின் முன்புறத்தில் பூஜைக்கு பயன்படும் வகையில் 81' x 13' அளவுள்ள இடத்தில் நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலில் மேலும் தரைத்தளம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



**34—**

### தங்கும் விடுதி

**வினா எண் 41285—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்ய சுவாமி திருக்கோயிலின் தங்கும் விடுதியை நவீன வசதிகளுடன் மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் தொகுதி, திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்ய சுவாமி திருக்கோயிலில் தங்கும் விடுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் சுற்றுலாத் துறையின் மூலம் முடிக்கப்பட்டு திருக்கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் விடுதிகள் தற்போது சேவார்த்திகள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**35—**

### தங்கும் விடுதி

**வினா எண் 48859—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரியில் உள்ள கல்யாண ரெங்கநாதர் சுவாமி ஆலய வளாகத்தில் தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டம் மற்றும் ஒன்றியம், திருநகரியில் உள்ள கல்யாண ரெங்கநாதர் சுவாமி ஆலய வளாகத்தில் போதிய இடவசதியும், நிதிவசதியும் இல்லாததால் தங்கும் விடுதி கட்ட இயலாத நிலை உள்ளது. இருப்பினும் திருநகரியிலிருந்து தெற்கில் 8 கி.மீ. தொலைவில் திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் ஆலய தங்கும் விடுதிகளும், மேற்கில் 10 கி.மீ. தொலைவில் சீர்காழியில் தனியார் தங்கும் விடுதிகளும், திருநகரியிலேயே தனியாருக்குச் சொந்தமான மடங்கள், கூடம் போன்ற விடுதிகளும் உள்ளன.

36—

## தேர் புதுப்பித்தல்

**வினா எண் 49279—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், செவ்வாய்பேட்டை மாரியம்மன் திருக்கோயிலில் பழுதடைந்துள்ள தேர் புதுப்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம், செவ்வாய்பேட்டை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் பழுதடைந்துள்ள தேரினை புதுப்பிக்க ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் உபயப் பணியாக செய்திட 7-5-2004 அன்று நிர்வாக அனுமதியும், 17-5-2004 அன்று தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.



37—

## கோயிலை பழுதுபார்த்தல்

**வினா எண் 50707—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியில் பாலாற்றுக்கு அருகிலுள்ள மதுரைவீரன் கோயிலை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சோமந்துறை ஊராட்சியில் பாலாற்றுக்கு அருகில் உள்ள மதுரைவீரன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். இருப்பினும், மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் அறிவிக்கப்பட்ட 6,000 திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலும் தேர்வு செய்யப்பட்டு ரூ.25,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

38—

## களவு குறித்து நடவடிக்கை

**வினா எண் 50759—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், திருக்கச்சூர் அருள்மிகு அந்தகாரணி சமேத மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற களவு குறித்து எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், அருள்மிகு அந்தகாரணி சமேத மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற களவு குறித்து டி6 மறைமலை நகர் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்களவு தொடர்பாக, இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறை தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**39—**

## திருக்கோயில் சொத்துக்கள்

**வினா எண் 56544—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் பேரூரிலுள்ள அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி அக்கோயிலிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

கோவை மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களுக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அனைத்து இனங்களுக்கும் (373.12 ஏக்கருக்கு) திருக்கோயில் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 22]

**40—**

## சிறப்பு பயிற்சி

**வினா எண் 60684—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு கோயில்கள் குறித்து ஓராண்டு காலம் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படுகின்ற செயல் அலுவலர், நிலை-1க்கு 99 நாட்களும், நிலை-3 மற்றும் நிலை-4 செயல் அலுவலர்களுக்கு 69 நாட்களும் பணியில் சேருவதற்கு முன்னதாகப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் இந்து சமய அறநிலைய சட்ட நிர்வாகம், திருக்கோயில் சொத்துக்கள் பாதுகாத்தல், திருக்கோயில் அன்றாட நிர்வாகம், சைவ-வைணவ சம்பிரதாயங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**41—**

## பேருந்து வசதி

**வினா எண் 2977—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து டி.சோளப்பாடி (செம்மேட்டுக்கு) பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்திலிருந்து டி.சோளப்பாடி வழியாக செம்மேட்டிற்கு நகர் பேருந்து வசதி செய்திடும் பொருட்டு, சாலை தூரம் மற்றும் தகுதிச்சான்று கோரி கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலை மற்றும் கிராமிய பணித் துறை), கிருஷ்ணகிரி அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டு, மேற்படி சான்று பெறப்பட்டதில், பெண்ணாாகரம்-செம்மேடு வழித்தடத்தின் நீளம் 36.04 கி.மீ. என தெரியவந்துள்ளது. இதில் அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டும் 30வது கி.மீலிருந்து 3.5வது கி.மீ வரை நீட்டித்து நகர் பேருந்து வசதி செய்திட வழிவகையுள்ளதால், பெண்ணாகரத்திலிருந்து செம்மேடு கிராமத்திற்கு நகர் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது.

**42—**

### புதிய பேருந்து

**வினா எண் 11240—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியையும், காட்டுமன்னார்கோயில் தொகுதியையும் இணைக்கக் கூடிய வழித்தடங்களில் காடுவெட்டி, மாமங்களம், பக்கிரிமானியம், பெரியகிருஷ்ணாபுரம், பெரியதத்தூர், ஆண்டிமடம் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியையும், காட்டுமன்னார்கோயில் தொகுதியையும் இணைக்கக் கூடிய வழித்தடங்களில் காடுவெட்டி,



2004 நவம்பர் 22]

மாமங்களம், பக்கிரிமானியம், பெரியகிருஷ்ணாபுரம், பெரியதத்தூர், ஆண்டிமடம் வரை 2 நகரப் பேருந்துகள் மூலம் 16 தனி நடைகளும் 2 புறநகர் பேருந்துகள்மூலம் 14 நடைகளும் ஆக மொத்தம் 4 பேருந்துகள்மூலம் 30 தனி நடைகளாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மேற்கூறிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்க இந்த நிதியாண்டில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**43—**

### கான்கிரீட் தளம்

**வினா எண் 14327—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், எடப்பாடி கிளை பணிமனையில் கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், எடப்பாடி கிளை பணிமனையில் கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**44—**

### அச்சகம்

**வினா எண் 14796—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவைப்படும் டிக்கெட் புத்தகங்களை அச்சிட அரசு போக்குவரத்துத் துறை அச்சகம் புதிதாக அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவைப்படும் டிக்கெட் புத்தகங்களை அச்சிட அரசு போக்குவரத்துத் துறை அச்சகம் ஒன்றைப் புதிதாக அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**45—**

## பேருந்து வசதி

**வினா எண் 15736—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் மேலும் பேருந்துகளை அதிகப்படுத்தி இயக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள வால்பாறை தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள அனைத்து பகுதிகட்கும் பயணிகள் அடர்வுக்கேற்ப பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேலும் பேருந்துகளை அதிகப்படுத்தி இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 நவம்பர் 22]

**46—**

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 16906—திரு. எஸ். நடராசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி வழியாக பெங்களூர் செல்லும் பேருந்துகள் பெரியகரம் வழியாக நின்று செல்ல இவ்வரசு வழிவகை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி வழியாக பெங்களூர் செல்லும் பேருந்துகள் அனைத்தும், பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க பெரியகரம் குறுக்குச்சாலையில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் சென்று வருகின்றன.

**47—**

## ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 16926—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் வாகன ஆய்வாளர் அலுவலகம் ஒன்று புதிதாக திறக்கும் செயல்திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) எழாது.

**48—**

**வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்**

**வினா எண் 18150—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு மேலும் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மேலும் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

**பேருந்து வசதி**

**வினா எண் 22653—திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கத்திலிருந்து கோயம்பேட்டிற்கு நேரடியாகச் செல்ல மேலும் அதிகமாக நேரடி பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கத்திலிருந்து கோயம்பேட்டிற்கு மேலும் அதிகமாக நேரடிப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**50—**

**சொகுசுப் பேருந்து**

**வினா எண் 23302—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்த்தாண்டம் வேளாங்கண்ணிக்கு சொகுசுப் பேருந்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு விரைவு போக்குவரத்துக் (தமிழ்நாடு) கழகத்திலிருந்து மார்த்தாண்டம்-வேளாங்கண்ணிக்கு 2 சொகுசு பேருந்துகள் (தடம் எண் 560வி) 15-6-1988 முதல் தொடர்ந்து 2 நடைகளாக நாள்தோறும் இயக்கப்பட்டு வருகின்றது.

**51—**

**பேருந்து வசதி**

**வினா எண் 23625—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணை பணிமனை வரை வந்து செல்லும் பேருந்துகள் அனைத்தையும் மணலி எம்.எம்.டி.ஏ. மாத்தூர் வரை வந்து செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாதவரம் பால் பண்ணை வரை இயக்கப்பட்டு வந்த 29டி வழித்தடம் 28-1-2004 முதல் மணலி எம்.எம்.டி.ஏ. மாத்தூர் வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே மணலி எம்.எம்.டி.ஏ மாத்தூர் வழியாக இயங்கிக்கொண்டிருக்கும் 24 பேருந்துகளையும் அப்பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**52—**

### கூடுதல் பேருந்து

**வினா எண் 28632—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிரனூரிலிருந்து இலுப்பூர் செல்ல கூடுதல் அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிரனூரிலிருந்து இலுப்பூருக்கு ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால் கூடுதல் பேருந்து இயக்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

**53—**

### தினசரி பேருந்து

**வினா எண் 30754—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டையிலிருந்து வீரமாகாளியம்மன் கோயிலுக்கு தினசரி பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து வீரமாகாளியம்மன் கோயிலுக்கு தினசரி 10 நடைகள் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் இயக்கப்படுகின்றன.

**54—**

### பேருந்து வசதி

**வினா எண் 30844—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் பஞ்சாயத்து தெற்கு ராய்ப்பட்டிக்கு புதிய பேருந்து வசதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் பஞ்சாயத்து தெற்கு ராய்ப்பட்டிக்கு புதிய பேருந்து வசதி செய்து தர சாத்தியக்கூறு இல்லை.

55—

## பேருந்து வசதி

**வினா எண் 30875—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், மின்னாத்தூரிலிருந்து புதுக்கோட்டைக்கு பேருந்து வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடத்தில் பகுதி பகுதியாக போதுமான அளவிற்கு பேருந்து வசதி உள்ளதால் புதுக்கோட்டையிலிருந்து மின்னாத்தூருக்கு நேரிடையாகப் பேருந்து வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

## பேருந்து வசதி

**வினா எண் 35904—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலிருந்து கொண்டல், பணங்காட்டிங்குடி, வடரெங்கம், குன்னம், புத்தூர் வழியாக அரசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கைத் தடம் ஒரு புதிய வழித்தடமாகும். மேலும் கோரிக்கைத் தடத்தில் பகுதி பகுதியாக போதுமான அளவிற்கு பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரிக்கைத் தடத்தில் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

57—

## பேருந்து வழித்தடம்

**வினா எண் 37728—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் திருப்பத்தூரிலிருந்து கொத்தூர் வரை செல்லும் தடம் எண் 32, 6 ஆகிய பேருந்துகளை நாட்ராம்பள்ளி பேருந்து நிலையம்—வெள்ளநாயக்கனேரி—சொரக்காயல் நத்தம் வழிச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் திருப்பத்தூரிலிருந்து கொத்தூர் வரை செல்லும் தடம் எண் 32, 6 ஆகிய பேருந்துகளை நாட்ராம்பள்ளி பேருந்து நிலையம்—வெள்ளநாயக்கனேரி—சொரக்காயல் நத்தம் வழியாக இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

## சிற்றுந்து வழித்தடம்

**வினா எண் 37773—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி பகுதிகளில் சிற்றுந்து (மினி பஸ்) ஒதுக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்காமல் வேறு வழித்தடங்களில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி பகுதியில் இயக்கப்பட்டு வரும் சிற்றுந்துகள், தற்பொழுது வழங்கப்பட்ட வழித்தடங்களில் இயக்காமல் வேறு வழித்தடங்களில் இயக்கப்படுகின்றனவா என போக்குவரத்துத் துறையினரால் அவ்வப்போது கண்காணிக்கப்படுவதுடன், திடீர் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு தணிக்கை செய்யும்போது தடம் மாறி அனுமதியற்ற தடத்தில் இயக்கப்பட்டால், அந்த வாகனங்களுக்கு தணிக்கை அறிக்கை வழங்கி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2003 ஆம் ஆண்டில் 53 தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டு, 17 சிற்றுந்துகள் சிறை பிடிக்கப்பட்டுள்ளன.

**59—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 40757—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, திருநகரியிலிருந்து மயிலாடுதுறை வரை இயங்கிக் கொண்டிருந்து நிறுத்தப்பட்ட அரசு பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கைத் தடம் ஒரு புதிய வழித்தடம் ஆகும். இத்தடத்தில் இதற்கு முன் பேருந்துகள் ஏதும் இயக்கப்பட்டு நிறுத்தப்படவில்லை. மேலும் கோரிக்கைத் தடத்தின் அனைத்துப் பகுதிகளும் பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, கோரிக்கைத் தடத்தில் நேரடிப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**60—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 43570—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலிலிருந்து களபம் வரை கூடுதல் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலிலிருந்து களபம் வரை கூடுதல் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**61—**

## பேருந்து வசதி

**வினா எண் 46079—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலிருந்து திருநெல்வேலிக்கு நேராக பேருந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப்பகுதியில் உள்ளதால், குறுகிய வீல் பேஸ் கொண்ட பேருந்துதான் இயக்க இயலும் என்பதால், இத்தடத்தில் விரைவுப் பேருந்து இயக்க இயலாது. எனவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் வால்பாறையிலிருந்து திருநெல்வேலிக்கு நேராக பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**62—**

## விரைவுப் பேருந்து

**வினா எண் 48283—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு விரைவுப் போக்குவரத்துக் (தமிழ்நாடு) கழகத்தின்மூலம் சீர்காழி வழியாக 40 பேருந்துகள் 76 நடைகளாக நாள்தோறும் சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இக்கழகத்திற்கு இருக்கும் நிதிநெருக்கடியில் புதிய வழித்தடத்தில் சீர்காழியிலிருந்து சென்னைக்கு பிரத்தியேகமாக பேருந்து இயக்கும் திட்டம் ஏதுமில்லை.



2004 நவம்பர் 22]

**63—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 52509—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை, திருநகரி வழியாக பெருந்தோட்டம் செல்லும் அரசு பேருந்தை கூடுதலாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை, திருநகரி வழியாக பெருந்தோட்டம் செல்லும் அரசு பேருந்தை கூடுதலாக இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**64—**

## போக்குவரத்துக் கழகங்கள் இணைத்தல்

**வினா எண் 54128—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களை இணைப்பது குறித்த கருத்துரு மீதான இறுதி ஆணை மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசு பெற்றுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) போக்குவரத்துக் கழகங்களை இணைப்பது குறித்த கருத்துரு மீதான இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு விட்டன.

(ஆ) ஏற்கெனவே மாநகர போக்குவரத்துக் கழகம் (கோ.1 மற்றும் 2) அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (கோ.1 மற்றும் 2)ம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் (கோ.1 மற்றும் 2)ம் ஒருங்கிணைக்கப்பட்டு விட்டன. மேலும் 30-12-2003 மற்றும் 6-1-2004 நாளிட்ட மத்திய அரசிதழில் 16 போக்குவரத்துக் கழகங்களை 5 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைத்து இறுதி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

65—

## தொழில்நுட்பப் பூங்கா

**வினா எண் 1792—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்பப் பூங்காவினை தொடர்ந்து செயல்படுத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

இத்திட்டத்திற்கு அரசு மொத்தம் 2,094 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி டிட்கோ நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இதில் 1,634 ஏக்கர் பட்டா நிலத்தை டிட்கோ நிறுவனத்தின் கூட்டு முயற்சி நிறுவனமான அட்மாக் நிறுவனத்தின் பெயருக்கு மாற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அன்னிய நாட்டினர் முதலீடு செய்ய இந்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பூங்காவுடன் தூத்துக்குடி துறைமுகம் / விமான நிலையத்தை இணைக்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலை 7 மற்றும் 7Aஐ நான்கு வழிப்பாதையாக மாற்ற இந்திய



அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. திட்டத்திற்காக தாமிரபரணி ஆற்றிலிருந்து 6.77 எம்ஜிடி தண்ணீர் எடுத்துக்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் நிதிச் சலுகைகள் மற்றும் சட்டப்படியான ஆதரவுகள் அளித்து விரிவான சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையினை அரசு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி முடிவுகளை எட்டி திட்டப் பணிகளை விரைவில் தொடங்குமாறு சகதொழில் முனைவர் வலியுறுத்தப்பட்டு வருகிறார்.

66—

## புதிய தொழில் கொள்கை

**வினா எண் 5253—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய தொழில் கொள்கை ஒன்றை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் புதிய தொழில் கொள்கை 16-9-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய தொழில் கொள்கையில் தகவல் தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

67—

## பின்தங்கிய பகுதி

**வினா எண் 5790—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) வால்பாறை தொகுதியை மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**68—**

## உயர் தொழில் பூங்கா

**வினா எண் 7239—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியத்தில் ஓர் உயர் தொழில் பூங்கா சர்வதேச அளவில் நிறுவிட போதிய நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில் விரைவாக நிறுவிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் அரசு மற்றும் டிட்கோ நிறுவனம் சார்பில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. சகதொழில் முனைவர் நிதி முடிவுகளை இன்னமும் எட்டாத காரணத்தினால் திட்டச் செயலாக்கம் தாமதப்படுகிறது. நிதி முடிவுகளை விரைவில் எட்டி, திட்டப் பணிகளைத் தொடங்குமாறு சகதொழில் முனைவர் வலியுறுத்தப்பட்டு வருகிறார்.

**69—**

## ஒப்பந்தப் புள்ளி

**வினா எண் 11561—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

சேலம், தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் எந்த ஒப்பந்த அடிப்படையில் கொண்டப்பநாயக்கன்பட்டியிலுள்ள 47 ஏக்கர் சுரங்க நிலத்தை திருவாளர் இந்தியா மெக்னீசியா புராடக்ட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திடம் இருந்த 47 ஏக்கர் மேக்னசைட் சுரங்க குத்தகையை வேதியியல் தரம் மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் கூட்டு நிறுவனமாக தொடங்கப்பட்ட இந்தியா மெக்னீசியா புராடக்ட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 1993 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.

**70—**

## தொழிற்சாலை துவங்குதல்

**வினா எண் 17212—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டில் வாழும் தமிழர்மூலம் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பெரிய அளவிலான தொழில் முதலீட்டாளரை கவரும் வண்ணம் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (கைடன்ஸ்) ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை ரூ.25055.99/- கோடி முதலீட்டில் 1972-ல் பெரும் முதலீட்டு பிரேரணைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள்மூலம் தமிழ்நாட்டில் மேலும் பல முதலீடுகளை ஈர்க்க இதற்கென்று தனியாக ஒரு இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 22

71—

**தொழிற்சாலை துவங்குதல்**

**வினா எண் 18817—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டில் வாழும் தமிழர் தொழில் முனைவோர் கூட்டுச் சங்கம் (Tamil N.R.I. Consortium) மூலம் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இந்தத் திட்டம் பரமக்குடிக்கு விரிவுபடுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அயல்நாட்டு முதலீட்டினை அதிகப்படுத்தவும், மாநிலத்திற்கு தொழில்நுட்பத்தினை சேர்க்கவும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் அடங்கிய தமிழ்நாடு அயல்நாட்டுவாழ் இந்தியர் கூட்டமைப்பு ஏற்படுத்துவதை செயல்படுத்தும்முகமாக ஒரு தனி இணையதளம் 9-1-2003 முதல் செயல்பட துவங்கியுள்ளது.

72—

**பதப்படுத்தும் தொழிற்சாலை**

**வினா எண் 23770—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "டிட்கோ" நிறுவனம் பயனீர் ஃபார்ம் என்ற நிறுவனத்துடன் இணைந்து கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் கோழிக்கறி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உத்தேசித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இது போன்று சுகுணா ஃபுட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து உடுமலைப்பேட்டையில் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) டிட்கோ நிறுவனம், சுகுணா ஃபுட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராமநல்லூர் கிராமத்தில் கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவியுள்ளது. அவ்வாலையில் உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது.

73—

**கூட்டமைப்பு**

**வினா எண் 23781—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதற்கும், தொழில்நுட்ப உத்திகளை தமிழகத்திற்கு கொண்டுவர "வெளிநாட்டு இந்திய தமிழர்களின் கூட்டமைப்பு" எப்போது செயல்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

அயல்நாட்டு முதலீட்டினை அதிகப்படுத்தவும், மாநிலத்திற்கு தொழில் நுட்பத்தினை சேர்க்கவும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் அடங்கிய தமிழ்நாடு அயல்நாட்டு வாழ் இந்தியர் கூட்டமைப்பு ஏற்படுத்துவதை செயல்படுத்தும்முகமாக ஒரு தனி இணையதளம் 9-1-2003 முதல் செயல்பட துவங்கியுள்ளது.

74—

**தொழில்நுட்பப் பூங்கா**

**வினா எண் 28654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சிறுசேரியில் எத்தனை ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமையவுள்ளது?

[2004 நவம்பர் 22

(ஆ) அது எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சிறுசேரியில் 980 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில், சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே 39 தொழில் நிறுவனங்களுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. ஸான்சா இந்தியக் குழுமம் என்ற இங்கிலாந்து நாட்டு கிளை நிறுவனம் தனது உற்பத்தியை செயல்படுத்தி உள்ளது. மேலும் பல்வேறு நிறுவனங்கள் தங்கள் தொழில் கூடத்தை வெகு விரைவில் தொடங்க உள்ளன.

**75—**

## பங்கு விற்பனை

**வினா எண் 30260—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பங்கு விற்பனை செய்யும் விதிமுறைகள் யாது?

(ஆ) பங்கு விற்பனை மூலம் கடந்த 10 ஆண்டுகளில் இக்கழகத்திற்கு கிடைத்த இலாபம் மற்றும் நஷ்டம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தன்னுடைய சமபங்குகளை விற்பனை செய்வதற்கு அரசாணை நிலை எண் 448, நிதித்துறை, நாள் 19-6-1991 மற்றும் இவ்வரசாணையைத் திருத்திப் பிறப்பிக்கப்பட்ட அரசாணை நிலை எண் 410, நிதித்துறை, நாள் 7-6-1999 ஆகிய அரசாணைகளில் கீழ்க்கண்ட ஐந்து கோட்பாடுகள் குறித்து



2004 நவம்பர் 22]

வெளியிடப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் பங்குகளின் விலை தீர்மானிக்கப்படுகிறது.

1) முதலீட்டு மதிப்பு

2) நிகர மதிப்பு

3) அங்காடி மதிப்பு

4) வருமானம் ஈட்டும் பங்குகளின் மதிப்பு

5) முகமதிப்பு

| (ஆ) சமபங்கு விற்பனையின் நிதியாண்டு | சமபங்கு விற்பனை குறித்த ஆதாயம் (ரூபாய்) |
|---|---|
| 1991-1992 | ரூ.4,03,94,764 |
| 1993-1994 | ரூ.52,42,50,700 |
| 1995-1996 | ரூ.1,23,40,611 |

1996-1997-ஆம் ஆண்டிலிருந்து பங்குகள் விற்பனை செய்யப்படவில்லை. மேலும் பங்கு விற்பனை குறித்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு இழப்பு ஏதும் இல்லை. ஆதாயமே ஈட்டியுள்ளது.

**76—**

## அந்நிய முதலீடு

**வினா எண் 31909—திரு. ராதாரவி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்நிய நாட்டினர் தமிழகத்தில் முதலீடு செய்துள்ள தொழில்கள் யாவை?

(ஆ) அகில இந்திய அடிப்படையில் இதன் விகிதாச்சாரம் என்ன?

(இ) அந்நிய முதலீட்டை கவருவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) அந்நிய நாட்டினர் தமிழகத்தில் முதலீடு செய்துள்ள தொழில்கள் பின்வருமாறு:

(i) பிரான்ஸ்-செயின்ட் கோபைன் நிறுவனத்தின் கண்ணாடி தொழிற்சாலை.

(ii) அமெரிக்கா-ஃபோர்டு நிறுவனத்தின் கார் தொழிற்சாலை.

(iii) இங்கிலாந்து-ஸான்சா நிறுவனத்தின் மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழிற்சாலை மற்றும்

(iv) தென்கொரியா-ஹூண்டாய் நிறுவனத்தின் கார் தொழிற்சாலை.

(ஆ) அகில இந்திய அடிப்படையில் தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ள முதலீட்டின் விகிதாச்சாரம் 8.60% ஆகும்.

(இ) அந்நிய முதலீட்டை கவருவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்:—

தமிழ்நாட்டிற்கு அந்நிய நேரடி முதலீட்டைக் கவரும் வகையில் புதிய தொழில் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுடன் தமிழ்நாடு போட்டியிடும் வண்ணம், உள் கட்டமைப்பு வசதி பலப்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களிடையே நட்புச் சூழலை உருவாக்க தொழில் ஒழுங்கு மற்றும் நடைமுறை விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. வெளிநாட்டவர் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய என்னென்ன வசதிகள் உள்ளன என்ற விவரங்கள் இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், வெளிநாட்டிலிருந்து வரும் தொழில் பயணக் குழுக்களுக்கு விளக்கப்படம் சமர்ப்பித்து அவர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ள வசதிகள் செய்து தரப்படுகின்றன.

**77—**

**மின்சார வசதி**

**வினா எண் 43938—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், குருவிகல்காடு கிராமத்தில் மின்சார வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட குருவிகல்காடு கிராமத்திற்குத் தற்போது சிறவூலாம்பாளையம் மின்மாற்றி 2-ன் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குருவிக்கல்காடு கிராமத்தில் 9 வீடுகள், ஒரு தெருவிளக்கு மற்றும் ஒரு சிறிய மேல்நிலைத் தொட்டி ஆகியவைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு சீரான மின்சாரம் விநியோகிக்கப்பட்டு முழுமையாக மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

**78—**

**அரசு அனுமதி**

**வினா எண் 43525—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில் துறை மூலம் எத்தனை வெளிநாட்டு நிறுவனங்கள் தொழில் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது ?

(ஆ) அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தொழில் துறைமூலம் 2,424 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தொழில் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இவற்றில் 594 நிறுவனங்கள் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்டவையாகும்.

**79—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 3706—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினத்தில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி மொரப்பூருக்கு மாற்றப்பட்டதை மீண்டும் காவேரிப்பட்டினத்தில் விடுதி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் 1972 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், காவேரிப்பட்டினத்தில் 1976 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. இதில் எவ்வித மாறுதலும் செய்து ஆணையிடப்படவில்லை. ஒப்பளிப்பு செய்யப்பட்ட இடங்களிலேயே தற்போதும் இயங்கி வருகின்றன.





**80—**

**இலவச நோட்டுப் புத்தகம்**

**வினா எண் 5369—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவது போல மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் நடைமுறையில் இல்லை. இருப்பினும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையினரால் மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கிவரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8-வது வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு மட்டும் நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

**81—**

**ஊக்கத் தொகை**

**வினா எண் 5374—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்ற ஆண்டு 3, 4, 5 வகுப்புகள் படிக்கும் மிகவும் பிறப்டுத்தப்பட்ட மாணவிகளுக்கு அரசு வழங்கிய ஊக்கத் தொகை (Gift) அனைத்து குழந்தைகளுக்கும் இந்த ஆண்டு வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

3, 4, 5 வகுப்புகளில் பயிலும் 60,000 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் நிதி ஆண்டுகளில் ஊக்கத் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**82—**

**மாணவர் எண்ணிக்கை**

**வினா எண் 7385அ—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவ—மாணவியர் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு 2002-2003-ல் 10 கூடுதல் இடங்கள் வழங்கப்பட்டன. மிக அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்படாததால் மாணவர் எண்ணிக்கையை நிரந்தரமாக உயர்த்தத் தேவையில்லை.

**83—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 16745—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, பி. ஆண்டிக்குப்பம் கிராம மக்களுக்கு அரசு நிலம் ஆர்ஜிதம் செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பி. ஆண்டிக்குப்பம் கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**84—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 18393—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், எஸ்.ஜெ.எஸ்.டி. மில் அருகில் உள்ள பாலாஜி நகரில் வாழும் நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், எஸ்.ஜெ.எஸ்.டி. மில் அருகில் உள்ள பாலாஜி நகரில் வாழும் நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

[2004 நவம்பர் 22

85—

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 19335—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் ஈழவர், தீயர் சமூகத்தினருக்குப் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ்கள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஈழவர் மற்றும் தீயர் வகுப்புகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறவில்லையாதலால் அப்பெயர்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு சான்றிதழ் பெற முடியாது. ஆனால், ஈழுவா என்னும் வகுப்பு கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வகுப்பினைச் சேர்ந்தோர் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பு சான்றிதழ் பெற முடியும். இல்லுத்துப் பிள்ளைமார், இல்லுவர், ஈழுவர், இல்லத்தார் வகுப்புகள் தமிழ்நாடு முழுவதிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வகுப்புகளைச் சேர்ந்தோர் தமிழ்நாடு முழுவதிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு சான்றிதழ் பெற முடியும்.

86—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 21662—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தோர் இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி எவ்வளவு பேர் விண்ணப்பித்தனர்?



2004 நவம்பர் 22]

(ஆ) அவர்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சலவைத் தொழிலாளர்கள் 42 பேரும், முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்த 59 பேரும் வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பித்தனர்.

(ஆ) பயனாளிகளின் தகுதியின் அடிப்படையில், 23 சலவைத் தொழிலாளர்களுக்கும், 7 முடிதிருத்துவோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

87—

## பள்ளி தரம் உயர்த்தல்

**வினா எண் 22716—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து, குப்பணம்பட்டி அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, குப்பணம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 நவம்பர் 22

88—

## சான்றிதழ்

**வினா எண் 23888—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக வசித்து வரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தொட்டியநாய்க்கர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு தொட்டியநாய்க்கர் என சான்றிதழ் மறுக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தொட்டியநாய்க்கர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு சான்றிதழ் மறுக்கப்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அம்மாவட்டத்தில் வாழும் உண்மையான தொட்டியநாய்க்கர் சமூகத்தினருக்கு அவ்வப்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

89—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 30288—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா?



2004 நவம்பர் 22]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எதும் இல்லை.

90—

## மகளிர் விடுதி

**வினா எண் 31374—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் சி.எஸ்.ஐ. தென்னிந்திய திருச்சபை, அரசுக்குச் சொந்தமான 1 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தை மீட்டு அதில் 25 சென்ட் நிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாராபுரம், சி.எஸ்.ஐ. நிறுவனத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையிலுள்ளதால், வழக்கு முடியும் வரை மேற்படி இடத்தில் தாராபுரம் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக் கட்டடம் கட்ட இயலாது.

[2004 நவம்பர் 22

91—

## மாணவர் விடுதி

**வினா எண் 33510—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

92—

## ஒதுக்கீட்டுத் தொகை

**வினா எண் 34438—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு இலவச வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படவில்லை.



2004 நவம்பர் 22]

எனவே, வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்படும் தொகையை உயர்த்தும் தேவை எழவில்லை.

93—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 34605—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரம் ஊராட்சியில் மிகவும் பின்தங்கியவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா அரசு மூலம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தொகுதி, கோமாபுரம் ஊராட்சியில் நடப்பாண்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

94—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 34740—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்கு உட்பட்ட நல்லநாயகபுரம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட நல்லநாயகபுரம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் கோரிக்கை ஏதும் வரவில்லை. மேலும், திட்டமும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**95—**

## விடுதிக்கு கட்டட வசதி

**வினா எண் 34931—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரம் ஊராட்சி, கோமாபுரத்தில் உள்ள சீர்மரபினர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் 100 விடுதிகளுக்கு கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 49, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 10-9-2004-ல் வெளியிடப்பட்ட அரசாணையில் புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் சீர்மரபினர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



**96—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 34932—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் படிக்கும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதிகள் கூடுதலாகக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**97—**

## மாணவர் விடுதி

**வினா எண் 35906—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், துளசேந்திரபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**98—**

**மாணவியர் விடுதி**

**வினா எண் 35907—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், துளசேந்திரபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர்களுக்கு விடுதி கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**99—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 35908—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2004 நவம்பர் 22]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாசலில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஏற்கெனவே இயங்கி வருகிறது. அங்கு மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**100—**

**மாணவியர் விடுதி**

**வினா எண் 35910—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர்களுக்கு விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**101—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 36064—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) ஆண்டிமடம் தொகுதியில் திருக்களப்பூர் உயர்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**102—**

**மாணவியர் விடுதி**

**வினா எண் 36065—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் ஆண்டிமடம் அரசு மேனிலைப் பள்ளி மாணவியருக்கு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிலம் கிடைப்பது மற்றும் அரசின் நிதிநிலையைப் பொறுத்து ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்ட, வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.



2004 நவம்பர் 22]

**103—**

**வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 36983—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை, தேவனூர் புதூர், வாளவாடி, கொமரலிங்கம், மடத்துக்குளம், பாப்பாக்குளம், தனி சங்கராமநல்லூர் பகுதிகளிலுள்ள ஏழை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோருக்கு வீடுகள் அல்லது வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை, தேவனூர் புதூர், வாளவாடி, கொமரலிங்கம், மடத்துக்குளம், பாப்பாக்குளம், தனி சங்கராமநல்லூர் பகுதியிலுள்ள ஏழை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோருக்கு வீடுகள் மற்றும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**104—**

**மாணவியர் விடுதி**

**வினா எண் 39570—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு மாவட்டத் தொழில் மையத்தில் சுய தொழில் தொடங்க கடன் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் மாவட்ட தொழில் மையத்தில் சுய தொழில் தொடங்க தனியே கடன் வசதி செய்து தரும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**105—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 40910—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**106—**

**ஆசிரியர் பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 55328—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) நாகை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் இனத்தவர்களுக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் இனத்தவருக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**107—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 18932—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அ. வாசுதேவனூர் பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) 10,000 கால்நடைகளுக்கு மேல் உள்ள பகுதிகளில்தான் கால்நடை மருந்தகம்/மருத்துவமனை துவக்கப்படுகிறது. சின்னசேலம் தொகுதி அ. வாசுதேவனூர் பஞ்சாயத்தில் 2849 கால்நடைகள் மட்டுமே உள்ளது. மேலும், அதன் அருகில் 6 கி.மீ. தூரத்தில் சின்னசேலம் மற்றும் அனுமானந்தலில் கால்நடை மருந்தகங்களும், குராலில் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, அ. வாசுதேவனூர் பஞ்சாயத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க இயலாது.

(ஆ) எழாது.

[2004 நவம்பர் 22

**108—**

### கால்நடை துணை மருத்துவமனை

**வினா எண் 19057—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை பெரிய பாப்பானூத்துப் பிரிவில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்க தடையாணை இருப்பதால் உடுமலைப்பேட்டை பெரிய பாப்பானூத்துப் பிரிவில் கால்நடை கிளை நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**109—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 19385—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட நாரலப்பள்ளி ஊராட்சி, மகராஜக்கடை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது இக்கிராமத்தில் பார்வை கால்நடை மருத்துவக் கிளை நிலையமும், 4 கி.மீ. தூரத்தில் மேகலசின்னப்பள்ளி 'கால்நடை கிளை



2004 நவம்பர் 22]

நிலையமும் இயங்குவதால் மகராஜக்கடை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**110—**

### சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 24187—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர் கால்நடை மருத்துவமனையில் சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர் கால்நடை மருத்துவமனை சுற்றுச்சுவர் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் நிதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**111—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 24343—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர், பக்கநாடு ஆகிய இரண்டு ஊருக்கும் சேர்த்து ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், ஆடையூர், பக்கநாடு ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 26,136 ஆகும். மாநில திட்டக் குழு புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க தடை ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அரசு தடை ஆணை பிறப்பித்துள்ளது. அரசு, துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தி வருகிறது. சேலம் மாவட்டம் ஆடையூர் மற்றும் பக்கநாடு ஆகிய கிராமங்களில் எந்த ஒரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

112—

## இலவச ஆயுள் காப்பீடு

**வினா எண் 31638—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்டங்களில் அதிக ஆடுகளைப் பாதிக்கும் நீலநாக்கு நோயைக் கட்டுப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இந்நோயால் மடியும் ஆடுகளுக்கு இலவச இன்ஷுரன்ஸ் ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தென் மாவட்டங்களில் நீலநாக்கு நோயினைக் கட்டுப்படுத்த தமிழக அரசு ஒரு திட்டத்தினைச் செயல்படுத்துகிறது.

(ஆ) அரசு திட்டங்கள்மூலம் ஏழை எளியோர்களுக்கு வழங்கப்படும் கால்நடைகள் மட்டுமே காப்பீடு செய்யப்படுகின்றன.





113—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 32827—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதி, இராமநாயக்கன்பேட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நாட்றாம்பள்ளி தொகுதி, இராமநாயக்கன்பேட்டை கிராமத்தின் அருகில் 3 கி.மீ. தூரத்தில் அம்பலூர் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. இராமநாயக்கன்பேட்டையில் தற்போது எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

114—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 35702—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம் மஞ்சப்பேட்டையில் கால்நடை மருததுவமனை அமைத்துத் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், மஞ்சப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**115—**

### சுற்றுச்சுவர்

**வினா எண் 39168—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி, கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி, கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் நிதி ஒதுக்கீடு இல்லாமையால் தற்போது செயற்படுத்த வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**116—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 41422—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம், அளக்குடி ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் பெருமங்கலம் கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் திருப்புங்கூர் என்னுமிடத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்படுவதால் அங்கு புதிய கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது இயலாது. தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், மாநில திட்டக் குழு புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கத் தடை ஆணை வழங்கி உள்ளதாலும், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடை ஆணை அமலில் உள்ளதாலும் தற்போதுள்ள நிதிநிலைமை காரணமாகவும் அளக்குடியில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு புதிய மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

**117—**

### கால்நடை கிளை மருத்துவமனை

**வினா எண் 41505—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, தோரணம்பதி ஊராட்சி, தாதக்குள்ளனூர் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட மாநிலத் திட்டக்குழு தடை ஆணை விதித்துள்ளதாலும், புதிய பணியிடங்களை ஒப்பளிப்பதற்கு அரசு தடை விதித்துள்ளதாலும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கோட்டம், நாட்றாம்பள்ளி ஊராட்சியில் உள்ள தாதக்குள்ளனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

**118—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 43038—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரம் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக 7,991 மட்டுமே உள்ளது. இதன் அருகில் 5 கி.மீ. தூரத்தில், வேலாடிப்பட்டி கால்நடை மருந்தகமும், கந்தர்வக்கோட்டை கால்நடை மருத்துவமனையும் உள்ளது. இந்நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் இப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும், துறையின்கீழ் உள்ள கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே



கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்க விதித்துள்ள தடை ஆணை இன்னும் அமலில் இருந்து வருகிறது. ஆதலால் கணபதிபுரம் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வழிவகை இல்லை.

(ஆ) எழாது.

**119—**

**பகுதி நேர கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 46965—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் திருக்கடுகாவூர் ஊராட்சியில் பகுதி நேர கால்நடை மருத்துவமனை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் திருக்கடுகாவூர் ஊராட்சியில் 1011 கால்நடைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேர கால்நடை கிளை நிலையங்கள் சரிவரச் செயல்படாததால் அவற்றை மூடிவிட ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, திருக்கடுகாவூர் கிராமத்தில் புதியதாக ஒரு பகுதிநேர கால்நடை மருத்துவமனை துவங்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**120—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 47130—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் வடரெங்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் வடரெங்கம் ஊராட்சியின் அருகில் 7 கி.மீ. தூரத்தில் கொண்டல் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்காணும் கால்நடை கிளை நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் இப்பகுதியிலுள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும் மாநில திட்டக் குழு புதிய கால்நடை கிளை நிலையம் துவக்க தடை ஆணை பிறப்பித்துள்ளது. தற்போது அரசு கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தி வருகிறது. ஆதலால் வடரெங்கம் கிராமத்தில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வழிவகை இல்லை.

(ஆ) எழாது.

**121—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 47463—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, புள்ளனேரி மற்றும் வெலக்கல்நத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, புள்ளனேரி மற்றும் வெலக்கல்நத்தம் ஊராட்சிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக முறையே 679, 3,134 என்ற எண்ணிக்கையில் உள்ளது. புள்ளனேரிக்கு 3 கி.மீ. தூரத்திலும் வெலக்கல்நத்தம் கிராமத்திற்கு 10 கி.மீ. தூரத்திலும் புதுப்பேட்டையில் ஒரு கால்நடை மருந்தகமும் திரியாலம் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும் இதன்மூலம் பெறப்படும் சிகிச்சைப் பணிகள் போதுமானதாக இருப்பதாலும் தற்போது அரசு கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தி வருவதாலும் புள்ளனேரி மற்றும் வெலக்கல்நத்தம் ஆகிய கிராமங்களில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க வழிவகையில்லை.

**122—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 48571—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கார்சேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை மாவட்டம், கார்சேரி கிராமத்தில் மிகக் குறைவான எண்ணிக்கையில் கால்நடைகள் உள்ளன. இதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் சக்குடி கால்நடை மருந்தகமும், 6 கி.மீ. தூரத்தில் கருப்பாயூரணி

கால்நடை மருந்தகமும், 4 கி.மீ. தூரத்தில் ஆண்டார் கொட்டாரம் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே மருந்தகமாகவும், மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், கார்சேரி கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

123—

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 48583—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு கிராமத்தில் 7,893 கால்நடைகள் உள்ளன. அக்கிராமத்திற்கு 8 கி.மீ. தொலைவில் மேல்சிறுவாலூரில் கால்நடை மருந்தகமும், 6 மற்றும் 7 கி.மீ. தொலைவில் முறையே ஈருடையாள்பட்டு மற்றும் வானாபுரம் ஆகிய ஊர்களில் கால்நடை கிளை நிலையங்களும் உள்ளன. இதன் காரணமாக மூங்கில் துறைப்பட்டு கிராமத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.





124—

### கால்நடை மருந்தகம்

**வினா எண் 48946—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, ஸ்ரீதேவி மங்களம் ஊராட்சி, ஸ்ரீதேவி மங்களத்தில் கால்நடை மருந்தகம் அமைத்துத்தர நடப்பாண்டில் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருச்சி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீதேவி மங்களத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000 க்கும் குறைவாக 6,260 மட்டுமே உள்ளது. இதன் அருகில் 4 கி.மீ. தூரத்தில் பாடாலூர் கால்நடை கிளை நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் செட்டிக்குளம் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. தற்போது துறையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டும் கால்நடை மருந்தகமாகவும், மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருவதால் ஸ்ரீதேவி மங்களத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

125—

### தமிழ் நாள்காட்டி

**வினா எண் 2231—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

ஆங்கில நாட்காட்டி போல தமிழ் (வருடங்களை) நாள் காட்டும் நாள்காட்டிகளை நடைமுறைக்கு கொண்டு வர அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு.சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் ஆணைகள், கடிதங்கள், செய்தி மற்றும் ஏனைய வெளியீடுகளிலும் கிருத்துவ ஆண்டுடன், தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டும் இடம் பெற வேண்டும் எனவும், துறைத் தலைவர்கள் தம் கீழுள்ள அனைத்து சார்நிலை அலுவலகங்களும், இவ்வாணையைப் பின்பற்றும்படி வலியுறுத்துமாறும், 3-2-1981 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அரசாணை எண்.91-இல் அரசு ஆணையிட்டுள்ளது. அரசு அலுவலகங்களில் இது பின்பற்றப்பட்டு வருகிறது.

**126—**

### பொறியியல் பல்கலைக்கழகம்

**வினா எண் 2921—திரு. அன்பில் பெரியசாமி :** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மண்டல பொறியியல் கல்லூரியை தலைமையிடமாகக் கொண்டு புதிய பொறியியல் பல்கலைக்கழகம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு.சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.



2004 நவம்பர் 22]

**127—**

### பெண்கள் கல்லூரி

**வினா எண் 3741—திரு. எஸ்.எம். சீனிவேல் :** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றத்தில் பெண்கள் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு.சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. அரசின் நிதியுதவியின்றி சுயநிதிக் கல்லூரிகள் திறப்பது குறித்து தனியார் கல்வி முகமைகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

**128—**

### இளநிலை பட்டம்

**வினா எண் 4178—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொலைதூர கல்வியகத்தின் மூலம் 4 ஆண்டுகளில் ஒரே நேரத்தில் 2 இளநிலைப் பட்டங்கள் பெறும் திட்டம் அமல்படுத்தி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதே முறையை மற்ற பல்கலைக்கழகங்களிலும் கொண்டு வர பரிந்துரை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) பாரதியார் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்ஸி., கணினி அறிவியல் துறையிலும், அண்ணா பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையிலும் இரட்டைப் பட்டப்படிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிற பல்கலைக்கழகங்களில் இரட்டைப் பட்டப்படிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

மேலும், இப்பொருள் தொடர்பாக அந்தந்த பல்கலைக்கழகங்களின் முடிவின்படி 4 ஆண்டுகளில் இளநிலைப் பட்டங்கள் பெறும் திட்டம் அமல்படுத்திட அரசின் அனுமதி தேவையில்லை. பல்கலைக்கழகச் சட்டவிதிகளில் இதற்கென தக்க வழிமுறைகள் உள்ளன.

**129—**

## மொழிக் காவலர் ஓய்வூதியம்

**வினா எண் 8219—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிக் காவலர்களின் ஓய்வூதியம் வழங்குவதை அரசு விரைவுபடுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொழிக்காவலர் தொடர்பிலமைந்த சட்டம் 23/1983 அதனையடுத்து அரசாணை (நிலை) எண் 21, தமிழ் வளர்ச்சி பண்பாடு துறை, நாள் 20-6-1984-இல் வெளியிடப்பட்ட விதிகள்



ஆகியவற்றின்படி, மொழிக் காவலர் ஓய்வூதியம் வேண்டும் விண்ணப்பங்கள்மீது மாவட்ட ஆட்சியரின் அறிக்கை பெற்று, அரசால் அமைக்கப்படும் உயர்நிலைக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்பெற்று, உயர்நிலைக் குழு மேற்கொள்ளும் முடிவிற்கிணங்க, முடிவான ஆணைகள் அரசால் வெளியிடப்பட்டு வருகின்றன. உண்மையான மொழிக் காவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுதலை உறுதி செய்திடவும், அரசின் ஓய்வூதியம் தகுதியுடையவர்களுக்கு மட்டுமே வழங்கப்புடுதலை உறுதிப்படுத்திக்கொள்ளவும் மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது தவிர்க்க இயலாததாக உள்ளது. விரைவுபடுத்துவதற்குரிய செயல் திட்டங்கள் குறித்து உயர்நிலைக் குழுவின் முடிவுகள் விரைந்து இனி செயற்படுத்தபபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**130—**

## மறுமதிப்பீடு

**வினா எண் 8457 திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நடந்த +2 தேர்வில் (2001 ஆம் ஆண்டு எத்தனை மாணவ/மாணவியர்கள் மறு மதிப்பீட்டிற்கு (Revaluation) பணம் செலுத்தி விண்ணப்பித்தார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு அதிகப்படியாக மதிப்பெண்கள் கிடைத்துள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) 2001-ம் ஆண்டு நடந்த +2 தேர்வில் மறுமதிப்பீட்டிற்கு பணம் செலுத்தி விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை — 1100.

(ஆ) விண்ணப்பம் செய்தவர்களில் அதிகப்படியான மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவியர் எண்ணிக்கை — 382.

[2004 நவம்பர் 22

131—

### மொழிக்காவலர் ஓய்வூதியம்

**வினா எண் 8951—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிக்காவலர் ஓய்வூதியம் இன்னும் பெறாதவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொழிக்காவலர் ஓய்வூதியம் இன்னும் பெறாதவர்கள் எவ்வளவு பேர் என்று கணக்கிடுவதற்குரிய ஆவணங்கள் இல்லை. ஓய்வூதியம் பெற விரும்புவோர் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு உரிய படிவத்தில் விண்ணப்பித்தால், அதன்மீது மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை பெற்று உயர்நிலைக் குழுவில் வைத்து பரிந்துரையுடன் வரப்பெறும் விண்ணப்பங்களை அரசு பரிசீலித்து நிதியுதவி வழங்கப்படும்.

132—

### கலைக் கல்லூரி

**வினா எண் 9162—திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தேவையின் அடிப்படையில் நிதி நிலைமைக்கேற்ப அந்தந்த பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமை சீரான பின் கலைக் கல்லூரிகளைத் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். அரசின் நிதி உதவியின்றி கலைக் கல்லூரிகளைத் துவக்க விண்ணப்பங்கள் தனியார் முகமைகளிடமிருந்து பெறப்பட்டால் பரிசீலிக்கப்படும்.

133—

### பணியாளர்கள் விவரம்

**வினா எண் 10243—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மொத்தம் எவ்வளவு பணியாளர்கள் (ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள்) பணி செய்கிறார்கள்?

(ஆ) இதில் எஸ்.சி./எஸ்.டி. பணியாளர்கள் எவ்வளவு பேர் பணி செய்கின்றார்கள்?

(இ) பணி செய்யும் சதவீதம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொத்தம் 3,420 ஆசிரியர், பேராசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

[2004 நவம்பர் 22

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பணியாளர்களின் எண்ணிக்கை 336 ஆகும்.

(இ) பணிபுரியும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பணியாளர்கள் 9.82 விழுக்காடாகும்.

**134—**

## ஆசிரியர் பயிற்சி

**வினா எண் 10249—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிகள் ஆசிரியர் பயிற்சியில் மாணவர்களைச் சேர்ப்பதில் அரசின் சட்ட விதிகள் சரியாக கடைபிடிக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) சட்ட விதிகள் சரியாகக் கடைப்பிடிக்காமல் இடம் ஒதுக்கப்படுவதால் ஏழை, எளிய மாணவர்கள் கடந்த ஐந்தாண்டுகளாக பட்டதாரி ஆசிரியர் பயிற்சியில் சேர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், பட்டதாரிகள் ஆசிரியர் பயிற்சியில் அரசால் பரிந்துரைக்கப்படும் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு தகுதியின் அடிப்படையிலும், அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையிலும் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

(ஆ) சட்ட விதிகள் கடைபிடிக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மிக அதிக அளவில் பலன் பெற்று வருகின்றனர்.



2004 நவம்பர் 22]

**135—**

## ஆசிரியர் நியமனம்

**வினா எண் 10292—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர்கள் விகிதாசாரத்திற்குக் குறைவாகவே ஆசிரியர்கள் இருப்பதும், போதிய கட்டட வசதியில்லாமல் இருப்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், மாணவர்கள் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா?

(இ) இக்கல்லூரிக்குப் போதிய கட்டட வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): அரசு கல்லூரிகளில் மாணவர்கள் விகிதாசாரத்தின்படி ஆசிரியர் நியமனம் மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக பணிப் பளு அடிப்படையில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்து அதற்கேற்ப பணியிடங்கள் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கல்லூரிக்கு கட்டட வசதி ஏற்படுத்துவது குறித்து அக்கல்லூரியிலிருந்து கோரிக்கை பெறப்பட்டால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**136—**

## கலைக் கல்லூரி

**வினா எண் 12197—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) எக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்க அரசு முடிவு செய்கிறது?

(ஆ) அதனடிப்படையில் 2000-2001-ல் தொடங்கப்பட்ட கல்லூரிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் நிதி நிலைமை, அரசு கல்லூரிகளே இல்லாத மாவட்டங்கள், அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படும் கொள்கை அறிவிப்புகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன.

(ஆ) 2000-2001-ல் அரசு கலைக் கல்லூரி எதுவும் தொடங்கப்படவில்லை.

**137—**

**மாணவர்களுக்கு அரசுக் கடன்**

**வினா எண் 16557—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உயர்கல்வி பயிலுவதற்கு மாணவர்களுக்கு வழங்கும் கடனில் செக்யூரிட்டி நிபந்தனைகளைத் தளர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விதிமுறைகளை எளிதாக்கி உயர்கல்வி பயில மாணவர்களுக்கு அரசு கடன் வழங்க ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2004 நவம்பர் 22]

**138—**

**மகளிர் கலைக் கல்லூரி**

**வினா எண் 19941—திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) பாளையங்கோட்டை தொகுதி மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளில் எட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளதாலும், அவற்றில் மகளிருக்கென நான்கு கலைக் கல்லூரிகள் உள்ளதாலும், அக்கல்லூரிகள் மாணவியர்களின் உயர்கல்வித் தேவையினை நிறைவு செய்து வருவதாலும், அத்தொகுதியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி தொடங்கத் தேவை எழவில்லை என மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**139—**

**பயணச் சலுகை**

**வினா எண் 31112—திரு. ராதாரவி :** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் "கலைமாமணி" விருது பெற்றவர்களுக்கு இரயில் மற்றும் பேருந்துப் பயணம் சலுகைக் கட்டணத்தில் அனுமதிப்பது குறித்த கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

[2004 நவம்பர் 22

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**140—**

**அடையாள அட்டை**

**வினா எண் 37679—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உதவிகள் பெற கிராமிய கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

ஆம். மாவட்டந்தோறும் மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராமியக் கலைஞர்கள் உட்பட அனைத்துக் கலைஞர்களுக்கும் சில நெறிமுறைகளுக்குட்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**141—**

**இயக்குநர் அலுவலகம்**

**வினா எண் 47457—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுக்கு துணைத் தேர்வு மண்டல இயக்குநர் அலுவலகம் புதிதாகத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி சேலத்தில் அரசுத் தேர்வுகள் மண்டல துணை இயக்குநர் அலுவலகம் திறக்க தற்போது அரசிடம் கருத்துரு எதுவும் இல்லை.

**142—**

**அறிவியல் கல்லூரி**

**வினா எண் 48641—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தேவையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உறுப்புக் கல்லூரிகளாகத் துவக்கும். நாமக்கல்லில் உள்ள அரசு மகளிர் கலைக் கல்லூரியும், வேலூரில் உள்ள கந்தசாமி கவுண்டர் கல்லூரியும் பரமத்தி வேலூரிலுள்ள மாணவியர்களின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய வாய்ப்புள்ளது எனப் பெரியார் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ள நிலையில், அவ்வூரில் புதிதாக ஓர் உறுப்புக் கல்லூரியை பெரியார் பல்கலைக்கழகத்தால் துவக்கும் தேவை எழவில்லை.

[2004 நவம்பர் 22

143—

## இட ஒதுக்கீடு

**வினா எண் 50353—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறதா என்பதைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு நியமிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஆண்டும், இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி அரசு, அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கை வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன. எனவே, கோவை மாவட்டத்தில் உதவிபெறும் கல்லூரிகள் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறதா என்பதைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர் அடங்கிய குழு அமைக்கும் அவசியம் எழவில்லை.

144—

## விரிவுரையாளர் நியமனம்

**வினா எண் 50433—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி விரிவுரையாளர் தகுதிக்குரிய தேர்வை (ஸ்லெட்) கோவை, பாரதியார் பல்கலைக்கழகம் மீண்டும் நடத்த ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?



2004 நவம்பர் 22]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாரதியார் பல்கலைக்கழகம் மீண்டும் ஸ்லெட் தேர்வு நடத்த அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் அனுமதித்ததன்பேரில் 12-9-2004 அன்று ஸ்லெட் தேர்வு நடைபெற்றுள்ளது.

145—

## பாடநூல்கள்

**வினா எண் 59976—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இந்த வருடம் பாடநூல் நிறுவனம்மூலம் பாடநூல்கள் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடனடியாகப் புத்தகத் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) நடப்பாண்டில் தமிழகப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்குப் பாடநூல்கள் அனைத்தும் பாடநூல் கழகம்மூலமாக அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 11 ஆம் வகுப்பிற்கான புதிய பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதில் சிறிது பின்னடைவு ஏற்பட்ட போதிலும், புத்தகத் தட்டுப்பாடு தற்போது ஏதுமில்லை.

**146—**

## கைத்தறி நெசவாளர்கள்

**வினா எண் 1225—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத்தறிகள்மூலம் தயார் செய்வதால், கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத்தறிமூலம் தயார் செய்யப்படுவதைத் தடுக்க கைத்தறித் துறையில் அமலாக்கப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது.

**147—**

## பஞ்சாலை சீர்படுத்துதல்

**வினா எண் 7445—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மணல்மேட்டில் கூட்டுறவுத் துறைமூலம் நஷ்டத்தில் இயங்கிவரும் அரசு பஞ்சாலையைச் சீர்படுத்தி, தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்த்து நல்லமுறையில் இலாபத்தில் இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 15-7-2003 முதல் செயல்படாமல் உள்ளது. தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் 298 பணியாளர்கள் / தொழிலாளர்கள் ரூ.339.33 இலட்சம் பணப் பயன்களுடன் விடுவிக்கப்பட்டு விட்டனர். எனவே, இக்கூட்டுறவு நூற்பாலையை இலாபகரமாக இயக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**148—**

## ஏற்றுமதி பின்னலாடை

**வினா எண் 7508—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதிப் பின்னலாடைகளுக்கான ட்யூட்டி "டிராபேக்" விகிதத்தைக் (தீர்வை திரும்பப் பெறுதல்) கடந்த ஆண்டு இருந்ததைப் போலவே தற்போது மாற்றியமைக்க வேண்டுமெனத் தமிழக அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஏற்றுமதி பின்னலாடைக்கான ட்யூட்டி "டிராபேக்" விகிதத்தை மேலும் உயர்த்தக் கோரி மத்திய அரசை மாநில அரசு கோரவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2004 நவம்பர் 22

149—

## நிவாரணத் தொகை

**வினா எண் 9155—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மீன்பிடித் தொழில் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு வழங்குவதுபோல் மழைக் காலங்களில் வேலைவாய்ப்பற்ற நெசவாளர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மீன்பிடித் தொழில் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு வழங்குவதுபோல், மழைக் காலங்களில் வேலைவாய்ப்பற்ற நெசவாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

150—

## கொள்முதல் தொகை வழங்குதல்

**வினா எண் 10351—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவு நூற்பாலையிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யும் நூல்களுக்குக் குறித்த காலத்தில் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், சேலம் கூட்டுறவு நூற்பாலைக்கு வழங்கப்பட வேண்டிய நூல் கொள்முதல் பாக்கித் தொகை ஏதுமில்லை.

151—

## வரவு செலவுக் கணக்கு

**வினா எண் 10353—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் முடக்கப்பட்டிருந்த சேலம் கூட்டுறவு நூற்பாலையின் வரவு-செலவுக் கணக்கை மீண்டும் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் கூட்டுறவு நூற்பாலை 27-2-2004 முதல் செயல்படாமல் உள்ளது. இந்த நிலையில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் முடக்கப்பட்டிருந்த ஆலையின் வரவு-செலவுக் கணக்கைத் துவக்குவதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

152—

## தரமான நூல்கள்

**வினா எண் 49625—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு சேலை, வேட்டிகள் உற்பத்தி செய்ய தரமான நூல்கள் வழங்கி உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை சரகத்திற்கு உட்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர்களுக்கு உற்பத்திக்குத் தேவைப்படும் தரமான பருத்தி நூல்களைக் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் மற்றும் தனியார் நூற்பாலைகளிலிருந்தும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் (National Handloom Development Corporation) மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**153—**

## மீனவர் குடியிருப்பு

**வினா எண் 1421—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெரியதாழை கிராமம், மிக்கேல் நகர் பகுதியிலுள்ள மீனவர்களின் வீடுகள் இடியும் ஆபத்தான நிலையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996-97 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட மீனவர் இலவச வீடுகள் பழுதுபார்ப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், பெரியதாழை கிராமம், மிக்கேல் நகர் பகுதியிலுள்ள மீனவர்களின் வீடுகள் பழுதுபார்த்திடக் கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. மேலும் மீனவர்



2004 நவம்பர் 22]

இலவச வீடுகள் பழுதுபார்ப்புத் திட்டம் ஏதும் இவ்வாண்டில் அரசால் செயல்படுத்தப்படவில்லை என்பதால் இலவச வீடுகள் பழுதுபார்த்திடும் நடவடிக்கைகள் ஏதுமில்லை.

**154—**

## முதியோர் ஓய்வூதியம்

**வினா எண் 2262—திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மீனவ மக்களுக்கு இலவச வீடு, முதியோர் பென்சன் கடனுதவி வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் நிதியாண்டிற்கு 4,000 இலவச வீடுகள் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்குக் கட்ட அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன. மீனவ மக்களுக்கு விதிமுறைகள் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் இலவச வீடுகள் கட்டித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டினைப் பொறுத்தவரையில் மீனவர்களுக்கு எனத் தனியாக ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையால் செயல்படுத்தப்படவில்லை. வருவாய்த் துறையின்மூலமாக அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஏழை மீனவ மக்களுக்குக் கடனுதவி இத்துறையின் மூலம் நேரிடையாக வழங்கப்படுவதில்லை.

**155—**

## குளிர் சாதன நிலையம்

**வினா எண் 3743—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சி, கீழமூவர்கரை மீனவர் கிராமத்தில் மீன் பதப்படுத்தும் குளிர்சாதன நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சி, கீழமூவர்கரை மீனவர் கிராமத்தில் மீன் பதனிடும் குளிர்பதன நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**156—**

**மீன் விற்பனை நிலையம்**

**வினா எண் 20304—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் நியாயமான விலையில், தரமான மீன்களை விற்க சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் அமைக்க மீன் வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகரில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மீன் விற்பனை அங்காடி நிலையங்கள் அமைக்க தற்போது வாய்ப்பு ஏதும் இல்லை.



2004 நவம்பர் 22]

**157—**

**மீன் ஏலக் கூடம்**

**வினா எண் 20415—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, கட்டுமாவடியில் மீன் ஏலக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, கட்டுமாவடியில் மீன் ஏலக் கூடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**158—**

**மீன் வளர்ப்புப் பயிற்சி**

**வினா எண் 24308—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டம் பெற்ற, வேலையில்லா இளைஞர்களுக்கு மீன்வளத் துறை மூலம் தக்க பயிற்சி அளித்து மீன் வளர்க்க ஊக்குவிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மைய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் மீனவ இளைஞர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு மீன் வளர்ப்பு / நன்னீர் இறால் வளர்ப்பு பற்றிய 15 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படிப் பயிற்சியில் பட்டதாரி இளைஞர்களும் கலந்துகொண்டு பயனடையலாம்.

[2004 நவம்பர் 22

159—

## கலங்கரை விளக்கம்

**வினா எண் 47143—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள கலங்கரை விளக்கத்தைச் (Light House) சீர்செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுகம் இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணியின் திட்ட மதிப்பீட்டில், இவ்விளக்கு அமைப்பதற்கான செலவாகிய ரூ.1.50 இலட்சத்தையும் சேர்த்து நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

160—

## ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 52073—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள மீன்துறை ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரில் மீன்துறை ஆய்வாளர் அலுவலகம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

161—

## தமிழில் பெயர்ப் பலகை

**வினா எண் 2726—திரு. க. முருகவேல் ராஜன், திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகையில் தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசு ஆணையைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆமெனில், எத்தனை வழக்குகள் தொடரப்பட்டன?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) ஆம். வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைக்காத முரண்பாட்டிற்குக் கடந்த மூன்றாண்டுகளில் 1-1-2001 முதல் 30-11-2003 வரையிலான காலத்தில் தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 2,725 வழக்குகளும், தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 324 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு, முறையே தமிழ்நாடு கடைகள் நிறுவனச் சட்டத்தின்கீழ் ரூ.93,755/- மற்றும் தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் ரூ.10,525/ம் அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டிருக்கிறது.

[2004 நவம்பர் 22

162—

## நல வாரிய உறுப்பினர்கள்

**வினா எண் 12901—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெசவாளர்கள் நல வாரியத்தில் சேலம் மாவட்டத்திலுள்ள கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர்கள் எத்தனை பேர் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் நலத் திட்டங்கள் என்னென்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 29-2-2004 வரை 1,977 கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

(ஆ) தனி நபர் குழுக் காப்பீட்டுத் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, பிள்ளைகளின் படிப்பிற்கு கல்வி உதவித் தொகை, பதிவு பெற்ற பெண் தொழிலாளர்களின் மகப்பேறு அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கான உதவித் தொகை முதலிய நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

163—

## தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

**வினா எண் 12993—திரு. ஜி.கே மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கும் மில்களை பேச்சுவார்த்தை மூலம் திறக்க சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், மில் நிர்வாகத்தினர் அடங்கிய குழு ஒன்றை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் திறந்து இயக்க உள்ள சாத்தியக்கூறுகள் பற்றியும், அவ்வாறு திறக்க இயலாத நிலையில் உள்ள நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகைகளைப் பெற்றுத் தருவது குறித்தும் பொதுவாக விவாதிக்கப்பட்டு உள்ளது. இதுவரை நடைபெற்ற கூட்டங்களில் மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் திறப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

164—

## கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு

**வினா எண் 17163—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குடும்பங்கள் மற்றும் மொழிப்போர் தியாகிகள் குடும்பங்கள் எவ்வளவு பேருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குடும்பங்கள் மற்றும் மொழிப்போர் தியாகிகள் குடும்பங்களைச் சார்ந்த 37 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 22

165—

## குழந்தைத் தொழிலாளர்கள்

**வினா எண் 17210—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்கள் எத்தனை பேர் உள்ளார்கள் என அரசு கண்டுள்ளதா?

(ஆ) குழந்தைத் தொழிலாளர் முறையை அறவே ஒழிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2003 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 70,344 குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) குழந்தைத் தொழிலாளர் முறையை 2007 ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் நீக்குவதற்கு பல்வகை வழிமுறைகளை உள்ளடக்கிய ஒரு செயல் திட்டத்தினை அமலாக்குவதற்கு அரசு 12-5-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 53-ல் உத்தரவிட்டுள்ளது.

166—

## கூலித் தொழிலாளர்

**வினா எண் 18183—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு தொழிலாளர் லத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் கூலித் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 180 நாட்கள்தான் வேலை கிடைக்கிறபடியால் ஆண்டு முழுவதும் அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு ஆவன செய்யுமா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் விவசாயப் பணிகள் முடிவடைந்த காலங்களில், ஊரக வளர்ச்சித் திட்டங்களான வேலை உறுதியளிப்பு மற்றும் கிராம வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 7,142 வேலைவாய்ப்பு மனித நாட்களும், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் 7,403 வேலைவாய்ப்பு மனித நாட்களும், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 9,149 வேலைவாய்ப்பு மனித நாட்களும் வேலை அளிக்கப்படுகிறது. மேலும், 2002-2003 ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டம் 1 மற்றும் 2-ன்கீழ் பட்டுக்கோட்டை, பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் முறையே 16,768, 12,605 மற்றும் 14,363 வேலைவாய்ப்பு மனித நாட்கள் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

167—

## போனஸ்

**வினா எண் 23812—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளித் தொகுதி, கத்திலி ஒன்றியம், செவ்வாத்தூர் ஊராட்சியில் இயங்கிவரும் மைக்கா கனிமவள நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்காமல் இருந்துவருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டப்படியும், போனஸ் வழங்குவது தொடர்பாக அரசு வெளியிடும் ஆணையின்படியும் போனஸ்

வழங்கப்படுகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின்கீழ் இயங்கிவரும் செவ்வாத்தூர் வெர்மிகுலைட் சுரங்கத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் பணிபுரிந்த 30 தொழிலாளர்களில் தகுதிவாய்ந்த திறன்பெறாத நான்கு தொழிலாளர்களுக்கு 30-10-2003 அன்று 2001-2002 ஆம் ஆண்டிற்கு 20% போனஸ் ஆக ரூ.23,597/- வழங்கப்பட்டுள்ளது. மற்ற 26 தொழிலாளர்களின் வருமானம் 'Ceiling Limit'-ஐத் தாண்டிவிட்டதால் வழங்கப்படவில்லை.

**168—**

## தோட்டத் தொழிலாளர்

**வினா எண் 24479—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலை எஸ்டேட்டுகளில் குறைந்தபட்சம் 300 தொழிலாளர்கள் இருந்தால் தொழிலாளர் நல அலுவலர் நியமனம் செய்ய வேண்டும் என்ற அரசு விதியை எஸ்டேட் முதலாளிகள் பின்பற்றுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) அரசு விதியை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் பிரிவு 18(1)-ன்கீழ் 300 மற்றும் அதற்கு மேல் தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் தொழிலாளர் நல அலுவலர்கள் நியமிக்கப்படவேண்டும் எனவும் பிரிவு 18(2)-ன்கீழ் தொழிலாளர் நல அலுவலர்களது பணிகள், தகுதிகள் மற்றும் பணி நிலைமைகள் குறித்து மாநில அரசு வரையறை செய்யலாம் எனவும் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இதற்கென தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளில் தகுந்த விதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





**169—**

## தொழிற்சாலை கதவடைப்பு

**வினா எண் 33857—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியிலுள்ள மாதவரம் கல்பனா லாம்ப்ஸ், திருவொற்றியூரில் உள்ள விம்கோ தொழிற்சாலைகள் கதவடைப்பு நடத்தி வருவதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மாதவரம் கல்பனா லாம்ப்ஸ் 26-8-2001 முதல் கதவடைப்பு செய்ததினால் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 10(3)-ன்கீழ் கதவடைப்பை தடை செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதன் பிறகும் கதவடைப்பு நீக்காததால் நிர்வாகத்திற்கு எதிராக குற்ற வழக்கு தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டு திருவொற்றியூர் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருவொற்றியூர் விம்கோ நிறுவனம் 11-6-2002 முதல் கதவடைப்பு செய்யப்பட்டது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து நிர்வாகமும், தொழிற் சங்கமும் மேற்கொண்ட நேரடி பேச்சுவார்த்தையில் இணக்கமான முடிவு ஏற்படாததால் மாண்புமிகு முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இறுதியாக 17-2-2003 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன்படி ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 8 மாத காலமாக நிலவிவந்த கதவடைப்பு 19-2-2003 முதல் நீக்கப்பட்டது. தற்போது நிறுவனம் தொடர்ந்து இயங்கி வருகிறது.

**170—**

## வேலைவாய்ப்பு

**வினா எண் 35525—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் பட்டம்/பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**171—**

## நிலுவையில் உள்ள வழக்குகள்

**வினா எண் 40268—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள வழக்குகள் எத்தனை நிலுவையில் உள்ளன?

(ஆ) கடந்த ஆண்டு எத்தனை தொழிற் தகராறுகள் தீர்க்கப்பட்டு மீண்டும் திறந்த ஆலைகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 31-12-2003 அன்றைய நிலவரப்படி தொழிற் தகராறு சட்டப் பிரிவு 2(கே)—யின்கீழ் 15 தாவாக்களும், பிரிவு 2-ஏ-யின்கீழ் 109 தாவாக்களும் நிலுவையில் உள்ளன.

(ஆ) கடந்த ஆண்டு தொழிற் தகராறு சட்டப் பிரிவு 2-ஏ-யின் கீழ் 138 தாவாக்களும் பிரிவு 2(கே)-யின்கீழ் 49 தாவாக்களும் ஆக மொத்தம் 187 தாவாக்கள் ஒப்பந்தம்மூலம் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் சென்ற ஆண்டு 2-ஏயின்கீழ் எழுப்பப்பட்ட 281 தொழிற் தாவாக்களும் / 2(கே)-யின்கீழ் 28 தொழிற் தாவாக்களும் சமரச முறிவறிக்கை மூலமாக முடிக்கப்பட்டன. ஆலை மூடல் தொடர்பாக பெறப்பட்ட தாவாக்கள் ஏதும் இல்லை. எனவே, திறக்கப்பட்ட ஆலைகள் ஏதும் இல்லை.



2004 நவம்பர் 22]

**172—**

## மூடிய தொழிற்சாலைகள்

**வினா எண் 40286—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூடிய தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றை திறக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

(ஆ) அரசாணை (டி) எண் 133, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 12-2-2002-ல், மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கும், திறக்க இயலாத நிலையில் உள்ள நிறுவனங்களில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டுத் தொகையை பெற்று தருவதற்கும் மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழு ஒன்றை அமைத்து ஆணை வெளியிடப்பட்டது. இக்குழுவில் நிர்வாக பிரதிநிதிகளும், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். அக்குழு 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடி மூடப்பட்ட நிறுவனங்கள் குறித்து விவாதித்து அவற்றைத் திறப்பதற்கான வழிவகைகளை பரிசீலித்து வருகிறது.

**173—**

## தொழிற்சாலை திறக்க நடவடிக்கை

**வினா எண் 40366—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சி, சேஷசாயி இண்டஸ்ட்ரியல் லிமிடெட் நிறுவனத்தை அரசு திறக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வடலூர் சேஷசாயி இண்டஸ்டிரியல் லிமிடெட், நிதி நெருக்கடி காரணமாக 12-4-91 முதல் இயங்கவில்லை. இந்நிறுவனம் நலிவடைந்த நிறுவனம் என பிஐஎப்ஆர்-ல் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிறுவனத்தை கலைத்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதால் இந்நிறுவனத்தை அரசு திறக்க இயலாத நிலை உள்ளது.

**174—**

### இலவச வீடு

**வினா எண் 40575—திருமதி எஸ். மகேஸ்வரி, திரு. எச்.எம். ராஜு, திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தங்கப்பட்டறை தொழிலாளர்களுக்கு இலவச வீடு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தங்கப்பட்டறை தொழிலாளர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**175—**

### நல வாரியம்

**வினா எண் 53407—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) முறைசாரா தொழிலாளர்களின் நலன் காக்க அடுமனை, உணவு விடுதி, வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் தங்க நகை, வெள்ளிப்பட்டறை தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**176—**

### தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 57572—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் ஆதிதிராவிடர் மாணவ மாணவிகளுக்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ.) அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**177—**

### உதவித் தொகை

**வினா எண் 59497—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு வழங்கும் உதவித் தொகையைக் கூடுதலாக்கித் தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக இயங்காமல் / மூடிய தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-5-99 முதல் மாதம் ரூ.250/- வீதம் உதவித் தொகை வழங்குவது தொடர்பான திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறக்கூடிய நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவின் 20-7-99 அன்று நடைபெற்ற கூட்டத்தில், உதவித் தொகையினை ரூ.250/-லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்த வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். ஆய்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரை அரசிற்கு கூடுதல் செலவினம் ஏற்படுத்தும் வகையில் உள்ளதால், இது நிராகரிக்கப்பட்டது. அதன்பின்னர் தொழிற்சங்கங்கள் முன்வைத்த வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தித்தர வேண்டும் என்ற கோரிக்கையும் மாநிலத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக நிராகரிக்கப்பட்டது.

**178—**

## கேபிள் தொலைக்காட்சி

**வினா எண் 389—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கேபிள் தொலைக்காட்சியின்மீது விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியால் 1999—2000 மற்றும் 2000—2001 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு வருமானம் அரசுக்குக் கிடைத்துள்ளது?

(ஆ) தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு கேபிள் இணைப்புகள் உள்ளதாக அரசு கண்டறிந்துள்ளது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தின் கேபிள் தொலைக்காட்சியின்மீது விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரி விவரம் ஆண்டுவாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

1999-2000 ஆம் ஆண்டு ரூ.214.22 இலட்சம்

2000-2001 ஆம் ஆண்டு ரூ.47.03 இலட்சம்

(ஆ) தமிழகத்தில் சுமார் 25,21,552 கேபிள் தொலைக்காட்சி இணைப்புகள் உள்ளதாக அரசு கண்டறிந்துள்ளது.

**179—**

## நிறுத்த தளம்

**வினா எண் 410—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் பேருந்து நிலையம் எதிரே உள்ள இரு பாலங்களையும் இணைத்து வாடகை வாகனங்கள் நிறுத்த தளம் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்னூர் பேருந்து நிலையம் எதிரே வாடகை வாகனங்கள் நிறுத்த 2001-2002 ஆம் ஆண்டு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பொதுப் பணித் துறையின்மூலம் ரூ.13.88 இலட்சம் செலவில், 22 மீட்டர் நீளம், 8 மீட்டர் அகலத்திற்குத் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 22

180—

**சோடியம் மின் விளக்கு வசதி**

**வினா எண் 511—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சியின் மையப் பகுதியில் செல்லும் புறநகர் வழிச் சாலையில் சோடியம் மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி புறவழிச் சாலையில் ரூ.25.30 இலட்சம் செலவில் 146 சோடியம் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு 30-6-2002 முதல் இயங்கி வருகிறது.

181—

**தொகுதி மேம்பாட்டு நிதி**

**வினா எண் 1496—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் எடுக்கப்பட்டுள்ள பணி விரைவில் செய்து முடிக்குமாறு கோவை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகள் யாவும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.



2004 நவம்பர் 22]

182—

**கூட்டுக் குடிநீர்**

**வினா எண் 1504—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது பணி முடிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை மற்றும் தண்டராம்பட்டு ஒன்றியங்களில் உள்ள சாத்தனூர் மற்றும் 45 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

183—

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 2908—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில், புதியதாக அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு அமைத்த ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லாததினால், புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில், 2002-2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் நீராதாரம் வற்றிவிட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்பு திட்டங்களுக்கு

மாற்று நீராதாரம் உருவாக்குதல், மின் மோட்டார் மாற்றுதல், ஆழ்துளைக் கிணறுடன் கையிறைப்பான் அமைத்தல் மற்றும் திறந்தவெளி கிணறு அமைத்தல் மற்றும் ஆழப்படுத்துதல் போன்றவை ரூ.55.70 இலட்சம் மதிப்பீட்டில் 138 பணிகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், இப்பகுதிகளில் சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**184—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 3241—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, ஏ. ஆண்டிக்குப்பம், 32-வது வார்டு முஸ்லீம் தெருவிற்கு நீரேற்று இயக்கியுடன் நீர்த்தேக்கத் தொட்டி, அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி, ஏ. ஆண்டிக்குப்பம், 32-வது வார்டு முஸ்லீம் தெருவிற்கு மட்டும் தனியாக நீரேற்று இயக்கியுடன் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**185—**

## பெண் மருத்துவர் நியமனம்

**வினா எண் 3614—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள கோவில்பட்டி நகர்நல மையத்தில் பெண் மருத்துவர் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவரை நியமனம் செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள கோவில்பட்டி நகர்நல மையத்தில் பெண் மருத்துவர் பணியிடம் 11-8-2000 முதல் காலியாக உள்ளது. அதை நிரப்ப வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதிவாய்ந்த மருத்துவர்களின் பட்டியல் 11-1-2002 அன்று பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சியில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களைப் பூர்த்தி செய்வது குறித்து தற்போது நடைமுறையிலுள்ள தடையாணை விலக்கப்பட்ட பிறகு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**186—**

## மயானக் கூடம்

**வினா எண் 3863—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, வடகரை கீழ்பிடாகை பேரூராட்சி வாவா நகரம் கிராமத்திற்கு மயானக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, வடகரை கீழ்பிடாகை பேரூராட்சிப் பகுதி, வாவா நகரம் மயானம் 2002-2003 ஆம்

ஆண்டு 11-வது நிதிக்குழு மானியத்தில் முடிக்கப்பட்டு 11-4-2003 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

**187—**

## குடிநீர் வசதி

**வினா எண் 3866—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, போகநல்லூர், மீனாட்சியபுரம் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், போகநல்லூர் ஊராட்சி, மீனாட்சியபுரம் கிராமத்திற்கு கடையநல்லூர்—புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் நிறைவுற்று, திட்டம் தற்போது மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**188—**

## குடிநீர் வசதி

**வினா எண் 3890—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், பாதிரி ஊராட்சி காலனியில் திறந்தவெளி கிணறு வெட்டி குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஒன்றியம், பாதிரி ஊராட்சியைச் சார்ந்த பாதிரி காலனி, பாதிரி குடியிருப்பில் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு 7 கையிறைப்பான்கள் மற்றும் ஒரு மின்னிறைப்பான் திட்டம்மூலம் தற்பொழுது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 35 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**189—**

## குடிநீர் வசதி

**வினா எண் 4158—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம், கோரணம்பட்டி காட்டுவளவு கெண்டையான்காடு பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த ஒட்டன்காட்டுவளவு மற்றும் கெண்டையன் வளவு குடியிருப்புகள், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கொங்கணாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 107 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு திட்டப் பணிகள் அனைத்தும் முடிவுற்று 31-3-2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**190—**

## குடிநீர் வசதி

**வினா எண் 4195—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நாராயணபுரம் கிராமத்திற்கு குடிநீர் ஆதாரம் ஏற்படுத்தித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழ்சட்டநாதபுரம் ஊராட்சியைச் சேர்ந்த நாராயணபுரம் குடியிருப்புக்கு முக்காவட்டம் குடியிருப்பிற்கான குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு 2/2002 முதல் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

191—

## மயான வசதி

**வினா எண் 5448—திரு. மா.ப. ரோகிணி (என்கிற) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியிலுள்ள சீரநாயக்கன் பகுதியில் மயான வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் தெலுங்குபாளையம் கிராமம், சீரநாயக்கன்பாளையம், பேரூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மயான பயன்பாட்டில் உள்ள 3.5 சென்ட் இடம் பொதுப் பணித் துறை வசம் உள்ளது. இந்த இடம் பொதுப் பணித் துறையிலிருந்து மாநகராட்சி வசம் ஒப்படைத்த பின்பு மயானத்திற்குரிய அடிப்படை வசதிகள் மேற்கொள்ள இயலும்.



192—

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 7053—திரு. மா.ப. ரோகிணி (என்கிற) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், போடிபட்டி அருகே பாளையத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் அதற்குரிய குழாய் இணைப்பு வழங்கப்படாதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், போடிபட்டி ஊராட்சியின் சுண்டைக்காம்பாளையம் கிராமத்திற்கு உடுமலைப்பேட்டை நகராட்சி குடிநீர்த் திட்டத்தின் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் குழாய் இணைப்பு செய்யப்பட்டு குடிநீர்த் திட்டம் தற்பொழுது பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

193—

## கூட்டுக் குடிநீர்

**வினா எண் 7094—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறையில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறையில் உள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி 1-3-2002 முதல் செய்து தரப்பட்டுள்ளது.

**194—**

### ஆரம்ப சுகாதார மையம்

**வினா எண் 3166—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே நகர் தொகுதி, 4-வது வட்டம், அன்னை இந்திரா காந்தி நகரில் ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அன்னை இந்திரா காந்தி நகரில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் செரியன் நகர், 4-வது தெருவில் புது வண்ணை எனும் நல்வாழ்வு மையம் இயங்கி வருகின்றது. இந்நல வாழ்வு மையத்தில் ஸ்கேன், பிரசவ வார்டு மற்றும் அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகிறது. எனவே அன்னை இந்திரா நகருக்கென்று தனியாக ஒரு சுகாதார மையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

**195—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 8782—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி குடிநீர் தட்டுப்பாட்டை போக்க கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் வருடம் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது ஒரு தனி நபருக்கு 65 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**196—**

### வணிக வளாகம்

**வினா எண் 9653—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், நேதாஜி நகரில் வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், நேதாஜி நகரில் வணிக வளாகம் அமைக்க இடம் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் எண்ணூர் சாலை ஓரமாக உள்ள நிலம் தவிர வேறு இடம் ஏதும் இல்லை. மேலும் உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பேரில் தற்போது சென்னை மாநகராட்சியில் சாலை ஓர நிலங்களில் வணிக வளாகம் கட்டுவது இல்லை. மேலும், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான

[2004 நவம்பர் 22

இடமும் இல்லை. எனவே, மேற்கண்ட இடத்தில் வணிக வளாகம் அமைக்க இயலாது.

**197—**

**உரிமக் கட்டணம்**

**வினா எண் 9854—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகம் 200 மூட்டைகளுக்கு மேல் நெல் இருப்பு வைத்து வர்த்தகம் செய்வோர் உரிமக் கட்டணம் ரூ.500/- என்றிருந்ததை ரூ.5000/- என உயர்த்தியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை இரத்து செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (ப) எண் 509, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 5-11-2001-ல் கோவை மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண் 332, நாள் 29-3-2000-ல் தீர்மானிக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணங்களை வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உயர்த்தப்பட்ட மேற்கண்ட உரிமக் கட்டணத்தை இரத்து செய்ய இயலாது.

**198—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 10082—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) தாராபுரம் தொகுதியிலுள்ள பொன்னாபுரம், குடிமங்கலம் ஊராட்சிகள் மற்றும் அதன் பிற கிராமங்களிலும் நிலத்தடி நீர் புளோரைடு இரசாயனம் கலந்து உயிர்க்கொல்லி நோய்கள் ஏற்படக்கூடும் என மக்கள் அஞ்சுவதால் புளோரைடு கலக்காத பாதுகாப்பான குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் தொகுதி, பொன்னாபுரம் ஊராட்சியில் உள்ள அனைத்து (எட்டு) குடியிருப்புகளில், நிலத்தடி நீரைப் பரிசோதனை செய்ததில் நிலத்தடி நீரில் புளோரைடு இரசாயனம் கலந்திருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தற்போது இவ்வனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்கப்படும் குடிநீரின் தன்மை குடிப்பதற்கு உகந்ததாகும். தாராபுரம் தொகுதி, குடிமங்கலம் ஊராட்சியில் உள்ள அனைத்து (ஏழு) குடியிருப்புகளுக்கும் தற்போது பயனிலுள்ள கையிறைப்பான், மின்னிறைப்பான் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் வழங்கப்படும் குடிநீரின் தன்மை குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது.

**199—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 10179—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சியிலுள்ள குச்சிப்பாளையம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, கிள்ளையில் உள்ள குச்சிப்பாளையம் பகுதிக்கு கிள்ளை குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிள்ளையில் அமைக்கப்பட்டுள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் வாயிலாக குச்சிப்பாளையம் பகுதிக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குச்சிப்பாளையம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் தற்போது ஏதும் இல்லை.

**200—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 10272—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், வைத்தீஸ்வரன் கோவில், மருவத்தூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், வைத்தீஸ்வரன் கோவில், மருவத்தூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



## பட்டியல் 12

**1—**

### கருவில் குழந்தையைக் கண்டுபிடிக்கும் ஆய்வு

**வினா எண் 3597—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாய்மார்களின் கருவில் உள்ள குழந்தையை என்ன குழந்தை என்று கண்டுபிடிக்கும் ஆய்வை (Sex Determination Test) தமிழகத்தில் தடை செய்து சட்டமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிறப்பிற்குமுன், தாய்மார்களின் கருவில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கண்டுபிடிக்கும் ஆய்வை (Sex Determination Test) தடைசெய்யும் மத்திய அரசின் சட்டம் தமிழகத்தில் 1-1-1996 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**2—**

### கொசு ஒழிப்புத் திட்டம்

**வினா எண் 9970—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொசு ஒழிப்புத் திட்டம் மாவட்டந்தோறும் செயல்படுத்தப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொசு ஒழிப்புத் திட்டம் என்று தனியாக ஏதும் இல்லை. ஆனால் மலேரியா, யானைக்கால், டெங்கு மற்றும் மூளைக் காய்ச்சல் நோய் பரவும் பகுதிகளில் பொது சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்மூலம் இந்நோய் பரப்பிக் கொசுக்களை கட்டுப்படுத்தும் முறை செயல்படுத்தப்படுகிறது.

3—

**ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 16212—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

4—

**கண் பரிசோதனைத் திட்டம்**

**வினா எண் 16526—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் கண் பரிசோதனைத் திட்டத்தின்கீழ் அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்கும் பரிசோதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கண் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5—

**மருத்துவர் நியமனம்**

**வினா எண் 17810—திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதியிலுள்ள மயிலாடுதுறை மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மருத்துவர்களை அரசு நியமிக்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் 12 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அங்கு பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை அம்மருத்துவமனைக்குப் போதுமானது.

[2004 நவம்பர் 22

6—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 17916—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் தொடர்ந்து அன்றாடம் வந்து சிகிச்சை அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் சுழற்சிமுறையில் முறைமாற்றம் (Shift Duty) மூலம் தினமும் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

## முழு நேர மருத்துவர்

**வினா எண் 19738—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முழுநேர மருத்துவ அலுவலர் நியமிக்கப்படுவாரா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருப்பூர் வட்டம், மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். அதில் ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவர் பணியிடங்களிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

8—

## துணை சுகாதார நிலையம்

**வினா எண் 20055—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெங்கட்ராமன் வளவில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெங்கட்ராமன் வளவில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

9—

## மின் இணைப்பு

**வினா எண் 20598—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், பொன்னேரி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்திற்கு உடனடியாக மின்சார இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், பொன்னேரி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்திற்கு மின் இணைப்பு கடந்த ஆண்டே வழங்கப்பட்டு விட்டது.

**10—**

## இரத்த வங்கி

**வினா எண் 23455—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நர்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் இரத்த வங்கி (Blood Bank) இருந்தும் கடந்த 2 ஆண்டுகளாக இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கி 1-9-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

**11—**

## பெண் மருத்துவர்கள்

**வினா எண் 23775—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தமிழக அரசு தேர்வாணையத்தின்மூலம் பெண் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களை தமிழக அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள இடங்களில் நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு 343 பெண் மருத்துவர்கள் பணி அமர்த்தப்பட்டனர். அவர்களில் பணியில் சேராத 17 நபர்களின் பணியிடத்தில், காத்திருப்போர் பட்டியலில் இருந்து பெறப்பட்ட 17 நபர்களைக் கொண்டு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். 2001 ஆம் ஆண்டிற்கான உதவி அறுவை மருத்துவர் (பெண்கள்) பதவிக்கான காத்திருப்போர் பட்டியலில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் 12 பேரும், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் 14 பேரும் எஞ்சியுள்ளனர்.

**12—**

## அரசு மருத்துவமனை

**வினா எண் 27518—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, குன்னத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, குன்னத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**13—**

## பெண்கள் அரசு மருத்துவமனை

**வினா எண் 27758—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் பெண்களுக்கென தனி அரசு மருத்துவமனை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகரில் பெண்களுக்கென தனி அரசு மருத்துவமனை தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**14—**

## மருத்துவமனை

**வினா எண் 28102—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் வட்ட மருத்துவமனை செயல்பட்டு வருவதால் இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**15—**

## சிகிச்சை கட்டணம்

**வினா எண் 28318—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் மருத்துவமனைகளின் சிகிச்சை கட்டணத்தை வரன்முறைப் படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**16—**

## சுகாதார நிலையம்

**வினா எண் 31663—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், மங்கனூர்க்கு புதிதாக சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மங்கனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

17—

**நிதி உதவி**

**வினா எண் 32099—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய மருத்துவத் துறையில் BSMS படித்தவர்கள் சுயமான மருத்துவமனை துவங்குவதற்கு அரசு நிதி உதவி ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய மருத்துவத் துறையில் BSMS படித்தவர்கள் சுயமான மருத்துவமனை துவங்குவதற்கு அரசு நிதி உதவி ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இக்கேள்வி எழவில்லை.

18—

**அரசு மருத்துவமனை**

**வினா எண் 32124—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

**கூடுதல் மருத்துவர்கள்**

**வினா எண் 33699—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், அரசு பொது மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், அரசு பொது மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

20—

**மூலிகைச் செடிகள்**

**வினா எண் 34102—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூலிகைச் செடிகளின் மகத்துவத்தினைப் பற்றி மக்கள் அறிந்துகொள்ள அரசு விளம்பரம் செய்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மூலிகைச் செடிகளின் மகத்துவத்தினைப் பற்றி மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு தோட்டக்கலைத் துறை நன்கு விளம்பரம் செய்கிறது. மேலும் இந்திய மருத்துவ முறைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இரண்டு நூல்கள் டேனிடா உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

முதல் பகுதி நூலில் சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகள், யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறைகளை பயன்படுத்துகின்ற வழிகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் தரப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதி நூலில் இந்திய மருத்துவ முறைகளுக்குப் பயன்படும் முக்கியமான மூலிகைகளின் பயன்கள் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறைகள் வண்ணப் புகைப்படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இந்த இரு நூல்களின் 12,000 பிரதிகள் கிராம சுகாதார செவிலியர், துணை செவிலியர், பகுதி சுகாதார செவிலியர் மற்றும் சமூக சுகாதார செவிலியர் ஆகியோரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

**21—**

## எலும்பு முறிவு சிறப்பு மருத்துவர்

**வினா எண் 34503—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவரை பணியமர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவர் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்.

**22—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 38568—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கொடியூர் வட்டம், சோழகம் பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சோழகம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**23—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 40118—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆத்தங்கரை விடுதி ஊராட்சியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

[2004 நவம்பர் 22

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆத்தங்கரை விடுதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**24—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 40131—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் மற்றும் நெடியூர் ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கோமாபுரம் மற்றும் நெடியூர் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**25—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 42348—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) கோவில்பட்டி தொகுதியைச் சேர்ந்த திருவேங்கடம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியம், திருவேங்கடம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**26—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 43138—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் அரசு மருத்துவமனைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டுள்ளன.

**27—**

## இரத்த வங்கி

**வினா எண் 51888—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

உயிருக்குப் போராடி வரும் நோயாளிகளைக் காப்பாற்ற இரத்தம் தேவைப்படும்பொழுது சில தனியார் நடத்தும் இரத்த வங்கியில் அவசரத்தை பயன்படுத்தி அதிகமான பணம் பெற்றுக் கொண்டு இரத்தம் விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசு இரத்த வங்கிகள் அல்லது தனியார் இரத்த வங்கிகள் ஒரு யூனிட் இரத்தத்திற்கு ரூபாய் 500/- மட்டும் பரிசோதனைக் கட்டணமாக வசூலிக்க வேண்டும். இதற்கு அதிகமாக கட்டணம் வசூலித்தால் அதனை தமிழ்நாடு குருதி பரிமாற்றுக் குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம் என பத்திரிகைகளில் விளம்பரம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் புகார்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் ஆகியோருக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**28—**

**கட்டட விதிமுறைகள்**

**வினா எண் 51732—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் மருத்துவமனைகளுக்கு அனுமதி வழங்கப்படும்போது அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆராய குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள நடைமுறையில், தனியார் மருத்துவமனை தொடங்க அரசின் அனுமதி தேவையில்லை. எனவே, மருத்துவமனையின் கட்டுமானம் குறித்து ஆராய்வதற்கான குழுவை அமைக்க அரசுக்கு அவசியம் ஏற்படவில்லை.



2004 நவம்பர் 22]

**29—**

**கொள்முதல்**

**வினா எண் 3994—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, பாலமார்த்தாண்டபுரத்திலுள்ள மண்பாண்டம் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கடனுதவி செய்யவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை கொள்முதல் செய்யவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மேற்காணும் பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**30—**

**கதர் கிராமத் தொழில் நிறுவனம்**

**வினா எண் 7393—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றிய பகுதியில் கதர் கிராமத் தொழில் நிறுவனம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாரிய நிதி நிலைமை தற்போது திருப்திகரமாக இல்லாததாலும் ஏற்கெனவே கரூர் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் அலகுகள் தொடங்கி செயல்பட்டு வருவதாலும் கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றிய பகுதியில் தற்போது புதியதாக கதர் கிராமத்

தொழில் அலகுகள் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையில் அங்கு கதர் கிராமத் தொழில் அலகுகள் தொடங்க வாய்ப்பில்லை.

31—

### மண்பாண்டங்கள்

**வினா எண் 7938—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்பாண்டங்கள் தயாரிக்கும் தொழிலை ஊக்குவிப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

32—

### பாய் உற்பத்தி

**வினா எண் 9097—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியில் ரவணசமுத்திரம், பொட்டல்புதூர் போன்ற பல பகுதிகளில் "பாய் உற்பத்தி" தொழிலை ஊக்குவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.



33—

### கதர் விற்பனை

**வினா எண் 10806—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் துணிகளை அதிக அளவில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கதர் துணிகளை அதிக அளவில் விற்பனை செய்ய அரசு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(ஆ) எழவில்லை.

34—

### கதர் கிராமத் தொழிற்சாலை

**வினா எண் 13325—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் இளைஞர்களிடையே வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் கதர் கிராமத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

35—

### தேனீ வளர்ப்பு

**வினா எண் 25034—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் தேனீ வளர்ப்புக்காக அதிகமான அளவு மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்களை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் தேனீ வளர்ப்புத் தொழிலுக்கு அதிகமான அளவு மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

36—

### அன்னிய செலாவணி

**வினா எண் 26793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடு ஏற்றுமதிக்கேற்றவாறு கதர் துறையின் பட்டு இரகங்களை தரம் உயர்த்தி தயாரித்து அன்னியச் செலாவணியை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுவரை வாரியத்தினால் கதர் துணி எதுவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. தற்போது வாரியம் இணைய தளத்தில் உறுப்பினராக சேர்ந்து உள்ளது. இதன் பயனாக வெளி நாட்டிலிருந்து தேவை நமுனா பெறப்படின் வாரியம் பட்டு இரகங்களை ஏற்றுமதி செய்யத்தக்க நடவடிக்கை எடுக்கும்.

37—

### சிறு தொழில்கள்

**வினா எண் 27875—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள மகளிர்களுக்கு காதி வாரியம் சார்பாக ஊதுபத்தி, மெழுகுவர்த்தி போன்ற சிறு தொழில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

38—

### சிறு தொழில்கள்

**வினா எண் 49977—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் சிறு தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு புதிய டிசைன் மட்பாண்டங்களைச் செய்யவும், இளைஞர்களுக்கு சிறு தொழில் செய்யவும் கடனுதவி வழங்கப்படுமா?

**விடை—**

உ— **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் சிறு தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு புதிய டிசைன் மட்பாண்டங்கள் செய்யவும், இளைஞர்களுக்கு சிறு தொழில் செய்யவும் கடனுதவி வழங்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தொழில் முனைவோர் / கைவினைஞர்கள் வங்கி கடன் பெற்று தொழில் செய்ய முன் வருவார்களேயானால், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் தற்போது மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் கிராமிய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டம் ஒன்றினை செயல்படுத்தி வருகின்றது.

**39—**

## சாதிச் சான்று

**வினா எண் 1946—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலைவாழ் மக்களான காட்டுநாயக்கன் இன மக்களுக்கு சாதிச் சான்று வழங்கப்படாதது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சாதிச் சான்று விரைவில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலைவாழ் மக்களிடமிருந்து காட்டுநாயக்கன் சாதிச் சான்று வழங்கக் கோரி மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) கல்வராயன் மலைவாழ் மக்களிடமிருந்து காட்டுநாயக்கன் சாதிச் சான்று கோரி மனுக்கள் வரப்பெற்றால் அவை உரிய விசாரணை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் ஆராயப்பட்டு உண்மையான நேர்வுகளில் சாதிச் சான்றுகள் தாமதமின்றி வழங்கப்படும்.



**40—**

## தாட்கோ கடன்

**வினா எண் 3765—திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு தாட்கோ கடன் வழங்குவதில் சொத்து ஜாமீன் தேவையில்லை என்று அரசு அறிவித்து இருந்தும் சொத்து ஜாமீன் தேவை எனக்கூறி வங்கி அதிகாரிகள் கடன் வழங்க மறுத்து வருவதால் அதை விசாரித்து கடன் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோ திட்டங்களின்கீழ் சுய உதவிக்குழுக்கள் மூலம் ரூ.5.00 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கு கடன் உதவி பெற சொத்து ஜாமீன் கோரத் தேவையில்லை என வங்கிகளுடன் அரசு நடத்திய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அதன்படி சொத்து ஜாமீன் இன்றி கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**41—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 4228—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே அந்தியூர் ஆதிதிராவிட ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 நவம்பர் 22

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் ஆதிதிராவிட மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**42—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 4317—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே ராகல்பாவி கிராமத்தில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஊர் அருகே இடம் ஆர்ஜிதம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராகல்பாவி கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வேண்டி கோரிக்கை எதுவும் வரவில்லை. அப்படி விண்ணப்பங்கள் வரும் பட்சத்தில் தேவைக்கேற்ப நிலம் ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கப்படும்.

**43—**

## ஆதிதிராவிட மாணவர்கள்

**வினா எண் 5053—திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) மேல்மலையனூர் ஒன்றியத்தில் இயங்கிவரும் ஆதிதிராவிட மாணவர் விடுதியில் தங்கி படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**44—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 10196—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள சாத்தப்பாடி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) 11-9-2002 அன்று 38 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

45—

## குறை தீர்க்கும் நாள்

**வினா எண் 10907—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் படைவீரர்கள் குறை திர்க்கும் நாள் மாவட்டம் தோறும் நடைபெறுகின்றதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) அரசாணை எண் 694, பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள்: 28-04-98-ல் முன்னாள் படைவீரர்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சியர்கள் ஒவ்வொரு காலாண்டிலும் முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி முன்னாள் படை வீரர்களுக்கென்றே சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

46—

## புதிய கட்டிடம்

**வினா எண் 16517—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் தென்னாம்பட்டினம் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம் தென்னாம்பட்டினம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு நல்ல நிலையில் போதிய கட்டிட வசதி இருப்பதால் புதிய கட்டிடம் கட்டும் அவசியம் எழவில்லை.

47—

## வணிக வளாகம்

**வினா எண் 19834—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் தாட்கோமூலம் வணிக வளாகம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக வணிக வளாகங்கள் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

## கல்வி உதவித் தொகை

**வினா எண் 25518—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உரிய நேரத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் காலதாமதமின்றி உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

**49—**

## குழுக்கள்

**வினா எண் 32046—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் 1969—ல் சொல்லப்பட்டிருக்கிற மாவட்ட அளவிலான (Vigilance and Monitoring) விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்க அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அறிவிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் அரசு கடிதம் எண் 12945/2001-4, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 17-10-2001-ன்படி திருத்தி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.



**50—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 35053—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட நலப் பள்ளிகளில், ஆதிதிராவிட ஆசிரியர்களையே பெரும்பாலும் நியமிக்கப்பட்டு வருவதை மாற்றி பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, முற்பட்ட இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களையும் இப்பள்ளிகளில் நியமிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத்துறை சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகளின்படி இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நியமனத்தில் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்ற விதியின்படி முன்னுரிமை வழங்கப்பட்டு இடைநிலை ஆசிரியர் நியமனங்கள் செய்யப்படுகின்றன. பட்டதாரி நிலை ஆசிரியர் மற்றும் முதுகலைப் பட்டதாரி நிலை ஆசிரியர்கள் இட ஒதுக்கீட்டின்படி நியமனம் செய்யப்படுவதால் பிற இனத்தைச் சேர்ந்த பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும் தேர்வு செய்யப்பட்டு இத்துறை பள்ளிகளில் பணியாற்றி வருகின்றனர்.

**51—**

## உதவித் தொகை

**வினா எண் 49062—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் காலதாமதமாக வழங்கப்படுவதை அரசு அறியுமா ?

[2004 நவம்பர் 22

(ஆ) வருடந்தோறும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் உதவித் தொகைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை புதுப்பித்தல் இனங்களுக்கு செப்டம்பர் மாதத்திற்குள்ளாகவும், புதிய விண்ணப்பங்களுக்கு நவம்பர் மாதத்திற்குள்ளாகவும் வழங்கும் வகையில் ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி கல்வி உதவித் தொகைகள் குறித்த நேரத்தில் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு காலதாமதம் தவிர்க்கப்பட்டு வருகிறது.

**52—**

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

**வினா எண் 3574—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் கிராமத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வல்லத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**53—**

## பயிற்சிகள்

**வினா எண் 6848—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) கிராமப்புற விவசாயிகள் மத்தியில் பல அறிவியல் தொழில்நுட்ப அறிவியல் மையங்கள் மற்றும் செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்து பயிற்சிகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 2,46,260 விவசாயிகளுக்கு பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் ரூ.4.4 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வந்தது. மேலும், 4128 விவசாயிகளுக்கு அறிவியல் தொழில்நுட்ப செயல் விளக்கப் பண்ணைகள் ரூ.1.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் மானியம் வழங்கி செயல்படுத்தப்பட்டு வந்தது. 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 2,54,345 விவசாயிகளுக்கு ரூ.207.334 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகளும் ரூ.119.146 இலட்சம் செலவினத்தில் செயல் விளக்கம் மூலமும் 5806 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

(1) ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம்

(2) எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம்

(3) கரும்பு மேம்பாட்டுத் திட்டம்

(4) தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம்

(5) தேசிய மானாவாரி நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம்

(6) தென்னை அபிவிருத்தித் திட்டம்

(7) தீவிர மக்காச்சோளம் மேம்பாட்டுத் திட்டம்

(8) தமிழ்நாடு பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

(9) தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம்

(10) உழவர் பயிற்சி நிலையத்தின் பயிற்சிகள்

(11) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேம்பாட்டுத் திட்டம்

[2004 நவம்பர் 22

54—

**பனை அபிவிருத்தித் திட்டம்**

**வினா எண் 14429—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் பனை அபிவிருத்தித் திட்டத்தினை அரசு உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் பனை அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

55—

**விசைத் தெளிப்பான்**

**வினா எண் 17848—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் உள்ள சிறு விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்கள் குறைவான விலையில் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் அமல்படுத்தப்படும் ?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு விசைத் தெளிப்பான்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

56—

**தரைப் பாலம்**

**வினா எண் 18872—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1992 ஆம் ஆண்டு பரவலூர்-ரெட்டிக்குப்பம் இடையில் உள்ள மணிமுத்தாற்றின் குறுக்கே தரைப் பாலம் கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும் இதுவரை பணி துவங்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், பணி துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் புதிய சாலைப் பணிகளின்கீழ் பெண்ணாடம்-விருத்தாச்சலம் சாலையில் வெலிங்டன் நீர்த்தேக்க உபரி நீர்க் கால்வாயில் பாலம் அமைக்கும் பணி முடிந்த பிறகே இச்சாலை பயன்பாட்டிற்கு வரும் என்பதால், பரவலூர்-ரெட்டிக்குப்பம் இடையிலான மணிமுத்தாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் பணி கைவிடப்பட்டது. இப்பணிக்கான நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை.

[2004 நவம்பர் 22

57—

## பூச்சி மருந்துகள்

**வினா எண் 21232—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெற்பயிரில் விழும் நாவாய் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஏழை விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நெற்பயிரில் விழும் நாவாய் பூச்சிகளைக் கட்டுப்படுத்த மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

58—

## தரிசு நிலச் சீரமைப்புத் திட்டம்

**வினா எண் 21502—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தரிசு நிலச் சீரமைப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வவு பேர் பயன்பெற்றுள்ளார்கள் ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2002-03 மற்றும் 2003-04 முடிய 5696 எக்டேர் நிலப்பரப்பில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பழக்கன்றுகளும் மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. சேலம்



2004 நவம்பர் 22]

மாவட்டத்தில் தரிசு நிலச் சீரமைத்தித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் இதுவரை சுமார் 2,800 விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள்.

59—

## தேங்காய் கொள்முதல்

**வினா எண் 23025—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை ஒன்றியத்தில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று (பச்சை) தேங்காய்களை அரசே கொள்முதல் செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பச்சை தேங்காய்களை அரசே கொள்முதல் செய்ய வேளாண் துறை வசம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

60—

## மழைநீர் சேமிப்பு

**வினா எண் 23155—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மழை நீரைச் சேகரிக்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்படுமா ?

[2001 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் மழை நீரைச் சேகரிக்க விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**61—**

**கரும்புச் சாலைகள் திட்டம்**

**வினா எண் 29750—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் எட்டியத்தளி — அரசர்குளம் சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சர்க்கரை ஆலைப் பகுதியில் இணைப்புச் சாலைகள் அமைப்பது மற்றும் அவ்வாறு போடப்பட்ட சாலைகளை பராமரிப்பது மட்டுமே கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. அறந்தாங்கி தொகுதி, எட்டியத்தளி-அரசர்குளம் சாலை நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் இதர மாவட்டச் சாலையாகும். எனவே, இந்த சாலைப் பணியை கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

**62—**

**கரும்புச் சாலைகள் திட்டம்**

**வினா எண் 29751—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 நவம்பர் 22]

அறந்தாங்கி முக்குடி — அழியாநிலை சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சர்க்கரை ஆலைப் பகுதியில் இணைப்புச் சாலைகள் அமைப்பது மற்றும் அவ்வாறு போடப்பட்ட சாலைகளைப் பராமரிப்பது மட்டுமே கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. அறந்தாங்கி—முக்குடி—அழியாநிலை சாலை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருவதால், அந்தச் சாலையை கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

**63—**

**கரும்புச் சாலைகள் திட்டம்**

**வினா எண் 29752—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வல்லவாரி—அறந்தாங்கி சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**விடை**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சர்க்கரை ஆலைப் பகுதியில் இணைப்புச் சாலைகள் அமைப்பது மற்றும் அவ்வாறு போடப்பட்ட சாலைகளை பராமரிப்பது மட்டுமே கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம், வல்லவாரி—அறந்தாங்கி சாலை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருவதால் அந்தச் சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

[2004 நவம்பர் 22

64—

## கரும்புச் சாலைகள் திட்டம்

**வினா எண் 29753—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் எட்டியத்துளி—ஆவனத்தான்கோட்டை சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சர்க்கரை ஆலைப் பகுதியில் இணைப்புச் சாலைகள் அமைப்பது மற்றும் அவ்வாறு போடப்பட்ட சாலைகளைப் பராமரிப்பது மட்டுமே கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. எட்டியத்துளி—ஆவனத்தான்கோட்டை சாலை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் பராமரிக்கப்படும் இதர மாவட்டச் சாலை ஆகும். ஆதலால், அந்தச் சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

65—

## கரும்புச் சாலைகள் திட்டம்

**வினா எண் 30379—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் மேற்பனைக்காடு இருப்பூர்தி நிலையம் (Railway Station) பெரியாளூர் விலக்கு சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சர்க்கரை ஆலைப் பகுதியில் இணைப்புச் சாலைகள் அமைப்பது மற்றும் அவ்வாறு போடப்பட்ட சாலைகளைப் பராமரிப்பது மட்டுமே



2004 நவம்பர் 22]

கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. அறந்தாங்கி தொகுதியில் மேற்பனைக்காடு இருப்பூர்தி நிலையம் (Railway Station) பெரியாளூர் விலக்கு சாலை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருவதால், அந்தச் சாலையை கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

66—

## கரும்புச் சாலைகள் திட்டம்

**வினா எண் 30380—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் வல்லவாரி மேற்கு பூவுற்றக்குடி சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சர்க்கரை ஆலைப் பகுதியில் இணைப்புச் சாலைகள் அமைப்பது மற்றும் அவ்வாறு போடப்பட்ட சாலைகளைப் பராமரிப்பது மட்டுமே கரும்புச் சால்லகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. அறந்தாங்கி தொகுதியில் வல்லவாரி மேற்கு பூவுற்றக்குடி சாலை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருவதால், அந்தச் சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

67—

## கரும்புச் சாலைகள் திட்டம்

**வினா எண் 30381—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதியில் பெரியாளூர் மேற்கு குலமங்களம் சாலைகளை கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் பெரியாளூர் மேற்கு குலமங்களம் வல்லவாரி பூவுற்றக்குடி ஆகிய சாலைகள் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த சாலைகளல்ல. மேலும், இச்சாலைகளை கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்து செப்பனிடும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

68—

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 30488—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் வேளாண்மைக் கல்லூரி புதியதாக ஏற்படுத்தும் திட்டம் இல்லை.

69—

**காட்டாமணக்கு**

**வினா எண் 30622—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏரிகளில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஏரிகளில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

70—

**பார்த்தீனியம் விஷச் செடி**

**வினா எண் 30997—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்த்தீனியம் விஷச் செடியை முழுவதுமாக அழிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பார்த்தீனியம் விஷச் செடியை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

71—

**பயிர்க் காப்பீடு திட்டம்**

**வினா எண் 33896—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் நெல் பயிர்க் காப்பீடு திட்டத்தின்மூலம் அறிவிக்கப்பட்ட பகுதிகள் யாவை?

(ஆ) அறிவிக்கப்படாத பகுதிகள் யாவை என அரசு அறிவிக்குமா?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை

**விவர அறிக்கை.**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெற்பயிருக்கு 2002-2003 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட நெல் பயிர் காப்பீடுத் திட்டப் பகுதிகள் பின்வருமாறு:-

1. நெல் — பருவம் 1
   கார்/குறுவை/சொர்ணவாரி
   (1) காஞ்சிபுரம் வட்டாரம்
   (2) உத்திரமேரூர் வட்டாரம்
   (3) காட்டாங்குளத்தூர் வட்டாரம்
   (4) திருப்போரூர் வட்டாரம்
   (5) திருக்கழுக்குன்றம் வட்டாரம்
   (6) மதுராந்தகம் வட்டாரம்

2. நெல் — பருவம் 2
   சம்பா / தாளி
   (1) காஞ்சிபுரம் வட்டாரம்
   (2) வாலாஜாபாத் வட்டாரம்
   (3) உத்திரமேரூர் வட்டாரம்
   (4) ஸ்ரீபெரும்புதூர் வட்டாரம்
   (5) குன்றத்தூர் வட்டாரம்
   (6) காட்டாங்குளத்தூர் வட்டாரம்
   (7) திருப்போரூர் வட்டாரம்
   (8) மதுராந்தகம் வட்டார்ரம்
   (9) அச்சிரப்பாக்கம் வட்டாரம்
   (10) சித்தாமூர் வட்டாரம்
   (11) லத்தூர் வட்டாரம்

3. நெல் — பருவம் 3
   நவரை/கோடை
   (1) காஞ்சிபுரம் வட்டாரம்
   (2) வாலாஜாபாத் வட்டாரம்
   (3) ஸ்ரீபெரும்புதூர் வட்டாரம்



2004 நவம்பர் 22]

   (4) குன்றத்தூர் வட்டாரம்
   (5) திருப்போரூர் வட்டாரம்
   (6) காட்டாங் குளத்தூர் வட்டாரம்
   (7) திருக்கழுக்குன்றம் வட்டாரம்
   (8) மதுராந்தகம் வட்டாரம்
   (9) சித்தாமூர் வட்டாரம்
   (10) லத்தூர் வட்டாரம்

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெற்பயிருக்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கு நெல் பயிர் காப்பீடு திட்டத்தின்கீழ் அறிவிக்கப்படாத பகுதிகள் பின்வருமாறு:—

| நெல் பருவம் — 1 | நெல் பருவம் — 2 | நெல் பருவம் — 3 |
|---|---|---|
| பரங்கிமலை வட்டாரம் | பரங்கிமலை வட்டாரம் | பரங்கிமலை வட்டாரம் |
| வாலாஜாபாத் " | | உத்திரமேரூர் |
| ஸ்ரீபெரும்புதூர் " | | அச்சிறுப்பாக்கம் |
| குன்றத்தூர் " | | |
| அச்சிறுப்பாக்கம் " | | |
| சித்தாமூர் " | | |
| லத்தூர் " | | |

**72—**

**ஊக்கத் தொகை**

**வினா எண் 37105—திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு விவசாயிகளுக்கு தமிழக அரசு 2002-2003 ஆம் ஆண்டில் ஊக்கத் தொகை கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கரும்பு விவசாயிகளுக்கு தமிழக அரசு 2002-2003 ஆம் ஆண்டில் ஊக்கத் தொகை கொடுக்கும் திட்டம் இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**73—**

**மூலிகைச் செடிகள்**

**வினா எண் 38803—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடுமியான்மலை அண்ணா பண்ணையில் மூலிகைச் செடிகள் வளர்க்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**74—**

**உரம் மற்றும் விதைகள்**

**வினா எண் 39549—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் ஊராட்சியில் தொடர்ந்து விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதைகளை மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



2003-2004 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தில் (அரிசி) சான்று பெற்ற விதை விநியோகம், தொழில்நுட்ப நிரூபணத் தளைகள், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிரூபணத் திடல் அமைத்தல், தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல், மானிய விலையில் உயிர் உரங்கள், நுண்ணூட்ட சத்துக்கள் விநியோகம் செய்யப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.21,69,800/- மானியம் வழங்கப்பட்டது. மாநில அளவில் இத்திட்டத்தின்கீழ் 378 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். இத்திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டது. மேலும், 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**75—**

**கரும்பு அபிவிருத்திச் சாலை**

**வினா எண் 40262—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நெரும்பூர்-பாண்டூர்—விளாகம்—கன்னிக்கோயில் சாலை "கரும்பு அபிவிருத்திச் சாலை" திட்டத்தின்கீழ் உள்ளதை சீர் செய்துதர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நெரும்பூர்—பாண்டூர்—விளாகம்—கன்னிக்கோயில் சாலைத் திட்டப் பணியானது கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

**76—**

**பயிற்சி முகாம்**

**வினா எண் 42572—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[2004 நவம்பர் 22

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியின் கரும்பு சாகுபடி பரப்பு தனியார் துறை ஆலையான பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் அரசின் நிதியிலிருந்து கரும்பு விவசாயிகளுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் அளிக்கும் வழக்கம் இல்லை. எனினும், பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலை, அவ்வாலைக்குட்பட்ட ஆனைமலை கரும்பு அலுவலகத்தில் அவ்வாலையைச் சார்ந்த கரும்பு விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளித்து வருகிறது.

**77—**

## வேளாண் இடுபொருட்கள்

**வினா எண் 42978—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகள் நடப்பாண்டில் விவசாயப் பணிகளைத் துவங்கிட அரசு விதை, உரம் உட்பட வேளாண் இடுபொருட்களை இலவசமாக வழங்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசிடம் இடுபொருட்கள் இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**78—**

## பயறு உற்பத்தி

**வினா எண் 46797—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தோட்டக்கலைத் துறையின்மூலம் பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பயறு வகைகள் குறித்து தோட்டக்கலைத் துறையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. தேசிய பயறு பெருக்குத் திட்டத்தின்கீழ், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் சீர்காழி பகுதியிலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் உரிய பருவங்களில் மத்திய அரசு உதவியுடன் பயறு உற்பத்தியினைப் பெருக்குவதற்கான நடவடிக்கை வேளாண்மைத் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**79—**

## பணப் பட்டுவாடா

**வினா எண் 48621—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அமராவதி சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு பணப் பட்டுவாடா செய்யாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) 2002-2003 மற்றும் 2003-2004 பருவங்களில் அரவை செய்த கரும்பிற்கு கரும்பு கிரயம் முழுவதும் நிலுவையின்றி வழங்கப்பட்டுவிட்டது.

80—

## பயிற்சி

**வினா எண் 52882—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவத்திற்கான மூலிகைச் செடிகளை வீட்டுத் தோட்டங்களில் பயிரிட மக்களுக்கு பயிற்சி அளிக்க அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மருத்துவத்திற்கான மூலிகைச் செடிகளை வீட்டுத் தோட்டங்களில் பயிரிட மக்களுக்கு பயிற்சி அளிக்க திட்டம் ஏதுமில்லை. இருப்பினும், விவசாயிகளுக்கு அளிக்கப்படும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்களுடன் மூலிகைச் செடிகள் பற்றிய விவரங்கள் அளிக்கப்படுகிறது.

81—

## இரப்பர் மரங்கள்

**வினா எண் 19083—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழக கீரிப்பாறை டிவிஷனிலுள்ள இரப்பர் மரங்களை வெட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், யாருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது ?

(இ) இதனடிப்படையில் இரப்பர் மரங்கள் வெட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) கீரிப்பாறை கோட்டத்தில் கூப்பு எண் 7-ல் உள்ள முதிர்ச்சியடைந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் ஏலத்தை, திரு. ஏ. மரிய சத்தியநேசன் என்ற நபருக்கு உறுதி செய்து 9-2-2002 தேதியிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசாணை (நிலை) எண் 31-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) இதன்படி, மரங்களை வெட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது.

82—

## சுத்திகரிப்பு

**வினா எண் 20579—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலுள்ள சாய சலவைப் பட்டறைகளிலிருந்து கழிவுகளை முறையாக சுத்திகரிக்காமல் வெளியேற்றிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை விதிமுறைகளைக் கடைபிடிக்காத சுத்திகரிப்பு நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

83—

## கூடுதல் ஊழியர்கள்

**வினா எண் 26816—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கூடுதல் வன ஊழியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வனத் துறையில் கூடுதல் வன ஊழியர்களை நியமிக்க கருத்துருக்கள் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

வனத் துறையில் தினக் கூலி அடிப்படையில், வனத் தோட்டக் காவலர்கள், சமூக வன ஊழியர்கள் சுமார் ஐயாயிரத்து ஐந்நூறு நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசாணை எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனம் (வனம்-2) துறை, நாள் 8-9-1999-ன்படி மேற்கண்டவர்களுக்கு நிரந்தரப் பணியிடங்கள் வழங்குவதற்காக இவர்கள் வனத் துறையில் முதன்முதலில் பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் அமைந்த மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இருந்து கடந்த 2002-2003-ல் உடற்கூறு தகுதி மற்றும் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில், முதற்கட்டமாக சுமார் 400 நபர்கள் வனக் காவலர்களாகவும், 40 நபர்கள் மாலிகளாகவும் தேர்வு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டனர். அடுத்த கட்டமாக சுமார் 122 நபர்கள் வனக் காவலர்களாகவும், பதினேழு பேர் மாலிகளாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரையில் தற்காலிகமாக துறையில் பணிபுரிந்து பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களில் 579 நபர்கள் வன ஊழியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அரசாணை (நிலை) எண் 212, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ன்படி, ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் காவலர்களைத் தவிர மற்ற அரசுப் பணியிடங்கள் நிரப்ப தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் வன ஊழியர்களை நியமிப்பது பற்றிக் கேள்வி எழவில்லை.

**84—**

## வனப் பள்ளி

**வினா எண் 28671—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மாத கடப்பில் வனத் துறையின்மூலம் தங்கும் இடத்துடன்கூடிய வனப் பள்ளி ஒன்று தொடங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மாத கடப்பில் யூனியன் மூலம் நடைபெறும் பள்ளியில் தங்கும் இடவசதி இல்லை. இப்பள்ளியில் 5 வகுப்புகள் உள்ளன. மாணவர் 43, மாணவியர் 42. மொத்தம் 85 மாணவ-மாணவியர் பயில்கின்றனர். மாத கடப்பா என்ற ஊர் திருப்பத்தூர் கோட்டம், திருப்பத்தூர் சரகக் கட்டுப்பாட்டில் வாணியம்பாடியை அடுத்த மலைமீது உள்ளது. மேலும், திருப்பத்தூர் கோட்டத்தில் ஜவ்வாது மலையில் உறைவிடப் பள்ளிகள் வசந்தாபுரம் உட்பட பெரும்பள்ளி, தகர குப்பம், நெல்லிவாசல், மேம்பட்டு மற்றும் புதூர் நாடு ஆகிய ஊர்களில் வனத் துறைமூலம் நடத்தப்பட்டு வருகிறது. வசந்தாபுரம் வனத் துறை தொடக்கப் பள்ளி (உண்டு உறைவிடப் பள்ளி) மாத கடப்பிலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே, மாத கடப்பில். வனத் துறைமூலம் தங்கும் வசதி கொண்ட பள்ளி துவங்க இயலாது.

**85—**

## மாசு ஏற்படுதல்

**வினா எண் 32063—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைத் துறைமுகத்தில் நிலக்கரி மற்றும் உரங்கள் இறக்குமதியினால் சென்னை நகருக்கு மாசு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) இந்த மாசுகளைத் தடுக்க அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திறந்தவெளியில் சேமிக்கப்பட்டிருக்கும் நிலக்கரி குவியல்களால் ஏற்படும் காற்று மாசினைத் தடுக்க, சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழக வளாகத்தினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆய்வு செய்து, 1987 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் காற்று மாசு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் பிரிவு 31ஏ-ன்கீழ் நிலக்கரி துகள் மாசினை குறைக்கும் பொருட்டு, நிலக்கரி சேமிக்கப்படும் இடங்களில் தண்ணீர் தெளிக்க சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு அறிவுரை வழங்கியுள்ளது. லாரிகளில் ஏற்றிச் செல்லும்போது சாலைகளில் சிதறிக் கிடக்கும் நிலக்கரி தூசுகளை அவ்வப்போது சேகரிக்கவும், லாரிகளில் நிலக்கரியை முழு அளவுக்கும் சிறிது குறைவாகவே ஏற்றிடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நிலக்கரி மற்றும் சல்பர் ஏற்றிவரும் லாரிகள் தார்பாலின் கொண்டு சரியாக மூடப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் செயல்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மாசுகளைத் தடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**86—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 37036—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கூழையார் மீனவ கிராமம் அருகில் இறால் குட்டை நடத்திவருவதால் சுற்று வட்டாரத்தில் உள்ள ஊர்களில் சுத்தமான குடிநீர் உப்பு நீராக மாறிவிட்டதை அரசு அறியுமா ?

(ஆ) அதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) உச்சநீதிமன்ற உத்தரவின்படி, மத்திய அரசால் அமைக்கப்பட்ட தேசிய இறால் வளர்ப்புக் குழுமத்திடம் இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கேட்டுக்



கொண்டுள்ளது. மேலும், கூழையார், தாண்டவன்குளம் மற்றும் புதுப்பட்டினம் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி அமைத்து அதன்மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**87—**

## தடுப்பணை

**வினா எண் 41867—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி வன சரகத்தில் மண் அரிப்பைத் தடுப்பதற்கு பள்ளமான பகுதிகளில் தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி வன சரகத்தில் மண் அரிப்பைத் தடுப்பதற்கு 2003-2004 ஆம் வருடத்தில் கீழ்க்கண்ட இனங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது:—

| திட்டத்தின் பெயர் | தடுப்பணைகள் எண்ணிக்கை |
| --- | --- |
| (1) எஸ்.ஜி.ஆர்.ஒய் | ... 3 |
| (2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாடு திட்டம் | ... 2 |
| (3) யானைகள் திட்டம் | ... 1 |
| | 6 |

**88—**

## நிலத்தடி நீர்

**வினா எண் 47675—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, வேதநாராயணபுரத்தில் இயங்கும் மோகன் வடிசாலை நிறுவனம் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுவதால் சுற்றியுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் மிகவும் ஆழத்தில் செல்வதையும் அங்கு வெளியேற்றும் கழிவுப் பொருள் பாலாற்றில் கலந்து விடுவதைத் தடுக்கவும் அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, வேதநாராயணபுரத்தில் இயங்கிவரும் திருவாளர்கள் மோகன் புரூவாரிஸ் அண்டு டிஸ்டிலரிஸ் லிமிடெட் எரிசாராயத் தொழிற்சாலை தண்ணீர் எடுப்பதினால் நிலத்தடி நீர் மட்டம் குறையாது. தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு உயிர் உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. கழிவுநீர் ஏதும் பாலாற்றில் சென்று கலப்பதில்லை.

**89—**

## மூங்கில்

**வினா எண் 48849—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான மூங்கில் குத்துகள் முதிர்ச்சியடைந்து வீணாகும் நிலையில் உள்ளதை ஏலம் விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) இந்த 2004-2005 ஆம் நிதியாண்டில் ஏலம் விடப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்படும்.

**90—**

## மின் விளக்குகள்

**வினா எண் 52631—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மின் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மின் விளக்குகள் போதுமான அளவில் பொருத்தப்பட்டு பராமரித்து வரப்படுகின்றன.

**91—**

## கிராமச் சாலைகள்

**வினா எண் 52733—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காட்டிலுள்ள கருங்காளி மற்றும் குரும்பப்பட்டி ஆகிய கிராமச் சாலைகள் வனத் துறையினரால் போடப்பட்டுள்ளதால் அச்சாலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியிலுள்ள குரும்பப்பட்டி மற்றும் கருங்காலி ஆகிய கிராமங்கள், தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 16-ன்கீழ் ஒதுக்கக்காடாக அறிவிக்கை செய்யப்பட்ட குரும்பப்பட்டி காப்புக்

[2004 நவம்பர் 22

காட்டினுள், உள்ளடங்கிய கிராமங்களாகும். குரும்பப்பட்டியிலிருந்து கொண்டப்பநாயக்கன்பட்டி சென்றுவர வழி உரிமம் வழங்கப்பட்டு, மனிதர்கள், கால்நடைகள் மற்றும் மாட்டு வண்டிகள் சென்றுவர அனுமதிக்கப்பட்டுள்ளது. பொது நலன் கருதி இச்சாலையினை வாகனப் போக்குவரத்துக்காக அனுமதிக்கக் கோரும்பட்சத்தில் நடைமுறை விதிகளின்படி அனுமதி வழங்கப்படும்.

**92—**

### மாசினைத் தடுத்தல்

**வினா எண் 56602—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை போன்ற பெருநகரங்களில் காற்று மாசுபடுவதை ஆய்வு செய்து அதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்கள் உமிழும் புகையினால் சென்னை நகரில் காற்று மாசுபட்டு உடல் நலத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மோட்டார் வாகனமும் நிர்ணயிக்கப்பட்ட வாகனப் புகை மாசின் அளவிற்குட்பட்டு தயாரிக்கப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டும் என உத்தரவு இடப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மோட்டார் வாகனமும் நிர்ணயிக்கப்பட்ட புகை மாசின் அளவுக்குட்பட்டு இருக்கிறது என்ற சான்றிதழ் போக்குவரத்து ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட புகை சோதனை செய்யும் நிலையங்களில் இருந்து பெறவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வாகனப் புகை மாசினைக் கட்டுப்படுத்த சென்னை நகரில் மூன்று இடங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் புகை சோதனை மையங்களும், 120 தனியார் வாகன புகை சோதனை நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும் மாநகரப் பேருந்துகளைப் பரிசோதிக்க,



2004 நவம்பர் 22]

அடையாறு, ஆலந்தூர், அயனாவரம், வடபழனி, தண்டையார்பேட்டை மற்றும் அண்ணாநகர் பணிமனைகளில் வாகனப்புகை சோதனை செய்யப்பட்டு வருகிறது.

வாகனப் புகை மாசினைத் தவிர்க்க காரீயம் இல்லாத பெட்ரோல் (Unleaded petrol) விநியோகிக்கப்படுகிறது. கந்தக அளவு (0.05) குறைக்கப்பட்ட பெட்ரோல் மற்றும் டீசல் எரிபொருள் சென்னை மாநகரில் அனைத்து பெட்ரோல் விற்பனை நிலையங்களிலும் 1-7-2001 முதல் விநியோகிக்கப்படுகின்றன.

சென்னை மாநகரில் 1-7-2001 அன்று அல்லது அதற்கு பிறகு உற்பத்தி செய்யப்பட்ட தனியார் நான்கு சக்கர வாகனங்கள் பாரத்-2 நிறைமாசின் தர அளவிற்குட்பட்டு இருந்தால் மட்டுமே பதிவு செய்யப்படவேண்டும் என்ற விதிமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெட்ரோலுக்கு மாற்று எரிபொருளாக திரவ பெட்ரோலிய வாயுவை (எல்.பி.ஜி.) மூன்று சக்கர ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் பயன்படுத்துவதற்கு எண்ணெய் நிறுவனங்கள் திரவ பெட்ரோலிய வாயுவை நிரப்பும் நிலையங்களை அமைக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

வாகனப் புகை கண்காணிப்பு திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், போக்குவரத்துத் துறையினருடன் ஒருங்கிணைந்து திடீர் வாகனப் புகை சோதனை செய்து வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட புகை மாசின் தர அளவிற்கு மேல் புகை மாசினை உமிழும் வாகனங்கள்மீது போக்குவரத்து துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது.

**93—**

### குடியிருப்புகள்

**வினா எண் 2857—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பாப்பிரெட்டிப்பட்டியில் குடியிருப்புகள் அமைத்துத் தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**94—**

**குடியிருப்புகள்**

**வினா எண் 8425—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் குடிசைமாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட குடியிருப்புகள் எத்தனை?

(ஆ) மேம்படுத்தப்பட்டுள்ள மனைப் பிரிவுகள் எத்தனை?

(இ) அவை அத்தனையும் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட மொத்த குடியிருப்புகள் 8,860. இதில் ஒக்கியம் துரைப்பாக்கம் குடியிருப்புகள் 6,500 அடங்கும்.

(ஆ) பள்ளிக்கரணை பகுதியில் மொத்தம் மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகள் 2202 ஆகும்.

(இ) தாம்பரம் தொகுதியில் ஒக்கியம் துரைப்பாக்கம் தவிர பிற பகுதிகளில் மொத்தம் கட்டப்பட்டுள்ள 2,360 குடியிருப்புகளில் 2,345 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. மீதம் உள்ள 15





குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்ய தகுதிவாய்ந்த குடிசை வாசிகள் விபரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இக்குடியிருப்புகள் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். பள்ளிக்கரணையிலுள்ள 2,202 மேம்படுத்தப்பட்ட மனைகளில் 877 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,325 மனைகள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒதுக்கீடு செய்திட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தாம்பரம் தொகுதியில் பத்தாவது நிதிக் குழு உதவியுடன் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள 6,500 குடியிருப்புகளில் இதுவரை 4,665 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,835 குடியிருப்புகள் துரித இரயில் திட்டத்தினரிடமிருந்து பட்டியல் வந்த பின்னர்தான் ஒதுக்கீடு செய்யப்படும்.

**95—**

**வீடுகள்**

**வினா எண் 14993—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கிராமப்புறங்களில் வீட்டுவசதி வாரியத்தின்மூலம் குறைந்த மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**96—**

**நிலங்களைப் பிரித்தல்**

**வினா எண் 19372—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொண்டிசெட்டிபட்டி ஊராட்சியில் வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நடுத்தரப் பிரிவு மக்களுக்கு பிரித்து வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கொண்டிசெட்டிபட்டி ஊராட்சியில் வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நடுத்தரப் பிரிவு மக்களுக்கு மட்டுமல்லாமல் உயர் வருவாய் பிரிவு மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கும் பிரித்து வாங்கும் திட்டம் வாரியத்திடம் உள்ளது. அதன்படி 139 மேம்படுத்தப்பட்ட மனைகள் தற்போது விற்பனைக்கு உள்ளது. இதில் உயர் வருவாய் பிரிவு மனைகள் 43. மத்திய வருவாய் பிரிவு மனைகள் 35 மற்றும் குறைந்த வருவாய் பிரிவு மனைகள் 61 ஆகும்.

97—

## மனைகள்

**வினா எண் 20758—திரு.செ. வெங்கடாசலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அனைத்து வருவாய் பிரிவினருக்கும் மனைகள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே அனைத்து வகை பிரிவு மனைகள் அடிப்படை வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு



வழங்கப்பட்டு வருகின்றன. எற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் இன்னமும் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள காரணத்தால் புதிய திட்டங்கள் எதுவும் தற்போது அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற விவரம் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) சேலம் பகுதியில் இத்திட்டம் 1992 முதல் 1996 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

98—

## கட்டுமானத் தொழில்

**வினா எண் 23792—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து வந்த கட்டுமானத் தொழில் மற்றும் வீடுகள், மனைகள் வாங்குதல் விற்றல் ஆகிய Real Estate தொழில் மீண்டும் புத்துயிர் பெற அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

Real Estate தொழில் மீண்டும் புத்துயிர்பெற அரசு பல்வேறு அமைப்புகள் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நகரப் பகுதி மக்களோடு கட்டுமான திட்டப் பணிகளை ஊக்குவிப்பதன்மூலம் வேலைவாய்ப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

99—

## பேருந்து வசதி

**வினா எண் 27029—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சென்னையிலுள்ள கோயம்பேடு பேருந்து நிலையம் எப்போது செயல்பட உள்ளது?

(ஆ) இப்பேருந்து நிலையத்திலிருந்து எத்தனை பேருந்துகள் இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் பொதுமக்களின் உபயோகத்திற்காக 18-11-2002 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நன்முறையில் பராமரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இப்பேருந்து நிலையத்திலிருந்து ஏறத்தாழ 270 பேருந்துகள் ஒரே சமயம் நின்று இயக்கக்கூடிய வகையில் பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றும் தினசரி சராசரி 2,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**100—**

### சாலை

**வினா எண் 34759—திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி 153-வது வட்டம் வேளச்சேரி புறவழிச் சாலையிலிருந்து வீட்டு வசதித் துறை குடியிருப்பை இணைக்கும் சாலை மிக மோசமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2004 நவம்பர் 22]

(ஆ) சென்னை மாநகராட்சி 153-வது வட்டம் வேளச்சேரி புறவழிச் சாலையிலிருந்து வீட்டுவசதி வாரியத்தால் உருவாக்கப்பட்ட குடியிருப்புத் திட்டப் பகுதியை இணைப்பதற்கு வாரியத்தால் அமைக்கப்பட்ட 40 அடி அகலம் கொண்ட அணுகு சாலையில் இருந்த ஆக்கிரமிப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 27-5-2004 அன்று அகற்றப்பட்டுவிட்டது. இச்சாலை, தற்பொழுது ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லாமல் போக்குவரத்துக்கு உகந்ததாக உள்ளது.

**101—**

### அடுக்குமாடிக் கட்டடங்கள்

**வினா எண் 37692—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிப் பகுதியில் வீடுகள் கிடைப்பது அரிதாக உள்ளதால், அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டி நடுத்தர மக்களுக்குக் குறைந்த வாடகையில் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகராட்சிப் பகுதியில் நடுத்தர மக்களுக்குக் குறைந்த வாடகை அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**102—**

### மாதிரி நகரம்

**வினா எண் 41347—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) 1991-1996 ஆம் ஆண்டுகளில் மதுரையில் புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர் என்று மாதிரி நகரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**103—**

**பாக்கித் தொகை**

**வினா எண் 3877—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 31-3-2001 நிலவரப்படி பால் உற்பத்தியாளர்களுக்குக் கூட்டுறவு மையங்கள் தரவேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?

(ஆ) பாக்கித் தொகைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 31-03-2001 நிலவரப்படி பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பால் பணம் நிலுவைத் தொகை ரூ.84.82 கோடியாகும்.

(ஆ) மேற்படி பால் பாக்கித் தொகையை கணிசமாகக் குறைப்பதற்கு ஏதுவாக கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.28 கோடி வழிவகை (Ways and Means) முன் பணமாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அரசு ஆணை வழங்கியது. ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதி, 20-ம் தேதி, 30/31-ம் தேதிகளில் பால் பணம் பட்டுவாடா செய்வதற்கு



2004 நவம்பர் 22]

ஏதுவாக ஒன்றியங்கள் சங்கங்களுக்குப் பால் பணத்தை முன்கூட்டியே வழங்கி வருகின்றன. தற்போது பால் உற்பத்தியாளர்களுக்கு ஜூலை 2004-ல் பால் பணம் நிலுவை ஏதுமின்றி வழங்கப்பட்டுள்ளது.

**104—**

**கால்நடைகளுக்கு மருத்துவ சேவை**

**வினா எண் 22976—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கிராமப்புற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர் பயனடையும் வகையில் கால்நடை மருத்துவர் மூலம் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின்கீழ் உள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களிலுள்ள 7,117 செயல்படும் சங்கங்களில் 4,823 சங்கங்களில் கால்நடை மருத்துவர் மூலம் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. மற்ற சங்கங்கள் அருகில் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்கும் வசதிகள் உள்ளன.

**105—**

**நெய் ஏற்றுமதி**

**வினா எண் 37673—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தயாரிக்கும் நெய் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தயாரிக்கப்படும் நெய் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**106—**

**கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்**

**வினா எண் 53040—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், சங்கராமநல்லூர் பேரூராட்சி, ஆத்தூரில் தனியாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

தற்போது உடுமலை வட்டம், சங்கராமநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட ஆத்தூர் கிராமத்தில் ஒரு மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**107—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 8747—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மருவத்தூர் கோயிலுக்கு வருகை தரும் பயணிகளுக்கு தங்கும் விடுதி பற்றாக்குறை உள்ளதால் அங்குள்ள சுற்றுலாத் துறை தங்கும் விடுதியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்மருவத்தூருக்கு வரும் பக்த பயணிகளுக்கு வேண்டிய அளவில் ஆலய நிர்வாகமே அதிக அளவில் தங்கும் அறைகளை பக்த பயணிகளின் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப



2004 நவம்பர் 22]

கட்டியுள்ளதாலும், ஆலயத்திற்கு அருகே அவ்விடுதிகள் பக்தர்களின் பூஜை முறைகளுக்கு உகந்தவாறு கட்டப்பட்டுள்ளதாலும், பெரும்பாலான பக்த பயணிகளின் தங்கும் அறைகள் வரவேற்பைப் பெற்று வருகிறது. எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேல்மருவத்தூர் "உண்டி உறைவகம்" (ஓட்டல்) நட்டத்தில் இயங்கி வந்ததால் தற்போது இதைத் தனியாருக்கு விடுவதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, 18-2-2003-லிருந்து 15 வருடத்திற்கு ரூ.7,29,600/- அதில் 10% கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் அச்சரப்பாக்கத்தில் உள்ள அருண் & கோ என்ற நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. எனவே, சுற்றுலாத் துறை தங்கும் விடுதியை விரிவுபடுத்தும் கேள்வி எழவில்லை.

**108—**

**குடிநீர்**

**வினா எண் 10614—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், குண்டமங்கலம் ஊராட்சியிலுள்ள மைலம்பட்டி, வடக்கு மேட்டுக்காடு, வேப்பமரத்தூர், இலமரத்தூர், அருந்ததியர் காலனி, நாயக்கர் தெரு ஆகிய இடங்களின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மேட்டூர் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், குண்டமங்கலம் ஊராட்சியிலுள்ள மைலம்பட்டி, வடக்கு மேட்டுக்காடு, வேப்பமரத்தூர், இலமரத்தூர் அருந்ததியர் காலனி மற்றும் நாயக்கன் தெரு ஆகிய குடியிருப்புகளுக்குக் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஓமலூர் (தெற்கு) ஒன்றியத்தைச் சார்ந்த 121 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்

[2004 நவம்பர் 22

திட்டத்தின்மூலம் பணிகள் முடிக்கப்பட்டு, 8/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

109—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 10734 —திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சோம்பட்டி ஊராட்சி, குப்புசெட்டிப்பட்டிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சோம்பட்டி ஊராட்சி, குப்புசெட்டிப்பட்டி குடியிருப்பிற்கான குடிநீர்த் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டு 7/2002-ல் பராமரிப்பிற்காக ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

110—

**குடிநீர்**

**வினா எண் 11848—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, குமாரசாமிபுரம், அரிபுரம், காந்திநகர், ரஸ்தாவூர், கீழ்பாப்பாக்குடி, புது கிராமம் ஆகிய கிராமங்களுக்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?



2004 நவம்பர் 22]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, குமாரசாமிபுரம், அரிபுரம், காந்திநகர், ரஸ்தாவூர், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் நிறைவுற்று திட்டம் தற்போது மக்கட்பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கீழ்ப்பாப்பாக்குடி மற்றும் புதுக்கிராமம் ஆகிய குடியிருப்புகளும் பாப்பாக்குடி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. பாப்பாக்குடி ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டது. அச்சமயம் பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே புதுக்கிராமம் குடியிருப்பிற்கு ஏற்கெனவே அங்கு அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டியிலும் கீழ்ப்பாப்பாக்குடிக் குடியிருப்பிற்கு புதிதாக கட்டப்பட்ட மேல்நிலை தொட்டியிலும் தாமிரபரணி ஆற்று நீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

111—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12074—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், கிரியம்மாள்புரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், கிரியம்மாள்புரம் மற்றும் அரிகேசவநல்லூர் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் நிறைவுற்று 10-8-2002 முதல் பராமரிப்பிற்காக ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

112—

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 12077—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மூலச்சி ஊராட்சிக்குட்பட்ட பொன்மாநகர் ஆதிதிராவிடர் காலனி பஸ் ஸ்டாண்டு பக்கத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, மூலச்சி ஊராட்சி, பொன்மாநகர் ஆதிதிராவிடர் காலனி பஸ் ஸ்டாண்டிற்கு வடப்புறம் 2001-2002 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருநெல்வேலி அவர்களால் வறட்சி நிவாரணத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறு கையிறைப்பானோடு தற்போது இயங்கி வருகிறது.



2004 நவம்பர் 22]

113—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12091—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், அனந்தநாடார்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தருவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், அனந்தநாடார்பட்டி கிராமத்திற்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே இக்குடியிருப்புகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஆற்று நீர் ஏற்றி விநியோகம் செய்யும் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் நிறைவுற்று திட்டம் தற்போது மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

114—

**குடிநீர்க் கட்டணம்**

**வினா எண் 12209—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குக் குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் ஆயிரம் லிட்டர் குடிநீருக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

(ஆ) நலிந்த நிலையிலுள்ள எடப்பாடி நகராட்சிக்கு இக்கட்டணத்தைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குக் குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் ஆயிரம் லிட்டர் குடிநீருக்குக் கட்டணம் ரூ.4.50 என அரசு நிர்ணயித்துள்ளது. தற்போது உள்ள பராமரிப்புச் செலவுகளைக் கருத்தில்கொள்ளும்போது இக்கட்டணம் குறைக்கப்பட சாத்தியக்கூறு இல்லை. இக்கட்டணம் அனைத்து நகராட்சிகளுக்கும் ஒரே அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது ஆகும்.

**115—**

**காவிரி குடிநீர்**

**வினா எண் 12739—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம் கிராமம், பாப்பாங்காடு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு காவிரி குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த பாப்பாங்காடு குடியிருப்பு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 175 கிராமங்கள் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிக்கு காவிரி குடிநீர் வழங்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 15-7-2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



**116—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 13954—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரம், சிராங்குப்பத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரம், சிராங்குப்பத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**117—**

**புதிய ஊராட்சி ஒன்றியம்**

**வினா எண் 15412—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஊராட்சி ஒன்றியம் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஊராட்சி ஒன்றியம் தொடங்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

118—

**சுகாதார சீர்கேடு**

**வினா எண் 19460—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 12-வது வட்டம், பார்த்தசாரதிபிள்ளை மெயின் தெரு மற்றும் 3-வது சந்து ஆகிய இடங்களில் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவதால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளைக் களைய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் தொகுதி, 12-வது வட்டம், பார்த்தசாரதிபிள்ளை மெயின் தெரு மற்றும் 3-வது சந்து ஆகிய இடங்களில் தற்போது குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படவில்லை. தற்போது லாரி மூலம் வழங்கப்படுவதால் சுகாதார சீர்கேடு எதுவும் கிடையாது.



119—

**குடிநீர்**

**வினா எண் 19451—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 3-வது வட்டம், தமிழர் நகர், சாஸ்திரி நகர், கருணாநிதி நகர், ராஜீவ் காந்தி நகர், புதிய வினோபா நகர், இராஜசேகரன் நகர், நேரு நகர் ஆகிய இடங்களில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வருவதால் சுகாதாரமான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, தண்டையார்பேட்டை, ஆர்.கே. நகர், படேல் நகர் நீரேற்று நிலையத்திலிருந்து குழாய்கள்மூலம் குடிநீர் வழங்குவது நிறுத்தப்பட்டு குடிநீர் ஊர்திகள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால் குடிநீருடன் கழிவு நீர் கலப்பது சாத்தியமில்லை என தெரிவிக்கப்படுகிறது.

120—

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 19463—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 3-வது வட்டம், நெடுஞ்செழியன் நகர், அண்ணா தெரு, வேலாயுதம் தெரு ஆகிய இடங்களில் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவதை களைய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, தண்டையார்பேட்டை, ஆர்.கே. நகர், படேல் நகர் நீரேற்று நிலையத்திலிருந்து குழாய்கள்மூலம் குடிநீர் வழங்குவது 18-1-2004 முதல் நிறுத்தப்பட்டு, குடிநீர் ஊர்திகள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால் குடிநீருடன் கழிவு நீர் கலப்பது சாத்தியமில்லை என தெரிவிக்கப்படுகிறது.

**121—**

## விதிமுறைகள்

**வினா எண் 20296—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கும் முன் சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவும் விதிமுறைகள் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். பொது உபயோகக் கட்டடங்களுக்கும், 150 ச.மீ. பரப்பளவுக்குக் கூடுதலான குடியிருப்புக் கட்டடங்களுக்கும் கட்டட அனுமதி வழங்கும்போது கட்டடத்தின் வடிவமைப்பில் சுடுநீர் விநியோகம் செய்ய வகை செய்யப்பட்டிருந்தால், அக்கட்டடங்களில் கூடுதலாக சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவ வழிவகை செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே கட்டட அனுமதி வழங்கப்பட வேண்டும் என 16-8-2002 ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை எண் 112-ல் கட்டட விதிகள் திருத்தப்பட்டுள்ளன.



**122—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 21131—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியத்தில் உள்ள கள்ளம்புளி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் மேல்நிலை தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், பொய்கை ஊராட்சி, கள்ளம்புளி குடியிருப்புக்குக் கடையநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆழ்துளைக் கிணறு அமைக்கும் அவசியம் இல்லை.

**123—**

## அடிகுழாய்கள்

**வினா எண் 21135—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், பொய்கை, கம்பனேரி, இடைகால், பாலமார்த்தாண்டபுரம் ஆகிய கிராமங்களில் புதிய அடிகுழாய்கள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், பொய்கை கிராமத்திற்கு 2002-2003 நிதியாண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ்,

ஊராட்சியால் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்து கையிறைப்பான் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கம்பனேரி குடியிருப்பிற்கு ஏற்கெனவே உள்ள திட்டங்கள் வாயிலாகப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இடைக்கால் குடியிருப்பில் 2002-2003 நிதியாண்டில் ஊராட்சியால் கையிறைப்பான் திட்டமும் சிறுமின் விசைத் திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. செங்கோட்டை ஒன்றியம் பாலமார்த்தாண்டபுரம் குடியிருப்பில் 2002-2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கையிறைப்பான் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது மக்கட் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

124—

## திறந்தவெளிக் கால்வாய்

**வினா எண் 21618—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பள்ளிப்பாளையம் திறந்தவெளிக் கால்வாய் திட்டம் அமல்படுத்தும் திட்டம் அரசின் செயல் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்தின் தொழில்நுட்ப சாத்தியக்கூறு பொதுப் பணித் துறையினரால் பரிசீலனை செய்யப்படுகிறது. சாத்தியக்கூறு ஆராய்ந்தபின், விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, நிதி ஆதாரங்களைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



125—

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 22165—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, எருமார்பட்டி பஞ்சாயத்து, அம்மமுத்தன்பட்டியில் உள்ள குடிநீர் தரைமட்டத் தொட்டியை மேல்நிலைத் தொட்டியாக மாற்றித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், எருமார்பட்டி ஊராட்சியில் உள்ள அம்மமுத்தன்பட்டி குடியிருப்பில் 4.40 இலட்சம் செலவில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் 2002-2003 ஆம் நிதியாண்டில் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 20-12-2002 அன்று பராமரிப்பிற்காக ஊராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

126—

## மனைப் பிரிவுகள்

**வினா எண் 22538—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்கீகரிக்கப்பட்ட மனைக்கட்டுகளில் ஒதுக்கப்பட்ட இடத்தை (ரிசர்வ்டு சைட்) விற்றுவிடும் நில உரிமையாளர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மனைப்பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திடம் ஒப்படைத்த பின்னரே அந்த மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி 20-9-2002 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை எண் 134-ல் உத்தரவிடப்பட்டுள்ளதால் மனைப்பிரிவு உரிமையாளர்கள் பொது ஒதுக்கீடுகளை விற்றுவிடும் நிலை தடுக்கப்பட்டுள்ளது.

**127—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 22647—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, மாட்றப்பள்ளி ஊராட்சி, மலை அடிவாரம் வட்டத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், மாட்றப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மலையடிவாரம் என்கிற பகுதி மாட்றப்பள்ளி ஊராட்சியில் போயர் காலனி மற்றும் மலை அடிவாரம் குடியிருப்பில் ஆங்காங்கே பரவலாக அமைந்துள்ள பகுதியாகும். இந்த



2004 நவம்பர் 22]

குடியிருப்பில், 2001 ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட 30,000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**128—**

## சிற்றூராட்சி

**வினா எண் 22861—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் பாளையம் பேரூராட்சியை இரண்டு சிற்றூராட்சியாக அரசு பிரிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்:11-6-2004-ன்படி வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி ஊராட்சியாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

**129—**

## திரையரங்கு கட்டணம்

**வினா எண் 23385—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரிலுள்ள திரையரங்குகளில் அதிக கட்டணம் வசூல் செய்யப்படுவது அரசு கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரம் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நிர்ணயிக்கப்பட்ட நுழைவு கட்டணத்தைவிட பார்வையாளர்களிடம் அதிகமாக வசூல் செய்த ஐந்து திரையரங்க உரிமதாரர்கள் மீது 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் ஒழுங்குமுறை விதிகள் எண்83 (ஜ) (ஏ)யின்கீழ் உரிமம் வழங்கும் அலுவலரால் (கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 'சி' படிவ உரிமம் தற்காலிகமாக நிறுத்தம் செய்து தண்டனைகள் வழங்கப்பட்டன.

**130—**

### குடிநீர்

**வினா எண் 23530—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு நகரத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம் என்கின்ற செய்யாறு நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.249.69 இலட்சங்களுக்கு அனுமதிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 7/2002-ல் மக்களின் பயனுக்கு கொண்டுவரப்பட்டது.



இந்நகரின் தற்போதைய மக்கட்தொகை 35,172 ஆகும். இந்நகராட்சிக்கு 2002-2003 வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ரூ.8.00 இலட்சம் செலவில் 19 கையிறைப்பான்கள் மற்றும் 10 திறந்தவெளி கிணறுகளில் ஆழப்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட்டன. மேலும் 2003-2004 வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 கையிறைப்பான்கள் மற்றும் இரண்டு திறந்தவெளி கிணறுகளில் ஆழப்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட்டன. தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு அளவு 57 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**131—**

### மின் மோட்டார்கள்

**வினா எண் 23656—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இயங்கும் மின் மோட்டார்களின் செயல் திறன் குறைந்து விட்டதால் புதிய மின் மோட்டார்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இயங்கும் மின் மோட்டார்களின் செயல் திறன் குறைந்த காரணத்தால் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாற்று மின் மோட்டார்கள் அமைப்பதற்காக ரூ.16.88 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார். இதன் அடிப்படையில் ஜீயாபுரத்தில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய டர்பன் பம்பும் 3 நீர் உந்து நிலையங்களில் நிமிடத்திற்கு 11,000 லிட்டர்கள் நீர் உந்து திறனுடன் மின் விசை இறைப்பான்கள் தலா ஒன்றுமாக அமைக்கப்பட்டு பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

[2004 நவம்பர் 22

132—

## திரையரங்குகள்

**வினா எண் 24796—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டில் அரசு நிர்ணயிக்கும் கட்டணத்திற்கு அதிகமாக வசூல் செய்ததாக தமிழகத்தில் உள்ள திரையரங்குகள் எத்தனை என அரசு கண்டறிந்தது?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 2001 ஆம் ஆண்டில் அரசு நிர்ணயிக்கும் கட்டணத்திற்கு அதிகமாக வசூல் செய்ததாக தமிழகத்தில் 126 திரையரங்குகள் அரசால் கண்டறியப்பட்டது. அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கு அதிகமாக வசூல் செய்த 126 திரையரங்க உரிமதாரர்கள் மீது 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் ஒழுங்குமுறைச் சட்டம் பிரிவு 9 (2) (பி)-ன்கீழ் சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அலுவலர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

133—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 25999—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளிகோம்பை காலனியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளிகோம்பை காலனிக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் 9 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

134—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26062—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தட்டாரப்பட்டிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தட்டாரப்பட்டி குடியிருப்பில் நான்கு கையிறைப்பான்கள் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டங்களின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, அப்பகுதிக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

135—

## குடிநீர் விற்பனை

**வினா எண் 26918—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் வளத் துறைமூலம் பை பால், புட்டி பால் விற்பனை போலவே குடிநீர் விற்பனை திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் வளத் துறைமூலம் பை பால், புட்டி பால் விற்பது போல் குடிநீர் விற்கும் திட்டம் சென்னை நகரில் மட்டும் உள்ளது.

**136—**

### ஊராட்சிகள்

**வினா எண் 27243—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பள்ளபாளையம், பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி-நசியனூர் பேரூராட்சிகள் நிதி வசதியின்றி சிரமப்படுவதால் அவற்றை ஊராட்சிகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 11-6-2004-ல் ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பள்ளபாளையம், பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி நசியனூர் உள்ளிட்ட 30,000-க்கும் குறைவாக மக்கட்தொகை கொண்டிருந்த பேரூராட்சிகள் 14-6-2004 முதல் ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன.



**137—**

### தொற்று நோயைத் தடுத்தல்

**வினா எண் 32029—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பேரூராட்சி 13-வது பகுதியில் (சுமார் 4 ஏக்கர் நிலப்பரப்பு) குப்பை உரக்கிடங்கு அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் குடிநீர் மூலம் தொற்று நோய் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து நெடுஞ்சாலையின் ஓரத்திலும், முருகு வினாயகர் சாலை ஓரத்திலும், குடிநீர் குழாய்கள் பாதுகாப்பான முறையில் பதிக்கப்பட்டுள்ளன. மேலும் உரக்கிடங்கில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றும் குழாய்களும் விநியோகிக்கும் குழாய்களும், மிகவும் பாதுகாக்கப்பட்ட முறையில் பதிக்கப்பட்டுள்ளன. அவ்விடங்களில் குழாய்கள் உடைந்தோ அல்லது கசிவுகள் எதுவும் ஏற்பட்டுள்ள நிலையிலோ இல்லை. இக்குடிநீர் விநியோகத்தினால் எவ்விதச் சுகாதாரக் கேடும் ஏற்படவில்லை.

**138—**

### குடிநீர்

**வினா எண் 32889—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூப்பன்பட்டி கிராமத்திற்கு தண்ணீர் கிடைக்காததால் நீராதாரம் தேர்வு செய்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், மூப்பன்பட்டி ஊராட்சியைச் சார்ந்த மூப்பன்பட்டி குடியிருப்பு, 2003-2004 நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்ட உள்ள தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கயத்தார், கழுகுமலை, எட்டயபுரம் நகரப் பேரூராட்சிகள் மற்றும் 132 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

**139—**

### அலுவலகக் கட்டடம்

**வினா எண் 33281—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், புதூர்புங்கனை ஊராட்சிக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், புதூர்புங்கனை ஊராட்சிக்குட்பட்ட புதூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் 2002-2003 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



**140—**

### ஊராட்சிகள்

**வினா எண் 36027—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பேரூராட்சிகளுக்குக் கிடைக்காமலிருப்பதால் தமிழ்நாட்டிலுள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 11-6-2004-ல் 30,000-க்கும் குறைவாக மக்கட்தொகை கொண்டிருந்த 566 பேரூராட்சிகளை 14-6-2004 முதல் ஊராட்சிகளாக வகைப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டன.

**141—**

### ஊராட்சி

**வினா எண் 36608—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், சித்தோடு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், சித்தோடு பேரூராட்சியை 14-6-2004 முதல் ஊராட்சியாக மாற்ற அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 11-6-2004-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

142—

## கட்டட வசதி

**வினா எண் 37055—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், பேரூர் ஊராட்சி, சிந்தம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதலாக பள்ளிக் கட்டட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், பேரூர் ஊராட்சி, சிந்தம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் நடப்பு ஆண்டில் சர்வ சிக்ஷா அபியான் (SSA) திட்டத்தில் ரூ.4.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள சேர்க்கப்பட்டு கட்டுமானப் பணி துவக்கப்பட்டுள்ளது.

143—

## பேருந்து நிலையம்

**வினா எண் 38377—திரு. டி. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, புதிய பேருந்து நிலையத்தை முழுமையாகக் கட்டி முடிக்க இதுவரை அரசு எவ்வளவு நிதி வழங்கியுள்ளது?



(ஆ) மேலும் நிதி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) குழித்துறை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக சென்னை, நகர் மற்றும் ஊரமைப்பு ஆணையரால் ரூ.27.00 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு, அத்தொகையில் பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியில் கடைகள் மற்றும் பயணிகள் நிற்கும் நிழற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) பேருந்து நிலையத்தில் தார்தளம் அமைக்கும் பணியினை செயல்படுத்தத் தேவைப்படும் ரூ.50.00 இலட்சம் தொகையை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனத்திடம் (TUFIDCO) கடன் பெற குழித்துறை நகராட்சி ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

144—

## கேபிள் டி.வி. இணைப்புகள்

**வினா எண் 38584—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் கேபிள் டி.வி. இணைப்புகளை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் கேபிள் தொலைக்காட்சி இணைப்புகள் முறைப்படுத்தப்பட்டு உள்ளது போன்று, சேலம் மாநகராட்சியிலும் கேபிள் தொலைக்காட்சி இணைப்புகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

145—

### கூடுதல் கட்டடம்

**வினா எண் 40997—திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பொட்டணம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பொட்டணம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

146—

### பேருந்து நிலையம்

**வினா எண் 40994—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் சூட்ட வழிவகை கிடையாது.

147—

### சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 41415—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் உள்ள சினிமா திரையரங்குகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் பகுதிகளில் உள்ள சினிமா திரையரங்குகளில் மாநகராட்சியின் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

148—

### உரம் தயாரித்தல்

**வினா எண் 45630—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சேலம் மாநகராட்சியில், திடக்கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் திடக்கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**149—**

**மழைநீர் வடிகால் அமைத்தல்**

**வினா எண் 45949—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகர் அரசு பொது மருத்துவமனை மற்றும் இரயில் நிலையம் அருகில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வாகனங்கள் செல்ல இடையூறு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மழைநீர் செல்லும் வடிகால் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் இரயில் நிலையம் மற்றும் பொது மருத்துவமனை முன்புறமுள்ள மழைநீர் வடிகால்கள் மாநகராட்சி மூலம்



2004 நவம்பர் 22]

கடந்த நவம்பர் 2003-ல் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளன. இதனால் தற்பொழுது மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதில்லை.

**150—**

**சுரங்கப் பாதை**

**வினா எண் 46320—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகர் காந்திபுரத்தில் மக்கள் நெருக்கடியைக் கட்டுப்படுத்த சுரங்கப்பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகர் காந்திபுரத்தில் நஞ்சப்பர் சாலையில் பொன்னையர் வீதி, சத்தி சாலை மற்றும் பாரதியார் சாலை ஆகியவை சந்திக்குமிடத்தில் ஒரு சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் நடவடிக்கையில் உள்ளது. மேற்படி திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தி நிதி மையத்தில் நியமிக்கப்பட்ட ஆலோசகர் அளித்த இடைக்கால அறிக்கையில் ரூ.150.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. மேற்படி மதிப்பீட்டை ஆய்வு செய்வதற்கும், கலந்துரையாடலுக்கும், மாநகராட்சி ஆணையர் தலைமையில் ஒரு வழிகாட்டுக் குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் உறுப்பினர்கள் கூறிய சில மாற்றங்களின்படி மேற்படி நிறுவனத்தினரிடமிருந்து இறுதி திட்ட மதிப்பீடு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி மதிப்பீடு கிடைத்தவுடன் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

[2004 நவம்பர் 22

## இணைப்பு II

*(133 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 8,9,10, மற்றும் 13)*

## பட்டியல் 8

1—

### நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 53943—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மங்கைமடம் ஊராட்சி, அகனி ஊராட்சி, மணல்மேடு, பெருமங்கலம் ஊராட்சி, நெப்பத்தூர் ஊராட்சி, செம்மங்குடி ஊராட்சி, பெருந்தோட்டம் ஊராட்சி, ஆகிய இடங்களில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி ஒன்றியம் மங்கை மடம் ஊராட்சி அகனி ஊராட்சி, மணல்மேடு, பெருமங்கலம், நெப்பத்தூர், செம்மங்குடி, பெருந்தோட்டம் ஆகிய ஊராட்சிகளில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2004 நவம்பர் 22]

2—

### திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56741—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சியிலுள்ள முத்துமாரியம்மன் கோயிலை புதியதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொண்டல் ஊராட்சியிலுள்ள முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

[2004 நவம்பர் 22

3—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56743—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி, நத்தத்திலுள்ள ஸ்ரீபேச்சியம்மன் கோயிலை புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சட்டநாதபுரம் ஊராட்சி நத்தத்திலுள்ள ஸ்ரீபேச்சியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 22]

4—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56744—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகளஎலத்தூர் ஊராட்சியில் காளியம்மன் கோயிலை புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் அகளஎலத்தூர் ஊராட்சியின் புதுத் தெருவிலுள்ள காளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

[2004 நவம்பர் 22

5—

### திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57037—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, முதலைமேடு ஊராட்சியில் பின்படுகை கிராமத்திலுள்ள கன்னிகா பரமேஸ்வரி மற்றும் அண்ணா நகரில் கன்னிகா பரமேஸ்வரி கோயில் ஆகியவற்றை புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, முதலைமேடு ஊராட்சியில், பின்படுகை கிராமத்திலுள்ள கன்னிகா பரமேஸ்வரி மற்றும் அண்ணா நகரில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இத்திருக்கோயில்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயில்களாகும். முதலைமேடு ஊராட்சி, அண்ணாநகரில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி ஆலயம் 4 வருடத்திற்கு முன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, 30-6-2004-ல் 4 ஆம் வருட பூர்த்தி விழாவின்போது வர்ணங்கள் தீட்டி நல்ல நிலையில் உள்ளது. அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்



2004 நவம்பர் 22]

வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், பின்படுகை கிராமத்திலுள்ள கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

6—

### திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57039—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, விளந்திடசமுத்திரம் கீழத்தெருவில் உள்ள, கூட்டுமாங்குடி அம்மன் ஆலயம் மற்றும் தில்லை அழகியநத்தம் தெருவிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி ஆலயங்களைக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், விளந்திடசமுத்திரம், கீழத்தெருவிலுள்ள கூட்டுமாங்குடி அம்மன் ஆலயம் மற்றும் தில்லை அழகியநத்தம் தெருவிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இத்திருக்கோயில்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத் திருக்கோயில்களாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி

தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயில்களுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

7—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57048—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சி, மேலவரக்குடியில் உள்ள மாரியம்மன் கோயிலை புதியதாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சி, மேலவரக்குடியிலுள்ள மாரியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள்



மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கும் பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

8—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57051—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கற்கோயில் ஊராட்சி, தொழுதூரிலுள்ள வீரகாளியம்மன் கோயிலை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி மற்றும் வட்டம், கற்கோயில் ஊராட்சி, தொழுதூரிலுள்ள வீரகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும் அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள்

மூலமாக சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

9—

### திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57054—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கடைக்கண் விநாயகநல்லூரிலுள்ள ஸ்ரீகாளியம்மன் கோயிலை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி மற்றும் வட்டம், கடைக்கண் விநாயகநல்லூரிள்ள ஸ்ரீகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு



திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கும் பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

10—

### ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள்

**வினா எண் 2762—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலிருந்து ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள் இலவசமாகக் கோரி 2000-2001 வரை வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டது எத்தனை?

(இ) வழங்கப்படாதவர்களுக்கு எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதியில் மூன்று சக்கர சைக்கிள் கோரி விண்ணப்பித்தவர்கள் — 23 பேர்.

(ஆ) மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 19 பேர்.

(இ) தேவையான தகுதி இல்லாததால் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படாதவர்கள் எண்ணிக்கை — 4 பேர்.

[2004 நவம்பர் 22

11—

ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி

**வினா எண் 24234—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் மற்றும் இராமசாமிபட்டி, மண்டபசாலை, துப்புசின்னப்பட்டி பகுதிகளில் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர வண்டி கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் எத்தனை பேருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூன்று சக்கர வண்டி கேட்டு விண்ணப்பித்தவர்கள் 25 பேர். விண்ணப்பித்த 25 பேர்களுக்கும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

12—

தொட்டில் குழந்தைத் திட்டம்

**வினா எண் 25652—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தில் அதிகப்படியான பெண் குழந்தைகள் உள்ளன என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகப்படியான நிதி ஒதுக்கீட்டிற்கு அரசு ஆவன செய்யுமா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்திற்கு இத்திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் போதுமான அளவில் அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றது.

13—

மனநலம் குன்றிய குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 28100—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள ஆழியாறு பகுதியில் மனநலம் குன்றிய குழந்தைகள் காப்பகம் ஒன்றை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் மனநலம் குன்றிய குழந்தைகள் காப்பகம் உருவாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

வால்பாறை வட்டம், ஆழியாறுக்கு அருகில் பொள்ளாச்சி சங்கம்பாளையம் என்னும் இடத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு "சரணாலயம்" என்னும் காப்பகம் தனியாரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பொள்ளாச்சி—உடுமலைப்பேட்டை இடையில் அந்தியூர் என்னுமிடத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தனியார் தொண்டு நிறுவனக் காப்பகம் ஒன்று "புனர் ஜென்மம்" என்னும் பெயரில் செயல்பட்டு வருகிறது.

இது தவிர தனியார் சமூக சேவை நிறுவனம் ஏதவாது மனநலம் குன்றிய குழந்தைகளுக்குக் காப்பகம் அமைக்க முன்வந்தால் அரசு அதற்குத் தேவையான உதவி, அரசு அங்கீகாரம் ஆகியவற்றைத் தர தயாராக உள்ளது.

**14—**

## ஊனமுற்றோர் இல்லம்

**வினா எண் 40568—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன் மலைப் பகுதியில் மற்றும் மூங்கில்துறைப்பட்டு, சங்கராபுரம் பேரூராட்சி ஆகிய இடங்களில் ஊனமுற்றோர் இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன் மலைப் பகுதியில் மூங்கில்துறைப்பட்டு, சங்கராபுரம் பேரூராட்சி ஆகிய இடங்களில் ஊனமுற்றோர் இல்லம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை. மேலும், சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன் மலைப்பகுதியில் மற்றும் மூங்கில்துறைப்பட்டு, சங்கராபுரம் பேரூராட்சி ஆகிய இடங்களில் ஊனமுற்றோர் இல்லம் அமைக்க (2004-2005 ஆண்டிற்கு) வேலா காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி, விழுப்புரம் என்கிற தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது.





**15—**

## மூன்று சக்கர வாகனங்களை வழங்குதல்

**வினா எண் 41489—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்ற சிறார்களுக்கு, மாணவ, மாணவிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள், நாட்றாம்பள்ளி தொகுதியில் வழங்க அரசு திட்டம் திட்டுமா?

(ஆ) விளம்பர விவரங்கள் வருவாய்த் துறை/வட்டாட்சியர் அலுவலகத்தில் வைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து உடல் ஊனமுற்ற நபர்களுக்கும் (12 வயது முதல் 70 வயது வரை) இலவசமாக மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்றாம்பள்ளி தொகுதியில் மூன்று சக்கர வண்டி கோரி விண்ணப்பித்தவர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. புதிதாக விண்ணப்பம் பெறப்படும் பட்சத்தில் தகுதியின் அடிப்படையில் மூன்று சக்கர வண்டிகள் வழங்கிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) மாதந்தோறும் தாலுகா அளவில் நடைபெறும் மனுநீதி நாள் முகாம் நிகழ்வுகள் மூலம் ஊனமுற்றோர் நலத் திட்ட விவரம் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. மேலும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் ஊனமுற்றோர் நலத் திட்டங்கள் தொடர்பான விளம்பரப் பலகைகள் வைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் வருவாய் வட்டாட்சியர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[2004 நவம்பர் 22

16—

## ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர மிதிவண்டி

**வினா எண் 41958—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 இல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோர் எத்தனை பேருக்கு மூன்று சக்கர மிதி வண்டிகள் வழங்கப்பட்டன?

(ஆ) தொகுதி வாரியாக தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 இல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட தொகுதிகளில் ஊனமுற்றோருக்கு 96 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

(ஆ)

| | | |
|---|---|---|
| 1 | ஆலந்தூர் | 3 |
| 2 | தாம்பரம் | 7 |
| 3 | திருப்போரூர் | 5 |
| 4 | மதுராந்தகம் | 30 |
| 5 | காஞ்சிபுரம் | 16 |
| 6 | உத்திரமேரூர் | 11 |
| 7 | அச்சரப்பாக்கம் | 5 |
| 8 | ஸ்ரீபெரும்புதூர் | 7 |
| 9 | செங்கற்பட்டு | 12 |
| | மொத்தம் | 96 |



2004 நவம்பர் 22]

17—

## ஊனமுற்றவர்களுக்குத் தேவையான பொருட்கள்

**வினா எண் 41959—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 இல் செங்கல்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையத்தில் எத்தனை ஊனமுற்றவர்களுக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டன?

(ஆ) இதன் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் செங்கற்பட்டிலுள்ள மாவட்ட மறுவாழ்வு மையத்தில் ஊனமுற்றோருக்குத் தேவையான காலிபர், செயற்கை கால், ஸ்பிலிண்ட், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, பார்வையற்றோர் ஊன்றுகோல், அக்குள் கட்டை, காதுகேள் கருவி, சூரிய ஒளி பேட்டரி ஆகிய உதவி உபகரணங்களும், பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோர் திருமண உதவித் திட்டங்களின்கீழ் நிதியுதவியும், இலவசப் பேருந்து சலுகை, பராமரிப்பு உதவித் தொகை, கல்வி உதவித் தொகை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.29,56,221/- ஆகும்.

18—

## மின் இணைப்பு

**வினா எண் 24017—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

226625 சென்னை-600 009

[2004 நவம்பர் 22

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள பொன்னேரி துணை சுகாதார நிலையத்தில் செவிலியர் தங்கிப் பணியாற்றி வருவதால் அந்த நிலையத்திற்கு மின் இணைப்பு மீண்டும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள பொன்னேரி துணை சுகாதார நிலையத்திற்கு மின் இணைப்பு கடந்த ஆண்டே வழங்கப்பட்டுவிட்டது.

19—

### தாய் சேய் நல விடுதி

**வினா எண் 24928—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சியில் ஆலாக்காட்டில் உள்ள தாய் சேய் நல விடுதி பழுதடைந்துள்ளது என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் சுகாதாரம் பகுதி மாவட்டம், கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம், ஆலாக்காட்டிலுள்ள (கோணான் குட்டையூர் துணை சுகாதார நிலையம்) தாய் சேய் நல விடுதிக்கு ரூ.60,000 மதிப்பீட்டில்



2004 நவம்பர் 22]

2003-2004 ஆம் நிதியாண்டில் ஆரம்ப சுகாதார நிலையம்/துணை சுகாதார நிலையம் கட்டட மராமத்துப் பணிகள் நிதி ஒதுக்கீட்டில் பழுதுகள் சரிசெய்ய பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டு பழுதுகள் முழுவதும் சரி செய்யப்பட்டது.

20—

### பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ வசதி

**வினா எண் 59052—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003-2004 ஆம் கல்வி ஆண்டில் எவ்வளவு பள்ளிக் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டதாக அரசு கணக்கெடுத்துள்ளது?

(ஆ) இதில் இரத்த சோகை உள்ளதாக எவ்வளவு மாணவர்களிடம் கண்டறியப்பட்டு மருத்துவ வசதி செய்யப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி சிறார் நலவாழ்வு திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் கல்வியாண்டில் 1,00,04,041 பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. இவற்றில் 3,40,436 மாணாக்கர்களுக்கு இரத்த சோகை இருப்பதாகக் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

21—

### தொழிற்சாலை தொடங்குதல்

**வினா எண் 49989—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியத்தில் தகுதியுள்ள எவரேனும் வேளாண்மை சார் தொழிற்சாலை துவங்க தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கி, தொழிற்சாலை துவங்க அனைத்து உதவிகளும் கோயமுத்தூர் மாவட்டத் தொழில் மையம் மூலம் செய்யப்படும். ஆனைமலை வட்டாரத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் விதிகளின்படி தகுதியுடைய இரண்டு விண்ணப்பங்கள்/திட்டங்கள் மாநில ஒருங்கிணைப்புக் குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் தற்சமய நிலவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றன:—

| வ.எண் | மாவட்டம் / வட்டாரம் | | முகவரி | தொழில் நடவடிக்கை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1. | கோயமுத்தூர் மாவட்டம் | ஆனைமலை வட்டாரம் | ஆனைமலை எஸ்.எப். 187, கப்டு கவுண்டன்புதூர் ஆனைமலை மெயின் ரோடு, சுந்தரிபுரி, பொள்ளாச்சி. | கொப்பரைத் தேங்காய் மற்றும் உப பொருட்கள் தயாரித்தல். | 17-12-2003 முதல் முதற்கட்ட உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது. |
| 2. | கோயமுத்தூர் மாவட்டம் | ஆனைமலை வட்டாரம் | ஆனைமலை (தென்னரசு பார்ம், ஆழியார் நகர், பொள்ளாச்சி வட்டம்) | தென்னை நார் மற்றும் முறுக்கு கயிறு தயாரித்தல். | கடன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திட்ட வரைபடம் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் தொழில் முனைவோருக்கு கீழ்க்கண்ட சலுகைகளை தமிழ்நாடு அரசு வழங்கும்:—

(அ) மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்தில் அமைக்கப்படும் தொழில்களுக்கு இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டில் 15 விழுக்காடு அதிகபட்சம் ரூ.15.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.



2004 நவம்பர் 22]

(ஆ) குறைந்த அழுத்த மின் மானியம், உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இதில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து செலுத்தப்பட்ட மின் கட்டணத்திற்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30 விழுக்காடு, 20 விழுக்காடு மற்றும் 10 விழுக்காடு மானியமாக வழங்கப்படும்.

(இ) தொழிற்சாலைகளில் நிறுவப்படும் மின்னாக்கியின் மதிப்பில் 15 விழுக்காடு அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மின்னாக்கி மானியமாக வழங்கப்படும்.

(ஈ) 50 விழுக்காட்டிற்கு மேல் மகளிரை பணியில் அமர்த்தும் தொழில்களுக்கு கூடுதல மானியமாக நிலைமுதலீட்டில் 5 விழுக்காடு அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**22—**

## பேருந்துகளின் எண்ணிக்கை

**வினா எண் 34303—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு வரை இயக்கப்பட்டு வந்த சிறு பேருந்துகள் எத்தனை?

(ஆ) எத்தனை பேர்களிடமிருந்து அனுமதி கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன?

(இ) அதில் எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு வரை இயக்கப்பட்டு வந்த சிறு பேருந்துகளின் எண்ணிக்கை— | 82 |
| (ஆ) அனுமதி கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை— | 204 |
| (இ) வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை— | 131 |

[2004 நவம்பர் 22

23—

## சிற்றுந்து வழித்தடங்கள்

**வினா எண் 38033—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் எத்தனை சிற்றுந்து வழித்தடங்கள் உள்ளன?

(ஆ) அவையாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதியில் ஏழு சிற்றுந்து வழித்தடங்கள் உள்ளன

(ஆ)

| வ. எண் | சிற்றுந்து தடங்கள் | வாகன எண் |
|---|---|---|
| 1. | சங்கராபுரம் பேருந்து நிலையம் முதல் தேரடி சித்தூர் காலனி வரை | டிஎன் 32/2886 |
| 2. | வடக்களந்தல் பேருந்து நிலையம் முதல் சங்கராபுரம் பேருந்து நிலையம் வரை | டிஎன் 32/டபிள்யூ 5732 |
| 3. | மூங்கில்துறைப்பட்டு, மேட்டுக்குப்பம் முதல் நாகல்குடி வரை | டிஎன் 27/டபிள்யூ 0318 |
| 4. | சங்கராபுரம் பேருந்து நிலையம் முதல் எடுத்தவாய் நத்தம் வரை | டிஎன் 32/எக்ஸ் 9871 |
| 5. | சங்கராபுரம் முதல் மாதவச்சேரி வரை | டிஎன் 28/ஏ 2269 |
| 6. | சங்கராபுரம் பேருந்து நிலையம் முதல் கச்சிராப்பாளையம் பேருந்து நிலையம் வரை | டிஎன் 32/டபிள்யூ 2733 |
| 7. | கச்சிராபாளையம் பேருந்து நிலையம் முதல் சங்கராபுரம் தாலுகா ஆபீஸ் வரை | டிஎன் 28/ஏ 7573 |



2004 நவம்பர் 22]

24—

## பழ நாற்றுகளை வழங்குதல்

**வினா எண் 52127—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் விவசாயிகள் பயன்பெற பழ நாற்றுகளை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் விவசாயிகள் பயன்பெற பழ நாற்றுகளை வழங்கும் திட்டம் இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் விநியோகிக்கப்பட்ட பழக் கன்றுகள் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | வாழை திசுவளர்ப்பு கன்றுகள் | 13,000 எண்கள் |
| 2. | நெல்லி ஒட்டு செடிகள் | 275 எண்கள் |
| | மொத்தம் | 13,275 எண்கள் |

தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் 2004-2005 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பழக்கன்றுகள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கலாகிறது.

25—

## மூலிகைச் செடிகள்

**வினா எண் 52884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் என்னவகை மூலிகைச் செடிகள் அரசுப் பண்ணையில் பயிரிடப்படுகிறது?

(ஆ) அது பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறதா அல்லது விலை வசூலிக்கப்படுகிறதா?

(இ) அதைப் பயிரிடும் பண்ணைகள் மலையல்லாத பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு அரசுப் பண்ணையில் மூலிகைச் செடிகள் ஏதும் பயிரிடப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) வினா எழவில்லை.

**26—**

**வால்பாறையில் கீரைப் பண்ணை**

**வினா எண் 52952—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சேத்துமடை, டாப்சிலிப், ஆழியார், வால்பாறை பகுதிகளில் கீரைப் பண்ணை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சேத்துமடை, டாப்சிலிப், ஆழியார், வால்பாறை பகுதிகளில் கீரைப் பண்ணை அமைக்கும் திட்டம் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படவில்லை. எனினும், விவசாயிகள் கீரை சாகுபடி மேற்கொள்ள கீரை விதைகள் 2004-2005-ல் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் விநியோகிக்கப்படும். பருவமழை தொடங்கியபின் விதைகள் விநியோகிக்கப்படும்.



2004 நவம்பர் 22]

**27—**

**மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

**வினா எண் 20474—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை காமுபிள்ளை சத்திரம் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை காமுபிள்ளை சத்திரம் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**28—**

**விடுதிகளில் பணியாற்றும் வார்டன்கள்**

**வினா எண் 55079—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் பணியாற்றும் வார்டன்கள் இரவு நேரங்களில் விடுதிகளில் தங்குவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் பணியாற்றும் விடுதிக் காப்பாளர்கள் இரவு 8.00 மணிவரை விடுதிகளில் தங்கி மாணவ/மாணவியர்களை கண்காணித்து வருகின்றனர். மேலும், தேவைப்படும் அவசியமான காலங்களில் விடுதிக் காப்பாளர்கள் விடுதிகளில் இரவு நேரங்களில் தங்கியும் பணியாற்றி வருகின்றனர். விடுதிகளில் விடுதிக் காப்பாளர்களின் வருகை மேல் அலுவலர்களால் திடீர் தணிக்கை செய்து கண்காணிக்கப்பட்டு வருவதுடன் அவர்கள் பணி நேரங்களில் தவறாது வருகை தந்திருக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.*

**29—**

**மாணவ—மாணவியர்களுக்கு இலவசச் சீருடை**

**வினா எண் 57503—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு இலவசச் சீருடை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு 2002-2003-ம் ஆண்டு வரை இரண்டு தொகுதி மாணவ/பருத்திச் சீருடைகள் வழங்கப்பட்டு வந்தன. அதற்குப் பதிலாக 2003-2004-ஆம் ஆண்டு முதல் இரண்டு தொகுதி சீருடைக்கான பாலிகாட்டன் துணி மற்றும் தையல் கூலி வழங்கப்பட்டு வருகிறது.*



2004 நவம்பர் 22]

**30—**

**கால்நடை கிளை மருத்துவமனைக்குக் கட்டடம்**

**வினா எண் 48733—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சுந்தரம்பள்ளி ஊராட்சியில் கால்நடை உதவி மருத்துவமனைக்கு அரசு கட்டடம் கட்டித் தர முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாட்றாம்பள்ளி தொகுதி, சுந்தரம்பள்ளி ஊராட்சியில் இயங்கி வரும் கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டடம் கட்ட, ஊராட்சிக்குச் சொந்தமான சஎண் 100/4.5-ல் 0.12.5 எக்டேரில் குழந்தைகள் சத்துணவு மையத்திற்கு அருகில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாட்றாம்பள்ளி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**31—**

**எக்ஸ்ரே கருவி வழங்குதல்**

**வினா எண் 49488—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே எடுக்கும் கருவி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனையில் எக்ஸ்ரே கருவிகள் நிறுவிட ஏதுவான கட்டட வசதிகள் இல்லை. ஆதலால் கட்டட வசதிகள் இல்லாமல் எக்ஸ்ரே எடுக்கும் கருவி நிறுவிட தற்போது இயலாது.

**32—**

## அலுவலகப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு

**வினா எண் 16456—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தனியார் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத அலுவலகப் பணியாளர்கட்கு அன்னார் வகிக்கும் கீழ்நிலை பதவியில் இருந்து மேல்நிலை பதவி உயர்வுக்குச் செல்ல அப்பதவிகட்குத் தேவையான முழுக் கல்வித் தகுதியினையும் முதுநிலையும் கொண்டிருப்பின் மேல்நிலைப் பதவியில் காலிப் பணியிடங்கள் ஏற்படும்போது பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.



**33—**

## கைத்தொழில் ஆசிரியர் பணியிடம்

**வினா எண் 49371—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளர், குறியீட்டாளர் மற்றும் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளர் பணியிடம் 5-9-2003 முதல் நிரப்பப்பட்டு பணியாளர் பணிபுரிந்து வருகிறார். காலிப் பணியிடங்களை நிரப்ப அரசின் தடையாணை உள்ளதால் குறியீட்டாளர் பணியிடத்தை தற்போது நிரப்ப இயலாத நிலை உள்ளது. மேலும் அரசின் கொள்கை முடிவின்படி அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர் பணியிடம் நிரப்ப தடையாணை உள்ளது.

**34—**

## மீனவர் அங்காடி திறத்தல்

**வினா எண் 60706—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் கட்டப்பட்டு இரண்டாண்டுகளாகியும் திறக்கப்படாமல் உள்ள மீனவர் அங்காடியைத் திறக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

25-5-2004 முதல் இந்த அங்காடியை, அறந்தாங்கி மீன் விற்பனையாளர்கள் சுய உதவிக் குழு ஏற்று நடத்தி பராமரித்து வர மீன் துறை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார். மீன் துறை இயக்குநரின் இச்செயலுக்கு அரசாணை (டி) எண்.229, கால்நடை பராமரிப்பு (ம) மீன் வளத் துறை, நாள் 3-8-2004-ல் பின்னேற்பும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேற்படி 'சுய உதவிக் குழு இம்மீனவ அங்காடியை பராமரித்து வருகிறது.

**35—**

### சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் இணையதள வசதி

**வினா எண் 31160—திரு. ராதாரவி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு நிறுவனத்தில் மாநாட்டு அறை, இணையதள வசதி போன்றவற்றை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம், தஞ்சாவூர், மதுரை-1, மற்றும் மதுரை-2, ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டல்களில் மாநாட்டு அறை வசதி உள்ளது. மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் இணையதள வசதி ஏற்கெனவே உள்ளது.



**36—**

### மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 10793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நெக்குந்தி கிராமத்திற்கு நடப்பாண்டில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நெக்குந்தி குடியிருப்பிற்கு 1987 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டு, தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், ஒரு கைபிறைப்பான் திட்டமும் செயலில் உள்ளது. எனவே, இக்குடியிருப்பிற்குக் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.

**37—**

### சுத்தமான குடிநீர் வழங்குதல்

**வினா எண் 15626—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், போரம்பாக்கம் காலனியில் பிள்ளையார் கோயில் அருகில் மாற்று போர் போட்டு சுத்தமான குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் காலனியின் ஒரு பகுதி பிள்ளையார் கோயில் பகுதியாகும். இக்குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் ஏற்கெனவே அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இப்பகுதியில் கூடுதலாக இரண்டு சிறு மின்விசைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**38—**

**பொதுக் குடிநீர்க் குழாய்**

**வினா எண் 16402—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, இராஜேந்திர நகர் 1-வது, 2-வது தெருக்களில் பொதுக் குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை 25-வது வட்டம், இராஜேந்திர நகர் 1-வது, 2-வது தெருக்களில் 90 சதவீத வீடுகளில் மாநகராட்சி மூலம் வழங்கப்படும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும் ஒரு பொதுக் குடிநீர் குழாயும் நல்ல முறையில் இயங்கி வருகின்றது. எனவே, கூடுதலாக பொதுக் குடிநீர் குழாய் அமைக்கத் தேவை ஏற்படவில்லை.



2004 நவம்பர் 22]

**39—**

**சிறுவர் பூங்காவில் குடிநீர் வசதி**

**வினா எண் 16470—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மண்டலம் வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் சிறுவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள பூங்காவில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் சிறுவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள பூங்காவில் ரூ.12,000 மதிப்பீட்டில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பி.வி.சி. தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**40—**

**தொற்று நோய் பரவாமல் தடுத்தல்**

**வினா எண் 19482—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே.நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் உள்ள ஜீவா நகரில் 1 முதல் 19 தெருக்களிலும் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு சாக்கடை நீர் வழிந்தோடுவதால் அதிகமாக தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆர்.கே.நகர் தொகுதி, 11-வது வட்டத்திலுள்ள ஜீவா நகர் 1 முதல் 19 தெருக்களிலும் கழிவுநீர் குழாய்களில் தூர் வாரப்பட்டு விட்டது. தற்போது கழிவுநீர் வழிந்தோடவில்லை.

**41—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 27030—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி, ரெங்கசமுத்திரம், நாதன் காலனி, பள்ளக்கால் புதுக்குடி, பனஞ்சாடி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பாப்பாக்குடி, கீழ்பாப்பாக்குடி, ரெங்கசமுத்திரம், நத்தம் காலனி, பள்ளக்கால் (பள்ளக்கால் புதுக்குடி), பனஞ்சாடி ஆகிய குடியிருப்புகளுக்குத் தற்போது பயனில் உள்ள கையிறைப்பான், சிறு மின்விசைத் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம், குழாய் நீட்டிப்பு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இக்குடியிருப்புகளுக்குப் புதிய திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.





**42—**

**சிறு மின்விசைப் பம்பு தொட்டி**

**வினா எண் 27443—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம், வடமலைப்பட்டி பிள்ளையார் கோவில் அருகில் சிறு மின்விசைப் பம்பு தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஒன்றியம், வெங்கிடாம்பட்டி ஊராட்சி, வடமலைப்பட்டி குடியிருப்பில் 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**43—**

**சிறு மின்விசைத் திட்டம்**

**வினா எண் 38796—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலுப்பையூரணி ஊராட்சி, சிந்தாமணி நகர் பகுதியில் சிறு மின்விசைத் திட்டம் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், இலுப்பையூரணி ஊராட்சியைச் சார்ந்த சிந்தாமணி நகர் குடியிருப்பிற்கு, 2003-2004 ஆம்

நிதியாண்டில் ஒரு சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

**44—**

## குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 39134—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், இலுப்பையூரணி, மணியாச்சி பஞ்சாயத்துக்களின் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், இலுப்பையூரணி ஊராட்சி முழுமையாக குடிநீர் வசதி பெற்றுள்ளது. மணியாச்சி ஊராட்சியில் அத்தியாவசியத் தேவைக்குரிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மணியாச்சி ஊராட்சியில் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த கருத்துரு ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

**45—**

## மின்விசை மோட்டார் குடிநீர் குழாய்கள்

**வினா எண் 39144—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, அய்யாக்கோட்டையூர் ஊராட்சி, முதல் வெங்கடாசலபுரத்தில் ஆழ்த்துளைக் கிணறு, மின்விசை மோட்டார் குடிநீர் குழாய்கள் அமைக்க திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், அய்யாகோட்டையூர் ஊராட்சியைச் சார்ந்த முதல் வெங்கடாசலபுரம் அய்யாக்கோட்டையூரின் ஒரு பகுதியாக உள்ளது. இக்குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால் தற்சமயம் ஆழ்துளைக் கிணறு மற்றும் மின்விசைத் திட்டம் செயல்படுத்த கருத்துரு ஏதும் பரிசிலனையில் இல்லை.

**46—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40094—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றியம், வத்தனாக்குறிச்சி ஊராட்சி, வேளாண்குடிப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், வத்தனாக்குறிச்சி ஊராட்சியைச் சார்ந்த வேளாண்குடிப்பட்டி குடியிருப்பிற்கு 2 கைபிறைப்பான்கள் மற்றும் ஒரு தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

47—

## தெருவிளக்குகள் அமைத்தல்

**வினா எண் 46826—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி மற்றும் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் தெரு விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி பகுதியில் 669 குழல்விளக்குகளும், 50 சோடியம் ஆவி விளக்குகளும், 2 மெர்க்குரி விளக்கும் ஆக மொத்தம் 721 தெரு விளக்குகளும், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் 359 குழல் விளக்குகளும், 14 சோடியம் ஆவி விளக்குகளும், 4 மெர்க்குரி விளக்குகளும் ஆக மொத்தம் 377 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானதாக உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

48—

## சாலைகளின் மேம்பாட்டிற்கு நிதிஒதுக்கீடு

**வினா எண் 50019—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியிடமிருந்து நெடுஞ்சாலைத் துறையினர் எடுத்துக் கொண்ட சாலைகளின் மேம்பாட்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சியிலிருந்து நெடுஞ்சாலைத் துறையினர் எடுத்துக் கொண்ட 80 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் மேம்பாட்டிற்கு 29.2 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து (TUFIDCO) கடன் பெறுவதற்கு (அரசாணை எண் 129, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9-9-2002) அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் இச்சாலைகள் மேம்பாட்டிற்கு நெடுஞ்சாலைத் துறைக்கு, சென்னை மாநகராட்சியின் மூலம் எட்டுத் தவணைகளில் ரூ.24.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

49—

## மனித நுழைவாயில் மூடிகள்

**வினா எண் 53043—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மழை நீர் கால்வாயில் எத்தனை மீட்டர் இடைவெளியில் மனித நுழைவாயில் மூடிகள் பொருத்தப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் மழை நீர் கால்வாயில் 5 மீட்டர் (ஐந்து மீட்டர்) இடைவெளியில் மனித நுழைவாயில் மூடிகள் பொருத்தப்படுகின்றன.

50—

## பான்பராக் விற்பனையைத் தடுத்தல்

**வினா எண் 56564—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகரில் தடை செய்யப்பட்ட பான்பராக் இரகசியமாக விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 301, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 7-11-2001-ன்படி தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பான்பராக், பான் மசாலா குட்கா, வாசனை புகையிலை ஆகிய பொருட்களை கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விற்பனை செய்யும் கடைகள், சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி பறிமுதல் செய்யப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு திடீர் சோதனை நடத்தும் போது சில சில்லறை விற்பனையாளர்கள் இரகசியமாக விற்பனை செய்வதாக புகார் வந்ததைத் தொடர்ந்து எல்லா சில்லரை விற்பனைக் கடைகளிலும் சோதனை நடத்தி பறிமுதல் செய்யப்பட்டு பின்னர் அவை மாநகராட்சி குப்பை கிடங்கில் தீயிட்டு அழிக்கப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.11,18,599 மதிப்பிலான பான்பராக் முதலிய பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன.



## ஒன்பதாம் பட்டியல்

1—

### பழுதடைந்த சாலையை சீரமைத்தல்

**வினா எண் 23715—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தைச் சேர்ந்த உடுமலைப்பேட்டை எலையமுத்தூர் சாலை கி.மீ. 11/4 முதல் கி.மீ. 12/6 வரையுள்ள சாலை மிகப் பழுதடைந்து விட்டதால், அதை சரி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பழுதடைந்துள்ள சாலையை புதுப்பிக்கும் பணியானது தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இனிவரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

### புது குடும்ப அட்டை

**வினா எண் 22708—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி எல்லைக்குள் வசிக்கும் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு எப்போது குடும்ப அட்டை வழங்கப்படும்?

(ஆ) குடும்ப அட்டை இல்லாதவர்கள் எத்தனை பேர் என சர்வே செய்து முடிக்கப்பட்டுவிட்டதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் இதுவரை குடும்ப அட்டை பெறாத விடுபட்ட குடும்பத்தினர் 1-6-2004 முதல் 30.6.2004 முடிய விண்ணப்பிக்கப்பட வேண்டும் என்றும், விண்ணப்பங்கள் பெறப்பட்டு விரைந்து ஆய்வுக்கு பின்னர் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் பணி துவக்கப்படும் என்றும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. குடும்ப அட்டை இல்லாதவர்கள் எத்தனை பேர் என்ற அடிப்படையில் சர்வே பணி ஏதும் நடைபெறவில்லை.

**3—**

## நியாயவிலைக்கடை கட்டடம்

**வினா எண் 23309—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பூதிப்புரம் பஞ்சாயத்து, பூதிப்புரத்திற்கு நியாயவிலைக் கடை கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பூதிப்புரம் பஞ்சாயத்து, பூதிப்புரத்திற்கு நியாயவிலைக் கடை கட்டும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.





**4—**

## நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 34733—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு ஊராட்சி, வேம்பால் குடியில் செயல்படும் நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், மேற்பனைக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் வேம்பங்குடி கிராம கூட்டுறவு நியாவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2003-2004ஆம் ஆண்டில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகளுக்கு திட்ட நிதியிலிருந்து தொகை பெற வழிவகை இல்லை. எனினும் அரசின் பல்வேறு திட்டம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்படி நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு மண்டல இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**5—**

## போலி உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல்

**வினா எண் 37320—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சேலம் மாவட்டம், வெள்ளாளகுண்டம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் கடந்த கால நிர்வாகத்தில் போலி உறுப்பினர்களுக்கு கடன் வழங்கியது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வெள்ளாளகுண்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 1-11-1996 முதல் 25-12-1998 வரை நிர்வாகக் குழு பொறுப்பிலிருந்தபோது திரு. ஆர். பழனிசாமி தலைவராகவும் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 8 பேரும் வங்கிப் பொறுப்பில் இருந்தனர். இக்காலத்தில் உறுப்பினர்கள் பெயரில் 64 நுகர்கடன்களை பினாமியாக சுமார் 15.89 இலட்சம் அளவுக்கு திரு. பழனிசாமி, முன்னாள் தலைவர் பெற்றுள்ளார்.

(ஆ) மேற்காண் முறைகேடுகள் தொடர்பாக சட்டப்பிரிவு 81-ன்கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நுகர்கடன்கள் முறைகேடாக வழங்கப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கையினடிப்படையில் வங்கி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மீது குற்றவழக்கு தொடரப்பட்டு வங்கியின் முன்னாள் தலைவர் திரு. பழனிசாமி மற்றும் அ. சேகர் ஆகிய இருவரும் சேலம் வணிகவியல் குற்றப்புலனாய்வு பிரிவு காவல்துறையால் கைது செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வங்கிக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய சட்டப்பிரிவு 87-ன்கீழ் தண்டத்தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கியில் முறைகேடாக வழங்கப்பட்ட நுகர்கடன் தொகை ரூ. 15.89 இலட்சத்தில் நாளது தேதி வரை தொகையை வசூலிக்க 18% வட்டியுடன் வசூலிக்க தண்டத்தீர்வை அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும், சட்டப்பிரிவு 36-ன்கீழ் முன்னாள் நிர்வாகக் குழுவினரை நிரந்தரத் தகுதியின்மை செய்யவும் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2004 நவம்பர் 22]

6—

## நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம்

**வினா எண் 44371—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் மற்றும் ராதாநல்லூரில் நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ராதாநல்லூர் கிராம கூட்டுறவு நியாயவிலைக் கடை செம்மங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 592 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

திருமுல்லைவாசல் கிராமத்தில் செயல்படும் திருமுல்லைவாசல் 1 மற்றும் 2 ஆகிய இரு நியாயவிலைக் கடைகள் முறையே 451 மற்றும் 504 குடும்ப அட்டைகளுடன் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையால் நடத்தப்பட்டு வருகின்றன. இவை முழுநேரக் கடைகளாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. தற்சமயம் நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு அரசு திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

[2004 நவம்பர் 22

7—

## குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா எண் 45989—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மேல்பகுதி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சிலருக்கு குடும்ப அட்டைகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், வால்பாறை மேல்பகுதி தேயிலைத் தோட்ட தொழிலாளர்களிடமிருந்து குடும்ப அட்டை கேட்டு வரப்பெற்ற மனுக்களில் தகுதியானவை என்று கண்டறியப்பட்ட 146 மனுக்களுக்கு குடும்ப அட்டைகள் அச்சிட்டு மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன.

8—

## அங்காடியை செயல்படுத்துதல்

**வினா எண் 49661—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை முடீஸ் பகுதியில் செயல்படாமல் உள்ள அங்காடியை செயல்பட வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை வட்டத்தில் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் கம்பெனியார் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்காக நடத்தி வந்த முடீஸ் கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்ஸ் கலைக்கப்பட்டதன் பேரில் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் முடீஸ், கெஜமுடி, ஆனைமுடி, முத்துமுடி, தாய்முடி மற்றும் தோனிமுடி ஆகிய எஸ்டேட் தோட்ட தொழிலாளர்களுக்காக ரெட்ரோஸ், வசந்தம், தாமரை, அன்னை தெரசா, துளசி மற்றும் செண்பகம் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் நியாயவிலைக் கடைகள் நடத்த கொடுக்கப்பட்டன. மேலும், கடந்த 1996 ஆண்டு முடீஸ் நகரத்தில் நிரந்தரமில்லாத தொழிலாளர்களுக்காகவும், அந்த பகுதி பொது மக்களுக்காகவும் தோற்றுவிக்கப்பட்டு இதுநாள் வரை செயல்பட்டு வந்த கோவை சிந்தாமணி கூட்டுறவு சங்கத்தின் நியாயவிலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து அந்தந்த பகுதிகளில் செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக்குழு நடத்தும் நியாயவிலைக் கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. முடீஸ் சிந்தாமணியின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஹைமாரஸ் பகுதிநேர நியாயவிலைக் கடை முடீஸ் ரெட்ரோஸ் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்பட்டு, மேற்படி நியாயவிலைக் கடைகள் 1-10-2003 முதல் தொடர்ந்து சீராக நடைபெற்று வருகின்றன.

9—

## குடிமைப் பொருள் வழங்கும் கடைகளுக்கு கட்டடம்

**வினா எண் 49665—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், சிறுவாலை ஊராட்சி, செல்லக் கவுண்டன்பட்டி, சிறுவாலை தேனூர் ஊராட்சியில் கட்டப்புளி நகர், வயலூர் ஊராட்சியில் பிள்ளையார் நத்தம் வயலூர், வைரநத்தம் ஊராட்சியில் விட்டங்குளம் வைரநத்தம் அம்பலத்தாடி ஊராட்சியில் அம்பலத்தாடி மற்றும் ஒத்தக்கடை ஊராட்சி ஆகிய இடங்களில் குடிமைப் பொருள் வழங்கும் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

[2004 நவம்பர் 22

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், சிறுவாலை ஊராட்சி செல்லக்கவுண்டன்பட்டி சிறுவாலை தேனூர் ஊராட்சியில் கட்டப்புளி நகர் வயலூர் ஊராட்சியில் பிள்ளையார் நத்தம் வயலூர், வைரநத்தம் ஊராட்சியில் விட்டாங்குளம் வைரநத்தம் அம்பலத்தாடி ஊராட்சியில் அம்பலத்தாடி மற்றும் ஒத்தக்கடை ஊராட்சி ஆகிய இடங்களில் குடிமைப் பொருள் வழங்கும் கடைகளுக்கு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் தற்பொழுது இல்லை.

**10—**

**வேளாண்மை வங்கிக்கு புதியதாகக் கட்டடம்**

**வினா எண் 51952—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, செம்மங்குடியில் இயங்கி வரும் வேளாண்மை கூட்டுறவு வங்கிக் கட்டடத்தை புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. செம்மங்குடி கிராமத்தில் சர்வே எண் 40/2-ல் 15 சென்ட் (6480 சதுர அடி) வங்கிக்கு சொந்த மனை உள்ளது. அதில் அலுவலக கட்டடம் 1775 சதுர அடியில் 1976-ஆம் ஆண்டு ரூ. 43,526.37 மதிப்பீட்டில் கட்டப்பட்டது. மேற்படி கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. தற்போதுள்ள வங்கி கட்டடம் வங்கியின் செயல்பாடுகளுக்கு போதுமானதாக உள்ளது. எனவே, வங்கிக்கு புதிதாக கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.



2004 நவம்பர் 22]

**11—**

**குடும்ப அட்டைகள்**

**வினா எண் 53718—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் 2003 ஆம் ஆண்டில் எவ்வளவு பேருக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

2003 ஆம் ஆண்டில் சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 360 அரிசி விருப்ப குடும்ப அட்டைகளும், 3 சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகளும், மொத்தம் 363 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**12—**

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கடன்**

**வினா எண் 54040—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை தொடங்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் எளிய முறையில் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஆம். வால்பாறை தொகுதியில் 6 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அதில் 4 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் பின்வரும் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன:

| | | மொத்தக் குழுக்கள் | சேமிப்புக் கணக்கு தொடங்கி உள்ள உதவிக் குழுக்கள் |
|---|---|---|---|
| 1. | அங்கலக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | 44 | 26 |
| 2. | சேத்துமடை பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கம் | 18 | 18 |
| 3. | காளியாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | 11 | 11 |
| 4. | தென்சித்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 27 | 27 |

இத்தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் கடன்கள் வழங்கப்பட்டுள்ள விவரம்:—

| வரிசை எண் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெயர் | வழங்கப்பட்ட கடன் விவரம் | |
|---|---|---|---|
| | | 2002-2003 ரூ. | 2003-2004 ரூ. |
| 1. | அங்கலக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | — | 2,80,000/- |
| 2. | சேத்துமடை பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கம் | 50,000/- | 28,500/- |
| 3. | காளியாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | 20,000/- | 1,80,000/- |
| 4. | தென்சித்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | — | 2,40,000/- |
| | மொத்தம் | 70,000/- | 7,28,500/- |

மேலும் 2004-2005 ஆம் ஆண்டில் மேற்படி வங்கிகள் மூலம் 20 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.70 இலட்சம் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



13—

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீண்டும் தொடங்குதல்**

**வினா எண் 5462—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியில் உள்ள 2-200 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீண்டும் துவக்க அரசு முன்வருமா?,

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. சீர்காழி ஒன்றியத்தில் செயல்பட்டு வந்த திருவாலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை 10-11-2003 அன்று கலைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தன்னாற்றல்குன்றி, அதனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு பயனளிக்காத நிலையில் கலைத்தலுக்கு ஆணையிடப்படுகிறது.

திருவாலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்ட தேதியில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 48.73 இலட்சம் செலுத்த வேண்டிய நிலுவை உள்ளது. இதில் பொது விநியோகத் திட்ட காசுக்கடன் உரம் மற்றும் நகைக் கடனுக்காக காசுக்கடன் நிலுவை ரூ. 20.30 இலட்சமும் அடங்கும். ஆனால், உறுப்பினர்களிடமிருந்து ரூ. 27.26 இலட்சம் வர வேண்டிய நிலுவை உள்ளது.

மேலும், வைப்புதாரர்களுக்கு திருப்பி அளிக்க வேண்டிய நிலுவையாக ரூ. 5.99 இலட்சமும் உள்ளது. உறுப்பினர்களிடமிருந்து நிலுவையை வசூலிக்க இயலாத நிலையிலும், வாழ்திறனுடன் செயல்பட இயலாத நிலையிலும், திருவாலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்டுள்ளது. இவ்வங்கியின் விவகார எல்லையில் உள்ள கிராமங்கள், அருகிலுள்ள பிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைத்து, இப்பகுதி மக்கள் கூட்டுறவுகள்மூலம் பெற்று வரும் பயன்களைத் தொடர்ந்து பெற தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2004 நவம்பர் 22

14—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56690—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரம் கீழதென்பாதியிலுள்ள முத்துமாரியம்மன் கோயிலை புதிதாக கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், கீழதென்பாதியிலுள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நல திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ. 25,000 வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியிலுள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டு மொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 22]

15—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56735—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தென்னாம்பட்டினம் ஊராட்சி, மாதேவிபட்டினம் மற்றும் புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ்ஸில் கன்னியம்மன் கோயிலை புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னாம்பட்டினம் ஊராட்சி, மாதேவிப்பட்டினம் மற்றும் புதுப்பட்டினம் ஊராட்சி தர்காஸ்ஸில் கன்னியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000 வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருகோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

[2004 நவம்பர் 22

16—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56749—திரு. நா. சந்திரமோகன்:** இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழி தொகுதி, கீழமாத்தூர் ஊராட்சி, தோப்புத் தெரு ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தை புதியதாக கட்டி முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கீழமாத்தூர் ஊராட்சி தோப்புக்காரத் தெரு, ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நல திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக. சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 22]

17—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57063—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி, நந்தியநல்லூர் மேலத்தெருவிலுள்ள திப்பாஞ்சாளம்மன் கோயிலை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி, நந்தியநல்லூர் மேலத்தெருவில் உள்ள திப்பாஞ்சாளம்மன் திருக்கோயில், ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நல திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ. 25,000 வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

18—

### சுற்றுச் சுவர்

**வினா எண் 42365—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, கீழஈரால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி தொகுதியில் கீழஈரால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்சமயம் பயன் அடையும் வெளி மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதுள்ள கட்டட வசதியே போதுமானதாகும். கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, கீழஈரால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் சாத்திய கூறு தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

19—

### சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டட வசதி

**வினா எண் 44183—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டட வசதி செய்து தரும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பயனடையும் வெளி நோயாளிகளின் அடிப்படையிலும் நடைபெறும் பிரசவங்களின் அடிப்படையிலும் பிரசவ அறை, 6 படுக்கைகளுடன் கூடிய வார்டு கொண்ட கூடுதல் கட்டடம் மற்றும் இரு குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

### தேன் விற்பனை

**வினா எண் 10050—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு எவ்வளவு மதிப்பு தேன் ஏற்றுமதியாகிறது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு பிற மாநிலங்களுக்கு தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது:

| ஆண்டு | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|
| 2001-2002 | 28,74,101/- |
| 2002-2003 | 65,83,780/- |
| 2003-2004 | 79,30,745 |

21—

### தொழில் முனைவோர் நிபந்தனைகளைத் தளர்த்துதல்

**வினா எண் 58610—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த தற்போதுள்ள நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை-**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்துள்ள 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற பதினெட்டு வயது நிரம்பிய அனைத்து மகளிரும் தகுதியுடையவர்கள். குறைந்தபட்ச கல்வித் தகுதி, ஆண்டு குடும்ப வருமானம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. மேற்கண்ட மகளிருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.40- உதவித் தொகையுடன் கூடிய தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில் வணிகத் துறை மூலம் வருடத்திற்கு 25,000 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2003-2004 வரை இக்குறியீடு எய்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட எல்லா மகளிரும் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறலாம். எனவே, வேறு நிபந்தனைகள் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இந்த நிபந்தனைகளைத் தளர்த்த செயற்குறிப்பு ஏதுமில்லை.

**22—**

## புதிய பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 34890—திரு. டி. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் தொகுதி, நந்தனார் ஆதிதிராவிட ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தொகுதி, நந்தனார் ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.6.60 இலட்சம்





மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகள் கட்ட அரசாணை (3ப) எண் 20, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 18-8-2004-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**23—**

## கணிப்பொறி பயிற்சி உதவித் தொகை

**வினா எண் 57679—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003-2004 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் மறுவாழ்வு பயிற்சித் திட்டத்தில் எவ்வளவு நபர்களுக்கு இலவசமாக கணிப்பொறி பயிற்சி, ஆட்டோமொபைல் மெக்கானிசம் போன்ற தொழில்களுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு.சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

2003-2004 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் மறுவாழ்வு பயிற்சித் திட்டத்தின்கீழ், ஆட்டோமொபைல் மெக்கானிசம் பயிற்சி ஏதும் அளிக்கப்படவில்லை. ஆனால், இத்திட்டத்தின்கீழ் 20 முன்னாள் படைவீரர்களுக்கு 3 மாத காலம் கணிப்பொறி பயிற்சி உதவித் தொகையுடன் அளிக்கப்பட்டது.

மேலும், இம்மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் துறையால் நடத்தப்படும் இலவச தையற் பயிற்சி வகுப்பில் முன்னாள் படை வீரரைச் சார்ந்த (மனைவி, கைம்பெண் மற்றும் மகள்) 30 பெண்களுக்கு இலவச தையற் பயிற்சி அளிக்கப்பட்டது. அவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

[2004 நவம்பர் 22

| பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சி பெற்றவர்கள் | வழங்கப்பட்ட பயிற்சி உதவித் தொகை | வழங்கப்பட்ட பயிற்றுவிப்புக் கட்டணம் | இதர விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| கணிப்பொறி பயிற்சி | 3 மாதங்கள் | முன்னாள் படைவீரர் 20 பேர் | நபர் ஒருவருக்கு மாதம் ரூ.700/- வீதம் மொத்தம் ரூ.42,000/- (ரூ.4,000 x 20 x 3) = 42,000 | பயிற்சி அளித்த நிறுவனத்திற்கு பயிற்றுவிப்புக் கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.4,000/- வீதம் மொத்தம் ரூ.80,000/- (ரூ. 4000 x 20) = 80,000 | — |
| தையற் பயிற்சி | 3 மாதங்கள் (இரண்டு அணியாக) | முன்னாள் படை வீரரைச் சார்ந்த பெண்கள் 30 பேர் (15+15) | நபர் ஒருவருக்கு ரூ.610/- வீதம் மொத்தம் 30 நபர்களுக்கு ரூ.18,300/- ரூ.610x30 ரூ.18,300 | - | கச்சாப் பொருட்கள் துணி மற்றும் நூல் போன்றவற்றிற்காக மொத்தம் ரூ.27,000/- செலவழிக்கப்பட்டது. சுயமாக தொழில் செய்ய உதவும் வகையில் இப்பயிற்சியினை முடித்த திருமணமாகாத மகளிருக்கு தையல் இயந்திரம் வாங்க ரூ.1200/- மானியமும் கைம்பெண்களுக்கு இலவச தையல் இயந்திரமும் வழங்கப்பட்டது. |



2004 நவம்பர் 22]

**24—**

## பணிமனை கட்டும் திட்டம்

**வினா எண் 14317—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் புதிதாக அரசு போக்குவரத்து பணிமனை இந்த ஆண்டில் கட்ட திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் புதிதாக அரசு போக்குவரத்துக் கழக பணிமனை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**25—**

## தொழில் வளாகம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 41072—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் தொழில் வளாகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் கொள்கைப்படி சிப்காட் நிறுவனம் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளை அமைக்க சுமார் 500 - 2500 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் வளாகங்களை சுமார் ரூ.100 கோடி முதல் ரூ.250 கோடி வரையில் முதலீடு செய்து உருவாக்கி வருகிறது. தமிழகத்தில் இதுபோன்ற தொழில் வளாகத்தை ஒவ்வொரு தொகுதியிலும் உருவாக்க

சாத்தியமில்லை. சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே 12 மாவட்டங்களில் மொத்தம் 17 தொழில் வளாகங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இந்த 17 வளாகங்களில் போதுமான அளவில் தொழில்மனைகள் உள்ளதால் தற்போது புதிதாக தொழில் வளாகங்களை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை. மேலும், சேலம், ஈரோடு, கோவை மாவட்டங்களுக்கு வெகு அருகில் பெருந்துறை என்னுமிடத்தில் 2,500 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள தொழில் வளாகத்தில் தொழிற்சாலைகள் துவங்க போதுமான தொழில்மனைகள் உள்ளன எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. சேலம் மாவட்டம், எடப்பாடியில் தொழில் வளாகம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**26—**

## காகித ஆலையில் கிடைத்த வருவாய்

**வினா எண் 50833—திரு. டி. மணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புகளூர் டி.என்.பி.எல். காகித ஆலையின் மூலம் 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?

(ஆ) அரசுக்கு இதன் மூலம் கிடைத்த நிகர இலாபம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலையில் (டி.என்.பி.எல்) ரூ.10 முகமதிப்புள்ள 2,44,44,900/-பங்குகளை வைத்துள்ளது. இந்த பங்கு முதலீட்டிற்கு டி.என்.பி.எல் நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டில், தமிழக அரசுக்கு ரூ.6.72 கோடி (27.5%) ஈவுத் தொகையாக வழங்கியுள்ளது.

(ஆ) 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஈட்டிய நிகர இலாபம் பின்வருமாறு:—





(ரூபாய் கோடிகளில்)

| | 2002-2003 (ஏப்ரல் முதல் டிசம்பர் வரை) | 2003-2004 உத்தேசமாக |
|---|---|---|
| நிகர இலாபம் (வரிக்கு முன்) | 66.57 | 60.70 |
| நிகர இலாபம் (வரிக்கு பின்) | 52.04 | 44.67 |

**27—**

## பயிரிடப்படும் பருத்தியின் அளவு

**வினா எண் 7855 திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் பருத்தி எவ்வளவு ஏக்கரில் பயிரிடப்படுகிறது?

(ஆ) அப்படி பயிரிடப்படும் மொத்த பருத்தியின் அளவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் 2000-2001 ஆம் ஆண்டு முதல் 2003-2004 ஆம் ஆண்டுகளில் பருத்தி கீழ்க்கண்டவாறு பயிரிடப்பட்டது:—

| வ.எண் | வருடம் | பயிர்சாகுபடி செய்யப்பட்ட பரப்பு(எக்டாரில்) | மொத்த உற்பத்தி (குவிண்டால்) |
|---|---|---|---|
| 1. | 2000-01 | பருத்தி-630 | 4725.00 |
| 2. | 2001-02 | பருத்தி-712 | 8544.00 |
| 3. | 2002-03 | பருத்தி-269 | 1283.13 |
| 4. | 2003-04 | பருத்தி-50 | 413.00 |

[2004 நவம்பர் 22

28—

## உழவர் பயிற்சி மையம்

**வினா எண் 34008—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கும் விவசாயிகள் பயிற்சி மையத்தில் கடந்த 2001, 2002 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட இடை நிகழ்வு செலவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாட்டத்தில் இயங்கும் உழவர் பயிற்சி மையத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் 710 பேர் பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட இடைநிகழ்வு செலவு ரூ.28,400/- (ரூபாய் இருபத்தெட்டாயிரத்து நானூறு மட்டும்). 2002-2003 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றவர்கள் 1,465 பேர். இடைநிகழ்வு செலவு ரூ.1,22,175/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து நூற்று எழுபத்தைந்து மட்டும்) ஆகும். 2003-2004 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றவர்கள் 910 பேர் ஆவர். இடைநிகழ்வு செலவு ரூ.0.784 இலட்சம் (ரூபாய் எழுபத்தெட்டாயிரத்து நானூறு மட்டும்)

29—

## விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி முகாம்

**வினா எண் 55066—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரசாயன உரங்களால் ஏற்படும் விளைவுகளை அறிந்துகொள்ள விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இரசாயன உரங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பாதுகாக்க இயற்கை வேளாண்மை பரிந்துரைக்கப்படுகிறது. இரசாயன உரங்கள் அதிகம் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமைகளைக் குறைக்க, மத்திய, மாநில அரசுகள் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. இதன்படி பசுந்தாள் உரமிடல், உயிர் உர உபயோகம், மண்புழு உரமிடல், புழுரோட்டன் பூஞ்சானம் கொண்டு உரம் தயாரித்தல், நீலப்பச்சைப்பாசியிடல், அசோலா இடுதல் போன்றவற்றின் மூலம் மாநில அரசு இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து வருகிறது.

வேளாண்மைத் துறையினால் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வரும் வயல்வெளிப்பள்ளிகள், கிராம அளவிலான பயிற்சி முகாம்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியவற்றின் மூலம், இரசாயன உரங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. மேலும் பயிருக்கேற்ப மண்பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தேவையான அளவு மட்டுமே உரங்களைப் பயன்படுத்தவும் பரிந்துரை செய்யப்படுகிறது.

30—

## ஜிப்சம் வழங்கும் திட்டம்

**வினா எண் 55067- திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக ஜிப்சம் வழங்கவும், பெரிய விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மை துறை அமைச்சர்:**

சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக ஜிப்சம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 நவம்பர் 22

2. தற்போது எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் மற்றும் பயறு பெருக்கத் திட்டம் மைய மற்றும் மாநில அரசுகள் சேர்ந்து 75:25 விகித செலவினத்தில் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து பயறுவகை எண்ணெய்பனை மற்றும் மக்காச் சோளத் திட்டத்தில் 2004-2005 ஆம் ஆண்டு மணிலா மற்றும் பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தியினை அதிகரிக்க ஜிப்சம் விலையில் 50 சதவிகிதம் மானியமாகவும், போக்குவரத்து செலவினம் முழுவதும் மானியமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் நடப்பு 2004-2005 ஆம் ஆண்டில் எண்ணெய்வித்து உற்பத்திக்கு சுமார் ரூ.50 இலட்சமும், பயறுவகைப் பயிருக்கு ரூ.6.33 இலட்சம் என்ற அளவில் மானிய விலையில் ஜிப்சம் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

மேலும், களர் உவர் நில சீர்திருத்தத் திட்டத்தின்கீழ் களர் உவர் நிலங்களில் பாதிப்பிற்கேற்ப இரசாயன சீர்திருத்தங்களாக ஜிப்சம் பாதிப்பிற்குள்ள நிலங்களுக்கு மட்டும் 50 சதவிகிதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வருடத்திற்கு 4,000 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

31—

### விடுதியில் மாணவர் சேர்க்கை

**வினா எண் 1404— திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, பொன்பரப்பி, செந்துறை, இரும்புலிக்குறிச்சி, ஆண்டிமடம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் விடுதியில் கூடுதலாக மாணவர் சேர்க்கை உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு.செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விடுதிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கும், 



2004 நவம்பர் 22]

துறைத் தலைவர்களுக்கும் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2004-2005 -க்கான மாணவர் சேர்க்கை முடிவுற்றவுடன், இந்த அதிகாரங்களின்படி, தேவையானால் பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியைச் சார்ந்த பொன்பரப்பி, செந்துறை, இரும்புலிக்குறிச்சி மற்றும் ஆண்டிமடம் ஆகிய விடுதிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

32—

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 45981—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, குடமுருட்டியில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, குடமுருட்டியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

33—

### பிற்படுத்தப்பட்ட மாணவர் தங்கும் விடுதி

**வினா எண் 54384— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர் தங்கும் விடுதியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

**34—**

**சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி**

**வினா எண் 54386—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதி, புதிய பேருந்து நிலையம் அருகில் அண்ணாநகர் காலனியில் குடியிருக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப்பகுதி, புதிய பேருந்து நிலையம் அருகில் அண்ணா நகர் காலனியில் குடியிருக்கும் எட்டு சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகள் 2003 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**35—**

**இரப்பர் மரங்களை விற்றதில் கிடைத்த வருவாய்**

**வினா எண் 32570—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு இரப்பர் கழகத்தின் இரப்பர் மரங்களை விற்றதின் மூலமாக எத்தனை கோடி ரூபாய் வருவாய் வரப்பெற்றது?

(ஆ) இரப்பர் பயிரிடும் முன் இருந்த காட்டு மரங்கள் எந்தெந்த ஆண்டில் எவ்வளவு தொகைக்கு விற்பனை ஆகியுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு இரப்பர் கழகத்தின் இரப்பர் மரங்களை விற்றுள்ளதால் வரப்பெற்ற வருவாய் விவரம்:—

| | | |
|---|---|---|
| 1. கூப்பு எண் 2 | - | ரூ.1,36,00,043 |
| 2. கூப்பு எண் 6 | - | ரூ. 85,68,054 |
| 3. கூப்பு எண் 7 | - | ரூ.1,70,34,816 |
| 4. கூப்பு எண் 10 | - | ரூ. 38,72,715 |
| 5. கூப்பு எண் 11 | - | ரூ. 60,29,205 |
| 6. கூப்பு எண் 19 | - | ரூ. 7,80,700 |
| மொத்தம் | - | ரூ. 4,98,85,533 |

(ஆ) இரப்பர் தோட்டங்கள் 1960 முதல் 1965 வரையிலான ஆண்டுகளில் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் புலன்களிலுள்ள காட்டு மரங்கள் இதற்கு முந்தைய காலங்களில் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1-10-1984 முதல் அரசு இரப்பர் கழகம் துவக்கப்பட்டுள்ளது.

தற்போது கிடைத்துள்ள ஆவணங்களின்படி காட்டு மரங்கள் விற்கப்பட்ட விவரங்கள்:

| | | |
|---|---|---|
| மணலோடை கோட்டம் | - | ரூ.3,81,820/- |
| காளிகேசம் கோட்டம் | - | ரூ. 98,136/- |
| மொத்தம் | | ரூ.4,79,956 |

காட்டு மரங்கள் விற்பனை செய்த கோப்புகள் தற்போது கிடைக்கப் பெறவில்லை. 44 ஆண்டுகள் கடந்துவிட்டமையாலும், கால முதிர்வு

காரணமாக விற்பனைக் கோப்புகள் பதிவேடுகள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்பதால் காட்டு மரங்களை விற்பனை செய்த விவரங்கள் அறிய இயலவில்லை.

**36—**

### தொழிலாளர்களின் மருத்துவமனை

**வினா எண் 59836—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதி, சின்கோனா டான்டி தொழிலாளர்களின் மருத்துவமனையைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி சின்கோனாப் பகுதியில் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவமனை நல்லமுறையில் செயல்பட்டு, அக்கழகத்தின் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அருகிலுள்ள பொதுமக்களுக்கும் சிகிச்சை அளித்து வருகின்றது. தேவையான மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளதோடு, தேவையான மருந்தும் இருப்பில் உள்ளது. இரு மருத்துவ ஊர்திகளுடன், 24 மணி நேரமும் இம்மருத்துவமனை செயல்படுகிறது. கோவை மற்றும் வால்பாறையிலுள்ள அரசு மருத்துவமனைகளில் தொழிலாளர்களுக்கு தேவைப்படின் மருத்துவ வசதி அளிக்கவும், செலவினத்தை நிறுவனமே ஏற்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**37—**

### பயனாளிகளின் விவரம்

**வினா எண் 26988—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



புதுக்கோட்டை தொகுதியில் அரசு உதவியுடன் நடைபெறும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலில் பயன்பெறும் பயனாளிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி, துணித் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதியில் அரசு உதவியுடன் கைத்தறித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதும் செயல்படவில்லை.

**38—**

### மீனவர் அங்காடி

**வினா எண் 61583—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அறந்தாங்கி நகரில் மீனவர் அங்காடி கட்டியும் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 25-5-2004 முதல் இந்த அங்காடியை, "அறந்தாங்கி மீன்விற்பனையாளர்கள் சுய உதவிக் குழு" ஏற்று நடத்தி பராமரித்து வர மீன்வளத்துறை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார். மீன் வளத் துறை இயக்குநரின் இச்செயலுக்கு அரசாணை (டி) எண் 229, கால்நடை பராமரிப்பு (ம) மீன் வளத் துறை, நாள்: 3-8-2004-ல் பின்னேற்பும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேற்படி சுய உதவிக் குழு இம்மீனவர் அங்காடியைப் பராமரித்து வருகிறது.

**39—**

### மீன் உலர்களம்

**வினா எண் 61758—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தொடுவாய் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ரூ.182.00 இலட்சம் செலவில் மொத்தம் 10 இடங்களில் மீனவர் அங்காடிகள், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் நிறுவிட அரசாணை (நிலை)எண் 102, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள்: 26-6-2000-ல் ஆணைகள் வழங்கப்பட்டு, அதன்படி கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் நாகப்பட்டினம் மாவட்டம், கீச்சாங்குப்பம் என்ற இடத்தில் உலர்களம்/ உலர்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எனவே, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தொடுவாய் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

### கூடுதலாக தங்கும் விடுதிகள் கட்டுதல்

**வினா எண் 53575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலாத் தலத்தில் தங்கும் விடுதியில் கூடுதலாக தங்கும் விடுதிகளை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு சுற்றுலாத் தலத்தில் தங்கும் விடுதியில் கூடுதலாக தங்கும் விடுதிகளை கட்டுவதற்கு திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 நவம்பர் 22]

**41—**

### சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 43823—திருமதி. கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**42—**

### தொழிலாளர் துறைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 61005—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் இயங்கி வரும் தொழிலாளர் நலன் அலுவலர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் தொழிலாளர் துறையைச் சார்ந்த தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம் மட்டும் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சீர்காழி தொகுதியில், தொழிலாளர் துறைக்கு அரசுக்

[2004 நவம்பர் 22

கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கான முன்மொழிவு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

**43—**

## குடிநீர் வசதி

**வினா எண் 10820—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சி, ஊத்துப்பள்ளத்தூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சி, ஊத்துபள்ளத்தூர் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 30-6-2002 முதல் பொதுமக்கள் பயனில் உள்ளது.

**44—**

## மெர்க்குரி பல்பு

**வினா எண் 21831—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சி, 43வது வார்டு, காஜா தெரு, வாய்க்கால் தெரு, பாலம் அருகில் இரவில் பெண்கள் நடக்க அச்சப்படுவதால் உடனே மெர்க்குரி பல்பு எரியவிட அரசு முன்வருமா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாநகராட்சி, 43வது வார்டு, காஜா தெரு, வாய்க்கால் தெரு, பாலம் அருகில் 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு பொருத்தி எரியவிடப்பட்டுள்ளது.

**45—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 22445—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, மந்திரிவளவு, தர்மகர்த்தாவளவு, குண்டுதலையன்வளவு, துரைசாமி கொட்டாய் ஆகிய பகுதி குடிநீர் வசதிக்காக ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட மந்திரிவளவு, இலட்சுமணகவுண்டனூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இலட்சுமணகவுண்டனூரில் உள்ள 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் காவிரி குடிநீர் 03/2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய திட்டம் தேவையில்லை.

2. தர்மகர்த்தாவளவு, ஆலமரத்துப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். ஆலமரத்துப்பட்டி குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம், காவிரி குடிநீர் 03/2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய திட்டம் தேவையில்லை.

[2004 நவம்பர் 22

3. குண்டுதலைவளவு மற்றும் துரைசாமிக்கொட்டாய், ஓட்டப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். ஓட்டப்பட்டியில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புக்கான திட்டத்தை வாரியம் பராமரிப்பதால், உரிய பராமரிப்புத் தொகையை ஊராட்சி மன்றம் வாரியத்திற்குச் செலுத்தினால் பற்றாக்குறையின்றி குடிநீர் வழங்க ஏதுவாய் இருக்கும். எனவே, புதிய குடிநீர்த் திட்டம் அமைக்கத் தேவையில்லை.

**46—**

### குடிநீர் வசதி

**வினா எண் 25198—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, செம்மேடுவில் சிறுதொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, செம்மேடு குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 326 ஆகும். இக்குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் திட்டம் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்பு திட்டம் செயலில் உள்ளது. இக்குடியிருப்பின் மக்கள் தொகைக்கு தற்போது செயலில் உள்ள திட்டமே போதுமானதாகும்.



2004 நவம்பர் 22]

**47—**

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 27283—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, பச்சியம்மன் கோவில் அருகிலும் குள்ளப்பன்காடு பகுதிகளிலும் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியில் உள்ள அக்கரைப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியே பச்சியம்மன் கோவில் ஆகும். அக்கரைப்பட்டி குடியிருப்பில் 1999 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு கொங்கணாபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இதே ஊராட்சியிலுள்ள குள்ளப்பன்காடு என்ற இடம் செங்காடு என்ற குடியிருப்பின் ஒரு பகுதியாகும். அக்கரைப்பட்டியில் 1998ஆம் ஆண்டு கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு கொங்கணாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் காவிரி குடிநீர் ஏற்றப்பட்டு பகிர்மான குழாய்மூலம் விநியோகிக்கப்படுகிறது. மேலும், இக்குடியிருப்பில் ஒரு சிறு மின்விசை திட்டமும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**48—**

### காலனி வீடுகள்

**வினா எண் 48313—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

குத்தாலம் தொகுதி, கொழையூர் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு.கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, கொழையூர் ஊராட்சியில் 2002-2003 ஆம் நிதியாண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 9 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**49—**

### புகையிலை விற்பனைக்கு தடை விதித்தல்

**வினா எண் 53912—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பான் பராக், குட்கா போன்ற மெல்லும் புகையிலை வகைகளை மறைத்து வைத்து விற்பனை செய்யப்படுவதாக அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம், வந்துள்ளது. 7-11-2001 மற்றும் 9-11-2001 தேதிகளில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் மூலம் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பான்பராக், குட்கா மற்றும் மெல்லும் புகையிலை போன்றவற்றை மறைத்து வைத்து விற்கப்படுவதாக அவ்வப்போது கிடைத்த தகவலின்படி சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 10 வரை 19-11-2001 முதல் 16-5-2002 வரை சுமார் 848.500 கிலோ எடையுள்ள மேற்கண்ட போதைப் பொருட்களை கையகப்படுத்தி அழிக்கப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ.4,24,250/-ஆகும்.



2004 நவம்பர் 22]

**50—**

### மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 54214—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொக்கம்பட்டி ஊராட்சியில் மயானக் கொட்டகை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சொக்கம்பட்டி ஊராட்சியில் இரண்டு மயானக் கொட்டகைகள் உள்ளன. இந்த இரண்டு மயானக் கொட்டகைகள் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஆதிதிராவிடர் இன மக்களுக்கு ஒரு மயானக் கொட்டகை பதினோராவது நிதிக் குழு மானியத்தில் முன்னுரிமை அடிப்படையில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பட்டியல் 10

1—

### நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 28968—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நியாயவிலைக் கடைக்கு அரசுக் கட்டடம் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள ஏகாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் இரு முழுநேர நியாயவிலைக் கடைகளும், ஒரு பகுதி நேரக் கடையும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட மூன்று நியாயவிலைக் கடைகளில் ஏகாபுரம் முழுநேர நியாயவிலைக் கடையானது அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. மேலும் கலியக்கவுண்டனூர் முழுநேர நியாயவிலைக் கடையும் நல்லான் பூவளவு பகுதிநேரக் கடையும் தனியார் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் ஏகாபுரத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2—

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 54178—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள கருமுட்டி, வெள்ளிமுடி, பூச்சாங்கொட்டைபாறை, காடம்பாறை செட்டில்மெண்ட், காடம்பாறை டேம் பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், கருமுட்டி, வெள்ளிமுடி, காடம்பாறை அணை மற்றும் பூச்சாங்கொட்டை பாறை மலைவாழ் மக்களுக்கு காடம்பாறை அணைப் பகுதி, சேடல் டேம் முகாம் குடியிருப்பு எண் 6ஜி/1/1445-ல் சிந்தாமணி கூட்டுறவு பகுதிநேர நியாயவிலைக் கடை 21-5-2003 முதல் திறக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

3—

### மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் துவங்குதல்

**வினா எண் 55396—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் புதிதாக துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி, 2 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள நியாயவிலைக் கடைகளில் இருந்து,

[2004 நவம்பர் 22

குறைந்தபட்சம் 5,000 முதல் 10,000 வரை குடும்ப அட்டைகள் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்துடன் இணைக்கப்படுகின்றன. அப்போதுதான் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்து, தற்சார்புடன் (Viable) செயல்பட இயலும். கொங்கணாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள 2 நியாயவிலைக் கடைகளில் 1,922 குடும்ப அட்டைகளே உள்ளன. அவைகளின் மண்ணெண்ணெய் தேவை 1614 லிட்டர் மட்டுமே ஆகும். எனவே, இங்கு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

4—

**கிராம அங்காடிகளுக்குக் கட்டடம்**

**வினா எண் 57183—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, தியத்தூர் வேளாண் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட சாத்தியடி, குளத்தூர் மற்றும் கதிராமங்கலம் கிராம அங்காடிகளுக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, தியத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் சாத்தியடி மற்றும் குளத்தூர் முழுநேர நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும், கதிராமங்கலம் பகுதிநேரக் கடை சொந்தக் கட்டடத்திலும் செயல்படுகின்றன. சாத்தியடி மற்றும் குளத்தூர் முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை. கதிராமங்கலம் பகுதிநேரக் கடை ஏற்கெனவே சொந்தக் கட்டடத்தில்தான் செயல்படுகிறது.



2004 நவம்பர் 22]

5—

**கிராம அங்காடிகளுக்குக் கட்டடம்**

**வினா எண் 57172—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட புண்ணியவயல், ஆவுடையார்கோவில் கிராமம், பிராந்தினி, பொன்பேத்தி வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட பேரனூர், கோவேந்திரம் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட வெளியாத்தூர் கிராமம், விழிமங்கலம், கண்ணக்கூர், தாழனூர் கிராம அங்காடிகளுக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் பிராந்தினி மற்றும் புண்ணியவயல் முழுநேர நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும், ஆவுடையார்கோவில் முழுநேர நியாயவிலைக் கடை இலவசக் கட்டடத்திலும் செயல்படுகின்றன.

2. பொன்பேத்தி வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் பேரனூர் முழுநேர நியாயவிலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது.

3. கோவேந்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் வெளியாத்தூர், விழிமங்கலம், தாழனூர் முழுநேர நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும், கண்ணாத்தூர் பகுதிநேரக் கடை வாடகைக் கட்டடத்திலும் செயல்படுகின்றன.

4. வாடகைக் கட்டடத்தில் செயல்படும் மேற்படி முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை. பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்களே இலவசக் கட்டட வசதி செய்து தர வேண்டும்.

6—

## அங்காடிகளுக்குக் கட்டடம்

**வினா எண் 57186—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வேளாண் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட அகரம், புதுக்கோட்டை ரோடு, காந்தி பூங்கா சாலை, எஸ்என். புரம் மற்றும் மருத்துவமனை அங்காடிகளுக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அகரம், புதுக்கோட்டை ரோடு, காந்தி பூங்கா, எஸ்என். புரம் மற்றும் மருத்துவமனை நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. மேற்படி நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு, அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

7—

## கிராம அங்காடிக்குக் கட்டடம்

**வினா எண் 57201—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அரசர்குளம் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட அரசர்குளம் கீழ்பாதி மற்றும் அரசர்குளம்பேட்டை கிராம அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அரசர்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட அரசர்குளம் கீழ்பாதி கூட்டுறவு நியாயவிலைக் கடை 812 குடும்ப அட்டைகளுடனும், அரசர்குளம்பேட்டை கிராம அங்காடி 488 குடும்ப அட்டைகளுடனும் முழுநேரக் கடைகளாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. தற்சமயம் நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு அரசு திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

8—

## கிராம அங்காடிகளுக்குக் கட்டடம்

**வினா எண் 57203—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, விளானூர் வேளாண் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட சாட்டியக்குடி மற்றும் விளானூர் கிராம அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, விளானூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட விளானூர் கூட்டுறவு நியாயவிலைக் கடை 203 குடும்ப அட்டைகளுடனும், சாட்டியக்குடி நியாயவிலைக் கடை 355 குடும்ப அட்டைகளுடனும் முழுநேர நியாயவிலைக் கடைகளாக சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மேற்படி இரண்டு நியாயவிலைக் கடைகளும் சொந்தக் கட்டடத்தில் செயல்படுவதால், இந்த நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

[2004 நவம்பர் 22

9—

## ஆலயத்திற்குச் சுற்றுச்சுவர்

**வினா எண் 56694—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வடரெங்கம் அருள்மிகு ரெங்கநாதர் ஆலயத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வடரெங்கம் அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயில் சுற்றுப்புற மதிற்சுவர் ரூ.3,55,000/- செலவில் உபயமாக கட்டி முடிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் 9-4-2004-ல் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

10—

## நிதியுதவி வழங்குதல்

**வினா எண் 56729—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆலாலசுந்தரம் ஊராட்சியிலுள்ள ஸ்ரீகண்ணியம்மன் கோயிலை புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், ஆலாலசுந்தரம் ஊராட்சி, ஸ்ரீகண்ணியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர்



2004 நவம்பர் 22]

வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

11—

## ஆலயத்தைப் புதிதாக்குதல்

**வினா எண் 56737—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சுப்பராயபுரம் மற்றும் பன்னங்குடி ஊராட்சியிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தை புதிதாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சுப்பராயபுரம் மற்றும் பன்னங்குடி ஊராட்சியிலுள்ள கன்னிகா

பரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

12—

## கோயிலைப் புதிதாக்குதல்

**வினா எண் 56745—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, காத்திருப்பு ஊராட்சியிலுள்ள பேச்சியம்மன் கோயிலைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம் மற்றும் ஒன்றியம், காத்திருப்பு ஊராட்சி, பேச்சியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து





சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

13—

## காளியம்மன் கோயில் கட்டுதல்

**வினா எண் 56760—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சி, வ.உ.சி. தெருவிலுள்ள காளியம்மன் கோயிலைக் கட்டித்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சி, வ.உ.சி.

[2004 நவம்பர் 22

தெருவிலுள்ள காளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.15,000- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**14—**

## கோயில் கட்டுதல்

**வினா எண் 56763—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கோபாலசமுத்திரம் ஊராட்சி, குத்தவக்கரை மற்றும் மேலவல்லம் தெருவில் கோயில் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கோபாலசமுத்திரம் ஊராட்சி, குத்தவக்கரை தெருவிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில் மற்றும் மேலவல்லம் தெருவிலுள்ள கன்னிகா பரமேஸ்வரியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இத்திருக்கோயில்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத நிதிவசதியில்லாத திருக்கோயில்களாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயில்களுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**15—**

## கோயிலைப் புதிதாக்குதல்

**வினா எண் 56769—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், துத்தியம்பேட்டை ஊராட்சி, ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பிரதான சாலையிலுள்ள முருகன் திருக்கோயிலை புதிதாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், துத்தியம்பேட்டை ஊராட்சி, ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பிரதான சாலையிலுள்ள முருகன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக, ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

16—

## ஆலயத்தைப் புதிதாகக் கட்டுதல்

**வினா எண் 56770—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சி, கீழவெளி, ஆதிதிராவிடர்கள் உள்ள மகாகாளியம்மன் ஆலயத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சி, கீழவெளி, ஆதிதிராவிடர்கள் உள்ள மகாகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

17—

## கோயில் கட்டுதல்

**வினா எண் 57045—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி மாதிரவேளூர் ஊராட்சியில், மாதிரவேளூர் தோப்பு தெருவிலுள்ள ஸ்ரீமகாகாளியம்மன் கோயிலைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மாதிரவேளூர் ஊராட்சியில் மாதிரவேளூர் தோப்பு தெருவிலுள்ள, ஸ்ரீமகாகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**18—**

## கன்னியம்மன் கோயிலைக் கட்டுதல்

**வினா எண் 57052—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, திருக்கருகாவூர் ஊராட்சி, கிரோநல்லூரிலுள்ள கன்னியம்மன் கோயிலைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருக்கருகாவூர் ஊராட்சி, கிரோநல்லூரிலுள்ள கன்னியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக, ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**19—**

## மிதிவண்டி வழங்குதல்

**வினா எண் 35288—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 முதல் 2002 முடிய சங்கராபுரம் தொகுதியில் உடல் ஊனமுற்றோர்களுக்கான மூன்று சக்கர வண்டிகள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) காத்திருப்போருக்கு எப்போது வழங்கப்படும்?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001 முதல் 2002 முடிய சங்கராபுரம் தொகுதியில் 40 பேருக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படாமல் காத்திருப்போருக்கு ஒதுக்கீடு பெறப்பட்டதும் வழங்கப்படும்.

20—

**கூடுதலாக மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 31242—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மண்ணச்சநல்லூர் ஒன்றியம், மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 3 பணியிடங்களிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, மேலும் கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

21—

**எலும்பு முறிவு சிகிச்சைக்கு சிறப்பு மருத்துவர்**

**வினா எண் 35376—திரு. ரா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி தலைமை மருத்துவமனைக்கு எலும்பு முறிவு சிகிச்சைக்கு சிறப்பு மருத்துவர் பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி தலைமை மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை சிறப்பு மருத்துவர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

22—

**சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 47984—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் ஆண்டில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் (பெண்) பயிற்சிப் பள்ளி (M.P.H.W.F.) பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சியில் 146 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில், 82 நபர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றும், 64 நபர்கள் தேர்வில் தேர்ச்சிபெறாமலும் உள்ளனர்.

23—

**மருத்துவமனைக்குக் கருவிகள் வழங்குதல்**

**வினா எண் 51400—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 22

கோவையில் உள்ள அரசு பெரிய மருத்துவமனைக்கு 'சி' ஆர்ம் இ.எஸ்.டபிள்யூ.எல். மற்றும் யூரோடைனமிக்ஸ் ஆகிய கருவிகள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக அறுவை சிகிச்சைத் துறைக்குத் தேவையான 'சி' ஆர்ம் இ.எஸ்.டபிள்யூ.எல். மற்றும் யூரோடைனமிக்ஸ் ஆகிய கருவிகள் வாங்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

### அவசர சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 56200—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையம், முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருகின்றது. விபத்து அவசர சிகிச்சைப் பிரிவிற்குத் தேவையான இரத்த வங்கி மற்றும் பிராணவாயு போன்ற கூடுதல் வசதிகள் இருக்க வேண்டும். இந்த வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இல்லை. எனவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2004 நவம்பர் 22]

25—

### பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 16524—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சியில் பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சியில் பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

26—

### பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 16532—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**27—**

**மகளிர் உறுப்பினர்கள்**

**வினா எண் 21248—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரிலுள்ள பாலிதீன் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக அனைவரும் மகளிரா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூரிலுள்ள பாலிதீன் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் மகளிர் 20 பேரும், ஆண்கள் 7 பேரும் உறுப்பினர்களாக உள்ளனர். இச்சங்கத்தின் பங்கு முதலில் பங்கேற்றுள்ளதன்மூலம் தமிழ்நாடு அரசு மற்றுமொரு உறுப்பினராக உள்ளது.

**28—**

**முட்டைப் பவுடர் ஏற்றுமதி**

**வினா எண் 25045—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் முட்டைப் பவுடர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஈரோட்டைச் சார்ந்த நிறுவனமான திருவாளர்கள் எஸ்.கே.எம். முட்டை ஏற்றுமதி நிறுவனம் முட்டைப் பவுடரை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அந்நிறுவனம் ஏற்றுமதி செய்த விவரம் பின்வருமாறு:-

| வருடம் | ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைப் பவுடர் எடை (டன்களில்) |
|---|---|
| 2001-2002 | 2,400 |
| 2002-2003 | 2,632 |
| 2003-2004 | 2,334 |

**29—**

**முட்டைப் பவுடர் தயாரிக்கும் ஆலை**

**வினா எண் 27796—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல்லில் முட்டைப் பவுடர் தயாரிக்கும் கூட்டுறவு ஆலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

நாமக்கல்லில் முட்டைப் பவுடர் தயாரிக்கும் கூட்டுறவு ஆலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் அலகு அமைக்க

தனியார் முன்வந்தால், அவ்வலகிற்கு முதலீட்டு மானியம், மின் மானியம் மற்றும் மின்னாக்கி மானியம் ஆகியவை வழங்கப்படும். நாமக்கல்லில் முட்டைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

**30—**

## விவசாய விளைபொருள் தொழிற்சாலை

**வினா எண் 33338—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செஞ்சியில் விவசாய விளைபொருள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாட்டில் இருக்கின்ற 385 ஊராட்சி ஒன்றியங்களில் விவசாய விளைபொருள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. செஞ்சி சட்டமன்றத் தொகுதியில், செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு பகுதியும், ஒலக்கூர் மற்றும் வல்லம் ஆகிய ஒன்றியங்களும் உள்ளன.

செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 14 விண்ணப்பங்களும், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து 6 விண்ணப்பங்களும், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து 6 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன. இவற்றில் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.48.00 இலட்சம் மதிப்பில் விதை சுத்திகரிப்பு தொழிற்சாலை, ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.42.00 இலட்சம் மதிப்பில் சோற்றுக் கற்றாழை கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை, வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.29.00 இலட்சம் மதிப்பில் இயற்கைச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவ தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினரால்



ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பங்கள், கடன் ஒப்புதல் பெற நிதி நிறுவனங்களின் பரிசீலனையில் உள்ளன.

மேலும், செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில், இத்திட்டத்தின்கீழ் ரூ.96.00 இலட்சம் மதிப்பில் உரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க மாவட்ட அளவிலான குழுவினால், மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும், செஞ்சி தொகுதியில் உள்ள ஒன்றியங்களைச் சார்ந்த தகுதியுள்ள எவரேனும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் விவசாய விளைபொருள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க விண்ணப்பிக்கும்பட்சத்தில் அவர்களுக்கு தக்க ஆலோசனை வழங்கி, வங்கி மூலம் கடனுதவி பெற்று தொழிற்சாலை துவங்க அனைத்து உதவிகளும் மாவட்டத் தொழில் மையம், விழுப்புரம்மூலம் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும். மேலும், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தொழில் துவங்குபவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் தமிழக அரசு மூலம் வழங்கப்படும்:-

*(அ)* மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் தொழில்களுக்கு இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டில் 15 சதவீதம், அதிகபட்சம் ரூ.15 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

*(ஆ)* குறைந்த அழுத்த மின் மானியம், உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இதில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து செலுத்தப்பட்ட மின்கட்டணத்திலிருந்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 10 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

*(இ)* தொழிற்சாலைகளில் நிறுவப்படும் மின்னாக்கியின் மதிப்பில் 10 சதவீதம், அதிகபட்சம் ரூ.5 இலட்சம் மின்னாக்கி மானியமாக வழங்கப்படும்.

*(ஈ)* 50 சதவீதத்திற்கு மேல் மகளிரைப் பணியில் அமர்த்தும் தொழில்களுக்கு கூடுதல் மானியமாக நிலை முதலீட்டில் 5 சதவீதம், அதிகபட்சம் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

31—

## ஊதுபத்தி தொழில் புரிபவர்களுக்குச் சலுகைகள்

**வினா எண் 36105—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெழுகுவர்த்தி மற்றும் வாசனை ஊதுபத்தி தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அரசு சலுகைகள் வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மெழுகுவர்த்தி மற்றும் வாசனை ஊதுபத்தி தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் வழியாக சுய உதவிக் குழுவின்மூலம், மானியத்துடன்கூடிய தொழில் கடன், வங்கி மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அத்தொழிலில் ஈடுபடுபவர்கள் குழுவாக அமைத்து தக்க எடுத்துரையுடன் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தை அணுகினால், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ், மானியத்துடன் கூடிய நிதியுதவியினைப் பெற்றுத்தர இயலும். மேலும், அவ்வாறு உற்பத்திச் செய்யப்படும் பொருட்களை கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வெவ்வேறு விற்பனை அலகுகள்மூலம் விற்பனை செய்யவும் வாரியம் தக்க உதவிகள் செய்யும்.

32—

## கயிறு திரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 40313—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சேத்துமடையில் கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆனைமலை வட்டாரத்தில் தற்சமயம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் இரு திட்டங்கள் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் மற்றும் தற்போதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | தொழில் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.வி. இளங்கோ, எஸ்.எப்.187 சுப்பி கவுண்டன்புதூர், ஆனைமலை பிரதான சாலை, சுந்தரபுரி, பொள்ளாச்சி. | தேங்காய் | 12/03 முதல் முதற்கட்ட உற்பத்தி துவங்கப்பட்டுவிட்டது. |
| 2. | திரு. ஏ. குமார், தென்னரசுபார்ம், ஆழியார் நகர், பொள்ளாச்சி. | கயிறுகள் மற்றும் முருக்குக் கயிறு தயாரித்தல் | 11/03-இல் கடன் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. வரைபடம் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

இருப்பினும், தகுதியுள்ள விண்ணப்பதாரர் எவரேனும் வால்பாறை தொகுதி, சேத்துமடையில் இருந்து புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் தொழில் துவங்க முன்வரும் பட்சத்தில் அவர்களுக்குத் தக்க ஆலோசனை வழங்கி அவர்களுக்கு தொழிற்சாலை துவங்க அனைத்து உதவிகளும் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், கோவை மூலம் செய்யப்படும். புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் வேளாண் சார் தொழிலுக்கு விண்ணப்பிக்கும் தொழில்

முனைவோர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

(1) மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் தொழில்களுக்கு இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டில் 15 சதவீதம், அதிகபட்சம் ரூ.15.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

(2) குறைந்த அழுத்த மின்மானியம், உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இதில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து செலுத்தப்பட்ட மின் கட்டணத்திலிருந்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 10 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

(3) தொழிற்சாலைகளில் நிறுவப்படும் மின்னாக்கியின் மதிப்பில் 15 சதவீதம், அதிகபட்சம் ரூ.5 இலட்சம் மின்னாக்கி மானியமாக வழங்கப்படும்.

(4) 50 சதவீதத்திற்கு மேல் மகளிரைப் பணியில் அமர்த்தும் தொழில்களுக்கு கூடுதல் மானியமாக நிலை முதலீட்டில் 5 சதவீதம் அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

33—

## சுயதொழில் செய்ய கடனுதவி

**வினா எண் 40356—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியில் உள்ள படித்த இளைஞர்கள் சுயதொழில் செய்திட கடன் பெறுவதற்கு உதவும் வகையில் நடவடிக்கை எடுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில் (1) பண்ருட்டி, (2) அண்ணா கிராமம், (3) குறிஞ்சிப்பாடி ஆகிய ஒன்றியங்கள் உள்ளன. பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் பண்ருட்டி தொகுதிக்கான நிர்ணயிக்கப்பட்ட மொத்த இலக்கு 106 நபர்கள். அதில் 110 நபர்களுக்கு, ரூ.40.45 இலட்சத்திற்கு இலக்கிடுக்கும் அதிகமாகவே கடன் வழங்க வங்கியாளர்கள் ஒப்பளிப்பு அனுமதி அளித்துள்ளனர். மேலும், 2004-2005 ஆம் ஆண்டிற்கும் அதே இலக்கிடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தொழில் மையங்களின்மூலம் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு மத்திய அரசின் பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கியின் மூலம் கடன்பெற்று சுயதொழில் துவங்க இத்துறை உதவி செய்கிறது.

இத்திட்டத்தின்கீழ் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18-35 வயதுக்குட்பட்ட குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.40,000/-க்கு மிகாமலுள்ள, எல்லா இளைஞர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள். ஆதிதிராவிடர், பழங்குடியினர், முன்னாள் படைவீரர், ஊனமுற்றோர் மற்றும் பெண்களுக்கு வயது வரம்பு 18-45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பங்கள் மாவட்டத் தொழில் மையத்தால் வங்கி கடன் வழங்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. வங்கிகள் விண்ணப்பதாரரின் தகுதிகளை ஆய்வு செய்து, தொழிலின் இலாபத் தன்மையினை உணர்ந்து அதன் அடிப்படையில் கடன் வழங்குகிறது.

எனவே, மேற்கூறிய தகுதிகளைக் கொண்ட படித்த இளைஞர்கள், பண்ருட்டி தொகுதியில் வசிப்பவர்கள் தொழில் துவங்க முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வங்கி மூலம் கடனுக்கு பரிந்துரை செய்து, தொழிற்சாலை துவக்குவதற்கு வேண்டிய உதவிகள் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், கடலூர் மூலம் செய்து தரப்படும்.

[2004 நவம்பர் 22

34—

### பனை பொருள்கள் தயாரிக்க பயிற்சி

**வினா எண் 47460—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை பெண்களுக்கு பனை பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம், நாமக்கல் மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு விற்பனைச் சம்மேளனத்தின்கீழ் இயங்கும் சங்ககிரி தூரிகை செய்யும் பயிற்சி நிலையத்தில் மொத்தம் 7 பெண் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பயிற்சிக்கான செலவினங்கள் யாவும் மாவட்ட சம்மேளனத்தால் செலவிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் நிதியாண்டில் எவ்வித நிதியும் அரசால் ஒதுக்கப்படவில்லை.

35—

### தேனீ வளர்ப்புத் தொழில்

**வினா எண் 50504—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்புத் தொழில்மூலம் பழங்குடியின குடும்பத்தினர் பயனடையும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

36—

### மின்னணு தொழிற்பேட்டைகள் நிறுவும் திட்டம்

**வினா எண் 51136—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகள் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

37—

### குடிசைத் தொழில்

**வினா எண் 59220—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெழுகுவர்த்தி உற்பத்தியை பெண்கள் குடிசைத் தொழிலாக நடத்த அரசு உதவ முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மெழுகுவர்த்தி உற்பத்தியை பெண்கள் குடிசைத் தொழிலாக நடத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**38—**

### ஆய்வக நுட்பனர் பயிற்சி

**வினா எண் 36443—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழிற்பயிற்சி திட்டத்தின்கீழ் ஆய்வக நுட்பனர் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) பயிற்சியின்போது பயிற்சியாளருக்கு, அரசு அளித்த மானியத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் ஆய்வக நுட்பனர் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டோர் 16 பேர். இவர்களில் மூவர் ஆண்கள் மற்றும் பதிமூன்று பேர் பெண்கள்.

(ஆ) 2002-2003 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் ஆய்வக நுட்பனர் பயிற்சிக்கு வழங்கப்பட்ட மாத உதவித் தொகையின் அளவு ஒரு பயிற்சியாளருக்கு ரூ.400/- ஆகும்.





**39—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 38518—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சியிலுள்ள பூவலப்பருத்தி ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கம்பாலப்பட்டி ஊராட்சியிலுள்ள பூவலப்பருத்தி கிராமத்தில் பழைய நத்தத்தில் சுமார் 20 மற்றும் நிலம் கையகப்படுத்திய ஆதிதிராவிட நிலத்தில் 40, ஆக மொத்தம் 60 குடும்பங்கள் உள்ளன. வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்கள் நான்கு பேர். வேறு நபர்களுக்கு பட்டா வழங்கிய இடத்தில் அவர்கள் குடியில்லாததால் மேற்படி நான்கு நபர்களும் இவ்விடத்தில் குடியிருந்து வருகின்றனர். எனவே, ஏற்கெனவே வழங்கப்பட்ட பட்டாக்களை இரத்து செய்து பட்டா இல்லாத மேற்படி நான்கு நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**40—**

### இலவச நோட்டுப் புத்தகம் வழங்குதல்

**வினா எண் 47323—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள சோலையார் டேம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகம் அரசு வழங்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள சோலையார் டேம் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு தேவையான பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

41—

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 50377—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, தென்சித்தூரிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள தென்சித்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள கிராம நத்தத்தில் ஆதிதிராவிடர்கள் ஒருவரும் வசிக்கவில்லை. தோட்டங்களில் சுமார் 15 ஆதிதிராவிட குடும்பங்கள் மட்டும் வசித்து வருகின்றனர். அவர்கள் வீட்டுமனைப் பட்டா கோரிய விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லை.



42—

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 51058—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி, வால்பாறை பிரதான சாலை, வேடசந்தூர் பகுதியிலுள்ள ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி மற்றும் வேடசந்தூர் பகுதியிலுள்ள ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு அங்கலகுறிச்சி கிராமம் க.ச.104/3 சாலையில் 1.85.0 எக்டேர் மற்றும் க.ச.49/1ஏ, 99/3ஏ மற்றும் 100 நெ. ஆகிய சாலைகளில் 1.56.0 எக்டேர் நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

43—

### உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 52428—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள மாவட்ட அரசு இசைப் பள்ளி ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) தற்போது வழங்கப்படுகிறது.

**44—**

**குளம் ஏற்படுத்தித் தருதல்**

**வினா எண் 56016—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, பெருமங்கலத்தில் ஆதிதிராவிடர்கள் குளிப்பதற்கு குளம் இல்லாததால், நிலம் ஆர்ஜிதம் செய்து குளம் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சியில் ஆதிதிராவிடர்கள் குளிப்பதற்குரிய குளம் வெட்டுவதற்கு ஒன்றியத்தின்மூலம் நிலம் ஆர்ஜிதம் செய்து புதிய குளங்கள் வெட்டுவதற்கு திட்டம் ஏதுமில்லை. எனவே, குளம் வெட்டுவதற்கான இடத்தினை பொது மக்கள் இனாமாக பெற்றுத்தந்தால் புதிய குளம் வெட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**45—**

**மானிய விலையில் வேளாண் கருவிகள்**

**வினா எண் 42948—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட விதைகள் (இனம் வாரியாக) எவ்வளவு?

(ஆ) வேளாண் கருவிகள் மானிய விலையில் எந்த நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து விநியோகிக்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட விதைகள் (இனம் வாரியாக) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

விதை விநியோகம் (மெ.டன்)

| வ.எண் | பயிர் | மாநிலத் திட்டம் | மத்திய/மாநில திட்டம் மானியத்தில் வழங்கப்பட்ட விதைகளின் அளவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | நெல் | 25,483 | 6223.0 |
| 2. | சிறுதானியம் | 363 | 296.0 |
| 3. | பயறு | 1,145 | - |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 4,269 | 2277 |
| 5. | பருத்தி விதைகள் | 125 | 84 |

(ஆ) மத்திய, மாநில அரசுத் திட்டமான எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின்கீழ் வேளாண் கருவிகள் மானியத்துடன் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகிறது (மற்றும்) வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மத்திய அரசின் மானியத் திட்டமான வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ் டிராக்டர், பவர் டில்லர்கள் மற்றும் பவர் கிரஷ்ஷர்கள் விவசாயிகளுக்கு அவர்களது விருப்பத்தின் பேரில் மானிய விலையில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்து வழங்கப்படுகிறது.

[2004 நவம்பர் 22

**டிராக்டர்:**

1. மெசர்ஸ் டிராக்டர் & பார்ம் எக்யூப்மெண்ட் லிமிடெட்., 35, நுங்கம்பாக்கம் ஹை ரோடு, த.பெ.எண் 3302, சென்னை-600 035

2. மெசர்ஸ் வி. எல். டி. டில்லர், டிராக்டர்ஸ் லிமிடெட்., த. பெ. எண் 4801 ஒயிட் ஃபீல்டு ரோடு, மகாதேவபுரம் போஸ்ட், பெங்களூர்-560 048.

3. மெசர்ஸ் டிராக்டர்ஸ், திருவொற்றியூர் ஹை ரோடு, திருவொற்றியூர், சென்னை-19.

4. மெசர்ஸ் மஹிந்திரா & மஹிந்திரா லிட், பாரத் இன்சூரன்ஸ் பில்டிங், 129, அண்ணா சாலை, சென்னை-2.

**பவர் டில்லர்:**

1. மெசர்ஸ் பெங்கால் டூல்ஸ் லிமிடெட், அக்ரோ டிவிசன், 105-மோடா சேம்பர்ஸ், 9/1 ஹம்மிங் ஹாம் ரோடு, பெங்களூர்-560 052.

2. மெசர்ஸ் கேரளா அக்ரோ மெஷினரி கார்ப்பரேஷன் லிட்., அதானி 683 585 எர்ணாகுளம் மாவட்டம், கேரளா.

3. மெசர்ஸ் வி.எல்.டி. டில்லர் டிராக்டர்ஸ் லிமிடெட்., த.பெ. எண் 4801, ஒயிட் ஃபீல்டு ரோடு, மகாதேவபுரம் போஸ்ட், பெங்களூர்-560 048.

4. மெசர்ஸ் கசானா அக்ரிகல்சுரல் எக்யூப்மெண்ட் லிமிடெட்., 8/2, பவானி டட்டா லேன், கொல்கத்தா 700 073.

**பவர் திரஷ்ஷர்:**

1. மெசர்ஸ் கோவை இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 28 அய்யர் ஹாஸ்பிடல் ரோடு, கண்ணபிரான் மில்ஸ் அருகில், கோயம்புத்தூர்-641 028.

**46—**

## சாலை மேம்பாடு செய்தல்

**வினா எண் 52139—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி, கண்ணுக்கினியார்கோவிலிலிருந்து வட்டாரம், அகர வட்டாரம் வழியாக நல்ல் விநாயகபுரம் வரை செல்லும் சாலையை கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு முன்வரும்.

மேற்கண்ட சாலையை கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்ய வேண்டுமெனில் அந்தப் பகுதியில் உள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலமாக சாலை செல்லுமிடத்தில் உள்ள நில உரிமையாளரின் ஒப்புதல் கடிதத்துடன் பரிந்துரை செய்தால் 2005-2006 ஆம் ஆண்டு திட்டத்தில் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**47—**

## நெல் உற்பத்தியை ஊக்குவித்தல்

**வினா எண் 52971—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ஆழியார், சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர் ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நெல் உற்பத்தியை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி கோட்டம் சார்ந்த வால்பாறை, ஆழியார், சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர் மற்றும்

[2004 நவம்பர் 22

ஆனைமலைப் பகுதிகளில் தற்போது குறுவைப்பட்டத்தில் 2,000 எக்டேர் நெல் சாகுபடி செய்திடத் தேவையான நெல் நாற்றங்கால் தயாரிப்புப் பணி நடைபெறுகிறது. இப்பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி (System of Rice Intensification) முறை வேளாண்மைத் துறை களப் பணியாளர் மூலம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது ஒருங்கிணைந்த சிறுதானிய அபிவிருத்தித் திட்டம்மூலம் நெல் சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்கள் நுண்ணூட்டம், உயிர் உரங்கள் முதலியன வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகிக்கப்பட உள்ளன. போதுமான நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகிக்கப்பட உள்ளன. போதுமான நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உரிய தொழில் நுட்பங்களைத் தெரிவிக்க விவசாயிகள் பயிற்சிகள் நடக்கவுள்ளன. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கத் திடல்கள் அமைப்பதன்மூலம் பயிர் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் கடைபிடிக்க ஏதுவாக தெரிவிக்க, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நெல் சாகுபடித் தொழில் நுணுக்கங்களை வேளாண் துறை களப் பணியாளர் மூலம் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு நெல் உற்பத்தியினை அதிகரிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**48—**

### தார்ச் சாலையாக அமைத்தல்

**வினா எண் 56507அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கீழ்மாத்தூர் ஊராட்சி, கீழ்மாத்தூரிலிருந்து கொண்டல் வரையுள்ள சாலையை கரும்புச் சாலை திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு முன்வரும்.

மேற்படி பணியினை கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்ய வேண்டுமெனில் அப்பகுதியில் உள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலமாக நில உரிமையாளர்கள் ஒப்புதல் கடிதத்துடன் பரிந்துரை செய்தால் 2005-2006 ஆம் ஆண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்த பின்பு மேற்படி பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**49—**

### மானிய விலையில் விதை நெல்

**வினா எண் 57437—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட வேளாண் துறையின்ரால் 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004-ல் அறந்தாங்கி தொகுதியில் மானிய விலையில் வழங்கப்பட்ட விதை நெல் எத்தனை கிலோ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டில் அறந்தாங்கி தொகுதியில் மானிய விலையில் வழங்கப்பட்ட நெல் அளவு மற்றும் அதற்கு வழங்கப்பட்ட மானியம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்று நெல் விதைகள் (கிலோ) | மானியம் |
|---|---|---|
| 2001-2002 | 45,930 | ரூ. 91,860/- |
| 2002-2003 | 68,445 | ரூ.1,36,800/- |
| 2003-2004 | 67,710 | ரூ.1,35,420/- |

50—

## தென்னை மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல்

**வினா எண் 57646—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் சொட்டு நீர் பாசனம் மூலம் தென்னை மரங்களுக்கு நீர்பாய்ச்ச அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் சொட்டு நீர்ப் பாசனம் கடந்த 1993-94 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வந்தபோதிலும் 1999-2000 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளிடம் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டம் தென்னை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு அதிக அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு வால்பாறை பகுதியில் 1999-2000 முதல் கீழ்க்கண்டபடி தொகை செலவு செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டுள்ளன:-



| வருடம் | மானியம் வழங்கப்பட்ட தொகை (இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 41.00 |
| 2000-2001 | 52.25 |
| 2001-2002 | 33.95 |
| 2002-2003 | 38.12 |
| 2003-2004 | 70.21 |

நடப்பு நிதியாண்டிலும் தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2004 நவம்பர் 22

## பட்டியல் 13

1—

### கூட்டுறவு விற்பனைச் சங்கம்

**வினா எண் 22154—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் வேளாண்மை விளைபொருள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தொடங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டத்தில், பள்ளிப்பட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆர்.கே. பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு 18-7-1998-ல் பதிவு செய்யப்பட்டு 22-7-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

2—

### அரிசி வழங்கல்

**வினா எண் 32880 திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பொது விநியோகத் திட்டத்தில் ஓராண்டு முழுவதும் வழங்கப்படும் அரிசியின் அளவு எவ்வளவு?

(ஆ) நடப்பாண்டில் வழங்கப்பட வேண்டிய அரிசி கையிருப்பில் உள்ளதா?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோகத் திட்டத்தில் ஓராண்டு முழுவதும் வழங்கப்படும் அரிசியின் அளவு 24.60 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். மாதம் ஒன்றுக்கு 2.05 இலட்சம் மெட்ரிக் டன்கள் (மற்ற நலத் திட்டங்கள் சேர்ந்தது).

(ஆ) ஆண்டு முழுவதும் வழங்கத் தேவையான அரிசி முன்பே பெறப்பட்டு கையிருப்பு வைத்துக்கொள்வதில்லை. தொடர்ந்து அரிசி மத்திய உணவுக் கழகத்தால் நுகர்வு செய்யப்பட்டு அளிக்கப்படுகிறது. ஒரு மாதத் தேவை தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், மேலும் ஒரு மாதத் தேவை தமிழ்நாட்டில் மட்டும் இந்திய உணவுக் கழகக் கையிருப்பிலும் உள்ளது. கையிருப்பு அளவு அதற்கென அமைக்கப்பட்டதொரு வல்லுநர் குழுவின் அறிவுரைப்படி நாட்டில் பல பகுதிகளிலும் இந்திய உணவுக் கழகத்தால் சேமிக்கப்பட்டுள்ளது.

3—

### நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 51957—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பெருமங்களம், திருவாலி, கடவாசல் ஆகிய ஊராட்சிகளில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சம்பா 2004 பருவத்தில் திருவாலி, கடவாசல் ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல்

[2004 நவம்பர் 22

கொள்முதல் செய்யப்பட்டு வருவதாலும் மற்றும் அரசு ஆணையின்படி பெருமங்களம் கிராமத்தில் கொள்முதல் மாவட்ட ஆட்சியரால் தேவையின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படாததாலும் திறக்கப்படவில்லை.

4—

**நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 52837—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி மற்றும் திருவாலியில் இயங்கி வரும் நேரடி கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு மற்றும் திருவாலி கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

**நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 53933—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சைப் பெருமாநல்லூரில் மற்றும் வடரங்கம் ஊராட்சியில் திருமைலாடி புத்தூர், பழையபாளையம் ஊராட்சி, அரசூர் ஊராட்சி, கடவாசல் ஊராட்சி, ஆலங்காடு ஊராட்சி, எடமணல் ஊராட்சி ஆகிய இடங்களில் இயங்கிவரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், பச்சைப்பெருமாநல்லூர் மற்றும் வடரங்கம் ஊராட்சியில் திருமைலாடிபுத்தூர், பழையபாளையம் ஊராட்சி, அரசூர் ஊராட்சி, கடவாசல் ஊராட்சி, ஆலங்காடு ஊராட்சி, எடமணல் ஊராட்சி ஆகிய இடங்களில் இயங்கிவரும் நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

6—

**கோயிலைப் புதிதாகக் கட்டுதல்**

**வினா எண் 57064— திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி, விளக்குமுக்கு தெருவிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி கோயிலைப் புதிதாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி, விளக்குமுக்கு தெருவிலுள்ள அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்

[2004 நவம்பர் 22

துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாலும், மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையிலும், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

7—

## அனாதை இல்லங்கள் அமைத்தல்

**வினா எண் 16283— செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் முதியோர், அனாதை, அன்பு இல்லங்களை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் முதியோர் இல்லம் மற்றும் அனாதை அன்பு இல்லங்களை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2004 நவம்பர் 22]

8—

## முதியோர் காப்பகம் அமைத்தல்

**வினா எண் 23505—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகரத்தில் முதியோர் காப்பகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை நகரத்தில் முதியோர் காப்பகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. தகுதி வாய்ந்த தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் முதியோர் இல்லம் அமைக்க முன்வந்தால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

9—

## சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 41960—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டிலுள்ள மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) இந்த மையத்திற்கு இவ்வாண்டு அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையத்திற்கு சுற்றுச் சுவர் இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

[2004 நவம்பர் 22

(ஆ) செங்கற்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டுக்கு அரசு நிதி ஒதுக்கீடு மொத்தத்தில் ரூ.35,93,000.00. ஆனால் சுற்றுச் சுவருக்காக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. இம்மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கும் முன்மொழிவுகள் 2004-2005 நிதியாண்டில் அரசால் ஆய்வு செய்யப்படும்.

**10—**

**அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி**

**வினா எண் 50637—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி, வள்ளுவக்குடி, வைத்தீஸ்வரன்கோயில் ஆகிய இடங்களில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி, வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய இடங்களில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி, முழு சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. செம்மங்குடியில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி மேற்படி திட்டத்தின்கீழ் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**11—**

**அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி**

**வினா எண் 50648— திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, வானகிரி குப்பம் மற்றும் காவேரி (பூம்)பட்டினத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதி, காவேரி(பூம்)பட்டினத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி முழு சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வானகிரி குப்பம் அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை கட்ட மேற்படி திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியரால் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**12—**

**அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி**

**வினா எண் 51231—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு, மணி கிராமம் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு, மணி கிராமம் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி முழு சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 22

13—

**அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி**

**வினா எண் 51243—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி மற்றும் கீழசட்டநாதபுரம் ஊராட்சிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி மற்றும் கீழசட்டநாதபுரத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய முழு சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

14—

**அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி**

**வினா எண் 51252—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழசட்டநாதபுரம், விளைந்திட சமுத்திரம், கன்னியாகுடி, தெற்கிருப்பு மற்றும் மங்கைமடம் முதலிய இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதி, விளைந்திட சமுத்திரத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி, முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களான சட்டநாதபுரம், கன்னியாகுடி, தெற்கிருப்பு மற்றும் மங்கைமடம் ஆகிய இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி மேற்படி திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15—

**அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி**

**வினா எண் 51263—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள திருவெண்காடு, சின்னப்பெருந்தோட்டம் மற்றும் கோணயாம்பட்டினம் முதலிய இடங்களில் இயங்கும் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியிலுள்ள சின்னப்பெருந்தோட்டத்தில் முழு சுகாதார இயக்கத்தின்கீழ், அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது. திருவெண்காடு மற்றும் கோணயாம்பட்டினத்தில் மேற்படி திட்டத்தின்கீழ் கழிப்பறை கட்டப்பட உள்ளது.

16—

## அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 51862—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், நாங்கூர், ராதாநல்லூர், மேல்நாங்கூர், புதுத்துறை, திருநகரி, செம்மங்குடி, விளந்திர சமுத்திரம் ஊராட்சி, சேந்தங்குடி, சட்டநாதபுரம், கோணயாம்பட்டினம், தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம், திருவாலி, கீழசட்டநாதபுரம், திருவெண்காடு, சின்னப் பெருந்தோட்டம், பல்லவனீஸ்வரம், தில்லைவிடங்கன், திட்டை எடக்குடி வடபாதி, புங்கனூர், பெருமங்களம், ஆதமங்கலம், நிம்மேலி, நெய்தவாயல், மணிக்கிராமம், காரைமேடு ஊராட்சி, தெல்லைக்குடி, அத்தியூர் ஊராட்சி, பட்டவளாகம், கதிராமங்கலம், தெற்கிருப்பு, அக்னி, கன்னியாக்குடி, திருப்புவாகூர், கொண்டல், தொழுதூர், வள்ளுவக்குடி, காத்திருப்பு, மருதங்குடி, செம்பதனிருப்பு, வாணகிரி, வாணகிரிகுப்பம் ஆகிய இடங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், நாங்கூர், ராதாநல்லூர், மேல்நாங்கூர், புதுத்துறை, திருநகரி, செம்மங்குடி, விளந்திர சமுத்திரம் ஊராட்சி, சட்டநாதபுரம், கோணயாம்பட்டினம், தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம், திருவாலி, கீழசட்டநாதபுரம், திருவெண்காடு, சின்னப் பெருந்தோட்டம், பல்லவனீஸ்வரம், தில்லைவிடங்கன், திட்டை எடக்குடி வடபாதி, புங்கனூர், பெருமங்களம், நிம்மேலி, நெய்தவாயல், மணிக்கிராமம், காரைமேடு ஊராட்சி, அத்தியூர் ஊராட்சி, கதிராமங்கலம், தெற்கிருப்பு, அக்னி, கன்னியாக்குடி, திருப்புவாகூர், கொண்டல், தொழுதூர், வள்ளுவக்குடி, காத்திருப்பு, மருதங்குடி, செம்பதனிருப்பு, வாணகிரி, வாணகிரிகுப்பம் ஆகிய இடங்களில் அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.



(ஆ) மேலும், சேந்தங்குடி, ஆதமங்கலம், தெல்லைக்குடி, பட்டவளாகம் ஆகிய இடங்களில் மையங்கள் இல்லை. அங்கு பிரதம மந்திரி கிராம யோசனா (PMGY) திட்டத்தின்கீழ் இணை உணவு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

17—

## சித்த மருத்துவர்கள் நியமித்தல்

**வினா எண் 24918—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்தா மருத்துவத்தை விரிவுபடுத்த சித்த மருத்துவர்களைத் தேர்வு செய்து, அரசு அதிக அளவில் சித்த மருத்துவர்களை மருத்துவமனைகளில் நியமிக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

2003 ஆம் ஆண்டில் புதியதாக அரசால் 86 உதவி சித்த மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். வருங்காலத்தில் தேவைக்கேற்ப சித்த மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

18—

## பராமரிப்புப் பணிகள்

**வினா எண் 25412—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, மேல்பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான காலனி குடியிருப்புகளில் 5 வீடுகள் பராமரிப்பு இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

[2004 நவம்பர் 22

(ஆ) ஆம் எனில், வீடுகளை உபயோகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் நிதி ஆண்டில் கட்டடப் பராமரிப்புக்கான காப்பு நிதி ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் வால்பாறை ஆரம்ப சுகாதார நிலைய 5 குடியிருப்புகளில் 3 குடியிருப்புகளுக்கு முறையாக ரூ.67,000/-, ரூ.67,000/- என ஒதுக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 2 குடியிருப்புகளில் ஒரு குடியிருப்புக் கட்டடம் பயனற்றதாகி மிகவும் பழுதடைந்து பழுதுபார்ப்புப் பணிகள் செய்ய இயலாத நிலையில் உள்ளது என பொதுப் பணித் துறையினர் தெரிவித்துள்ளனர். மீதமுள்ள மற்றொரு குடியிருப்பினை இந்நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பழுதுகளை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**19—**

### சித்தா பிரிவு தொடங்கும் திட்டம்

**வினா எண் 28311—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவு தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனையில் தற்போது சித்தா மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 22]

**20—**

### இந்திய மருத்துவம்

**வினா எண் 31847—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசு மருத்துவமனை மூலம் இந்திய மருத்துவம் வகையில் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மூலம் இந்திய மருத்துவ வகையில் 2003 ஆம் ஆண்டில் சித்த மருத்துவத்தில் வெளி நோயாளிகள் 4,65,710 பேர்களும், உள் நோயாளிகள் 7,024 பேர்களும், ஓமியோபதி மருத்துவத்தில் வெளி நோயாளிகள் 48,290 பேர்களும் உள் நோயாளிகள் 33 பேர்களும் பயன்பெற்றுள்ளனர்.

**21—**

### அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 42435—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி ஒன்றியம், டி. புத்தூரில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நடப்பாண்டில் அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியத்தில் முசிறி வட்ட மருத்துவமனை 58 படுக்கை வசதிகளுடன் செயல்படுவதால் இதே

ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள டி. புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மருத்துவமனையாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

## மருந்துப் பொருட்கள்

**வினா எண் 43478—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள குண்ணவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) படுக்கைகள், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள குண்ணவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பயனடையும் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போது கூடுதல் கட்டடம் மற்றும் படுக்கை வசதிகள் செய்ய அவசியமில்லை. தற்போது அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

23—

## மருத்துவமனைக்கு ஸ்கேன் கருவி

**வினா எண் 59046—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனை, வட்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டதால், அதற்கு ஸ்கேன் கருவி வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு வட்ட மருத்துவமனைக்கு ஸ்கேன் கருவி வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஸ்கேன் கருவி ஒன்று ரூ. 1 கோடிக்கு மேல் விலை உயர்ந்த கருவியாக இருப்பதால், அருகில் உள்ள சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இவ்வசதி உள்ளதால் தேவைப்படும் நோயாளிகள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

24—

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 59131—திரு. அ-இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரியூர் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்கும் அரியூர் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, இந்த துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டித் தரும் கருத்துரு தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

25—

**மருத்துவப் பணியாளர்கள்**

**வினா எண் 60799—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மற்றும் தலைமை மருத்துவமனைகளில் சித்தா மருத்துவப் பிரிவுக்கு போதுமான மருத்துவப் பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) நேரடி நியமனங்கள் அனைத்திற்கும் அரசின் தடை ஆணை நடப்பில் உள்ளது.

(ஆ) நேரடி நியமனங்கள் அனைத்திற்கும் அரசின் தடை ஆணை நடப்பில் உள்ளதால், கடைநிலை ஊழியர்களின் பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அரசாணை எண் 103, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-5-2003 மற்றும் அரசாணை எண் 106, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-5-2003-ல் ஆணைகள் இடப்பட்டுள்ளன. அதன்படி ஒப்பந்த அடிப்படையில் ஆட்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

26—

**சித்த மருத்துவப் பிரிவுக்கு கட்டட வசதி**

**வினா எண் 60884—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவில், அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவுக்கு தனியாகக் கட்டட வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவில், அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவுக்கு தனியாகக் கட்டட வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

27—

**சித்த மருத்துவப் பிரிவுக்குக் கட்டடம்**

**வினா எண் 60889—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி, அறிஞர் அண்ணா மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவுக்கு கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி, அறிஞர் அண்ணா மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவுக்கு கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

28—

**கடன் உதவி**

**வினா எண் 36101—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டு பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்னையில் எத்தனை பேருக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டு பாரத பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்னை மாவட்டத்தில் தொழில் துவங்க கடன் பெற்றவர் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| தொழில் | | சேவை | | வியாபாரம் | |
|---|---|---|---|---|---|
| கடன் பெற்றவர் | தொகை ரூ. பை. | கடன் பெற்றவர் | தொகை ரூ. பை. | கடன் பெற்றவர் | தொகை ரூ. பை. |
| 182 | 1,13,13,000 | 38.5 | 3,32,10,000 | 339 | 2,67,40,000 |

ஆக மொத்தம் 2002-2003 ஆம் ஆண்டு பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்னையில் கடன் உதவி பெற்றவர் எண்ணிக்கை 906. கடன் உதவித் தொகை ரூ.7,12,63,000 ஆகும்.

**29—**

## கதர்ப் பொருட்கள் ஏற்றுமதி

**வினா எண் 49204—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கதர்த் துணி மற்றும் பல்வேறு கதர் வாரிய தயாரிப்புப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கதர்ப் பொருட்களின் மதிப்பு எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இல்லை. இருப்பினும் கதர் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் சோப்பு வகைகளில் ரூ.86,400/- மதிப்புள்ள சோப்பு வகைகள் மட்டும் 2000 ஆம் ஆண்டில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் கதர்த் துணிகளோ மற்றும் கதர் வாரிய தயாரிப்புப் பொருட்களோ வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை.

**30—**

## காகிதத் தொழில் அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 50400—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கதர் நிறுவனங்கள், சர்வோதயம், தனி வாரியமாக இயங்கி வரும் நிறுவனங்கள் மூலம் கைமுறைக் காகிதத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கைமுறைக் காகித உற்பத்தி அலகுகள் ஏதும் தற்போது செயல்படவில்லை. இத்தொழிலுக்கென, கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதியதாக் அலகுகள் ஏதும் துவங்கும் திட்டம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திடம் தற்போது இல்லை.

சர்வோதய சங்கங்கள், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவால் சான்றளிக்கப்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களாகும். இந்நிறுவனங்களிடமிருந்து கைமுறைக் காகிதத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஏதும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கவனத்திற்கு வரப்பெறவில்லை.

31—

## கிரியா ஊக்கித் திட்டம்

**வினா எண் 51331—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் பட்டுப்புழு உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2004-2005 ஆம் நிதியாண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

32—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 59227—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை தொகுதி, சோலையார் அணை பகுதியில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை வட்டத்தில் சோலையார் அணை கட்டுவதற்கு பொதுப் பணித் துறைக்கு கையகப்படுத்திய நிலத்தில்





தேவையில்லாமல் இருக்கும் உபரி நிலம் என வகைப்பாடு கொண்ட நிலங்கள் வருவாய்த் துறைக்கு திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் குடியிருந்து வரும் ஆதிதிராவிட மக்கள் மற்றும் பிற இன மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

33—

## லாரி போக்குவரத்து

**வினா எண் 35988—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் கன்டெய்னர் லாரிகள் பகலில் செல்ல தடை செய்யப்பட்டும் மீண்டும் கன்டெய்னர் லாரி போக்குவரத்து நடைபெறுவது தடை செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது பகல் நேரங்களில் கன்டெய்னர் லாரிகள் சென்னை துறைமுகத்திற்குச் செல்ல மூலக்கடை வழியாக தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையை வந்தடைந்து, மணலி எண்ணூர் நெடுஞ்சாலை, வைத்தியநாதன் மேம்பாலம், திருவொற்றியூர் சாலை வழியாக டோல்கேட் சந்திப்பு, சூரியநாராயண சாலை வழியாக துறைமுகம் சென்றடைகிறது. வேறு மாற்று வழி இல்லாத காரணத்தால் மேற்கண்ட வழிகளில்தான் கன்டெய்னர் லாரிகள், துறைமுகம் செல்கிறது. தற்போது மூலக்கடை பைபாஸ் சந்திப்பில் 200 அடி சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை மூலக்கடை பைபாஸ் சந்திப்பிலிருந்து பொன்னேரி நெடுஞ்சாலையில் முடிவடைகிறது. மேலும் பொன்னேரி நெடுஞ்சாலையிலிருந்து எர்ணாவூர் மேம்பாலம் வழியாக, துறைமுகத்திற்குச் செல்ல சாலை வசதி உள்ளது. ஆகையினால், சென்னை மாநகரப் போக்குவரத்தும், செங்கை கிழக்கு

மாவட்ட போக்குவரத்தும் இணைந்து கன்டெய்னர் லாரிகளை மூலக்கடை பைபாஸிலிருந்து 200 அடிச்சாலை வழியாக திருப்பிவிட்டு, இவ்வாகனங்களை செங்கை கிழக்கு மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளைக் கொண்டு சாத்தாங்காடு யார்டில் நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் அணி அணியாக (25 வாகனங்கள்) லாரிகளைத் துறைமுகத்திற்கு அனுப்பிவைக்க காவல் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட வழிகளை முறைப்படுத்தி திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாக கன்டெய்னர் லாரிகள் போக்குவரத்தை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

34—

## சிற்றுந்துகளுக்கு வழித்தடங்கள்

**வினா எண் 37725—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சிற்றுந்துகளுக்கு ஒதுக்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் சிற்றுந்து விடப்படாத வழித்தடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிற்றுந்துகள் இயக்கத்துக்கென எந்த வழித்தடங்களும் ஒதுக்கப்படுவது இல்லை. மாறாக, சிற்றுந்து இயக்க அனுமதிச் சீட்டு கேட்டு விண்ணப்பிக்கப்படும் இனங்களில் சிற்றுந்து இயக்கப் போதுமான சாலை வசதியுள்ள தடத்தில் 20 கி.மீ. தூரம் வரை மட்டும் (16 கி.மீ. பேருந்து செல்லா பகுதி + 4 கி.மீ. ஏற்கெனவே பேருந்து செல்லும் பகுதி) சிற்றுந்து இயக்க அனுமதிகள் வழங்கப்படுகின்றன. எடப்பாடி தொகுதியில் இதுவரை 14 மினி பேருந்துகளுக்கு அனுமதி சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது இயங்குபவை 12.



35—

## இரசாயன உரங்கள்

**வினா எண் 53851—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் இரசாயன உரங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மைய அரசு 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் கட்டுப்பாடு நீக்கப்பட்ட மற்றும் கட்டுப்பாடு உரமான யூரியா போன்ற உரங்களுக்கு உரச் சலுகை வழங்கி வருகிறது. உரச் சலுகையினை நேரடியாகவே உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதால் இச்சலுகையினால் சிறு குறு விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும் பயன்பெறுகின்றனர். வெளிச் சந்தையில் தடையில்லாமல் கிடைக்கும் இவ்வுரங்கள் சலுகை விலை உரங்களாகும். கூட்டுறவுத் துறை மூலமும் இந்தச் சலுகை உரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் நிறுவனங்களுக்கு மைய அரசு வழங்கும் சலுகை விலை விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

| உரத்தின் பெயர் (1) | அடிப்படை விலை (டன்னுக்கு ரூபாயில்) (2) | கடைசி விலை 1-4-03 முதல் 30-6-03 (டன்னுக்கு ரூ.) (3) | கடைசி விலை 1-7-03 முதல் 30-9-03 (டன்னுக்கு ரூ.) (4) | கடைசி விலை 1-10-03 முதல் 31-12-03 (டன்னுக்கு ரூ.) (5) | அடிப்படை விலை 1-1-04 முதல் (டன்னுக்கு ரூ.) (6) |
|---|---|---|---|---|---|
| டிஏபி (Indigenous) | 2120 | 2817 | 2987 | 3234 | 2120 |
| Gr-I டிஏபி (Indigenous) | 2635 | 2817 | 2987 | 3234 | 2635 |

[2004 நவம்பர் 22

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Gr-II டிஏபி (Imported) | 1793 | 2346 | 2120 | 2061 | 1793 |
| எம்.ஓ.பி. | 2825 | 2964 | 2828 | 2763 | 2650 |
| எஸ்.எஸ்.பி. | 650 | 650 | 650 | 650 | 650 |
| கலப்பு உரங்கள் Gr-I | | | | | |
| 16:20:0 | 638 | 892 | 1013 | 1167 | 638 |
| 20:20:0 | 838 | 1168 | 1323 | 1507 | 838 |
| 20:20:0, | 838 | 1267 | 1255 | 1287 | 838 |
| 23:23:0 | 883 | 1376 | 1362 | 1399 | 883 |
| (gas) | | | | | |
| 28:28:0 | 1839 | 2540 | 2521 | 2961 | 1839 |
| 10:26:26 | 2504 | 2725 | 2732 | 2821 | 2504 |
| 12:32:16 | 2478 | 2687 | 2730 | 2855 | 2478 |
| 14:28:14 | 2000 | 2248 | 2314 | 2451 | 2000 |
| 14:35:14 | 2757 | 2989 | 3051 | 3199 | 2757 |
| 15:15:15 | 1443 | 1820 | 1776 | 1783 | 1443 |
| (gas) | | | | | |
| 17:17:17 | 1045 | 1387 | 1479 | 1616 | 1045 |
| 19:19:19 | 2082 | 2627 | 2569 | 2847 | 2082 |
| கலப்பு உரங்கள் Gr-II | | | | | |
| 16:20:0 | 1611 | 1875 | 1718 | 1906 | 1611 |
| 20:20:0 | 2055 | 2397 | 2203 | 2431 | 2055 |
| 23:23:0 | 2282 | 2676 | 2453 | 2715 | 2282 |
| 28:28:0 | 2781 | 3259 | 2988 | 3307 | 2781 |
| 10:26:26 | 3112 | 3339 | 3172 | 3283 | 3112 |
| 12:32:16 | 3208 | 3424 | 3258 | 3409 | 3208 |
| 14:28:14 | 2852 | 3108 | 2931 | 3098 | 2852 |
| 14:35:14 | 3609 | 3849 | 3668 | 3846 | 3609 |



2004 நவம்பர் 22]

**இதர உரங்கள்**

| வ. எண் | உரத்தின் பெயர் | டன் ஒன்றுக்கு ரூ. | 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | டை அம்மோனியம் பாஸ்பேட் | 9730.10 | 486.51 |
| 2 | மியூரியேட் ஆப் பொட்டாஷ் | 4633.71 | 231.69 |
| 3 | போரேடட் சூப்பர் பாஸ்பேட் பவுடர் | 3556.22 | 177.81 |
| 4 | போரேடட் சூப்பர் பாஸ்பேட் (குருணை) | 3756.28 | 187.84 |
| **கலப்பு உரங்கள்** | | | |
| 5 | 10:26:26 | 8705.66 | 435.28 |
| 6 | 12:32:16 | 8830.70 | 441.54 |
| 7 | 14:20:14 | 8643.14 | 432.16 |
| 8 | 14:35:14 | 9018.26 | 450.91 |
| 9 | 15:15:15 | 7267.70 | 363.39 |
| 10 | 16:20:0 | 7392.74 | 369.64 |
| 11 | 17:17:17 | 8434.74 | 421.74 |
| 12 | 19:19:19 | 8643.14 | 432.16 |
| 13 | 20:20:0 | 7580.30 | 379.02 |
| 14 | 23:23:0 | 8330.54 | 416.53 |
| 15 | 28:28:0 | 9455.90 | 472.80 |

12-3-2003-க்குப் பின்னர் விற்பனை விலையில் மாற்றம் இல்லை. மத்திய அரசிடமிருந்து தெரிவிக்கப்படின் அதன் அடிப்படையில் விலை மறு நிர்ணயம் செய்யப்படும்.

[2004 நவம்பர் 22

36—

## சரணாலய மேம்பாடு

**வினா எண் 47663— திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயத்தை மேம்படுத்த அரசு இதுவரையில் எவ்வளவு தொகை கொடுத்துள்ளது?

(ஆ) அது சிறப்படைய வேண்டி அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயத்தை மேம்படுத்த கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசால் பின்வருமாறு ரூ.51.40 இலட்சங்கள் கொடுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1998-1999 | .. | ரூ. 5.25 இலட்சங்கள் |
| 1999-2000 | .. | ரூ. 6.70 இலட்சங்கள் |
| 2000-2001 | .. | ரூ. 6.55 இலட்சங்கள் |
| 2001-2002 | .. | ரூ. 7.90 இலட்சங்கள் |
| 2002-2003 | .. | ரூ. 25.00 இலட்சங்கள் |
| மொத்தம் | .. | ரூ. 51.40 இலட்சங்கள் |

(ஆ) இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயத்தைப் பராமரிக்கவும், சரணாலயத்திலுள்ள வன விலங்குகளைப் பாதுகாக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளும், அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகள் அளிப்பதற்கும் 2003-2004 ஆம் நிதியாண்டில் மத்திய அரசு ரூ. 18.35 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூ. 12.80 இலட்சங்கள் நிதியை விடுவித்துள்ளது. அதற்கு அரசு ஆணை (பத்தாண்டு) எண் 65, சுற்றுச்சூழல்-வனத் துறை, நாள் 10-3-2004-ல் மாநில அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 22]

37—

## மிருகக்காட்சி சாலையை விரிவுபடுத்தல்

**வினா எண் 51357— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரம், சிதம்பரம் பூங்காவிலுள்ள மிருகக் காட்சி சாலையை விரிவுபடுத்தவும் மற்றும் கூடுதலாக சிங்கம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வ.உ.சி. பூங்கா மக்களுக்கு பொழுதுபோக்கு மற்றும் கல்வி சம்பந்தமாக பயனுள்ளதாக இருக்கிறது என்றும், வனவிலங்குகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்வதாகவும் குறிப்பிட்டு, அப்பூங்காவை விரிவுபடுத்த மத்திய உயிரியல் குழுமத்திற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய உயிரியல் குழுமத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றால், அதன் பின்னர் குழுமத்தின் உத்தரவின் பேரில் கூடுதலாக சிங்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

## சிற்பங்கள் விற்பனை

**வினா எண் 41990—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம் அரசு சிற்பக் கல்லூரியில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட சிற்பங்களின் மதிப்பு ஆண்டு வாரியாக எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம் அரசு கட்டடச் சிற்பக் கலைக் கல்லூரியில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட சிற்பங்களின் மதிப்பு ஆண்டுவாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | தயாரிக்கப்பட்ட சிற்பங்களின் மதிப்பு | விற்பனை செய்யப்பட்ட சிற்பங்களின் மதிப்பு |
|---|---|---|
| 2001-2002 | ரூ.1,52,750 | ரூ.1,09,000 |
| 2002-2003 | ரூ. 92,301 | ரூ. 27,176 |
| 2003-2004 | ரூ.1,48,915 | ரூ. 41,390 |

39—

## நூல்கள் விவரம்

**வினா எண் 42285—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் வெளியிடப்பெற்ற நூல்கள் எத்தனை? அவற்றின் விலை என்ன?

(ஆ) இதுநாள் வரை விற்பனையில் கிடைத்த தொகை எவ்வளவு?

(இ) விற்பனையாகாமல் நிலுவையிலுள்ள புத்தகங்களின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் 31-3-2004 வரை வெளியிடப்பெற்ற மொத்த நூல்கள் 483. அவற்றின் விலை விவரம் இத்துடன் பட்டியலிடப்பட்டுள்ளது.



(ஆ) 2003-2004 ஆம் ஆண்டு வரை விற்பனையில் கிடைத்த தொகை ரூ.1,43,75,165.54.

(இ) 31-3-2004 அன்று வரை விற்பனையாகாமல் நிலுவையில் உள்ள 243 தலைப்புகளில் அமைந்த புத்தகங்களின் கழிவு நீக்கிய நிகர மதிப்பு சுமார் ரூ.48,53,812.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளின் விவரங்கள்

| வ. | வெ. எண் | நூல் தலைப்பு எண் | விலை |
|---|---|---|---|
| 1 | 1 | தமிழில் விடுகதைகள் | 12.00 |
| 2 | 2 | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 5.00 |
| 3 | 3 | A Course in Modern Standard Tamil | 7.50 |
| 4 | 4 | Tamil Research Through Journals | 7.50 |
| 5 | 5 | Dr. Mu. Va. | 20.00 |
| 6 | 6 | தமிழ் இலக்கியக் கொள்கை-1 | — |
| 7 | 7 | உலகில் தமிழும் தமிழரும் | 4.00 |
| 8 | 8 | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | 12.00 |
| 9 | 9 | தமிழ் இலக்கியக் கொள்கை-2 | 10.00 |
| 10 | 10 | Dissertations on Tamilology | 10.00 |
| 11 | 11 | தமிழ் இலக்கியக் கொள்கை-3 | 8.00 |
| 12 | 12 | தமிழ் இலக்கியக் கொள்கை-4 | 10.00 |
| 13 | 13 | தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு | 15.00 |
| 14 | 14 | சின்ன மகிபன் குளுவ நாடகம் | 5.00 |
| 15 | 15 | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | 6.00 |
| 16 | 16 | தமிழ் இலக்கியக் கொள்கை-5 | 12.00 |
| 17 | 17 | Language & Grammar - Heritage of the Tamils | 22.00 |
| 18 | 18 | தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம் | 10.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 19 | 19 | திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத் தமிழ் | — |
| 20 | 20 | பணவிடு தூது | 6.00 |
| 21 | 21 | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 14.00 |
| 22 | 22 | தமிழர் ஆடைகள் | 16.00 |
| 23 | 23 | தொல். நூன் மரபு | — |
| 24 | 24 | தமிழர் கண்ட மனம் | 9.00 |
| 25 | 25 | தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 16.00 |
| 26 | 26 | கூவநூல் | 7.00 |
| 27 | 27 | தமிழக நாட்டுப்புறக் கலைகள் | 10.00 |
| 28 | 28 | Papers on Tamil Studies | 15.00 |
| 29 | 29 | பிரபந்தத் திரட்டு | 16.00 |
| 30 | 30 | Tiru Murugan | 5.00 |
| 31 | 31 | Epigraphical Evidences for Tamil Studies | 10.00 |
| 32 | 32 | மனை நூல் | 15.00 |
| 33 | 33 | தமிழர் உணர்வு | 12.00 |
| 34 | 34 | A Study of the Perunkathai | 12.00 |
| 35 | 35 | தமிழ் இலக்கியக் கொள்கை-6 | 16.00 |
| 36 | 36 | தொல். மொழி மரபு | 9.00 |
| 37 | 37 | தந்திவனப் புராணம் | 15.00 |
| 38 | 38 | தொல். மரபியல் | 10.00 |
| 39 | 39 | Tamil Writers Directory | 10.00 |
| 40 | 40 | Tamil Drama | 20.00 |
| 41 | 41 | தொல். பிறப்பியல் | 8.00 |
| 42 | 42 | Cultural Heritage of the Tamils | 25.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 43 | 43 | தமிழர் தோற்கருவிகள் | 10.00 |
| 44 | 44 | Literary Heritage of Tamils | 50.00 |
| 45 | 45 | தொல். புணரியல் | 10.00 |
| 46 | 46 | 1980-ல் தமிழ் | 45.00 |
| 47 | 47 | கருவூரார் பலதிரட்டு | 12.00 |
| 48 | 48 | சுவடியியல் பயிற்சிக் கையேடு | 6.00 |
| 49 | 49 | தொல். தொகை மரபு | 8.00 |
| 50 | 50 | தமிழ் இலக்கியக் கொள்கை-7 | 15.00 |
| 51 | 51 | தொல். கிளவியாக்கம் | 20.00 |
| 52 | 52 | கும்மிப் பாடல்கள் | 16.00 |
| 53 | 53 | பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் | 8.00 |
| 54 | 54 | தமிழும் தமிழரும் | 5.00 |
| 55 | 55 | பிரபந்த தீபிகை | 12.00 |
| 56 | 56 | கண் மருத்துவம் | 50.00 |
| 57 | 57 | தொல். உருபியல் | 8.00 |
| 58 | 58 | திவ்வியப் பிரபந்தத்தில் மனம் | 12.00 |
| 59 | 59 | தொல். உயிர் மயங்கியல் | 12.00 |
| 60 | 60 | திருமயிலை உலா | 7.00 |
| 61 | 61 | ஊஞ்சல் இலக்கியம் | 10.00 |
| 62 | 62 | மீனாட்சியம்மன் திருப்புகழ் | 10.00 |
| 63 | 63 | தமிழர் எண்ணங்கள் | 16.00 |
| 64 | 64 | Art & Architecture of Tamils (Herit.) | 25.00 |
| 65 | 65 | Philosophical Heritage of the Tamils | 22.00 |

| | | | |
|---|---|---|---|
| 66 | 66 | Folk Arts of the Tamils | 10.00 |
| 67 | 67 | தமிழர் அளவைகள் | 8.00 |
| 68 | 68 | தொல். புள்ளி மயங்கியல் | 15.00 |
| 69 | 69 | கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள் | 12.00 |
| 70 | 70 | 1981-இல் தமிழ் | 65.00 |
| 71 | 71 | இலக்கியத்தில் நிறம் | 23.00 |
| 72 | 72 | ம.பொ.சி.யின் இலக்கிய நூல்கள் | 20.00 |
| 73 | 73 | வெள்ளைக்காரன் கதை | 7.00 |
| 74 | 74 | தமிழ் இலக்கியக் கொள்கை-8 | 20.00 |
| 75 | 75 | மெய்க்கீர்த்திகள் | 20.00 |
| 76 | 76 | தொல். குற்றியலுகரப் புணரியல் | 11.00 |
| 77 | 77 | சிந்து இலக்கியம் | 8.00 |
| 78 | 78 | தொல். வேற்றுமையியல் | 14.00 |
| 79 | 79 | தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | 6.00 |
| 80 | 80 | Bibliography on Translation | 35.00 |
| 81 | 81 | தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள் | 12.00 |
| 82 | 82 | சித்திரக்கவிகள் | 25.00 |
| 83 | 83 | Historical Heritage of the Tamils | 35.00 |
| 84 | 84 | திராவிட மொழி இலக்கியங்கள் | 35.00 |
| 85 | 85 | இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15.00 |
| 86 | 86 | Tamil Text An Auto-Instructional Course | 25.00 |
| 87 | 87 | உ.வே.சா.வின் சங்க இலக்கியப் பதிப்புகள் | 10.00 |
| 88 | 88 | Siddha Medicine - Heritage of the Tamils | 45.00 |



| | | | |
|---|---|---|---|
| 89 | 89 | Siddha Medical Manuscripts in Tamil | 8.00 |
| 90 | 90 | இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள்-1 | 12.00 |
| 91 | 91 | தொல். வேற்றுமை மயங்கியல் | 12.00 |
| 92 | 92 | தொல். விளிமரபு | 6.00 |
| 93 | 93 | தமிழரின் தாயகம் | 10.00 |
| 94 | 94 | தொல். பெயரியல் | 12.00 |
| 95 | 95 | தன்வந்திரி குழந்தை வாகடம் | 14.00 |
| 96 | 96 | தொல். வினையியல் | 20.00 |
| 97 | 97 | Karaikkal Ammaiyar | 6.00 |
| 98 | 98 | தமிழ் இலக்கியக் கொள்கை-9 | 20.00 |
| 99 | 99 | வர்ம சூத்திரம் | 10.00 |
| 100 | 100 | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | 12.00 |
| 101 | 101 | தமிழர் இசை | 70.00 |
| 102 | 102 | இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள் தொகுதி-2 | 22.00 |
| 103 | 103 | இனிக்கும் இராஜநாயகம் | 50.00 |
| 104 | 104 | பாவாணரும் தனித் தமிழும் | 12.00 |
| 105 | 105 | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10.00 |
| 106 | 106 | டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | 10.00 |
| 107 | 107 | விவிலியம்-திருக்குறள்-சைவசித்தாந்தம்-<br>ஓர் ஒப்பாய்வு | 20.00 |
| 108 | 108 | செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள் | 25.00 |
| 109 | 109 | நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள் | 15.00 |
| 110 | 110 | Heritage of the Tamils - Temple Arts | 50.00 |

| | | | |
|---|---|---|---|
| 111 | 111 | மொழிபெயர்ப்பியல் | 10.00 |
| 112 | 112 | தமிழர் திருமணம் | 25.00 |
| 113 | 113 | எண்பத்திரண்டில் தமிழ் | 90.00 |
| 114 | 114 | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | 35.00 |
| 115 | 115 | Tolkappiyam Phonology & Morphology An English Translation | 25.00 |
| 116 | 116 | தமிழ் நாவல்கள் (அகர வரிசை) | 40.00 |
| 117 | 117 | அகலமும் ஆழமும் | 12.00 |
| 118 | 118 | மருந்து செய் முறைகள் | 45.00 |
| 119 | 119 | செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15.00 |
| 120 | 120 | தமிழர் கூத்துகள் | 25.00 |
| 121 | 121 | டாக்டர் உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள் | 12.00 |
| 122 | 122 | மகாமதிப் பாவலர் | 11.00 |
| 123 | 123 | Heritage of the Tamils - Education & Vocation | 50.00 |
| 124 | 124 | உலக முதன்மொழி தமிழ் | 12.00 |
| 125 | 125 | மறைமலையடிகளார் தனித் தமிழ் கொள்கை | 15.00 |
| 126 | 126 | தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-இடையியல் | 22.00 |
| 127 | 127 | தமிழ் தந்த வ.உ.சி. | 15.00 |
| 128 | 128 | உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு | 15.00 |
| 129 | 129 | வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை | 15.00 |
| 130 | 130 | வாத்திய மரபு | 20.00 |
| 131 | 131 | Tamil Verse in Translation | 40.00 |
| 132 | 132 | தமிழில் கதைப்பாடல் | 25.00 |



| | | | |
|---|---|---|---|
| 133 | 133 | மங்கலதேவி கண்ணகி கோட்டம் | 15.00 |
| 134 | 134 | தொல்காப்பியம்-உரைவளம்-சொல்லதிகாரம்-உரியியல் | 20.00 |
| 135 | 135 | சமயச் சொல்லகராதி | 35.00 |
| 136 | 136 | Thirukkural-The Daylight of the Psyche | 25.00 |
| 137 | 137 | Tamilnadu-Bengal Cultural Relation | 35.00 |
| 138 | 138 | தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு | 70.00 |
| 139 | 139 | தமிழகத்தில் ஆசிவகர்கள் | 18.00 |
| 140 | 140 | Hand Book - Tamil (An Auto Instructional Course) | 55.00 |
| 141 | 141 | Chieftains of the Sangam Age | 20.00 |
| 142 | 142 | தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-எச்சவியல் | 45.00 |
| 143 | 143 | A Tamil Reader Vol. I and Vol. II | 65.00 |
| 144 | 144 | திறனாய்வு அணுகுமுறைகள் | 45.00 |
| 145 | 145 | பண்டைத் தமிழர் தொழில்கள் | 45.00 |
| 146 | 146 | மு.வ. புதினங்களில் தமிழ் தமிழினம் | 20.00 |
| 147 | 147 | தமிழகக் கலைச் செல்வங்கள் | 50.00 |
| 148 | 148 | பாவாணர் ஆய்வு நெறி | 25.00 |
| 149 | 149 | கிறித்தவமும் தமிழகமும் | 15.00 |
| 150 | 150 | நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம்-காந்தியம் | 16.00 |
| 151 | 151 | தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும் | 25.00 |
| 152 | 152 | இதழாளர் ஆதித்தனார் | 26.00 |
| 153 | 153 | தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணையியல் | 60.00 |
| 154 | 154 | காந்தியப் பெருந்தலைவர் காமராசர் | 20.00 |
| 155 | 155 | பாரதிதாசன் | 27.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 156 | 156 | தமிழகம் இலங்கை ஊர்ப்பெயர்கள்-ஓர் ஒப்பாய்வு | 40.00 |
| 157 | 157 | இலக்கியப் பொருட் பகுப்பாய்வு | 27.00 |
| 158 | 158 | மலையாளக் கவிதை | 15.00 |
| 159 | 159 | நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | 18.00 |
| 160 | 160 | சுவடியியல் | 48.00 |
| 161 | 161 | நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை | 14.00 |
| 162 | 162 | தொல்காப்பியப் பதிப்புகள் | 27.00 |
| 163 | 163 | தமிழும் பிராகிருதமும் | 12.00 |
| 164 | 164 | இலக்கியச் சிந்தனையாளர் டி.என். சேஷாசலம் | 12.00 |
| 165 | 165 | அறிவியல் தமிழ் இன்றைய நிலை | 12.00 |
| 166 | 166 | எட்டாந் திருமுறை | 22.00 |
| 167 | 167 | தொல்காப்பியச் சிந்தனைகள் | 18.00 |
| 168 | 168 | தமிழும் குறியியலும் | 17.00 |
| 169 | 169 | படைப்போர் இலக்கியங்கள் | 22.00 |
| 170 | 170 | அழகியல் | 10.00 |
| 171 | 171 | கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் | 25.00 |
| 172 | 172 | எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம் | 18.00 |
| 173 | 173 | தனிநாயகம் அடிகளார் | 40.00 |
| 174 | 174 | தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் | 18.00 |
| 175 | 175 | வ.வே.சு. ஐயர் அரசியல் இலக்கியப் பணிகள் | 45.00 |
| 176 | 176 | கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப் பணி | 45.00 |
| 177 | 177 | தொல்காப்பியம்-பொருளதிகாரம்-களவியல் | 50.00 |
| 178 | 178 | டாக்டர் உ.வே.சா. செவ்வைச்சூடுவார் பாகவதப் பதிப்பு | 30.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 179 | 179 | தமிழெழுத்தின் வரிவடிவம் | 18.00 |
| 180 | 180 | தொல்காப்பியம்-பொருளதிகாரம்-பொருளியல் | 32.00 |
| 181 | 181 | 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் | 60.00 |
| 182 | 182 | இருபதில் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு | 20.00 |
| 183 | 183 | கனகாபிஷேக மாலை திறனாய்வு | 16.00 |
| 184 | 184 | புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம் | 20.00 |
| 185 | 185 | தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள் | 14.00 |
| 186 | 186 | வ.உ.சி.யும் தமிழும் | 18.00 |
| 187 | 187 | தமிழ் ஆய்வுக் களங்கள் | 70.00 |
| 188 | 188 | தமிழும் தெலுங்கும் | 15.00 |
| 189 | 189 | விலங்கியலும் தமிழியலும் | 10.00 |
| 190 | 190 | பெண்ணியம் | 25.00 |
| 191 | 191 | தமிழும் பிற துறைகளும் | 35.00 |
| 192 | 192 | A Comparative Study of Tamil and Japanese | 15.00 |
| 193 | 193 | காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீ.யும் | 18.00 |
| 194 | 194 | பாரெல்லாம் பரந்த தமிழர் | 25.00 |
| 195 | 195 | Selected Poems of Bharathidasan Translation: Tamil-English | 60.00 |
| 196 | 196 | Selected Poems of Bharathidasan Translation: Tamil-Malayalam | 60.00 |
| 197 | 197 | Selected Poems of Bharathidasan Translation: | |
| 198 | 198 | Selected Poems of Bharathidasan Translation: Tamil-Teleugu | 60.00 |
| 199 | 199 | உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு | 35.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 200 | 200 | சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள் | 24.00 |
| 201 | 201 | தோட்டுக்காரி கதை | 28.00 |
| 202 | 202 | குணவாகடம் | 40.00 |
| 203 | 203 | குசலவர் சுவாமி கதை | 36.00 |
| 204 | 204 | தேரையர் அந்தாதி | 33.00 |
| 205 | 205 | புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை | 27.00 |
| 206 | 206 | சிவகிரி குமர சதகம் | 39.00 |
| 207 | 207 | எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-1 | 47.00 |
| 208 | 208 | The Contributions of the Tamils to Indian Culture: Vol. I - Language & Literature | 18.00 |
| 209 | 209 | The Contributions of the Tamils to Indian Culture: Vol. II - Art & Architecture | 30.00 |
| 210 | 210 | The Contributions of the Tamils to Indian Culture: Vol. III - Socio-Cultural Aspects | 90.00 |
| 211 | 211 | The Contributions of the Tamils to Indian Culture: Vol. IV - Religion & Philosophy | 80.00 |
| 212 | 212 | தொல்காப்பியம்-பொருளதிகாரம்-களவியல் | 85.00 |
| 213 | 213 | எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2 | 30.00 |
| 214 | 214 | Mysticism of Love in Saiva Tirumurais | 50.00 |
| 215 | 215 | ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும் | 85.00 |
| 216 | 216 | தமிழ் நாடக மலர் | 60.00 |
| 217 | 217 | தமிழர் காசு இயல் | 45.00 |
| 218 | 218 | திருமுறை இலக்கியம் | 50.00 |
| 219 | 219 | அழகியல் சிந்தனைகள் | 30.00 |
| 220 | 220 | இலக்கியத்தின் நோக்கமும் பயனும் (தொகுதி-1) | 65.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 221 | 221 | இலக்கியத்தின் நோக்கமும் பயனும் (தொகுதி-2) | 60.00 |
| 222 | 222 | சென்னை 1639-க்கு முன்-பின் | 35.00 |
| 223 | 223 | பெ.நா. அப்புஸ்வாமியின் அறிவியல் கட்டுரைகள் | 75.00 |
| 224 | 224 | Collected Papers of Thaninayagam Adigal | 100.00 |
| 225 | 225 | Silver Jubilee Special Lectures | 60.00 |
| 226 | 226 | முத்தாரம்மன் கதை | 85.00 |
| 227 | 227 | சந்திரபதன் கதை | 40.00 |
| 228 | 228 | கன்னிவாடி நரசிங்க நாயக்கன் வளமடல் | 20.00 |
| 229 | 229 | கருணை அம்மன் அந்தாதி | 22.00 |
| 230 | 230 | ஒப்பிலக்கியம்: கொள்கைகளும் செயல்முறைகளும் | 15.00 |
| 231 | 231 | இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | 30.00 |
| 232 | 232 | தமிழ்க் காட்சி நெறியியல் | 46.00 |
| 233 | 233 | திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள் | 25.00 |
| 234 | 234 | விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களின் பெண்கள் | 30.00 |
| 235 | 235 | Work Book - Written Tamil (Tamil - an auto Instructional Course | 50.00 |
| 236 | 236 | Work Book Tamil Scripts | 50.00 |
| 237 | 237 | கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை - தொகுதி-1 | 85.00 |
| 238 | 238 | சித்த மருத்துவ மணிகள் | 75.00 |
| 239 | 239 | அமிர்த மதன கூத்து நாடகம் | 90.00 |
| 240 | 240 | மூலிகைக் கற்பங்கள் | 80.00 |
| 241 | 241 | சோதிடவியல் | 70.00 |
| 242 | 242 | தொல். புறத்திணையியல் தொகுதி-1 | 50.00 |
| 243 | 243 | தொல். புறத்திணையியல் தொகுதி-2 | 65.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 244 | 244 | சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |
| 245 | 245 | தொல்காப்பியம் - செய்யுளியல் பகுதி-1 | 50.00 |
| 246 | 247 | இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| 247 | 248 | தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| 248 | 249 | பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| 249 | 250 | மதங்க சூளாமணி | 40.00 |
| 250 | 251 | காத்தவராய நாடகம் | 30.00 |
| 251 | 252 | சடத் தலம் | 40.00 |
| 252 | 253 | தடிவீரன் சாமி கதை வன்னிராயன் கதை | 55.00 |
| 253 | 254 | தமிழக மகளிர் தொடக்க காலம் முதல் 6 ஆம் நூற்றாண்டு வரை | 50.00 |
| 254 | 255 | Tolkappiyam And Astadhyayi | 110.00 |
| 255 | 256 | Tamil Culture and Civilization | 60.00 |
| 256 | 257 | Landscape And Poetry | 50.00 |
| 257 | 258 | Kuruntokai | 110.00 |
| 258 | 259 | Kurinci-p-pattu-Mutollayiram | 40.00 |
| 259 | 260 | Six Long Poems From Sangam Tamil | 30.00 |
| 260 | 261 | Tamil Heroic Poems | 40.00 |
| 261 | 262 | Nala Venba | 45.00 |
| 262 | 263 | Temple Chimes | 20.00 |
| 263 | 264 | Dedication | 25.00 |
| 264 | 265 | Tani - Pacura Togai | 30.00 |
| 265 | 266 | காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| 266 | 267 | Cilappatikaram | 100.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 267 | 268 | கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| 268 | 269 | A Grammer of Contemporary Literary Tamil | 80.00 |
| 269 | 270 | தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள் குறிப்பேடு | 25.00 |
| 270 | 271 | வேதகிரியா சூடாமணி நிகண்டு | 65.00 |
| 271 | 272 | சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| 272 | 273 | கபிலர் | 70.00 |
| 273 | 274 | நாட்டிய நன்னூல் | 25.00 |
| 274 | 275 | பம்மல் சம்பந்தம் முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி-1 | 50.00 |
| 275 | 276 | பம்மல் சம்பந்தம் முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி-2 | 40.00 |
| 276 | 277 | சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| 277 | 278 | வெள்ளிவிழா மலர் | 90.00 |
| 278 | 279 | எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-3 | 30.00 |
| 279 | 280 | தொல்.பொருள். செய்யுளியல் பகுதி-2 | 50.00 |
| 280 | 281 | தொல்.பொருள். செய்யுளியல் பகுதி-3 | 60.00 |
| 281 | 282 | தொல்.பொருள். செய்யுளியல் பகுதி-4 | 42.00 |
| 282 | 283 | தொல்.பொருள். மெய்ப்பாட்டியல் | 30.00 |
| 283 | 284 | தொல்.பொருள். உவமயியல் | 30.00 |
| 284 | 285 | தமிழ்ச் சொல்லகராதி, தொகுதி-1 | 225.00 |
| 285 | 286 | தமிழ்ச் சொல்லகராதி, தொகுதி-2 | 175.00 |
| 286 | 287 | தமிழ்ச் சொல்லகராதி, தொகுதி-3 | 200.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 287 | 288 | சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும் | 65.00 |
| 288 | 289 | இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்-1 | 100.00 |
| 289 | 290 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| 290 | 291 | காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் - ஓர் ஆய்வு | 60.00 |
| 291 | 292 | வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணிகளும் | 65.00 |
| 292 | 293 | தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள் கி.மு.200—கி.பி. 1300 | 100.00 |
| 293 | 294 | நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும் | 65.00 |
| 294 | 295 | உத்தர ராமசரிதம் | 30.00 |
| 295 | 296 | தில்லைக் கோவிந்தன் | 25.00 |
| 296 | 297 | இரட்டை நாடகங்கள் | 36.00 |
| 297 | 298 | திராவிட மொழியின் மூவிடப் பெயர்கள் | 40.00 |
| 298 | 299 | பரணர் | 85.00 |
| 299 | 300 | முல்லை | 25.00 |
| 300 | 301 | யாப்பருங்கலம் | 170.00 |
| 301 | 302 | தமிழ்த் தூது | 20.00 |
| 302 | 303 | தேவநேயப் பாவாணரின் மொழியியல் வரலாற்றுக் கொள்கை | 35.00 |
| 303 | 304 | பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் பகுதி-1 | 95.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 304 | 305 | பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் பகுதி-2 | 60.00 |
| 305 | 306 | பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் பகுதி-3 | 90.00 |
| 306 | 307 | தமிழ் வள்ளல் பாண்டித்துரையார் | 25.00 |
| 307 | 308 | இராசேந்திரன் | 50.00 |
| 308 | 309 | தமிழ் நாடக மேடை முன்னோடிகள் | 40.00 |
| 309 | 310 | சூடாமணி நிகண்டு | 65.00 |
| 310 | 311 | இயற்கை மொழியாய்வு - தமிழ் | 75.00 |
| 311 | 312 | தொல்காப்பியம் இலக்கியக் கோட்பாடுகள் | 110.00 |
| 312 | 313 | சின்னணைஞ்சான் கதை | 75.00 |
| 313 | 314 | Persona in Tolkappiyam | 50.00 |
| 314 | 315 | தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆங்கில மொழிபெயர்ப்பு | 40.00 |
| 315 | 316 | சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு | 110.00 |
| 316 | 317 | நாடக மேடை நினைவுகள் | 160.00 |
| 317 | 318 | தமிழின் பா வடிவங்கள் | 35.00 |
| 318 | 319 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை தொகுதி 1 (சித்த மருத்துவம்) | 75.00 |
| 319 | 320 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை தொகுதி 2 (இலக்கியம்) | 70.00 |
| 320 | 321 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை தொகுதி 3 (மெய்யியல் மற்றும் நாட்டுப்புறவியல்) | 70.00 |
| 321 | 322 | செந்தமிழ்ச் செல்வியின் இலக்கியப் பணி | 20.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 322 | 323 | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-1 | 110.00 |
| 323 | 324 | காசி விசுவநாத சதகம் | 40.00 |
| 324 | 325 | Tamil India | 40.00 |
| 325 | 326 | Critical Studies in Kural | 30.00 |
| 326 | 327 | Studies in Tamil Prosody and Poetics | 45.00 |
| 327 | 328 | பாண்டியர் செப்பேடுகள் பத்து | 125.00 |
| 328 | 329 | பல்லவர் செப்பேடுகள் முப்பது | 250.00 |
| 329 | 330 | நன்னூல் மூலமும் விருத்தியுரையும் | 225.00 |
| 330 | 331 | புதிய அமைச்சகம் புரிந்த பணிகள் | 10.00 |
| 331 | 332 | தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள் | 22.00 |
| 332 | 333 | மன்னான் சின்னாண்டிக் கதைப் பாடல் | 18.00 |
| 333 | 334 | தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு | 19.00 |
| 334 | 335 | ஆளும் தமிழ் | 28.00 |
| 335 | 336 | பொருள் புதிது | 35.00 |
| 336 | 337 | இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| 337 | 338 | அறநூல் | 38.00 |
| 338 | 339 | பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம் | 55.00 |
| 339 | 340 | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| 340 | 341 | தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி | 30.00 |
| 341 | 342 | சொற்பிறப்பியல்-ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 342 | 343 | செந்தமிழ் அகராதி | 150.00 |
| 343 | 344 | Literary Criticism in Tamil and Sanskrit | 45.00 |
| 344 | 345 | தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| 345 | 346 | ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| 346 | 347 | On Translation | 95.00 |
| 347 | 348 | நானும் என் கவிதையும் | 40.00 |
| 348 | 349 | இந்திய விடுதலைக்கு முந்தைய இதழ்கள்-2 | 65.00 |
| 349 | 350 | தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| 350 | 351 | திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்புடன் | 100.00 |
| 351 | 352 | தமிழர் கொடிகள் | 30.00 |
| 352 | 353 | சாமிநாதப் பள்ளு | 45.00 |
| 353 | 354 | எட்டையபுரப் பள்ளு | 45.00 |
| 354 | 355 | நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| 355 | 356 | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| 356 | 357 | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| 357 | 358 | லவகுச நாடகம் | 30.00 |
| 358 | 359 | சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள் | 80.00 |
| 359 | 360 | இராமாயணம் தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| 360 | 361 | சங்ககால மன்னர்களின் காலநிலை-1 | 56.00 |
| 361 | 362 | சங்ககால மன்னர்களின் காலநிலை-2 | 64.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 362 | 363 | இ.ப.த.ம. ஆய்வுக்கோவை - 1969 தொகுதி 1 | 70.00 |
| 363 | 364 | இ.ப.த.ம. ஆய்வுக்கோவை - 1969 தொகுதி 2 | 65.00 |
| 364 | 365 | இ.ப.த.ம. ஆய்வுக்கோவை - 1970 தொகுதி 1 | 75.00 |
| 365 | 366 | இ.ப.த.ம. ஆய்வுக்கோவை - 1969 தொகுதி 2 | 70.00 |
| 366 | 367 | இ.ப.த.ம. ஆய்வுக்கோவை - 1969 தொகுதி 3 | 50.00 |
| 367 | 368 | குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| 368 | 369 | ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| 369 | 370 | தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| 370 | 371 | பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் | 80.00 |
| 371 | 372 | தமிழ் நாடகம் நேற்றும் இன்றும் | 30.00 |
| 372 | 373 | பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| 373 | 374 | தமிழர் சமூகவியல் சில பார்வைகள் | 35.00 |
| 374 | 375 | Indian Epistemology | 125.00 |
| 375 | 376 | தொல்காப்பிய ஆய்வுகள் | 20.00 |
| 376 | 377 | சங்க இலக்கிய ஆய்வுகள் | 30.00 |
| 377 | 378 | தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| 378 | 379 | தமிழ்-ஆங்கிலம்-அகராதி-பகுதி 1 | 150.00 |
| 379 | 380 | தமிழ்-ஆங்கிலம்-அகராதி-பகுதி 2 | 200.00 |
| 380 | 381 | தமிழ்-ஆங்கிலம்-அகராதி-பகுதி 3 | 225.00 |
| 381 | 382 | தமிழ்-ஆங்கிலம்-அகராதி-பகுதி 4 | 125.00 |
| 382 | 383 | நாலடியார் மூலமும் உரையும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் | 90.00 |
| 383 | 384 | Manimekalai | 20.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 384 | 385 | முத்ரா ராக்ஷஸம் | 40.00 |
| 385 | 386 | Four Long Poems from Sangam Tamil | 30.00 |
| 386 | 387 | உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையும் | 18.00 |
| 387 | 388 | Narrinai Four Hundred (English Translation) | 175.00 |
| 388 | 389 | Social Life of the Tamils | 70.00 |
| 389 | 390 | Sound Correspondences between Tamil and Japanese | 35.00 |
| 390 | 391 | Translation Theory and Application | 35.00 |
| 391 | 392 | On Translation Tirukkural | 50.00 |
| 392 | 393 | சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| 393 | 394 | அழகன் பெருமாள் கதை | 45.00 |
| 394 | 395 | தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| 395 | 396 | இந்திய விடுதலைக்குப்பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| 396 | 397 | தமிழ் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பணி | 20.00 |
| 397 | 398 | அயலகத் தமிழ்க் கலை இலக்கியச் சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| 398 | 399 | தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல் | 45.00 |
| 399 | 400 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| 400 | 401 | சுவடிச்சுடர் | 120.00 |
| 401 | 402 | தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| 402 | 403 | தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடு | 70.00 |
| 403 | 404 | எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 404 | 405 | மேலைநோக்கில் தமிழ்க் கவிதை | 100.00 |
| 405 | 406 | Tiruvasakam Tamil Text & English Translation | 175.00 |
| 406 | 407 | சதகத் திரட்டு-I | 80.00 |
| 407 | 408 | சதகத் திரட்டு-II | 55.00 |
| 408 | 409 | Tamil Literature and Indian Philosophy | 200.00 |
| 409 | 410 | பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| 410 | 411 | நானும் என் எழுத்தும் | 60.00 |
| 411 | 412 | தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| 412 | 413 | An Introduction to Religion and Philosophy Tevaram and Tivviyappirapantam | 200.00 |
| 413 | 414 | A Bunch of Essays on Tamil Literature | 30.00 |
| 414 | 415 | தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| 415 | 416 | சிறுத்தொண்டர் நாடகம் | 75.00 |
| 416 | 417 | தமிழர் கட்டிடக் கலை | 30.00 |
| 417 | 418 | தமிழக மகளிரியல் | 80.00 |
| 418 | 419 | பாவாணரும் தனித் தமிழும் | 40.00 |
| 419 | 420 | நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| 420 | 421 | கிறித்தவத் தமிழ் நடையியல் நோக்கு | 20.00 |
| 421 | 422 | இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | 35.00 |
| 422 | 423 | தமிழ் நாவல்களில் சமுதாய மாற்றம் | 20.00 |
| 423 | 424 | பழமொழி நானூறு தெலுங்கு மொழி பெயர்ப்பு | 70.00 |
| 424 | 425 | சுவடிப்பதிப்புத் திறன் தொகுதி 1 | 50.00 |
| 425 | 426 | சுவடிப்பதிப்புத் திறன் தொகுதி 2 | 45.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 426 | 427 | சங்கத் தமிழ் உறவுமுறைச் சொற்கள் | 45.00 |
| 427 | 428 | மாளவிகாக்னிமித்திரம் | 20.00 |
| 428 | 429 | கானல் வரி | 30.00 |
| 429 | 430 | Vaisnavisam in Tamil Literature between the 7th & 9th Centuries | 50.00 |
| 430 | 431 | தமிழ் மொழி, இன, இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| 431 | 432 | அறிவியல் தொழில்நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |
| 432 | 433 | ம.பொ.சி.யின் தமிழ் உணர்வு | 40.00 |
| 433 | 434 | தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| 434 | 435 | தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| 435 | 436 | Work Book Spoken Tamil | 50.00 |
| 436 | 437 | பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி | 25.00 |
| 437 | 438 | தமிழ் அன்னை | 40.00 |
| 438 | 439 | வ.உ.சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| 439 | 440 | மிருச்சகடிகம் | 50.00 |
| 440 | 441 | தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| 441 | 442 | தமிழில் விடுதலை இலக்கியம் | 20.00 |
| 442 | 443 | உலக அரங்கில் தமிழ் | 30.00 |
| 443 | 444 | பாரதி இந்தியா | 40.00 |
| 444 | 445 | தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| 445 | 446 | தெசிணியின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| 446 | 447 | உ.வே.சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும் | 35.00 |

[2004 நவம்பர் 22

| | | | |
|---|---|---|---|
| 447 | 448 | பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| 448 | 449 | தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| 449 | 450 | கோவலன் கதை | 50.00 |
| 450 | 451 | தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 60.00 |
| 451 | 452 | தமிழில் மருத்துவ இதழ்கள் | 35.00 |
| 452 | 453 | தமிழ் அச்சுத் தந்தை அண்ட்ரிக் அடிகளார் | 30.00 |
| 453 | 454 | Social Heritage of the Tamils | 75.00 |
| 454 | 455 | நடிப்புக் கலையும் பேசும்படக் காட்சியும் | 40.00 |
| 455 | 456 | நாச்சியார் திருமொழி தெலுங்கு மொழிப் பெயர்ப்பு | 40.00 |
| 456 | 457 | இயற்கை மொழியாய்வு தமிழ் | 70.00 |
| 457 | 458 | தமிழர் உணவு | 70.00 |
| 458 | 459 | மகளிர் இதழ்கள் | 70.00 |
| 459 | 460 | தமிழர் ஆடைகள் | 90.00 |
| 460 | 461 | தமிழர் காசு இயல் | 50.00 |
| 461 | 462 | சங்கக் கால காசு இயல் | 30.00 |
| 462 | 463 | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| 463 | 464 | தமிழர் அளவைகள் | 40.00 |
| 464 | 465 | கருவூரார் பலதிரட்டு | 70.00 |
| 465 | 466 | தமிழக நாட்டுப்புறக் கலைகள் | 55.00 |
| 466 | 467 | தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 100.00 |
| 467 | 468 | சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 85.00 |
| 468 | 469 | தமிழர் திருமணம் | 85.00 |
| 469 | 470 | தமிழியல் ஆய்வு சிந்தனைகள் | 100.00 |



2004 நவம்பர் 22]

| | | | |
|---|---|---|---|
| 470 | 471 | சங்கர நமச்சிவாயர் | 60.00 |
| 471 | 472 | Agreement in Dravidian Language | 100.00 |
| 472 | 473 | சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| 473 | 474 | அறிவியல் தமிழறிஞர் பெ.நா. அப்புசுவாமி | 60.00 |
| 474 | 475 | இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி 1 | 80.00 |
| 475 | 476 | இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி 2 | 85.00 |
| 476 | 477 | இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி 3 | 95.00 |
| 477 | 478 | நாடகவியல் | 70.00 |
| 478 | 479 | நாவல் கலையியல் | 50.00 |
| 479 | 480 | கார் நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நன்னெறி | 30.00 |
| 480 | 481 | பண்டைத் தமிழ் எழுத்துக்கள் II Edn. | 40.00 |
| 481 | 482 | திராவிட மொழி இலக்கியங்கள் II Edn. | 180.00 |
| 482 | 483 | தமிழெழுத்தின் வரிவடிவம் | 30.00 |
| 483 | 484 | Studies in Manimekalai II Edn. | 70.00 |

40—

## பள்ளிகளின் கல்வித் தரம்

**வினா எண் 50417— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் பள்ளிகளுடன் போட்டியிட்டு சிறப்பாக கல்வி நடத்த அரசுப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளிக் கல்வி இயக்குநரால் நடத்தப்படும் ஒவ்வொரு முதன்மைக் கல்வி அலுவலர் கூட்டத்திலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு வரும் அனைத்து மாணவர்களும் ஒவ்வொரு கல்வியாண்டிலும் நன்முறையில் கற்று, நல்ல மதிப்பெண்களைப் பெற்று உயர் வகுப்புக்குத் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், கல்வித் துறையின் இலக்கினை வெற்றி பெறச் செய்வதில் தலைமையாசிரியர் உள்ளிட்ட ஆசிரியப் பெருமக்களின் ஒத்துழைப்புடன் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் செயலாற்ற வேண்டும் என்று, வற்புறுத்தப்படுகின்றது. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் குறைந்தபட்சம் 10 பாட வேளைகள் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். குறைந்தபட்சம் ஒரு வகுப்பிற்காவது தலைமையாசிரியர் தம்முடைய பாடத்தைக் கற்பிக்க வேண்டும். தலைமையாசிரியர்கள் நாள்தோறும் குறைந்தபட்சம் இரண்டு வகுப்புகளுக்குச் சென்று ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்பார்வையிட வேண்டும். ஆசிரியர்கள் கற்பிக்கும் முறை அவர்தம் பாடப் பொருள் குறிப்பு, துணைக் கருவிகள் பயன்பாடு, வகுப்பாட்சி மற்றும் மாணவர்களின் ஈடுபாடு முதலானவற்றை உற்று நோக்கி மேற்பார்வைப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். ஆசிரியர் தம் குறை நிறைகளைக் கண்டறிந்து அவர்களைத் தனியே வரவழைத்து அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். இதில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும், காய்தல் உவத்தல்களுக்கும் இடம் தந்துவிடக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்வு முடிந்தவுடன் விடைத்தாள்களைத் துல்லியமாகவும், துரிதமாகவும் மதிப்பீடு செய்து மாணவர்களுக்கு வழங்குதல், மாணவர்களுக்கு உரிய முறையில் மாணவர்களின் தேர்ச்சி அறிக்கை அட்டையை வழங்குதல், வகுப்பாசிரியர் மற்றும் பாட ஆசிரியர்களைச் சந்தித்து அத்தேர்வில் மாணவர்களின் தர முன்னேற்றம், பின்னடைவுற்றோர்க்கு எடுக்கப்பட வேண்டிய சிறப்புக் கவனம், ஒன்று (அல்லது) இரண்டு பாடத்தில் மட்டும் தேர்ச்சி குறைந்தோர் பட்டியல் தொகுப்பு, அவர்களுக்கென சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுதல் ஆகிய அனைத்து செயல்பாடுகளிலும் தலைமையாசிரியரின் இடையறாத கண்காணிப்பு இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 22]

கற்றலில் பின்தங்கிய மாணவர்களின் பெற்றோரை வரவழைத்து கலந்துரையாடி அவர்தம் குழந்தைகளின் தேர்ச்சி வாய்ப்புக்குரிய கருத்துப் பரிமாற்றங்கள் செய்துகொள்ள வேண்டும் என்றும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தம் பள்ளிகளில் கல்வித் தரத்தில் முன்னணியில் உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதன்மையும், சிறப்பிடமும் பெறுவதற்கு ஏற்ற முறையில் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து உரிய பயிற்சிகளையும் அளித்து ஆயத்தப்படுத்த வேண்டும் எனவும் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தலைமையாசிரியர்களும் பிற ஆசிரியர்களும், தனித்திறன் மிக்க மாணவர்களை இனங்காண வேண்டும். மாணவர்கள் அவற்றை வெளிப்படுத்தவும் மேலும் வளர்த்துக்கொள்வதற்குத் தேவையான வாய்ப்பு வசதிகளைப் பள்ளிகளே உருவாக்கித் தர வேண்டும். ஒவ்வொரு அரசுப் பள்ளியிலும் மன்றங்களின் ஆண்டு விழாக்கள், பள்ளி ஆண்டு விழா, ஆண்டிறுதி விளையாட்டு விழா, அறிவியல் தினம் போன்ற நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்த வேண்டும். மாணவர்களிடம் இருக்கக்கூடிய தனித் திறமையை வளர்க்கும்படியாக பல்வேறு வகையான போட்டிகள் நடத்தி இவ்வாறு விழாக்களில் பரிசுகள் வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவ/மாணவியரைத் தனித் தனியாக அழைத்து ஆலோசனை வழங்கி அவர்களின் மதிப்பெண்களை உயர்த்தவும், நல்வழிப்படுத்தவும் பயனுள்ள நடவடிக்கைகளைத் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தனியார் நடத்தும் பள்ளிகளுடன் போட்டியிட்டு சிறப்பாக கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**41—**

## கல்வி அறிவு புகட்டும் திட்டம்

**வினா எண் 59502— திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தை நகரத்தில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி அறிவு புகட்டும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி தாலூகாவில் தேசியக் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் சிறப்புப்பள்ளி ஏதும் இயங்கவில்லை. எனினும் அறந்தாங்கி நகரத்தில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் செயல்படும் மாற்றுப் பள்ளிகளில் சேர்ந்து பயனடையலாம். மேலும், கல்வித் துறையின், அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் இயங்கிவரும் கல்வி உறுதித் திட்டம், மாற்றுப் பள்ளிகள் மற்றும் பிரிட்ஜ் கோர்ஸ் போன்றவற்றில் சேர்ந்தும் குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி கற்கலாம்.

42—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 8785— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி, புதுக்காலனி-இராஜீவ் காலனி வாழ் பகுதி மக்களுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் விநியோகிக்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி ஊராட்சி, புதுக்காலனி மற்றும் இராஜீவ் காலனி பகுதிக்கு சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.



43—

## தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12038— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஐந்தாங்கட்டளை பஞ்சாயத்து ஒன்றியம், கட்டளை குடியிருப்பு கிராமத்திற்குத் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, ஐந்தாங்கட்டளை பஞ்சாயத்து ஒன்றியம், கட்டளை குடியிருப்பு கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, செப்டம்பர் 2003 முதல் கட்டளையூர் குடியிருப்பிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

44—

## மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 12047— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மடத்தூர் பஞ்சாயத்து, கோதண்டராமபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மடத்தூர் பஞ்சாயத்து, கோதண்டராமபுரம் கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 9/2003 முதல் கோதண்டராமபுரம் குடியிருப்பிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**45—**

### மின் விளக்குகள்

**வினா எண் 18893—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி 5-வது வட்டத்தில் 700-க்கும் அதிகமான தெரு விளக்குகளில் 100-க்கு மேற்பட்ட மின் விளக்குகள் சரிவர எரியாததால் இவற்றைக் களைய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, வட்டம் 5-ல் 829 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 11-5-2002 இரவு அந்த வட்டத்தில் உள்ள மின் விளக்குகளை ஆய்வு செய்ததில் 12 விளக்குகள் மட்டுமே எரியாமல் இருந்தன. மேற்படி எரியாமலிருந்த 12 விளக்குகளும் மறு நாளே சரி செய்யப்பட்டன. தொடர் ஆய்வு செய்யப்பட்டு எரியாத விளக்குகள் உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**46—**

### கதிரடிக்கும் களம்

**வினா எண் 28233—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், குன்னமலை கிராமத்தில் விவசாயிகள் கதிர் அடிக்க களம் இன்றி சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்குமா? எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமத்தி ஊராட்சி ஒன்றியம் குன்னமலை ஊராட்சியில் நல்லப்பநாயக்கன் பாளையத்தில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.60,000/- செலவில் கதிரடிக்கும் களம் அமைக்கப்பட்டுள்ளது.

**47—**

### தரைமட்ட தொட்டி அமைத்தல்

**வினா எண் 27440—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம், அடைச்சாணி செட்டியார் தெருவில் மினி ஆழ் குழாய் அமைக்கும் திட்டத்தில் தரைமட்டத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 22

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஒன்றியம், அடைச்சாணி குடியிருப்பில் 2002-2003 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

48—

### தரைமட்ட குடிநீர்த் தொட்டி

**வினா எண் 27441—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம், அடைச்சாணி தேவர் தெருவில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்டக் குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஒன்றியம், அடைச்சாணி தேவர் தெருவில் 2002-2003 ஆம் நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

49—

### மகளிர் சுய உதவிக் குழு

**வினா எண் 27874—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள மகளிர் குழு பதிவு செய்ய 6 மாதம் என்பதை மாற்றி 3 மாதம் இருந்தால் போதும் என்று அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுய உதவிக் குழுக்கள் பதிவு செய்ய கால அவகாசம் எதுவும் தேவையில்லை. குழுக்கள் அமைக்கப்பட்டவுடன் பதிவு செய்துகொள்ளலாம். எனவே, இது தொடர்பாக அறிவிப்பு எதுவும் வெளியிட வேண்டிய நிலை எழவில்லை.

50—

### தடுப்புச் சுவர்

**வினா எண் 29551—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சியில் கல்லோரி செல்லும் வழியில் சாலை அருகில் கிணறு இருப்பதால், பாதுகாப்பு கருதி அந்த இடத்தில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) அதன் விவரம் அரசு தெரிவிக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கல்லோரி செல்லும் வழியில் சாலை அருகில் கிணறு இருப்பதால், அவ்விடத்தில் பாதுகாப்பு கருதி 2002-2003 ஆம் ஆண்டு

[2004 நவம்பர் 22

சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.29,300/- மதிப்பீட்டில் தடுப்புச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

51—

### ஊரணி தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 29720—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, ராசாப்பட்டி ஊரணி தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராசாப்பட்டி ஊரணி தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம யோஜனா பகுதி-I திட்டத்தில் ரூ.3,00,000/- மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ரூ.2,65,356/- மதிப்பீட்டில் வேலை முடிக்கப்பட்டுள்ளது.

52—

### கூட்டுறவு வங்கி மூலம் கடனுதவி

**வினா எண் 31191—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு எவ்வளவு பேருக்கு என்னென்ன வியாபாரம் செய்ய 2001-2002 ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்கப்பட்டது ?



2004 நவம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் நிதியாண்டில் கூட்டுறவு வங்கிகள் மூலம் 70 சுய உதவிக் குழுக்களுக்கு கைத்தறி துணி வியாபாரம், தையல்கடை, பொம்மைகள் விற்றல், சணல் பைகள் விற்றல். நார் பொருட்கள் விற்றல், மளிகை கடை, பாக்கு மட்டை தட்டுகள் விற்றல், கட்டுமான பொருட்கள் விற்றல் போன்றவற்றிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

53—

### தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

**வினா எண் 31290—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில் இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது ?

(ஆ) இதில் கலந்து கொண்டவர்கள் எவ்வளவு பேர் ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் நிதியாண்டில் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 20 ஊராட்சி ஒன்றியங்களில் இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) அப்பயிற்சியில் 1567 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களும், 250 இளைஞர்களும் கலந்து கொண்டார்கள்.

[2004 நவம்பர் 22

54—

## வெள்ளத் தடுப்புச் சுவர்

**வினா எண் 31432—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, மீனாட்சிபுரத்தில், நடுவில் அமைந்துள்ள ஊருணியை ஆழப்படுத்தவும் வடக்குப் பக்கம் உள்ள கரையைப் பலப்படுத்தவும் அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, மீனாட்சிபுரம் ஊராட்சி, மீனாட்சிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஊருணி 2002-2003 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஆழப்படுத்தப்பட்டு, ஆழப்படுத்தப்பட்ட மண்ணைக் கொண்டு கரை பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஊருணியின் வடக்குக் கரையில் உள்ள வலிமை குறைந்த பகுதியில் ஊராட்சி நிதியிலிருந்து கடந்த ஆண்டு வெள்ளத் தடுப்புச்சுவர், வடக்குக் கரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது ஊருணி கரைகள் நன்றாக உள்ளது. ஊருணியில் தண்ணீரும் இருக்கிறது.

55—

## கதிரடிக்கும் களம்

**வினா எண் 32000—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சின்னசோளிபாளையம் காலனிக்கு கதிரடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பெரிய சோளிபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த சின்ன சோளிபாளையம் கிராமத்தில் 2002-2003 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் (சிறப்புக் கூறு) கீழ் ரூ.60,000/- மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

56—

## கதிரடிக்கும் களம் அமைத்தல்

**வினா எண் 32002—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மூர்த்திப்பட்டி நடுப்புதூருக்கு களம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சங்ககாரம்பட்டி ஊராட்சியில் மூர்த்திப்பட்டி, நடுப்புதூர் மற்றும் சின்னமநாயக்கன்பட்டி ஆகிய குக்கிராம மக்கள் பயன்படுத்தும் வகையில் சின்னநாயக்கன்பட்டியில் சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா (SGRY)

[2004 நவம்பர் 22

திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் கதிரடிக்கும் களம் அமைக்கப்பட்டு உள்ளது.

57—

## மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

**வினா எண் 33070—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், சவேரியார்பட்டி, அண்டனூர் ஊராட்சி வேலாழப்பட்டி, குண்ணாண்டார் ஒன்றியம், ரூசையப்பர்பட்டினம் ஆதனக்கோட்டை ஊராட்சி, மடத்துக்கடை ஆகிய இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், தச்சங்குறிச்சி ஊராட்சியைச் சார்ந்த சவேரியார்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் மேல்நிலை தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. அண்டனூர் ஊராட்சியிலுள்ள வேலாழப்பட்டி (வேளாழப்பட்டி) குடியிருப்பில் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தொட்டியுடன் கூடிய திட்டம் மற்றும் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.4.50 இலட்சம் நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் ஆகியவற்றின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குண்ணாண்டார் கோவில் ஒன்றியம், வந்தனாக்குறிச்சி ஊராட்சியிலுள்ள ரூசையப்பர்பட்டினம் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. புதுக்கோட்டை ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சியிலுள்ள மடத்துக்கடை மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2004 நவம்பர் 22]

58—

## நமக்கு நாமே திட்டம்

**வினா எண் 34307— திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் கடந்த இரண்டாண்டுகளில் நமக்கு நாமே திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் நிதியாண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவ்ரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### இணைப்பு

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. இலட்சத்தில் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2001–2002 | | 2002–2003 | | மொத்தம் | | |
| | | அரசு நிதி | பொ.ம.ப. தொகை | அரசு நிதி | பொ.ம.ப. தொகை | அரசு நிதி | பொ.ம.ப தொகை | மொத்தம் |
| 1. | காட்டாங் கொளத்தூர் | 4.725 | 1.575 | 8.19 | 2.73 | 12.915 | 4.305 | 17.22 |

| வ. எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மேற்கொள்ளப்பட்ட பணிகள் | | |
|---|---|---|---|---|
| | | 2001–2002 | 2002–2003 | மொத்தம் |
| 1. | காட்டாங்கொளத்தூர் | 3 | 3 | 6 |
| | | | | |
| வ.எண் | பணிகளின் பெயர் | எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் | | |
| | | மொத்த மதிப்பீடு | அரசு நிதி | பொது மக்கள் பங்குத் தொகை |

2001–2002 காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பேரமனூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 1.80.000 | 1,35.000 | 45,000 |
| 2. | பேரமனூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கழிப்பிடம் கட்டுதல் | 2,50,000 | 1,87,500 | 62,500 |
| 3. | கொளப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர், குடிநீர் கழிப்பறை மற்றும் நுழைவாயில் கதவு அமைத்தல் | 2,00.00 | 1,50,000 | 50,000 |





2002–2003 காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சிங்கபெருமாள் கோயில் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுதல் | 8,00.000 | 6,00.000 | 2,00.000 |
| 2. | செட்டிபுண்ணியம் ஊராட்சியில் அன்பு நகர் பகுதியில் திறந்த வெளி கிணறு அமைத்தல் | 32,000 | 24,000 | 8,000 |
| 3. | நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி கூடுதல் கட்டிடம் | 2,60.000 | 1,95.000 | 65,000 |

இணைப்பு

| வ. எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. இலட்சத்தில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2001–2002 | | | 2002–2003 | | மொத்தம் | |
| | | அரசு நிதி | பொ.ம.ப. தொகை | அரசு நிதி | பொ.ம.ப. தொகை | அரசு நிதி | பொ.ம.ப தொகை | மொத்தம் |
| 1. | திருக்கழுக் குன்றம் | 1.50 | 0.50 | 3.60 | 1.20 | 5.10 | 1.70 | 6.80 |

| வ. எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | மேற்கொள்ளப்பட்ட பணிகள். | | |
|---|---|---|---|---|
| | | 2001-2002 | 2002-2003 | மொத்தம் |
| 1. | திருக்கழுக்குன்றம் | 4 | 3 | 7 |

| வ.எண். | பணிகளின் பெயர் | எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் | | |
|---|---|---|---|---|
| | | மொத்த மதிப்பீடு | அரசு நிதி | பொது மக்கள் பங்குத் தொகை |
| | திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் | | | |
| 1. | சட்ராஸ் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பெண்கள் கழிப்பறை கட்டுதல்-1 | 50,000 | 37.500 | 12,5000 |
| 2. | சட்ராஸ் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பெண்கள் கழிப்பறை கட்டுதல்-2 | 50,000 | 37.500 | 12,5000 |
| 3. | சட்ராஸ் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்கள் கழிப்பறை கட்டுதல்-1 | 50,000 | 37.500 | 12,5000 |
| 4. | சட்ராஸ் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்கள் கழிப்பறை கட்டுதல்-2 | 50,000 | 37.500 | 12,5000 |



திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தத்தளூர் ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கு சுற்று சுவர் கட்டுதல் | 1,20.000 | 90,000 | 30.000 |
| 2. | பெரும்பேடு பெரிய ஏரி பழுது பார்த்தல் | 2,00.000 | 1,50,000 | 50,000 |
| 3. | எம்.என். குப்பம் பெரிய ஏரி பழுது பார்த்தல் | 1,60.000 | 1,20.000 | 40,000 |

59—

## நல வாழ்வு மையங்கள்

**வினா எண் 34373—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் எத்தனை நல வாழ்வு மையங்கள் செயல்படுகின்றன?

(ஆ) அவற்றில் எவ்வளவு பேர் மருத்துவப் பணியாளர்களாக பணியாற்றுகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் 93 நல வாழ்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மருத்துவப் பணியாளர்களின் (Medical Officer) எண்ணிக்கை 115 ஆகும்.

[2004 நவம்பர் 22

60—

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா எண் 34735— திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் பயன் பெற்ற ஊராட்சிகள் யாவை?

(ஆ) அவை பெற்ற தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு பயன்பெற்றன:

| வ. எண் | வருடம் | பயன்பெற்ற ஊராட்சியின் பெயர் | விடுவிக்கப்பட்டு செலவினம் மேற்கொண்ட தொகை |
|---|---|---|---|
| 1. | 1997-1998 | வல்லம் | 23,82,000 |
| 2. | 1998-1999 | புதுப்பட்டினம் | 72,37,000 |
| 3. | 1999-2000 | வாயலூர் | 25,48,000 |
| 4. | 2000-2001 | ஆலப்பாக்கம் | 33,00,000 |
| 5. | 2001-2002 | வெங்கம்பாக்கம் | 26,25,300 |

61—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 35580—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, நெம்மேலி ஊராட்சி, கோடங்குடி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், நெம்மேலி ஊராட்சியைச் சேர்ந்த கோடங்குடி குடியிருப்பிற்கு புதுப்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அவசியம் இல்லை.

62—

## மின்விசை மோட்டார் குடிநீர் குழாய்கள்

**வினா எண் 39160—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, வில்லிசேரி ஊராட்சி, கிழக்கு காலனியில் ஆழ்துளைக் கிணறு மின்விசை மோட்டார் குடிநீர் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், வில்லிசேரி ஊராட்சியினைச் சார்ந்த வில்லிசேரி கிழக்கு காலனி, 1999 முதல் பயன்பாட்டில் இருந்து வரும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய கோவில்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்ட நீராதாரத்தைக் கொண்ட குடிநீர்த் திட்டத்தின் மூலம்

குடிநீரைப் பெற்று வருகிறது. மேலும், கோவில்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 27 வழியோரக் குடியிருப்புக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இக்குடியிருப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது குடிநீர் விநியோகம் அதிகரிக்கும். எனவே, ஆழ்துளைக் கிணறு (ம) சிறுமின்விசைத் திட்டம் பரிசீலிக்கப்படவில்லை.

**63—**

### குடிநீர் குழாய்கள் அமைக்கும் திட்டம்

**வினா எண் 39161— திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நாலாட்டினபுதூர் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு மின்விசை மோட்டார் குடிநீர் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், நாலாட்டினபுதூர் ஊராட்சியிலுள்ள நாலாட்டினபுதூர் குடியிருப்பில் 1992-ல் நிறைவேற்றப்பட்ட 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் மூலம் அத்தியாவசிய தேவைக்கேற்ப குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக ஆழ்துளைக் கிணறு, மின்விசை மோட்டார், குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**64—**

### ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்

**வினா எண் 39164—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோவில்பட்டி ஒன்றியம், வடக்குத் திட்டங்குளம் கண்மாயில் கூடுதலாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், திட்டங்குளம் ஊராட்சியைச் சார்ந்த வடக்கு திட்டங்குளம் குடியிருப்பில் 1995 முதல் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனிமின்விசைத் திட்டம் செயல்பட்டு வருவதால், கூடுதலாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**65—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40090—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், கல்லுக்காரன்பட்டி ஊராட்சி, வி.புதூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், கல்லுக்காரன்பட்டி ஊராட்சியைச் சார்ந்த வி. புதூர் குடியிருப்பிற்கு தற்போது பயனில் உள்ள தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் போதுமான

அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

66—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 40099—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்களூர் ஊராட்சி, லெட்சுமிபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்களூர் ஊராட்சி, லெட்சுமிபுரம் குடியிருப்பிற்கு 1 கையிறைப்பான் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

67—

**சிறிய நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 40103—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னான்டார்கோவில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, பழையூர் கிராமத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு தீர சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்னான்டார் கோயில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சியைச் சார்ந்த பழையூர் குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மற்றும் ஒரு தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

68—

**மகளிர் சுய உதவிக் குழு கட்டடம்**

**வினா எண் 40974—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சோதியக்குடி ஊராட்சி, சிலம்பநாதபுரம் ஆதிதிராவிட காலனி மக்கள் வசிக்கும் பகுதிக்கு மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் சோதியக்குடி ஊராட்சி சிதம்பரநாதபுரம் ஆதி திராவிடர் காலனி மக்கள் வசிக்கும் பகுதிக்கு மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

69—

**ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்**

**வினா எண் 44568—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், நெய்வேலி ஊராட்சி, பெண்ணாம்பட்டி கலப்பு காலனி மேலகொட்டம், வெள்ளப்பாறை ஆகிய பகுதிகளில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை களைய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், நெய்வேலி ஊராட்சியை சார்ந்த பெண்ணாம்பட்டி கலப்பு காலனி மேலகொட்டம், வெள்ளப்பாறை ஆகிய குடியிருப்புகளுக்கு ஆமூர் மற்றும் 59 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தனித்தனியே 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசிலனையில் இல்லை.

**70—**

### சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 48246—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மொத்த சுய உதவிக் குழுக்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மொத்த உறுப்பினர்கள் எத்தனை பேர்? அவற்றில் ஆதிதிராவிட மகளிர் உறுப்பினர் எத்தனை பேர்?

(இ) அவற்றின் மொத்த சேமிப்புத் தொகை எவ்வளவு? அவற்றிற்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மொத்த சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 4,945 ஆகும்.



(ஆ) அவற்றின் மொத்த உறுப்பினர்கள் 85,226. அவற்றில் ஆதிதிராவிடர் மகளிர் உறுப்பினர்கள் 36,157.

(இ) அவற்றின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.18,64,03,761/- அவற்றிற்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.56,23,83,370/-.

**71—**

### சுய உதவிக் குழுக்களுக்கு புதிய கட்டடம்

**வினா எண் 48277—திரு. அ.இரா. மலையப்பசாமி :** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், காளிபாளையம் ஊராட்சியிலுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், காளிபாளையம் ஊராட்சியில் 5 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இவ்வூராட்சிக்குட்பட்ட பொன்னேரிப்பட்டியில் சென்ற நிதி ஆண்டில் ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது. எனவே இதே ஊராட்சியில் புதியதாக சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட இயலாது.

**72—**

### மனித நுழைவாயில் மூடிகள்

**வினா எண் 53043—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மழை நீர் கால்வாயில் எத்தனை மீட்டர் இடைவெளியில் மனித நுழைவாயில் மூடிகள் பொருத்தப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சியில் மழை நீர் கால்வாயில் 5 மீட்டர் (ஐந்து மீட்டர்) இடைவெளியில் மனித நுழைவாயில் மூடிகள் பொருத்தப்படுகின்றன.

**73—**

### சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 53067—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் நெடுஞ்சாலையை கல்லறை சாலையிலிருந்து மணிக்கூண்டு வரை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி மண்டலம் I-ல் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலை (கல்லறை சாலையிலிருந்து மணிக்கூண்டு வரை)யில் சாலை அகலப்படுத்தும் பணி ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டது. அச்சாலையை மேலும் அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை. எனவே, மேற்குறிப்பிடப்பட்ட சாலையை அகலப்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



**74—**

### சாலையோரச் சிற்றுண்டிக் கடைகள்

**வினா எண் 53913—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நடத்தப்படும் சாலை ஓர சிற்றுண்டிக் கடைகளை சுகாதாரத் துறையின் மூலம் ஒழுங்குபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகரில் நடத்தப்படும் சாலை ஓர சிற்றுண்டிக் கடைகளை சுகாதாரத் துறை ஒழுங்குபடுத்தி வருகின்றது. சுகாதாரத் துறையினர் அவ்வப்போது, சாலை ஓர சிற்றுண்டிக் கடைகளை அப்புறப்படுத்தியும், பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வண்ணம் தயார் செய்து விற்பனை செய்யும் உணவுப் பொருட்களையும் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 100 முதல் 200 வரையிலான கடைகளையும், 1,500 கிலோ கிராம் முதல் 2,500 கிலோ கிராம் எடை உள்ள உணவு பொருட்களையும் அகற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

**75—**

### பொதுக் களம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 54219—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, மீனாட்சியாபுரம் கிராமத்தில் பொதுக் களம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2004 நவம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, மீனாட்சியாபுரம் கிராமத்தில் ஏற்கெனவே நெற்களம் உள்ளது.

**76—**

**உதவிப் பொறியாளர் அலுவலகங்கள்**

**வினா எண் 61533—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, குடிநீர் வடிகால் வாரிய துறையில் நாகுடி, மணமேல்குடி, மீமிசல், ஆவுடையார் கோவில் மற்றும் கோட்டைப்பட்டினத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் ஊரக குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை கவனிப்பதற்கும் தனித்தனியாக உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால் புதிதாக உதவிப் பொறியாளர் அலுவலகம் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**77—**

**தீரன் சின்னமலை நினைவு நாள்**

**வினா எண் 62986—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 22]

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு அவரது பிறந்த நாள், நினைவு நாளை முன்னிட்டு ஆண்டுதோறும் விழா எடுப்பதற்கு அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தீரன் சின்னமலை பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படுவதில்லை. அதற்கு பதிலாக தீரன் சின்னமலை நினைவு நாளான ஆடி 18 ஆம் நாளன்று (2.8.04) ஆடிப்பெருவிழாவாக ஈரோடு மாவட்டம் அரச்சலூர் ஓடாநிலையில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவினை ஆண்டுதோறும் அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.